வெளியீடு 23-7-1984 Issued 23-7-1984

2747

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1983 நவம்பர் 10- தொகுதி LVI எண். I

Thursday 10th November 1983—Volume LVI No. I

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

Legislative Assembly Department, Fort St. George, Madras-600009

விலை: ரு. 3-50 காசுகள்) (Price Rs. 3-50 paise

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LVI NO: 1

November 10 1983

V211,31 N83
N83.56.1
136074

D
V2ll,31 N83
N83.56.1
136074
600 008.

உள்ளடக்கம்.

| | பக்கங்கள். |
|---|---|
| **10—11—1983** | |
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—ii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu | iii iv |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | v |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற பெயர் பட்டியல் | x<br>ix—xvi |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—39 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 40—97 |
| 2. நடைமுறை : | |
| பேரவைத் தலைவரின் முன்அனுமதியின்றி அவையில் குற்றம் சாட்டுவது | 98—99 |
| 3. உரிமைப் பிரச்சினைகள்— | |
| (அ) திரு. சோ. அழகர்சாமி எழுப்பியகுற்றச் சாட்டை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் | 99 |
| (ஆ) எதிரொலி, தினகரன், நாளேடுகளின் மீது | 99—103 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) காரைக்குடி அரசு அழகப்பா தொழில் நுட்பப் பள்ளியைத் தனியாரிடம் கொடுத்தல் | 104—105 |
| (ஆ) இராணிப்பேட்டை சிப்காட்டிலுள்ள ஓர் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து | 105—108 |

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி குடிசை மாற்றுவாரியம் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அ மச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு, (தொழில் துறை அமைச்சர்) — பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.



20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—இராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M.G. RAMACHANDRAN (Chief Minister) - Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Developement Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)- Education, includiug Technical Education, Official Language

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) - Law, Courts, Prisons, Legislation on Weights and Measures Registration of Companies, Debt Relief including Legislation on, Money Lending and Legislation on Chits, and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) – Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S.RAGHAVANANDHAM(Minister for Labour) Labour, Housing Slum Clearance Board Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)-Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)-Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidas Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Boned Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritions Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Polluion Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)-Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) Fisheries

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ் ஜகத்ரட்சகன்
2. திரு. மா. சின்னராசு
3. திருமதி. ம. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்

திரு. ஜே. ரெஜீனால்ட் ஜான், பி.ஏ.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன், பி.லிட்.

தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல்.பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றாகள்.

† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

5. அரசினர் தீர்மானங்கள்—

பக்கங்கள்

(அ) விதி 32 (1) ஐத் தளர்த்தல் 108

(ஆ) விதி 31 ஐத் தளர்த்தல் 171—172

6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி 108—171

திரு. சோ. அழகர்சாமி 1^8—113

திரு. குமரி அனந்தன் 113—129

திரு. எஸ். ஆண்டித்தேவர் 129—140

திரு. ப. நெடுமாறன் 141—161

டாக்டர் கே. பீ. இராமலிங்கம் 161—171

7. அறிவிப்பு

பேரவை அலுவல் 160

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 172


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைபபடச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 14 அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. |
| 18 ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்–2 |
| 19 ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 25 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 27 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 29 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| 88 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 93 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 98 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 | சுப்பிரமணியன், திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவ |
| 116 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 119 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ). |



| | | |
|---|---|---|
| 121 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 128 | சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 | சௌரிரா[illegible], டாக்டர் கே. | தி.நகர் |
| 130 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா. |
| 142 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 150 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 | நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. எஸ். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. சு. | மானாமதுரை (செ.வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வீ. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. சு. | சீர்காழி (செ.வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர்(செ.வ.) |
| 176 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |



| | | |
|---|---|---|
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ). |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை(செ.வ. |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |

| | | |
|---|---|---|
| 214 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்
7 திரு. ஆர் கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1983, நவம்பர் 10, வியாழக்கிழமை

ஐப்பசி 24, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து''

சொல்லக் கருதிய கருத்தினை வேறு ஒருவருடைய சொல் வெல்ல முடியாத தன்மையை அறிந்து ஒருவன் சொல்லுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு நிதி அமைச்சரின் கேள்விகள் பின்னாலே எடுத்துக்கொள்ளப்பெறும்.

தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் வீடுகளைப் புதுப்பித்துக் கட்ட வழங்கப்படும் கடன் தொகை

*வினா எண். 146—திரு க. பாரமலை: மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குறைந்த வருமானமுடையவர்கள் அல்லதுவறுமைக்கோட்டிற்கும் கீழ்நிலையில் உள்ளவர்கள் ஆகியோரின் வீடுகள் தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அவர்களின் வீடுகளைப் புதுப்பித்துக் கட்ட ரூ. 2,000/- வரை கடன் வழங்கும் திட்டம் தற்சமயம் அமலில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். துணைத் தலைவர் அவர்களே, 1.7.67 லிருந்து 6.6.78 வரையிலும் 80 ரூபாய் கொடுக்கப்பட்டது. 6.6.78 லிருந்த 9.6.80 வரைக்கும் 100 ரூபாயாக அது மாற்றப்பட்டது. 9.6.80 லிருந்து இன்று வரையிலும் அது 200 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது.

திரு க. பாரமலை. துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தொகை தீப்பிடித்து வீடுகள் எரிந்து விட்டால் உடனடியாகக் கொடுக்கப்படுகிற நிவாரணம். நான் கேட்டிருப்பது நிவாரணத் தொகை கொடுத்த பின்பு தீப்பிடித்து எரிந்த வீடுகளைத் திருப்பிப் புதுப்பித்துக்

[1983 நவம்பர் 10

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் கோரிக்கை கள், தனித்தனியாகக் கவனிக்கப்படும். தனிப்பட்டவர்களைப் பற்றி இங்கே பொதுவாக சொல்ல இயலாது.

திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்; மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல் லும்போது 2,000 ரூபாய் வீடு கட்டுவதற்குக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் சரியாக கிராமத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு அதிகமாக உயர்த்த முடியாது என்று சொன் னார்கள். ஆனால் 1979-ம் ஆண்டு மதுரை மாவட்டம் நிலக் கோட்டை தொகுதியில் 395 வீடுகள் வெள்ளத்தால் முழுமை யாகப் பாதிக்கப்பட்டு அடித்துச் செல்லப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகள் எங்கேஎங்கே இருக்கின்றன என்றுபார்த்து இந்த 2 ஆயிரம் ரூபாயை உடனடியாக கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வழி செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பொதுவான கொள்கையை நான் சொல்லிவிட்டேன். அது கொடுக்க வேண் டியது நியாயம் தான். அதற்கு நிதி ஒதுக்குவதற்கு அரசு முய லும் என்று சொல்லிவிட்டேன். 1979-ம் ஆண்டு நடந்ததைப் பற்றி இன்றைக்கு 5 வருடம் ஆகிவிட்டது, அதற்கு பிறகு எவ்வளவோ புதிய மனுக்கள் வந்திருக்கின்றன, எல்லா மனுக் களுடன் சேர்த்து அதையும் கவனிக்கப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13.7.83 அன்று புதுக்கோட்டை ஆலங்குடி ரோடில் காந்தி நகர் என்ற இடத்தில் தீ விபத்து நடந்தது. பல வீடுகள் நாசம் ஆகிவிட்டன. அதற்கு இன்னும் காம்பன்சேஷன் அதாவது 200 ரூபாய் உதவித் தொகை கொடுக்காமல் இருக்கிறார்கள். நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கூட நேராக சென்று கலெக்டரைப் பார்த்து கேட்டு இருக்கிறார்கள். இன் னும் அந்த உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. எப்போது அரசு அதைக் கொடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, எங்கே தீ விபத்து நடந்தாலும் அன்றைக்கோ அதற்கு மறுநாளோ உதவித் தொகை கொடுக்கப் படுவது எனக்கு முன்னால் இருக்கின்ற சென்னையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு காலமாக உதவித் தொகை கொடுக்கவில்லை என்றால் கொடுக் கப்படாதற்கு அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தவறு என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கொடுக்கவில்லை என்பதை சட்டசபை வருகிற வரைக்கும், கேள்வி வரும் அப்போது கேள் வியாகக் கேட்கலாம் என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் எண்ணி இருந்து இருந்தால் இது மக்களுக்குச் செய்யவேண்டிய பணியில் இன்னும் தீவிரம் காட்டவேண்டும் என்பதை இங்கே சொல்லக் கூடாது.



1983 நவம்பர் 10]

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தீயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு அவர்களுடைய வீடுகளை புதுப்பிப்பதற்காக 2 ஆயிரம் ரூபாய் தகுதியின் அடிப்படையில் கொடுக்கப்படுவதாக தெரிவித் தார்கள், சென்னையில் தீ பிடிப்பது திடீர் என்று பிடிக்கிறது. அதிலே சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்து விடுகிறார்கள். அப்படி இருக்கிற காரணத்தினால் மனிதாபிமானத்தின் அடிப் படையில் அவர்களுடைய இழப்பை அடிப்படையாக வைத்து 2,000 ரூபாய் கடன் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர் களுக்கு நன்றாகத் தெரியும். சென்னையிலே தீ பிடித்தால் அன்றைக்கே அது கவனிக்கப்படுகிறது. அன்றைக்கோ அல்லது மறுநாளோ 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் 2 ஆயிரம் ரூபாய் பணம் கடனாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களே, அதை மொத்தமாக எல்லாவற்றையும் பொதுவாக கவனித்துத் தான் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

செங்கற்பட்டு வட்டத்திலுள்ள கொளவாய் ஏரி.

*வினா எண் 147—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு கொளவாய் ஏரியைக் கடற்படை வீரர் களின் பயிற்சிக்காக ஒப்படைக்க வேண்டி கடற்படைத் துறை யினர் தமிழக அரசைக் கேட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகருக்கு எதிரிலுள்ள இடங்களை இப்படி கடற்படை பணிக்கு ஏறக்குறைய வீரர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக,மைய பேரரசு கேட்டது. 2 ஆயிரம் ஏக்கர்கள் நிலங்களை கொடுப்பதாக இந்த அரசு வாக்களித்துள்ளது,

திரு.சி, கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டில் இருக்கிற அந்த கொளவாய் ஏரி, கடலுக்கு அருகிலே இருக்கக்கூடிய அந்த மாவட்டத்திலே உள்ள ஏரிகளிலேயே பெரிய ஏரியாக இருப்பதால், அதை ஆழப் படுத்தி, கடற்படை வீரர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்காக இராணுவத்தினரிடம் விட இருப்பதாக அந்தக் காலத்திலேயே சொல்லப்பட்டது,அது ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கொள்வதற்காக 2 ஆயிரம் ரூபாய் வருவாய்த் துறையிலிருந்து ஏற்கனவே கடனாக வழங்கப்பட்டு வந்தது அது நடைமுறையில் இப்போது இல்லை. அது மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப் படுமா என்று நான் கேட்டிருக்கிறேன், அதற்கு அமைச்சர் அவர்கள் பதலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர் களே, முதலில் இயற்கை இடர்பாட்டினால் தீப்பற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 ஆயிரம் ரூயாய் கடனாகக் கொடுக கப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு அந்தக் கடன் வட்டியில் லாத கடனாக கொடுக்கப்பட்டது. இப்போது அது நடைமுறை யில் இல்லாமல் விட்டுவிடவில்லை. அதுவும் தொடரப்படும். அதே நேரத்திலே கிராம வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்தின் சார் பிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு லீடுகளைக் கட்டிக் கொடுப் பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. பாரமலை:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அது விட்டுவிடப்பட வில்லை என்று சொன்னார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது தான் என்னு டைய குறை. கிராமக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று சொல்கிறாாகள். அதற்கு போதிய நிதி வசதி இல்லை. இரண்டாவது 10 வீடுகளுக்குக் குறையாமல் இருந்தால்தான் சொசைடி என்று ரிஜிஸ்டர் செய்து உதவி பெற்று கட்டமுடியும். 4,5 வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டால் அதிலிருந்து கடன் பெறமுடியாமல் போகிற நிலை இருக்கிறது. ஏற்கெனவே கடன் கோரி விண்ணப்பம் செய்தவர்கள் 2,3 ஆண்டுக் காலம் பெறமுடியாத நிலைமை இருப்பதால் இயற்கை உபாதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வருவாய்த் துறையிலிருந்து ஒரு நிதியை ஒதுக்கி கடன் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அரசு மூலமாக தக் காவிக் கடன் என்ற பெயரால் அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடையிலே அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றாலும் மீண்டும் ஒதுக்குவதற்கு ஆவன செய்யப்படும்.

**திரு எல். இளையபெருமாள்:** துணைத் தலைவர் அவர்களை, அமைச்சர் அவர்கள் சொன்னபோது இத்திட்டம் கைவிடப்பட வில்லை என்று சொன்னார்கள். ஆனால் 1980 ஆகஸ்ட் மாதத் திலே சென்னையிலே சேத்துப்பட்டிலே சிவராஜ் மீனாம்பாள் நகரிலே ஒரு தீவிபத்து ஏற்பட்டபோது கேட்கப்பட்டபோது அமைச்சர் அவர்களே பேரவையில் கடன் கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இன்று வரை கடன் கொடுக்கப்பட வில்லை. நானும் நேரிலே கடிதம் கொடுத்திருக்கிறேன். அர சாங்கத்திற்கு, மக்களிடமிருந்தும் வந்திருக்கிறது. இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா? பணவசதி இல்லையென்று விடப்பட்டதா? இப்போதாவது



**மாண்புமிகு திரு எஸ், டி. சோமசுந்தரம்:** இம்மாதிரியான திட் டத்தை அரசு கைவிடாது. இந்த மனுக்கள் அதிகமாக வருகிற போது சிலவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலவற்றிற்கு கொடுக்காமல் இருக்கிறது. சில இடங்களில் தகுதியானவர் களுக்கு, தகுதியானவர்கள் என்றால் ஏழைகள், கஷ்டப்படுறவர் களுக்கு, அரசு அந்த உதவியைச் செய்யவேண்டியது கடமை. அதற்கு வேண்டிய நிதிவசதிகளைச் செய்ய அரசு ஆவன செய் யும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீடுகள் தீப்பிடித்து எரிந்து விட்டால் 80 ரூபாயாக இருந்ததை இந்த அரசு வந்த பிறகு 200 ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது என்று. அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த 200 ரூபாய்க்கு கிடுகுகள் கூட வாங்கமுடியாது என்பது அமைச்சருக்குத் தெரியாதது அல்ல. ஆகவே 200 ரூபாய் என்று இருப்பதை 500 ரூபாய்க்குக் குறையாமல் கொடுப்பதற்கு அரசு உடனடியாக உத்திரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய உள்ளம் பெரிய உள்ளம், நல்ல உள்ளம் பாராட்டு கிறேன். உண்மை தான். எனக்கு கூட எனக்கு மட்டும் அல்ல, இந்த அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கும் சரி அந்த உள்ளம் இருக்கிறது. 1967—ல் தான் முதன் முதலில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. முதன் முதலில் 1-7-67-ல் தான் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1-7-67-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் முதலமைச்சராக இருந்தார்கள். அப் போது தான் முதன் முதலில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ரூ.80 ஆக இருந்ததை இந்த அரசு வந்த பிறகு தான் இன்றைக்கு 200 ரூபாயாக ஆக்கி இருக்கிறது. வசதிக்கு ஏற்ப இதை என்ன செய்வது என்பதை இந்த அரசு யோசிக் கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகள் தீப்பிடித்து எரிந்து விட்டாலோ, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலோ அரசு லோன் 2 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார் கள். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி ராமசாமியாபுரம் என்ற கிராமத் தில் வெள்ளத்தால் வீடுகள் அடித்துச் செல்லப்பட்ட போது 2,000 ரூபாய் அரசு லோன் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் போன வருடம் அங்கே தீப்பிடித்து வீடுகள் எரிந்து விட்டது. அதற்கு 2,000 ரூபாய் நீங்கள் மேற்கொண்டு கடன் கொடுக்கவேண்டாம். ஏற்கனவே கொடுத்த அந்த அரிசனங் களுக்கு கொடுத்த 2,000 ரூபாயை வஜா செய்யவேண்டிய ஏற்பாடு களை இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. மணி :** துணைத் தலைவர் அவர்களே, களியக்காவிளையில் செயல்படுகிற ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் எந்த, எந்தப் பொருள்கள் வாங்குவதற்கான அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை.

### வடாற்காடு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பயிர் பாதுகாப்புத் திட்டம்

*வினா எண் 152—**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டத்தில் பயிர்பாதுகாப்புத் திட்டம் எத்தனை இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** வடாற்காடு மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கேற்ப பயிர் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் பயிர்பாதுகாப்புத் திட்டத்திற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, ரூ. 30.197 இலட்சம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே இதுபோன்ற பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற பூச்சி மருந்துகள் சிறு விவசாயிகளுக்குத்தான் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு அதுபோன்ற திட்டம் செயல்படுத்தவில்லை. டி. வி. திட்டம் செயல்படுகிற இந்த நேரத்தில் எல்லா விவசாயிகளுமே பயன்பெறுகிற வகையில், குறைந்த விலையில், பூச்சி மருந்து கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளைப் பொறுத்தவரைதான் நாம் மானிய விலையில் உதவிசெய்யமுடியும். எல்லா விவசாயிகளுக்கும் அப்படி செய்யமுடியாது. ஆனால் ஒட்டுமொத்தமாக, பூச்சிமருந்து அடிப்பது போன்றவைகளை நாம் பொதுவாக மேற்கொள்ளலாம்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பூச்சி மருந்து அடிப்பது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய காட்பாடி



தொகுதியில், சோளப் பயிர்களுக்கு, தொண்டைப் பூச்சி என்ற பூச்சி அடித்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அரசுக்கும் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படாமல் இருக்கிறதே..............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக மாண்புமிகு பேரவைத் தலைவரைக் கேட்கவேண்டும், அமைச்சரைக் கேட்கக்கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன். அரசு உடன்டியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

### சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்,

*வினா எண் 51—**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாநகராட்சிக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அத்தகைய திட்டம் தற்போது இல்லை. எனினும் இப் பகுதிக்கு அத்தகைய திட்டம் அமைப்பது பற்றி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் அண்மையிலே கோவை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய இடமாக இருப்பதால், கோவை மாநகராட்சியிலே ஏற்கனவே நடந்துகொண்டிருக்கக் கூடிய பாதாள சாக்கடைத் திட்டம், சிங்காநல்லூருக்கும் விஸ்தரிக்கப்படுமா ? காரணம் அங்கே சரியான கழிப்பிடங்கள் நகராட்சியினால் கட்டப்படாமல் இருப்பதால், அமைச்சர் அதற்குப் பிரத்யேகமான விசேஷமான கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் ஏனைய பகுதிகளுக்கு ஓரிரண்டு ஆண்டுகளில் வடிகால் திட்டம்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கிறோம் என்று நாம் சொல்லி விட்டோம், அவர்கள் முதலில் வேண்டும் என்று கேட்டார்கள், இப்போது வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அதிலே பரிசீலனையில் இருக்கிறதா இல்லையா என்பதை மத்தியப் பேரரசுதான் சொல்லவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் அதை கைவிட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன்.

### செம்போடை கிராம விவசாயிகளுக்கான நிலப்பட்டா.

*வினா எண். 148—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்றம் வேதாரண்யம் தாலுக்கா செம்போடை கிராமத்தில் குடிக்காணி உரிமை உள்ள விவசாயிகளுக்குப் பட்டா வழங்க ஆணையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேதாரண்யம் தாலுக்காவில் உள்ள மற்ற குடிகாணி விவசாயிகளுக்கும் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) ஆம். செம்போடை கிராமத்தில் சில குறிப்பிட்ட சர்வே எண்களில் அடங்கிய நிலங்களுக்கு மட்டுமே சென்னை உயர்நீதி மன்றம் பட்டா வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

### பணப்பயிர் சாகுபடியினை விஸ்தரிக்கும் திட்டம்

*வினா எண் 149—திரு. சி. கணேசன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணப்பயிர் சாகுபடி விஸ்தீரணத்தை மேலுமம் அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனின், எந்தெந்த மாவட்டங்களில் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### இராசகுலராமப்பேரி கண்மாயில் அடங்கிய விவசாய நிலங்கள்

*வினா எண் 150—திரு. சி. த. சிதம்பரம்: மாண்புமிகு வேளாண்மைதுறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவல்லிபுத்தூர் பகுதியில் இராசகுலராமப்பேரி கண்மாயில் அடங்கிய விவசாய நிலங்களைப் பருத்தி ஆராய்ச்சித் திட்ட விரிவாக்கத்திற்காகக் கையகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது உண்மையா?

---

*172-173-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



(ஆ) ஆம எனில் அங்கு பயிரிடும் அந்த விவசாயிகளைப் பாதிக்காத வகையில் வேறு தரிசு நிலங்களைக் கையகப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூரில் இயங்கி வரும் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் விரிவாக்கத்திற்கென இராசகுலராமப்பேரி கண்மாய் பகுதியில் 25 முதல் 30 ஏக்கர் நிலத்தை விவசாயிகளிடமிருந்து நேரடியாக விலைக்கு வாங்க தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) இதனால் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். மேலும் பாசன வசதியற்ற தரிசு நிலங்கள் இம்மாதிரியான ஆராய்ச்சிக்கு ஏற்றவையல்ல.

### களியக்காவிளையில் கட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்.

*வினா எண் 151—திரு டி. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களியக்காவிளையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்கட்டி முடிக்கப்பட்டும் இன்னும் செயல்படாததன் காரணமென்ன?

(ஆ) எப்போது முதல் செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ) களியக்காவிளையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 25-7-68-ல் ஆரம்பிக்கப்பட்டு, வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது. புதிய கட்டிடம் கட்டும்பணி 15.9.80-ல் தொடங்கப்பட்டது. அப்பணி 90 விழுக்காடு முடிவுற்றது. எனினும் வாடகைக்கட்டிடத்தில் நடைபெற்றுவந்த மேற்படி விற்பனைகூடம் 1-5-82-முதல் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த களியக்காவிளையில், இந்த வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை இப்பொழுது ஆரம்பித்திருப்பதாக சொல்கிறார்கள். அந்தக் கட்டிடத்தில் விவசாயிகள் கொண்டு வருகிற பொருள்கள் பூராவையும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று புகார் சொல்லப்படுவது உண்மையா? அப்படி என்றால், விவசாயிகள் கொண்டு வருகின்ற—அந்தப் பகுதியிலே வாழைக் குலைகள் அதிகம், நேந்திரக்காய் வாழை--இது போன்ற பல்வேறு பொருள்களை வாங்கி சேமித்து வைத்து, விவசாயிகள் நலன் பெறுகின்ற வகையிலே அவர்களுக்கு பணம் கொடுத்து, மற்ற ஏற்பாடுகளையும் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு விற்பனைக் கூடப் பகுதியிலேயும் சில விளைபொருள்கள் அறிவிக்கையிடப்பட்டிருக்கின்றன. அந்தப் பொருள்களை மட்டும்தான் விற்பனைக் கூடங்கள் வாங்க இயலும், அறிவிக்கையிலே சேர்க்கப்படாத

நிறைவேற்றப்படும். எனவே சிங்காநல்லூர் பகுதிக்கும் வடிகால் திட்ட ஆய்வுப் பணியை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வரும் வடிகால் திட்டம் எப்பொழுது நிறைவேறும்? அந்தத் திட்டத்திற்கான செலவு என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திட்டத்திற்கு முதலிலே மதிப்பீடு போட்டது ரூ. 597.57 இலட்சம். ஆனால் இப்பொழுது ரூ. 750 இலட்சமாக அது உயர்ந்திருக்கிறது. இந்தத் திட்டம் விரைவிலே முடியும், எந்தக் கால அளவில் அது முடியும் என்பதற்கு இங்கே சரியான குறிப்பில்லை.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிப் பகுதி, மற்றும் இப்பொழுது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளை ஒட்டு மொத்தமாகப் பார்ப்போமானால், கிட்டத்தட்ட 35 இலட்சம் ஜனத்தொகை கொண்டுள்ள மிகப் பெரிய நகரமாக விளங்குகிறது. எனவே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமுல் செய்வதன் மூலமாக, கொசுத் தொல்லைகளை ஒழிக்க உதவிகரமாக இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்தத் திட்டம் எந்த, எந்தப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட உத்தேசம் உண்டு, அது எப்பொழுது முடிவடையும் என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப் போல கோவை மாநகராட்சியின் ஏனைய பகுதிகளுக்கும் அதாவது மற்ற பகுதிகளுக்கும் ஓரிரண்டு ஆண்டுகளில் வடிகால் திட்டம் நிறைவேற்றப்படும்.

ரெட்ஹில்ஸ் ஏரியில் தண்ணீர் ஆவியாய்ப் போவதைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 52—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்குக் குடி தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டுள்ள ரெட்ஹில்ஸ் ஏரியில் 59 சதவீதம் ஆவியாய்ப் போவதைத் தடுக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். (ஆ): பூண்டி சோழவரம், ரெட்ஹில்ஸ் நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள கொற்றலையாற்றுப் படுகையில் மணற்பாங்கான நில நீர்த் தேக்கங்கள் உள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள நீர்த்தேக்கங்களில்



உள்ள நீரையும் இந்த இயற்கையாக அமைந்துள்ள நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதன் மூலமும், நீர்த் தேக்கங்களிலுள்ள ஒரு பகுதி நீரை நிலத்தின் கீழ் செயற்கை முறையில் செலுத்தி நில நீர்த் தேக்கங்களில் சேமித்து வைத்து, வேண்டியபோது அதை நீர் ஏற்றும் இயந்திரங்கள் மூலம் வெளிக் கொணர்ந்து தேவைக்கேற்ப உபயோகிப்பதன் மூலமாகவும் இந்த விரயத்தைக் குறைக்க முடியுமா என்று ஆய்வு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாய்வு செய்த பிறகு, இத்திட்டம் செயல்படுத்தக் கூடியதாக இருப்பின் மேற்கொண்டு செயல்படுத்த ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தற்போது தக்க அயல்நாட்டு நிபுணர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாய்வுத் திட்டத்தை ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் குழு உதவியுடன் செயல்படுத்தத்திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் ஆவியாகப் போவதைத் தடுக்கும் இந்த ஆய்வு வேலை—இந்த திட்டம்—வெற்றிகரமாக முடியுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் செய்த ஆய்வில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ரெட்ஹில்ஸை சுற்றியுள்ள கிராம மக்கள் ஏரியில் உள்ள தண்ணீரை அசுத்தப்படுத்துகிறார்களே, அதைத் தடுப்பதற்கு ஏரியைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காக எப்போதுமே அங்கு கார்டு போடப்பட்டிருக்கிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் அது ஒரு ஆலமரத்தடி; அங்கே அவுட் போஸ்ட்டை போடவேண்டுமென்று முடிவெடுத்து, அங்கே போலீஸ்காரர்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள், ஒரு டெம்பரரி ஷெட் போடப்பட்டிருக்கிறது. கிராம மக்கள் தண்ணீரை அசுத்தப்படுத்துவதை அவர்களால் தடுக்க முடியும் என்று அரசு கருதுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் ஆவியாகப் போவதைத் தடுப்பதற்கு நவீன சாதனங்கள் மற்றும் இன்னும் அதிகமான விவரங்களைச் சேகரித்துக் கொள்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளுக்கு உறுப்பினர்களை, குறிப்பாக விவரமான சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துக்கொண்டு செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திரு. ஆர். டி. கோபாலன் : துணைத் தலைவர் அவர்களே, விவரமான உறுப்பினர்கள் என்று சொல்கிறார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப்பினர் களுமே விவரம் தெரிந்தவர்கள் தான், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழு என் தலைமையில் செல்வதாக இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் நான் செல்லவில்லை. அப்போது மேனேஜிங் டைரக்டராக இருந்த திரு. திவான் முகமது அவர்கள் தலைமையில் குழு சென்று வந்து, அதன் பின்னர் அவர்கள் ஒரு அறிக்கையை தயார் செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரெட்ஹில்ஸ் குடிதண்ணீரை அங்கே சுற்றிலும் உள்ள கிராம மக்கள் அசுத்தப்படுத்துகிறார்கள் என்று சொன்ன நேரத்தில், போலீஸ் காவல் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே ரெட்ஹில்ஸ் போலீஸ்காரர்கள் காவல் போடப்பட்டு, அவர்களே அந்தத் தண்ணீரை அசுத்தப்படுத்தியதன் காரணமாக அகற்றப்பட்டார்கள். அங்கிருக்கிற போலீஸ்காரர்களே அந்தத் தண்ணீரை உபயோகிக்கிறார்கள். அதனால் அந்தத் தண்ணீர் பாதிக்கப்படாதா? ஏற்கனவே அங்கே காவலுக்குப் போடப்பட்டிருந்த காவல்துறையினர் தண்ணீரை அசுத்தப்படுத்துகிறார்கள் என்று காரணம் காட்டி அவர்கள் அகற்றப்பட்டிருக்கிறார்கள். தற்போது இரண்டு இடங்களில் போடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எந்தத் தண்ணீரை உபயோகிக்கிறார்கள்? அந்தத் தண்ணீரையும் அவர்கள் அசுத்தப்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, காவலுக்கு போட்டவர்கள், வெலியே மேய்ந்தார்கள் என்றதகவல் எனக்கு இல்லை. அவர்களே அந்தத் தண்ணீரை அசுத்தம் செய்தார்கள் என்று எனக்கு தகவல் இல்லை. இரண்டு இடங்களில் போலீஸ்காரர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உபயோகிப்பதற்குவேறுதண்ணீரை ரஉபயோகப்படுத்துவார்கள். அந்தத் தண்ணீரில் போய் ஆடு மாடுகளைக் கழுவுவது, தண்ணீரைக் குடிக்க முடியாமல் துணி தோய்ப்பது பாத்திரங்கள் தேய்ப்பது, குளிப்பது போன்றவற்றைச் செய்யாமல் பார்த்துக் கொள்வது அவர்கள் வேலை. எனக்கிருக்கிற தகவல்படி அவர்கள் ஒழுங்காக வேலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.





## சென்னைக்கு குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதித் திட்டத்திற்கு ஆகும் செலவு.

*வினா எண் 53—திரு எம். சின்னசாமி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதித் திட்டத்திற்கு ஆகும் செலவில் மத்திய அரசு ஒரு பகுதியை ஏற்க வேண்டும் என்று மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணா நதித் குடிநீர் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 250 கோடி மானியமாகவும், ரூபாய் 200 கோடி நீண்ட காலக் கடனாகவும் அளிக்க வேண்டுமென தமிழக முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களை 2-5-1983 அன்று புதுடெல்லியில் நேரில் சந்தித்து கேட்டுக்கொண்டார்கள். தேசிய திட்ட வரம்பிற்குள் இத்திட்டம் கொண்டு வரப்பட்டு மைய அரசின் நிதி நிலைமையையும் கருத்திற் கொண்டு இத் திட்டத்திற்கான நிதி உதவி வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படுமென மத்திய திட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்கள்.

திரு. எம். சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா நதித் திட்டம் என்பது ஒரு நூறாண்டுக் காலவரலாற்று சிறப்புமிக்க திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிப்பதுதான் தார்மீகக் கடமை. ஆகவே இந்தத் திட்டத்தின் முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்கவேண்டுமென்று மாநில அரசு கோரிக்கை விடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே எந்த அளவிற்குக் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். என்பதை நான் இப்போது தகவலாகக் கொடுத்திருக்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: துணைத்தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதித் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு எவ்வளவு? அதில் தமிழக அரசுக்குச் செலவாகும் பணம் எவ்வளவு? இந்தத் திட்டம் எவ்வளவு ஆண்டுகளில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? திட்டப்பணிகள், செய்ய வேண்டிய வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதா? எவ்வளவு கிலோ மீட்டர் பணிகள் முடிந்துள்ளன?

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு, ஆந்திர அரசிடத்தில் ஏற்கனவே 30 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். இதே போன்று ஆந்திர அரசு, இதற்காக நிதி ஒதுக்கியுள்ளதா? அப்படி நிதி ஒதுக்காமல் இருந்தால், இந்த திட்டத்திற்கான வேலையை ஆந்திர அரசு துவக்காமல் இருந்தால், ஆந்திர அரசு இந்த 30 கோடி ரூபாய்க்கு வட்டி தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் 30 கோடி ரூபாய் காடுத்திருக்கிறோம். 6 மாதங்கள் கழித்து, இன்னும் 30 கோடி பாய் கொடுக்க வேண்டும். இதற்கென ஒரு குழு இருக்கிறது. ரூது கூடி, இந்த 30 கோடி ரூபாயில் எதிர்பார்த்த அளவுக்கு அஅந்தந்த இனங்களில் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்து விட்ட பிறகுதான், மறுபடியும் 30 கோடி தருகிறோம். அப்படி ஒரு கூட்டம் வருகிற 14ஆம் தேதி நடைபெறவிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் அதிகாரிகள் கூடி, இது குறித்து ஆய்வு செய்வார்கள். அதற்குப் பின்னால், மேற்கொண்டு 30 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமா என்பதுபற்றி பரிசீலிக்கப்படும்,

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக கால்கோள் இடப்பட்டு, 6 மாதங்கள் ஆகிறது. இந்த 6 மாத காலத்தில் நடைபெற்றுள்ள வேலை பணிகளின் முன்னேற்றத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா; மற்றொன்று, இந்தப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு தமிழக அரசு அதிகாரிகளை நியமித்து உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேற்பார்வையிட அதிகாரிகளை நியமித்தாகி விட்டது. நில ஆர்ஜிதம் செய்வதற்கான பணிகள் நடைபெறுகின்றன, நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்றால் மாண்புமிகு முதல்வரவர்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. எனவே, இதற்காக நாம் கால்வாய் போடும்பொழுது சில நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய' வேண்டியிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் 'ஆர்ஜிதம் செய்யப் போகிறோம் என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் அனுமதி பெறு'வதற்கு வேண்டிய நடைமுறைகளும் செய்யப்படுகின்றன. ஆந்திர மாநிலத்தில் என்னென்ன நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றி ஆந்திர மாநில சட்டமன்றத்தில் அங்கேயுள்ள உறுப்பினர்கள் எழுப்புவார்கள் என்று நான் நம்புகிறேன்.





திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கிருஷ்ணா நதித் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காக, கால்வாய் வெட்டுவதற்கு இரஷ்ய நிபுணர்கள் வந்து வெடி வைத்து, துரிதமாகக் கால்வாய் வெட்டக்கூடிய அரிய திட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்தது. அது உண்மையா? வெளிநாட்டு உதவியோடு கிடைக்கின்ற அப்படிப்பட்ட அரிய திட்டத்தைக் கொண்டு வந்து குறுகிய காலத்தில் அந்தத் தண்ணீர் சென்னைக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்பாங்கான, பாறைகள் உள்ள இடங்களில் இரஷ்ய நிபுணர்களைக் கொண்டு செய்வதற்கு ஆந்திர மாநில அரசு முயற்சி செய்வதாக நானும் இதழ்களில் படித்தேன் தமிழ் நாட்டிலேயும் அப்படிப்பட்ட தேவை இருந்தால் அதைப் பற்றி மாண்புமிகு முதல்வரவர்கள் முடிவெடுப்பார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கிருஷ்ணா நதித் திட்டத்தில், ஆந்திர மாநில எல்லையில் நடைபெற வேண்டிய பணிகள் நடைபெற்று முடிந்த பிறகுதான் தமிழ்நாட்டு எல்லையில் பணிகள் துவக்கப்பட இருக்கின்றனவா அல்லது இரண்டு இடங்களிலும் ஒரே நேரத்தில் பணிகள் நடக்க இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சைமல்டேனியஸாக அங்கேயும் வேலைகள் நடக்கும், இங்கேயும் வேலைகள் நடக்கும் இங்கே நாம் ஆரம்பித்து விட்டோம். அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நிலத்தை எடுப்பதற்கு 4 (1) நோட்டிபிகேஷன் கொடுக்க வேண்டும். அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் தமிழ்நாட்டின் எல்லைக்குள் 25 கிலோமீட்டர் தூரத்திற்கு வாய்க்கால் வெட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்பொழுது, அதில் நஞ்சை நிலம் எவ்வளவு இருக்கிறது, புஞ்சை நிலம் எவ்வளவு இருக்கிறது, அரசாங்க நிலம் எவ்வளவு இருக்கிறது? அதை எடுப்பதை விரைவு படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எவ்வளவு நஞ்சை நிலம் என்பது பற்றிய புள்ளி விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. அதிகாரிகள் அவ்வப்பொழுது அனுப்புகிறார்கள், இந்த வாய்க்காலை வெட்ட வேண்டிய இடத்தில் நஞ்சை நிலம் இருந்தால், அந்த பட்டா நம்பர் என்று குறிப்பிட்டு, இது நஞ்சையாக இருக்கிறது, இதற்கு அனுமதி வேண்டுமென்று அனுப்புகிறார்கள். இவ்வாறு இரண்டு முறை வந்திருக்கிறது, என்று கருதுகிறேன். ஆனால் மொத்தமாக எவ்வளவு என்ற கணக்கு என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, ஆந்திர எல்லையில் செய்யவேண்டியவேலைகளுக்குமொத்த மதிப்பீடு சுமார் 760 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேலைகளில் தமிழகத்தின் பங்கு இப்பொழுது சுமார் 200 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்னியில் பல்வேறு பணிகள் இங்கே செய்ய வேண்டியிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு வாய்க்கால் கள் வெட்ட வேண்டியிருக்கிறது. அதற்காக தனிச் செலவு இருக்கிறது. அதல்லாமல் பகிர்மானக் குழாய்கள் போன்றவை, சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவை வைக்க வேண்டியிருக்கிறது. அதற்காக இந்தப் பணிகளை பல கட்டங்களில் மேற்கொள்ள திட்டமிட்டப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இதற்கு சுமார் 206 கோடி ரூபாய் இரண்டாவது கட்டமாக 1092 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நபர் ஒன்றுக்கு 67 லிட்டர் என்ற வீதத்தில் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதை 125 லிட்டர் என்ற வீதத்திற்கு அளிப்பதற்கும் 2002-ம் ஆண்டில் 145 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்துவதற்கும் மேற்கண்ட நீர் தூய்மைப் படுத்தும் அமைப்புகளை பயன்படுத்த வேண்டியுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா நதித் திட்டத்திற்கு மத்திய அரசிடம் ரூபாய் 800 கோடி மானியமாகவும் அதே சமயத்தில் ரூபாய் 200 கோடி மாநில அரசு நீண்ட காலக் கடனாகவும் கேட்டிருப்பதா அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்திற்கு ஆந்திர அரசு எவ்வளவு செலவுத் தொகை ஏற்றுக் கொண்டிருக் கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதுபற்றி பதில் சொல்லியிருக்கிறேன். ஆந்திர எல்லையில் இதை நிறைவேற்ற மொத்தச் செலவு ரூ. 760 கோடி ஆகிறது. நாம் அதிலே ரூ. 200 கோடியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எனவே, அவர்களுக்கு ரூ. 560 கோடி ஆகிறது.

திரு. என். வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருவதில், ஆந்திரப் பிரதேச எல்லையிலுள்ள வனப் பகுதியில் கால்வாயை வெட்டக் கூடாது என்று மத்திய சர்க்கார் ஏதோ ஆணை பிறப்பித்து, அவ்வேலை தடைபட்டு இருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்ததே, அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? இது சம்பந்தமாக என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு தகவல் அரசுக்கு அதிகாரப் பூர்வமாகக் கிடைக்கவில்லை.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நிதி நீர் திட்டம் வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், 40, 50 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட பழைய முறையிலேயே இருப்பதால், அதை மாற்றி யமைப்பதற்கு ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா? இந்த மொத்த மதிப்பீட்டில் விநியோக முறை, டிஸ்ட்ரிபியூஷன் ஆப் வாட்டர் டாப், தெருக் குழாய்கள், வீட்டுத் தொடர்புகள் போன்றவற்றை மாற்றியமைப்பதற்கு ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா? அதற் கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே பதில் சொல்லும் போது சொன்னேன். பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. பகிர்மானக் குழாய்கள் போடுவதற்கும், கால்வாய் வெட்டுவதற்கும், இருக்கக்கூடிய நீர்த் தேக்கங்களை இரண்டு அடி உயர்த்துவதற்கும் முதல் முதலாக 30.15 கோடி செலவா கிறது. அதற்குப் பின்னால், தமிழ்நாட்டுப் பகுதியில் பல்வேறு வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. சுத்திகரிப்பு வேலையும் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது கீழ்ப்பாக்கத்தில் அது இருக்கிறது. இவைகளை யெல்லாம் சேர்த்து 206 கோடி ரூபாய் முதலில் ஆகிறது. இரண்டாம் கட்டமாக 12 டி.எம்.சி. குடிநீர் வழங்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இப்போது 6.5 டி எம்.சி. தான் கொடுக்கப்படுகிறது. மேலும் அதிகமானத் தண்ணீர் கொடுப்பதற்கு மற்ற வேலைகளுக்கு பகிர்மானக் குழாய்கள் போடுவதற்கெல்லாம் ரூ. 206 கோடி முதலில் ஆகிறது. அதற்குப் பின்னால் 1092 கோடி செலவாகும். இவைகளை செய்து முடித்தால், 2002ஆம் வருஷத்தில் We are seeing far beyond our nose. தொலைநோக்கு பார்வையோடு, அப்போது இருக்கக்கூடிய மக்கட் தொகைக்கு ஏற்ப, 145 லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு கொடுக்கக்கூடிய அளவுக்கு உள்ளது இத் திட்டம். இன்றைய தினம் சென்னையில் 67 லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு கொடுக்கப்படுகிறது. எனவே. இது ஒரு பெரிய மாபெரும் திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார் கள் என்று நம்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிநீர் வழங்கும் இந்த கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்கு 'திராவிட கங்கை' என்று பெயர் சூட்டப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேறிய, பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்கள்.

They will rot be under control of the Management. எனவே தொழிலாளர்களுக்கான நல்ல சட்டத்தை உண்மையாகச் செயல் படுத்த வேண்டும் என்றால் லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர்கள் அரசாங்கத்திலே இருந்து டெபுடேஷனில் சென்றவர்களாக இருக்க வேண்டும், நிர்வாகமே நியமித்து நிர்வாகமே சம்பளம் கொடுத்தால் லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர் வேலை ஒழுங்காக நடக்காது. அவர்கள் பயந்து கொண்டு நடக்க வேண்டி இருக்கும் என்ற காரணத்தால் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்று மத்திய அரசினிடத்திலே கேட்டிருக்கிறோம். மத்திய அரசு அனுமதி தரவில்லை. ஆனால் மீண்டும் நாம் அவ்வாறு கேட்டு வலியுறுத்துகிறோம். சமீபத்திலேயும் வலியுறுத்தியிருக்கிறோம். எனவே வெல்ஃபேர் ஆஃபீஸர்களாக இருப்பவர்கள் நிர்வாகத்தால் நியமிக்கப்படக் கூடாது, அரசு அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன்: துணைத் தலைவர் அவர்களே, நான் புரிந்து கொண்டேன். என்னுடைய கேள்வியே குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் அரசு சார்பிலே தொழிலாளர் நல அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்களா என்பதுதான். அதைத்தான் அமைச்சர் அவர்களும் திருப்பி விளக்குகிறார்கள் ஆனால் நான் கேட்பது என்னவென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்கக் கூடிய அனுபவத்தை வைத்து உடனடியாக அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்காக மத்திய அரசினடத்திலே வலியுறுத்தி சட்ட திருத்தத்தைக் கொண்டுவந்து அதன்படி அரசின் சார்பிலே அந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா என்பதுதான். மேலும் இப்போது சிறு, சிறு கடைகளில் அதாவது முடி திருத்தும் கடை, ஜவுளிக் கடை போன்றவற்றிலே வேலை செய்கின்ற பணியாளர்களுக்குப் பாதுகாப்பாக சில அதிகாரிகள் வருகிறார்கள். ஆனால் அதேமாதிரி பெரிய தொழிற்சாலைகளுக்கும் அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது மத்திய சர்க்கார் தடையாக இருந்தாலும், அவர்கள் அனுமதி கொடுக்காவிட்டாலும் உடனடியாக **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதெல்லாம் இப்போது தேவையில்லை. அவைக் குறிப்பிலே இருந்து அது நீக்கப் படுகின்றது.

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலே இப்போது முதலாளிகளால் நியமிக்கப் பட்டு செயல்பட்டு வரக்கூடிய வெலஃபேர் ஆஃபீஸர்கள் உண்மையாக தொழிலாளர்களின் வெல்ஃபேருக்காக அவர்கள் பாடுபட வில்லை. அதற்கு மாறாக தொழிலாளர்களுக்கு எதிராக தொழிற்சங்கங்களிலே பாடுபடக்கூடிய முக்கியமான தொழிற் சங்க ஊழியர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மேலும்

---

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது



அவர்களுக்கு எதிராக என்னென்ன காரியங்களைச் செய்ய வேண் டுமோ அவற்றை எல்லாம் செய்கிறார்கள். எனவே இந்த நிலை மையினைப் பரிபூரணமாக மாற்றியமைக்க தமிழக அரசு பல சந்தர்ப்பங்களிலே வற்புறுத்தியும் அந்த அதிகாரிகளை அரசாங்கம் தான் நியமிக்க வேண்டும் என்பதற்கு மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லை என்று சொன்னார்கள். அப்படி என்றால் அவ்வாறு சட்டத் திருத்தம் வேண்டாம் என்று மத்திய சர்க்கார் மறுத்துள்ளதா? அப்படி மறுத்திருந்தால், கன்கரன்ட் லிஸ்டிலே வரக்கூடிய பொருளாக இருப்பதன் காரணத்தால் இந்த அரசுக்கு உரிமை இருக்கின்றது என்ற காரணத்தால்அப்படி ஒரு சட்டத்தை இங்கே கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து அரசுக்கு முன்னதாகவே உள்ளது. லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர்கள் அப்பாயின்ட்மென்டை தி மேனேஜ்மென்ட் என்ற காரணத்தால் அவர்கள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வேலை செய்வதில்லை என்ற காரணத்தால் அரசின் அதிகாரிகள் டெபுடெஷனிலே போக வேண்டும் என்ற கருத்தினைச் சொன்னதே இந்த அரசு தான். எனவே அதைப்பற்றி கேட்டதற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. அனுமதி வரவில்லை. நான் நேராகக் கூட பேசினேன். மாநில அரசு மீண்டும் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மத்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதம் என்ற வகையில் ரிமைண்டர் அனுப்பி இருக்கின்றது. பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம், நிலைமை எப்படி போகின்றது என்று. மத்திய அரசினிடத்திலே இருந்து அனுமதி வராமலே இருந்தால் நாமேஅந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து பார்க்கலாம்.

பின்தங்கிய நிலையிலுள்ள மாநிலங்களுக்குத் தோல் தொழில் தொடங்க உரிமம் வழங்கும் திட்டம்

*வினா எண் 154—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பின்தங்கிய நிலையில் உள்ள மாநிலங்களுக்குத் தோல் தொழில் தொடங்க உரிமம் வழங்க மத்திய அரசு முடிவு செய் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு சொல்லியுள்ள கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) உலக சந்தையில் தோல் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கவும், அதே நேரத் தில் சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் பாதிக்காம லிருக்கவும், அவைகளுக்குத் தொடர்ந்து விற்பனைச் சந்தை கிடைக்கவும், தோல் தொழிலை பாவலாக்கும் பொருட்டும், தோல் காலணிகள் மற்றும் தோல் பொருட்களை தயாரிக்க உரிமம் வழங்குவதில் உள்ள முறைகளை மைய அரசு தளர்த்தியுள்ளது. அதன்படி முடி., காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்க ஒழுங்காய் அமைந்த துறையிலிருந்து வரும் விண்ணப்பங்கள் சில

**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக அரசு 30 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகவும், இன்னும் மூன்று மாதங்களுக்குள் மேலும் 30 கோடி ரூபாய் கொடுக்க இருப்பதாகவும், அதற்கான செலவைச் செய்வதற்கு குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிகாரிகளைக் கொண்ட குழு அது. எந்தெந்த அதிகாரிகள் அதில் இடம் பெற்றிருக்கிறாக்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. இரண்டு பக்கத்து அதிகாரிகளும் கலந்து பேசுவார்கள்.

**திரு. செ. சிவசாமி ;** மாண்புமிகு பேரவைத் துணை தலைவரவர்களே, தற்போது போடப்பட்டிருக்கின்ற கிருஷ்ணா நதித் திட்டத்தின் காரணமாகப் பல காடுகள் அழிக்கப்படுவதால் மழை பெய்வதற்கு இடைஞ்சல் ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லி, அது சம்பந்தமாக சில ஆலோசனைகளையும் சொல்லி, இதை மாற்றி அமைக்கும்படியாகப் பத்திரிக்கைகளில் நான் படித்தேன். அது வாஸ்தவம்தானா ? அப்படி மத்திய அரசாங்கத்திடத்திலிருந்து ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு மத்திய அரசாங்கத்திடமிருந்து வந்ததாக என்னிடத்தில் தகவல் இல்லை.

**தனியார் தொழிற்சாலைகளுக்கும் அரசே தொழிலாளர் நல அதிகாரிகளை நியமிக்கும் திட்டம்.**

*வினா எண் 153—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மற்றும் திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் பணியாற்றும் தொழிலாளர்களைக் கொண்ட தனியார் தொழிற்சாலைகளுக்கு, அரசே தொழிலாளர் நல அதிகாரிகளை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இது பற்றி தொழிற்சாலைகள் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவர மாநில அரசு மத்திய அரசின் ஒப்புதலை கேட்டுள்ளது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.





**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் பணியாற்றும் தொழிலாளர்களைக் கொண்ட தனியார் தொழிற்சாலைக்கு, அரசே தொழிலாளர் நல அதிகாரிகளை நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டிருக்கிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் நீண்ட காலமாகத் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டு வருபவர்கள். முதலாளிகளிடத்தில் எப்படிப் பேசுவது என்பதெல்லாம் அவருக்குத் தெரியும்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். எனவே தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுகின்ற வகையிலே முதலாளிகளிடத்திலே எப்படிப் பேசுவது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர்களுக்குரிய அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு, அதிகமான அளவிலே அதாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலே தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளுக்கு அரசின் சார்பிலே தொழிலாளர் நல அதிகாரியை நியமிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத்தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 500-ம் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலும் தொழிலாளர்கள் இருந்தால் ஒரு லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸரை நியமிக்க வேண்டும் என்று 1953-ம் வருஷச் சட்டத்திலே இருக்கின்றது. அதன்படி நியமித்திருக்கிறார்கள். ஆனால் லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர் என்ற பெயர் இருக்கிறதே தவிர They are on the pay roll of the Management எனவே நிர்வாகமே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கின்ற காரணத்தால் லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர்கள் வேலைகளைச் சரியாகச் செய்ய முடிவதில்லை, ஏனென்றால் They are on the pay roll of the Management. அப்படி மேனேஜ்மெண்ட் இடத்திலே சம்பளம் வாங்கிக்கொண்டு மேனேஜ்மெண்டைக் கண்டித்து தொழிலாளர்களுக்கான நல்ல சட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. அவர்களைக் கண்டிக்க முடிவதில்லை. எனவே இந்த அரசின் ஆலோசனை என்னவென்றால் அந்த லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர்கள் அரசாங்க டெபுடேஷனிஸ்ட்டாக இருக்கவேண்டும் என்பதுதான். அதாவது முதலாளிகளிடத்திலே ஊதியத்தைப் பெற்றாலும் அந்த அதிகாரிகள் அரசாங்க அதிகாரிகளாக இருக்க வேண்டும்.

விதிகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும் என்று மைய அரசு அறிவித்துள்ளது. அவ்விதிகளில் ஒன்று பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தோல் தொழில் தொடங்க வேண்டும் என்பதாகும்.

(ஆ) இந்தப் பொருளின் மீது மாநில அரசின் கருத்துக் கேட்கப்படவில்லை. ஆனாலும் மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் ஒரு தொழிலும் இல்லாத அல்லது பின்தங்கிய பகுதி என்று மட்டும் அல்லாமல் ஏற்கெனவே தொழில்துறையில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடங்களிலும் தொழில் தொடங்க அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வடாற்காடு மாவட்டத்திலேதான், இந்தியாவே பாராட்டுகின்ற அளவிற்கு, இந்தத் தோல் தொழில் நடந்து கொண்டு இருக்கிறது. மைய அரசின் இந்தப் புதிய சட்டத்தால் தமிழ்நாட்டில் இந்தத் தோல் தொழில் பாதிக்கப்படுமா ? இங்கே புதிதாக தொழில் தொடங்க லைசென்சு கேட்டு விண்ணப்பித்தால் உடனடியாக அது கொடுக்கப்படுமா ? அல்லது, இந்தச் சட்டத்தால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, தோல் சம்பந்தப்பட்ட தொழில்கள் மட்டுமல்லாமல், பொதுவாக ஏற்கனவே மைய அரசு அறிவித்துள்ள 118 மாவட்டங்களில்—ஒரு தொழிலும் இல்லாத அந்த மாவட்டங்களில் அல்லது ஜீரோ டிஸ்டிரிகிட் என்று சொல்லப்படுகிற அந்த இடங்களில்—தொழில்கள் தொடங்க விண்ணப்பித்தால் பர்ஸ்ட் பிரியாரிட்டி அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இந்த 118 மாவட்டங்கள் என்பது இந்தியா பூராவிலும் உள்ளது. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது தமிழகம் நிச்சயமாக பாதிக்கும் என்ற நிலைமை வருகிறது. ஆகவே நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறோம். எந்தத் தொழிலும் வராத அல்லது ஜீரோ டிஸ்டிரிக்ட் என்பதற்குப் பதிலாக, ஏற்கனவே இருந்ததைப்போல ஒரு பிளாக் அல்லது ஒரு தாலுக்கா என்ற அடிப்படையில் அது பின்பற்றப்பட வேண்டும் என்று தமிழக அரச சார்பில் மைய அரசுக்கு நாம் எழுதிக்கேட்டு இருக்கிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவர் அவர்களே மைய அரசு அறிவித்துள்ள 118 மாவட்டங்களில தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு மாவட்டம் உள்ளதா ? நம்முடைய மாநில அரசு பிளாக் அல்லது தாலுக்கா அளவில் பின்தங்கிய பகுதி என்று அல்லது தொழில்களே இல்லாத பகுதி என்று எதையேனும் அறிவிக்கவேண்டும் என்று மைய அரசுக்கு எழுதியதற்கு மைய அரசிடம் இருந்து வந்த பதில் என்ன ? சமீபத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்கூட மைய அரசு தொழில் துறையில் தமிழ்நாடு அரசுக்கு ஒத்தாசையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நல்ல நிலைமையைப் பயன்படுத்தி தமிழகம் தொழில் துறையில் பின்தங்கிய நிலைக்குப் போகாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமீபகாலத்திலே மைய அரசு ஓரளவிற்கு லெட்டர் ஆப இன்டென்ட் அல்லது லைசென்சு கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதைச்சொல்கிறபோது, அதே நேரத்தில் கொள்கை ரீதியாக 118 மாவட்டங்கள் இந்தியா பூராவிலும் தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று சொல்லி அந்த அடிப்படையில் அங்கே தொழில் தொடங்குவதற்கு பர்ஸ்ட் பிரையாரிட்டி என்று சொல்கிறபோது அதனால் தமிழகம் பாதிப்புக்கு உள்ளாகும் என்ற நிலைமை இருக்கிறபோது நம்முடைய சர்க்கார் அதையும் மறுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே இரண்டையும் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து வற்புறுத்துவோம்.

**காஞ்சிபுரத்திலுள்ள சரிகை உற்பத்தி தொழிற்சாலை.**

**வினா எண்—155 திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள சரிகை உற்பத்தி தொழிற்சாலை இலாபகரமாக இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) ஆம் தற்போது இலபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) 1982-83 ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை நிகர எதிர்பார்க்கும் இலாபம் சுமார் 2.25 இலட்சம் ஆகும். இருப்பினும் மேற்படி நிறுவனத்தின் தற்போதைய தொடர் இழப்பு சுமார் ரூ. 20 இலட்சம் ஆகும். வரும் ஆண்டுகளில் மேற்படி தொடர் இழப்பைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(முற்பகல் 9.50)

**திரு. து. புருஷோத்தமன் :** துணைத் தலைவரவர்களே, இந்த காஞ்சிபுரத்தில் இருக்கிற சரிகை உற்பத்தித் தொழிற்சாலை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்தே இலாபகரமாக நடந்துவருகிறதா? இடையில் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியதாக செய்தி இருக்கிறதே அது உண்மையா? அந்த இழப்புக்குக் காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சரிகை லிமிடெட் என்ற நிறுவனம் 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டபோது சுமார் ஆயிரம் மார்க் உற்பத்தித் திறன் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. மாதம் ஒன்றுக்கு சராசரியாக உற்பத்தித் திறன் 360 மார்க் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் தொடக்கத்திலிருந்தே 50 சதவீத உற்பத்தித்தான் இருந்தது. அதற்குக் காரணம் 1974 ல் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு வாங்கப்பட்ட இயந்திரங்கள் சரியானவையாக இல்லாததுதான்.

அதனால் அதற்கு அடுத்து ஆண்டுக்காண்டு இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டும் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டும் வந்த காரணத்தால் ஏற்கெனவே இருந்துவந்த நஷ்டம் ஆண்டுவாரியாகக் குறைக்கப்பட்டு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் இப்போது சுமார் 2.25 இலட்சம் இலாபம் அடையும் நிலையை எட்டியிருக்கிறது. வரும் ஆண்டில் மொத்த நஷ்டத்தையும் நிவர்த்தி செய்துகொண்டு இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. து. புருஷோத்தமன்: துணைத் தலைவரவர்களே, இந்த சரிகை தமிழ்நாட்டுக்கு அதிக அளவிற் தேவைப்படுவதால் சூரத், குஜராத் மற்றும் பல மாநிலங்களிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதனால் நம்முடைய மாநிலத்தில் மேலும் பல இடங்களில் இந்த சரிகைத் தொழிற்சாலைகளை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவரவர்களே, இந்த 20,000 பட்டு கைத்தறிகளுக்கு ஒரு மாதத்திற்கு சுமார் 7000 மார்க் தேவையாக இருக்கிறது. இப்போது ஒரு மாதத்தினுடைய உற்பத்தி ஏறத்தாழ ஆயிரம் மார்க் தான் தமிழ்நாடு சரிகை லிமிடெட் தொழிற்சாலையில் இருக்கிறது. எனவே, 6,000 மார்க் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிறது. சம்மந்தப்பட்ட சொசைட்டிகள் நேரடியாக அவர்களின் தேவைக்கு ஏற்ப உரிய இடங்களிலிருந்து, அவர்களே தேர்வு செய்து தனித்தனியாக அந்தந்த இடத்திலிருந்து வாங்குகிறார்கள் இப்போது இருக்கிற நிலைமையில் இருக்கின்ற தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யவும், அதைப்போன்று இன்னொரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே இந்த தமிழ்நாடு சரிகை லிமிடெட் தொழிற்சாலையில் மேலும் கூடுதல் 'ஷிப்ட்' ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா அதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு; துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இப்போது இரண்டு ஷிப்டுகளில் ஏறத்தாழ ஆயிரம் மார்க் தயாரிக்கப்படுகிறது. விரிவாக்கம் செய்வதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு வாங்கிக் கொடுக்கப்பட்ட இயந்திரம் சரியானதாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள் இப்படிப்பட்ட இயந்திரங்களை வாங்கிக் கொடுத்ததற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது தேவையான



மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு. துணைத் தலைவரவர்களே, 1974-லே பொறுப்பிலே இருந்தவர்கள் அப்பாது சரியான பொருத்தமான இயந்திரங்களை வாங்காததன் காரணம்தான் அதனுடைய புரொடக்ஷன் மாக்சிமம் அளவை எட்ட முடியவில்லை. அந்த இயந்திரங்கள் 'டெக்ஸ்டுல்' என்ற நிறுவனத்தில் வாங்கப்பட்டது. இப்போது அவர்களோடு பேசி இந்த இயந்திரங்களை அவர்களிடமே கொடுத்துவிட்டு வேறு நவீன இயந்திரங்களை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவரவர்களே, சரிகை உற்பத்தி பித்தளை வெள்ளி போன்றவற்றிலிருந்து செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதில் எது அதிக இலாபகரமாக இருக்கிறது? இப்போது தமிழ்நாட்டில் உற்பத்திச் செய்யப்படுகிற சரிகை இலாபகரமாக இருக்க இதிலே எது கையாளப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜரிகை, பித்தளை, வெள்ளி, தங்கம் இன்னும் பல பொருள்களைச் சேர்த்து செய்யப்படுகிறது. ஒரே முறையிலேதான் செய்யப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னேன். செய்யப்படுகிற அளவு ஆயிரம் மார்க்குகள். இப்போது இரண்டு ஷிப்டுகளில் உற்பத்தியாகிறது. தங்கம், வெள்ளி போன்ற பல உலோகங்களைச் சேர்த்து இந்த ஜரிகை தயார் செய்யப்படுகிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர்முகமது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்தில் உள்ள இந்த ஜரிகை உற்பத்தி மாதம் ஒன்றுக்கு ஆயிரம் மார்க்குகள்தான் உற்பத்தியாகின்றது, அதை இன்னும் விரிவுபடுத்துவதற்கு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள கும்பகோணம் நகரில் நெசவுத் தொழில், பட்டுத் தொழில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அப்படிப்பட்ட தொழிற்சாலையை கும்பகோணத்தில் ஆரம்பிக்க திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. துணைத் தலைவர் அவர்களே, இடம் பின்னாலே அரசாலே முடிவு செய்யப்படும்.

## சேலத்திலுள்ள Geology and Mining அலுவலகம்

*வினா எண் 156—திரு. சி. சிவப்பிரகாசம். மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பகுதியில் கனிமங்கள் அதிகமாக இருப்பதால் அங்குள்ள தமிழ்நாடு கனிம (Geology and Mining)-ன் சேலம் பிரிவை Regional Office (Geology and Mining) ஆக மாற்றி அரசுக்கு அதிக வருமானம் பெற வழிவகைச் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு. சேலம் பகுதியில் Regional Office (Geology and Mining) அமைக்கும் செயற்குறிப்பு தற்போது எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போதுள்ள அலுவலக அமைப்பு போதுமானதாக உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம். துணைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் கனிமங்கள் அதிகமாக கிடைக்கிற காரணத்தினால் 2 அல்லது 3 மாவட்டங்களை ஒன்றாக இணைத்து, ரீஜினல் ஆபீஸ் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே இது தொழில்துறை இயக்குநர் பொறுப்பிலே இயங்கி வந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் வந்த பிறகுதான், சென்ற ஆண்டுதான் தனியாகப் பிரிக்கப்பட்டு Directorate of Geology and Mining என்று தனியாக ஒரு டிப்பார்ட்மென்ட் உண்டாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது பின்னாலே வேண்டுமானால் 2, 3 மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து மண்டல அலுவலம் அதாவது ரீஜினல் அலுவலகம் எற்படுத்த அவசியம் இருப்பின் அதைப் பற்றி அரசு பின்னால் யோசிக்கும்.



## எண்டியூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவங்கும் திட்டம்.

*வினா எண் 59—திரு. கே. எம். தங்கமணி. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன். எண்டியூரிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 2018 தான். எனவே; அக்கிராம மக்களின் தேவையை அருகிலுள்ள திண்டிவனம் கால்நடை மருந்தகமும் மற்றும் ஓமத்தூர் கிளை நிலையம் வாயிலாகப் பூர்த்தி செய்யலாம் என்பதால் எண்டியூர் கிராமத்தில் தனியே ஒரு கால்நடை மருந்தகம் துவங்க தற்சமயம் உத்தேசமில்லை.

## திருநெல்வேலி மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை.

*வினா எண் 60—திரு. மு. அப்பாதுரை. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்திற்கு 1981–82-ம் ஆண்டுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் பலன் அடைந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். (அ) ரூபாய் 17.18 இலட்சம்.

(ஆ) கால்நடைகளுக்கு செயற்கை முறை இனவிருத்தி கருவூட்டல்கள் மூலம் சுமார் 20,000 கால்நடை சொந்தக்காரர்களும், கன்றுகள் மானியத்திட்டத்தின் கீழ் 893 விவசாயிகளும் மற்றும் தீவனபுல் சாகுபடி மானியத்திட்டத்தின் கீழ் 361 விவசாயிகளும் பலன் அடைந்துள்ளனர்.

திரு. மு. அப்பாதுரை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கைக் கரு மூலமாக 20 ஆயிரம் கால்நடை வளர்ப்பவர்கள் பயன் அடைந்துள்ளதாக அமைச்சர்

அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் முழுமையாக வெற்றியைத் தந்திருக்கிறதா? ஏனென்றால் செயற்கைக் கரு அமைப்பு முறையிலே பல்வேறு கோளாறு ஏற்பட்டு பல கால்நடைகள் இறந்து இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அந்த நிலையில் இழப்பு அடைந்த விவசாயிகளுக்கு அதை மீண்டும் பெற உதவித் தொகை கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் வெற்றிகரமாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த செயற்கை இனவிருத்தி மூலமாக கால்நடை இறந்தது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. மு. அப்பாதுரை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மாட்டுத்தீவனம் வழங்குவதற்கு 893 பேர்களுக்கு சலுகை அளித்ததாக அமைச்சர் அறிவித்தார். அப்படிப்பட்ட நிலை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டதா அல்லது தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டதா? ஏனென்றால் வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கேட்கிறபோதும் இந்தத் திட்டத்தின் கீழ்தான் மாடுகளுக்குத் தீவனம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே எந்த அடிப்படையிலே இது கொடுக்கப்படுகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்று மானியத் திட்டத்தின் மூலமாகத்தான் 893 விவசாயிகளுக்கு 74,487.65 ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கின்றது. வறட்சித் திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு தீவனப்புல்லும் கொடுக்கப்படுகின்றது. தீவனமும் கொடுக்கப்படுகிறது. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக, தீவிர பயிர் உற்பத்தியும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படுகின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன். துணைத் தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா? அப்படி என்றால் எந்தெந்த இடங்களில் புதிதாக அமைக்கப்பட திட்டம் போடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். துணைத் தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் விரிவு படுத்தப்படவேண்டும் என்ற எண்ணம்தான் அரசுக்கு இருக்கிறது. ஏன் என்றால் இந்த திட்டத்தின் மூலமாக, செயற்கை முறை இன விருத்தி கருவூட்டல்கள் செய்து



கால்நடைகளை அதிகமாக நாம் பெருக்கி, அதன் மூலமாக பால் உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்ற எண்ணம் தான் அரசுக்கு இருக்கிறது. இருந்தாலும் நிதிநிலைமையைக் கணக்கிட்டு வருடத்திற்கு இவ்வளவு என்று நாம் கணக்கிட்டு, அதன்படிதான் ஒதுக்கீடு செய்துகொண்டு வருகிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக வெறு என்னென்ன திட்டங்கள் பொதுமக்களுக்கு உபயோகம் ஆகக்கூடிய வகையிலே செய்யப்பட்டு வருகின்றன. அதற்காக என்னென்ன மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செயற்கை முறை இனவிருத்தி மூலமாக, ஆவின் அபிவிருத்திக்காக தீவிர முயற்சிகளை மேற்கொள்ளுதல், நோய்த் தடுப்பு, பால் விஸ்தரிப்புப் பணிகள், பசுந்தீவனம் பயிர் அபிவிருத்தி, கன்று வளர்ப்பு போன்ற திட்டங்களை இந்தத் திட்டத்தின் மூலமாக செயல்படுத்தி வருகிறோம். செயற்கை முறை இன விருத்தி மூலமாக கிடேரிக் கன்றுகளை ஈன்று அது பராமரிக்கப்படவேண்டுமென்றால், அந்த கன்று ஈன்றநாள்முதல் 6 மாதக் காலம் பூர்த்தியான பிறகு, அந்த விவசாயிகளுக்கு—கடேரிக் கன்றை ஈன்ற இந்த விவசாயிகளுக்கு—15 ரூபாய் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு அந்த கன்றுகளை 3 ஆண்டு காலம் வரைக்கும் அவர்களுக்கு 15 ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டு, அல்லது அந்த கன்றுகள் 3 ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டாலும், அது பருவம் அடைகின்ற வரைக்கும், அந்தக் கன்றுகளைப் பராமரிக்க இன்றைக்கு அரசு பொறுப்பேற்றுக்கொண்டு வருகிறது.

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையம்.

*வினா எண் 157 திரு. பாபு ஜனார்த்தனன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் பார்வையற்றோர் தொழில் பயிற்சி மையத்தில் எவ்வளவு பேர்கள் உள்ளனர்?

(ஆ) அங்கு என்னென்ன தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். (அ) பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 24 பேர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகிறார்கள்.

(ஆ) அங்கு 1. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் இயந்திரப் பணியாளர்,

2. புத்தகம் கட்டுதல்.

3. வைண்டர் (Winder) ஆகிய தொழில்களில் பார்வையற்றோர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. கு. பா. பழனியப்பன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் 24 பேர்களுக்கு பயிற்சி அளிப்பதாகக் குறிப்பிட்டார்கள். எத்தனை பேர்கள் அப்படி விண்ணப்பம் செய்தார்கள்? அந்த விண்ணப்பத்தில் எத்தனை சதவீதம் கொடுக்கப்பட்டது? குறைவான எண்ணிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தால், மீண்டும் வருகின்ற ஆண்டில் அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் விண்ணப்பம் போட்டார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. 24 பேர்கள் அந்தப் பயிற்சியை பெற்றுக் கொண்டிருக்கிறார் கள்.

திரு. எல். இளையபெருமாள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 24 பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் தனியார்கள் நடத்தும் பார்வையற்றோர் விடுதிகளில் அந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்கு, அரசாங்கத்தின் மூலமாக உதவி கொடுக்க வேண்டும என்று கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா? அப்படி கோரிக்கை வந்தும் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். எனவே வருங்காலத்திலாவது தனியார்கள் நடத்தும் பார்வையற்ற மக்களுக்கு சோசியல் வெல்பேர் ஆர்கனைசேசன் போன்றவை கள் தனியாகப் பயிற்சி நிலையங்கள் நடத்துகின்றபோது, நம்முடைய அரசு மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். துணைத் தலைவர் அவர்களே, இப்படி உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத் தோடு அவர்கள் அணுகினால் கண்டிப்பாக அவர்களுக்கு அரசு உதவி செய்துதான் வருகின்றது. அந்த அடிப்படையில் தனியார்களுக்கு உதவி செய்து கொண்டுதான் வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நிறுவனம் என்று குறிப்பிட்டால், அதை ஏற்று அரசு நிச்சயமாக பரிசீலிக்கும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வாங்கப்படும் அரிசி.

*வினா எண் 143—திரு. பெ. சு. திருவேங்கடம். மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் வெளி மாநிலங்களில் அரிசி வாங்கக்கூடாது என அரசு உத்திரவிட் டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) இதற்கான காரணமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். (அ) மற்றும் (ஆ) ஒரு மாநில அரசோ அல்லது அம்மாநில அரசின் நிறுவனமோ மற்ற மாநில அரசிடமிருந்தோ அல்லது அம்மாநில அரசின் நிறுவனத்



திடமிருந்தோ அல்லது தனியார்களிடமிருந்தோ நெல் அரிசி மத்திய அரசின் அனுமதியின்றி வாங்கக்கூடாது என்று மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அரசு அவ்வாறு ஆணையிடவில்லை.

(இ) அதற்கான காரணம் எதையும் மத்திய அரசு எழுத்து மூலமாகக் குறிப்பிடவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கூட இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக கடுமையான அரிசி பற்றாக்குறை மற்றும் விலை ஏற்றங்கள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட காலகட்டத்தில், பக்கத்திலிருக்கிற ஆந்திரா போன்ற மாநிலங்களிலேயிருந்து நம்முடைய நுகர் பொருள் வாணிபக்கழகம் அரிசியையோ அல்லது நெல்லையோ கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசாங்கம் தடை விதித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படிப்பட்ட தடை விதித்திருப்பதற்கு காரண என்ன? இப்பொழுது அனுமதி கேட்டதற்கு பிறகு தந்திருக்கிறார்களா? தந்திருந்தால் நம்முடைய நுகர் பொருள் வாணிபக் கழகம் எவ்வளவு நெல் அல்லது அரிசினை கொளமுதல் செய்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு, வேறு மாநிலங்களிலேயிருந்து, அரசு மூலமாகவோ, அல்லது நுகர் பொருள் வாணிபக்கழகத்தின் மூலமாகவோ அல்லது தனியார் நிறுவனங்களின் மூலமாகவோ வாங்குவதாக இருந்தால், மைய அரசின் அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்வதற்கு எழுத்து மூலமாக காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மைய அரசின் அதிகாரிகள், அந்தந்த மாநிலங்களில் உபரியாக இருக்கின்ற நெல்லை மைய அரசே கொள்முதல் செய்துவிடுவதன் காரணமாக, மீதியிருக்கிற அரிசியையெல்லாம் ஒரு கட்டுக்கு அடங்காத அளவுக்கு, பிற மாநிலங்கள் வாங்கிக் கொண்டு போய்விடுமேயானால், உபரியாக இருந்த மாநிலத் திலே கூட நெருக்கடி நிலை ஏற்பட்டு அரிசி பற்றாக்குறை ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக, அனுமதித்ததற்குப் பிறகு தான் எடுத்துச்செல்லவேண்டும் என்ற முறையை வைத்திருப்ப தாக மைய அரசின் அதிகாரிகள் கூறுகிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் அனுமதியைப் பெறவேண்டும் என்று விரும்புவதற்கு 2 காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று மைய அரசின் அனுமதியைப் பெற்று அரிசியை வாங்கி வரவெண்டும் என்பது; இரண்டு, மைய அரசின் அனுமதி இருந்தால்தான் ரிசர்வ் வங்கி அதற்கான தொகையை வட்டி அடிப்படையிலே நமக்குத் தந்து, வாங்குவதற்கு உதவி செய்யும். இந்த இரண்டு காரணங்களையும் வைத்துத்தான், மைய அரசின் அனுமதியைப் பெற்று, பிறகு எந்த ஒரு மாநிலத்திலே யிருந்தும், நாம் அரிசியை வாங்க வேண்டிய நிலையில் இருக் கிறோம்.

சென்ற ஆண்டு போதுமான அளவுக்கு இல்லாமல், நம்முடைய பொது இருப்பிலே அரிசி பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக மத்திய அரசிடமிருந்து 1982 மே திங்களிலிருந்து 1983 மார்ச் திங்கள் வரையிலும், அரிசி எந்த வகையிலும், எந்த அளவுக்கும் வந்து சேராததன் காரணமாக அதிகமான நெருக்கடிக்கு ஆளானது என்பது மட்டும் அல்லாமல், மாநிலத்தினுடைய அரிசித் தேவையை பங்கீட்டு முறையிலே பயன்படுத்த வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டது. அப்பொழுதான் நாம் கேட்டோம். மைய அரசு முதலிலே 5 ஆயிரம் டன் தருவதாகச் சொன்னார்கள், பிறகு 15 ஆயிரம் தந்து, அதற்குப் பிறகு, 20 ஆயிரம், 25 ஆயிரம், 30 ஆயிரம் என்று கொடுத்து, இந்த மாதத்திருருந்து 40 ஆயிரம் டன் அரிசி தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

பஞ்சாப், அரியானா மாநிலங்களிடமிருந்து 1 லட்சம் டன் வெளிச்சந்தையிலே வாங்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். ஆந்திராவிலேயிருந்து 50 ஆயிரம் டன்னும், கர்நாடகாவிலேயிருந்து 50 ஆயிரம் டன்னும், மத்தியப் பிரதேசத்திலேயிருந்து 25 ஆயிரம் டன்னும் வாங்குவதற்கு மைய அரசிடம் அனுமதி கேட்டோம். ஆனால் மைய அரசு, பஞ்சாப் அரியானா ஆகிய அரண்டு மாநிலங்களையும் சேர்த்து 20 ஆயிரம் டன் வாங்கலாம் என்று அனுமதி அளித்தது. ஆந்திராவிலேயிருந்து முதலிலே 50 ஆயிரம் டன் அரிசியை வாங்கலாம் என்று அனுமதி அளித்தது. பிறகு, 5, 6 மாதங்கள் கழித்து, ஆந்திராவிலேயிருந்து மீண்டும் 30 ஆயிரம் டன் வாங்கலாம் என்று அனுமதி அளித்தது. ஆக, 1 லட்சம் டன் பிற மாநிலங்களிலேயிருந்து வாங்க அனுமதி பெற்று, ரிசர்வ் பாங்கினுடைய கடன் வசதியையும் பெற்று வாங்கியிருக்கிறோம்.

திரு. மி வின்சென்ட். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் தொடரின் போது அரசிடம் இரண்டு மாத காலத்திற்கு மட்டும் தான் அரிசி கையிருப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 7 மாதங்கள் ஆகியும், அரிசியின் விலையும் உயரவில்லை. தேவையான அளவுக்கு மக்களுக்கும் கிடைத்து வருகிறது. இதற்காக தமிழக அரசு எடுத்து வெற்றிக் கண்ட வழி முறைகள் என்னென்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காக ஏற்கெனவே கடைபிடித்து வருகின்ற வழி முறைகளைத்தான் நாங்கள் பின்பற்றி வருகிறோம். அந்த வழி முறைகளால், இப்போது அண்மையிலே நடைபெற்ற உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே கூட, மைய அரசின் உணவு அமைச்சர் பாராட்டுகின்ற வகையிலே, இது நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் திருப்தி ஏற்பட்டு விட்டது என்று உணவு அமைச்சர் என்ற வகையிலே நான் சொல்வதற்கில்லை. நம்முடைய நோக்கம் முழுவதும் நிறைவேறும் வகையில் போதுமான அளவுக்கு இன்னும் இல்லை. வழிமுறைகள் நன்றாகத்தான் இருக்கின்றன.



(முற்பகல் 10-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதியோடு பஞ்சாப், அரியானா அல்லது ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களிலே நுகர் பொருள் வாணிபக் கழகமோ தமிழ்நாடு அரசோ நெல் கொள்முதல் செய்கிறபோது அது தமிழ்நாட்டிற்கு வருகிறபோது அதனுடைய அடக்க விலை என்ன வருகிறதோ அந்த அளவுக்கு தமிழகத்திலே உள்ள விவசாயிகளுக்கு விலை கிடைக்கக்கூடிய சூழ்நிலை இல்லாது, குறைவாக தரப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 50 சதவீதம் என்ற அளவுக்கு கொள்முதல் செய்த பிறகு மீதியை அவர்கள் விற்கலாம் என்று அனுமதித்து இருக்கிறோம். பற்றாக்குறையின் காரணமாக தஞ்சை மாவட்டம், அதைச் சுற்றியிருக்கிற திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த, தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தாலுக்காக்களை அதோடு இணைத்து அங்கேயெல்லாம் அரசு முழுக் கொள்முதலும் செய்யும் என்ற அளவுக்குக் கொண்டுவந்து வாங்கினாலும் இருக்கிற நிலைமைகளை ஒட்டி வறட்சி சலுகை என்றும் ரிஸ்க் அலவன்ஸ் என்றும் டிரவுட் அலவன்ஸ் என்றும் கூடுதலாக தந்து கொள்முதல் செய்கிறோம். ஆனாலும் இங்கே இருக்கிற அந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலே கொஞ்சம் கூடுதல் கொடுத்துத்தான் வாங்கவேண்டும். பஞ்சாப், அரியானா மாநிலங்களில் வாங்குகிறபோது அவைகளைக் கொண்டு வருவதற்கான டிரான்ஸ்போர்ட் செலவு எல்லாம் சேர்ந்து அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திற்குத் தேவையான அரிசியை தமிழகத்திலேயே வாங்கலாம் என்றால் இங்கே இருக்கின்ற அரிசிதான் நமக்கு வரும். இங்கே ஆயிரம் டன் இருந்து வெளிமாநிலங்களிலிருந்து 500 டன்கள் வாங்கினால் 1,500 டன்கள் தமிழகத்திற்குப் பயன்படும். அந்த வகையிலே வெளிமாநிலங்களிலிருந்து வாங்க வேண்டிய இன்றியமையாத கட்டமும் இருக்கிறது. உள்நாட்டிலிருந்து எந்த அளவுக்கு வாங்க முடியுமோ அந்த அளவுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, வெளிமாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிற அரிசிக்கும் லெவி கொடுக்கவேண்டுமென்று சொல்வதால் வெளிமாநிலங்களிலிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்யமுடியாத நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாக அதைத் தளர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, வெளிமாநிலங்களிலே அரிசியை வாங்குகிறபோது அந்த மாநிலத்திலே லெவி கொள்முதலைக் கொடுத்துவிட்டு மிகுதியிருப்பதை வாங்கி இங்கே கொண்டு வருகிறார்கள். அப்படி வருகிறபோது மீண்டும் இங்கே லெவி கொள்முதல் செய்வதில்லை.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து 50 ஆயிரம் டன் அரிசியை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 50 ஆயிரம் டன்களில் 3 ஆயிரம் டன்தான் வந்திருக்கிறது என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு பேட்டியின்போது சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்து கொண்டுவருவதற்கான விதிமுறைகளில் சிக்கல்கள் நிறைய இருப்பதால், எதிர்பார்த்தபடி கொள்முதல் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். சமீபத்திலே டெல்லியிலே நடந்த பொதுவிநியோக முறை பற்றிய கூட்டத்திலே அந்த விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு ஏதாவது ஆலோசனை சொல்லப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே நான் அளித்த பேட்டியின்போது 3 ஆயிரம் டன்தான் வந்து சேர்ந்திருந்தது. அங்கே இருக்கிற வியாபாரிகள் இங்கே கொண்டுவந்து சேர்ப்பதற்கு தயாராக இருக்கிறார்கள், ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகளால் பெர்மிட் வழங்குவதிலே தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் மேற்கொண்டு வருவது, அந்த சமயத்திலே வந்து சேராமல் இருந்தது. அதற்குப் பிறகு மத்திய அரசு ஆந்திராவினுடைய தலைமைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர் ஆகியோரிடம் சொல்லிய பிறகு விரைவாக அனுமதி அளிக்கப்பட்டது. இப்போது 50 ஆயிரம் டன்களும் நமக்கு வந்து சேர்ந்துவிட்டன. அந்த அளவிலே நமக்கு வரவேண்டிய முழு அளவும் வந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து ஒரு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதாக அறிவித்தார்கள். ஒரு குவிண்டாலுக்கு என்ன அடக்க விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டது? தஞ்சை மாவட்டத்திலே நெல் முழுவதையும் அரசு கொள்முதல் செய்யும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. வெளிமாநிலங்களிலிருந்து வாங்கிய அதே அளவுக்குத் தொகை தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டதா? அதேபோல் இப்போது ஒரு கிலோ அரிசி 5 ரூபாய்க்கு விற்கிறதே, அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் தமிழகத்தில் கொள்முதல் வாங்குகிறபோது தஞ்சை மாவட்டம் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தவிர மற்றைய மாவட்டங்களில் 50 சதவீதம் கொள்முதல் செய்கிறோம். 50 சதவீதம் கொள்முதல் செய்கிறபோது அந்த குறிப்பிட்ட விலைக்கு வாங்குகிறோம். மீதி உள்ளதை மார்க்கெட் விலைக்கு விற்றுக்கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முழு கொள்முதலை மத்திய அரசு அனுமதிப் பெற்று மோனோபலி பர்சேஸ் என்ற முறையில் வாங்குகிறோம். தஞ்சை மாவட்டத்தில் வாங்குகிற நெல்லுக்கு கொள்முதல்



விலை கொடுத்து அதற்கு மேல் வறட்சி அலவன்ஸ், ரிஸ்க் அலவன்ஸ் என்ற முறையில் 35 ரூபாயும் வழங்குகிறோம். இருந்தாலும் மத்திய அரசு அதையும் அப்படித் தரக்கூடாது என்று மறுத்தாலும் கூட இருக்கிற சூழ்நிலையை எடுத்துச் சொல்லி அவர்களுக்குத் தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். மற்றைய மாநிலங்களிலிருந்து வெளிச் சந்தையிலிருந்து வாங்க வேண்டிய அவசியம் வருகிறது. அங்கே அவர்கள் லெவிக்கு கொடுத்தது போக மீதி உள்ளதை அரசு வாங்குகிறது. அதற்கு வங்காளம் போட்டிப்போடுகிறது, கேரளா போட்டிப்போடுகிறது, கர்நாடகா போட்டிப்போடுகிறது, நாமும் போட்டிப்போடுகிறோம். விலை கொஞ்சம் தூக்கலாக இருக்கிறது. ஆகவே ரூ. 300, ரூ. 315 கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த விலை கொஞ்சம் ஏறினாலும் கூட அரிசி தட்டுப்பாடு இல்லாமல் எப்படியும் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத்தான் அதிக விலை கொடுத்து இங்கே கொண்டுவரவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது. வெளி சந்தையில் வருகின்றபோது வெளி மார்க்கெட் விலையை கட்டுப்படுத்துகிற அளவு இல்லை. கொள்முதல் விலையை கட்டுப்படுத்துகிறோம். ஆகவே இருக்கின்ற மார்க்கெட் நிலவரத்தைப் பார்த்து, வரத்தைப் பார்த்து, வினியோக அளவைப் பார்த்து செய்கிறபோது விலை ஏறுவதும், இறங்குவதுமாக இருந்து கொண்டிருக்கிறது.

சிங்கம்புணரியில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 144—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிங்கம்புணரியில் துணைக் கருவூலம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிங்கம்புணரியில் துணைக் கருவூலம் ஒன்று அமைக்கும் திட்டம் இதுவரை பரிசீலனையில் செய்யப்படவில்லை.

திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகுந்த வருவாய் உள்ள இடம் ஆகையால் அங்கே துணைக் கருவூலம் ஒன்று அமைக்கின்ற ஏற்பாட்டை அங்குள்ள அரசு அலுவலர்கள் ஆரம்பிப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் இங்கே அரசு தரப்பில் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே இங்கே அதை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத் தலை நகருக்கும் ஒரு சார் நிலை கருவூலம் அமைக்கவேண்டும் என்ற கொள்கை நிறைவேற்றப்பட்டு வருகிறது. சில துணை வட்டத்தின் தலை நகர்களிலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற சார் நிலை கருவூலத்தில் இருக்கின்ற பளுவின் அளவினை எண்ணி துணை வட்டத் தலை நகரில் அந்த சார் நிலைக் கருவூலம்

ஆங்காங்கு இருக்கிற அப்படிப்பட்ட சூழ்நிலைகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரும்போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முழு விவரமும் தனிக் கேள்வி போட்டால் தரப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியிலிருந்து லைசன்ஸ் பெற்றுக்கொண்டு, தமிழகத்தின் வழியாக, கேரளாவுக்கு நெல்லை — அரிசியை, லாரிகளில் கொண்டு சென்றதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தின் வழியாக எத்தனை லாரிகளில் எத்தனை டன்கள் நெல் கொண்டு செல்லப்பட்டது. நாம் தடுத்தி நிறுத்தியதில் முறையாக விசாரணை செய்யப் பட்டதா? கொண்டு சென்றவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த வியாபாரிகளா? பாண்டிச்சேரியைச் சேர்ந்த வியாபாரிகளா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி அரசினுடைய அனுமதி பெற்றதாகச் சொல்லி, பொள்ளாச்சி வழியாக கேரளாவிற்குப பல்வேறு லாரிகள் சென்றன. ஏராளமான லாரிகள் போனவுடனேதான், பாண்டிச்சேரியிலே அனுமதி பெற்று, நெல்லை தஞ்சாவூரிலே கொள்முதல் செய்து, கொண்டு சென்றார்களா என்ற சந்தேகத்தின் அடிப்படையில், பொள்ளாச்சிக்கு அருகிலே அந்த லாரிகள் எல்லாம் பல நாட்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. இதுபற்றி, அனுமதிச் சீட்டுக் கொடுக்கப்பட்டது உண்மையா என்று காரைக்காலிலே இருக்கிற அதிகாரிகளிடம் அப்பொழுது விசாரிக்கப்பட்டது. 41 அனுமதிச் சீட்டுகள் வழங்கியதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அப்படிப்பட்ட நெல் வருகின்றபொழுது, பர்மிட் அவர்கள் தந்தாலும், தஞ்சை மாவட்டத்திலேயிருந்து நெல்லை காரைக்காலுக்கு மறைமுகமாகக் கொண்டு சென்று, அந்த பர்மிட் மூலமாகக் கடத்துகிற சூழ்நிலை இருந்ததை நம்முடைய தலைமைச் செயலாளர் பாண்டிச்சேரி தலைமைச் செயலாளரிடம் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் சொன்னதற்குப் பிறகு, இந்த நெல்லைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அனுமதி தந்து விட்டதன் காரணமாக, 15, 20 நாட்கள் கழித்து இந்த நெல்லை அனுமதித்து விட்டனர். அங்கே காரைக்காலைப் பொறுத்தவரையில் 4,0 0 ஹெக்டேர்தான் விளையக்கூடிய நிலமிருக்கிறது. அங்கே விளைவது 10,000 டன் நெல்தான். ஆனால் கொண்டு சென்றது 5,734 டன். விளைகிற அளவைப் பார்க்கிறபொழுது, இவ்வளவு கொண்டு செல்ல அங்கே வழியில்லை; தஞ்சை மாவட்டத்திலேயிருந்துதான் கொண்டு சென்றிருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் பாண்டிச்சேரி அரசும் உஷாராக இருந்து, இனிமேல் நாங்கள் அனுமதிச் சீட்டுத் தரவில்லை என்றும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்கிறோம் என்றும் சொன்னது. அது மட்டுமல்லாமல், தஞ்சை மாவட்டத்திலே தணிக்கைச் சாவடிகள் கடுமையாக ஆக்கப்பட்ட பிறகு ஓரளவு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.



திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே அரிசிப் பற்றாக்குறையாக இருக்கிற இந்த நேரத்தில், அண்டை மாநிலங்களுக்குக் கடத்தல் மூலமாக, நம்முடைய சோதனைச் சாவடிகளை உடைத்து எடுத்துச் செல்லப்படுகிறது. அந்தச் சோதனைச் சாவடிகளை உடைத்த அந்தக் கடத்தல்காரர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா அல்லது தளர்த்தப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடத்தல் என்பது ஒரு குற்றம்; சோதனைச் சாவடிகளை உடைப்பது என்பது இன்னொரு குற்றம். இந்த இரண்டு குற்றங்களும் கடுமையாகத் தண்டிக்கப் பட வேண்டியவைதான். குறிப்பிட்டு ஏதாவது சொல்வார்களானால், அதுபற்றி விசாரித்து, அந்த நிலைமைகளை நான் உறுப்பினருக்குத் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

அமைக்கின்ற பணி சில பல இடங்களில் இருக்கின்ற பளுவினைப் பொறுத்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் சிங்கம் புணரி வட்டத் தலைநகராகவும் அமையவில்லை, துணை வட்டத் தலை நகராகவும் அமையவில்லை. ஆனால் சார் நிலைக் கருவூலம் வேண்டும் என்று கேட்கும்போது அதற்கு என்று சிலபல விதிமுறைகள் இருக்கின்றன. திருப்பத்தூர் அந்தப் பகுதியைச் சேர்ந்து அமைந்து இருக்கிறது. இங்கே பளு அதிகமாக இருக்கிறது, இரண்டாக பிரித்துத் தான் தீரவேண்டும் வேறு ஒரு பகுதிக்கு அது செல்லவேண்டும் என்று புள்ளி விவரங்கள் மற்றவை கிடைக்கின்ற நிலையில் தான் அதைப்பற்றி யோசிக்க வேண்டுமே தவிர, அந்த புள்ளி விவரங்கள் இல்லாத நிலையில் சிங்கம்புணரியில் சார் நிலை கருவூலம் அமைப்பதற்கான. ஏதுக்கள் எதுவும் இல்லை.

தமிழ்நாட்டின் வழியாக கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நெல்.

*வினா எண். 145—திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுவை அரசிடம் சில நெல் வியாபாரிகள் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள நெல்லை கொள்முதல் செய்து கேரளத்திற்குக் கொண்டு போனது உண்மையா ?

(ஆ) தமிழக அரசு அதை கண்டுபிடித்துத் தடுத்ததா ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), (ஆ) மற்றும் (இ) பாண்டிச்சேரி மாநில அரசின் அனுமதிச் சீட்டுடன் பல லாரி நெல், தமிழ்நாட்டின் வழியாக கேரள மாநிலத்திற்குச் சென்றன. ஆனால், அவை தமிழ்நாட்டு நெல் தான் என்பது திட்டவட்டமாக கூறமுடியவில்லை. எனவே ,தக்க ஆய்வுக்குப்பிறகு, அந்த நெல் கேரளாவிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து வருகிற நெல், அரிசிக்கு தமிழகத்தில் தயார் ஆனதாகக் கருதி அஸிஸ்டெண்டு கமிஷனர் ஆக இருக்கின்றவர்கள் மறு பர்மிட் கொடுத்து, தயார் ஆகின்ற நெல், அரிசியை லெவி கொடுக்காமல் கோவை மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் ஏற்றுமதியாவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது அந்த பர்மிட்டை வைத்துக்கொண்டு இங்கே இருக்கின்ற நெல்லை லெவிக்கு அளிக்காமல் செல்கின்ற தன்மைகள் கண்டுபிடிக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். சிலபலயிடங்களில் அது தடுத்து நிறுத்தி பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. [illegible]



பர்மிட் இருக்குமானால் லெவி கொடுத்துவிட்டு ஆந்திராவிலிருந்து வருவதற்கான உண்மையான அத்தாட்சி இருக்குமானால் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அப்படி லெவி இல்லாத வர்கள் ஏமாற்றுகிறவர்களை பிடிப்பதற்கான முயற்சியை பல்வேறு மாவட்டங்களுடைய தணிக்கை சாவடிகள் மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிற போது தவறான முறையில் லைசன்ஸ் இல்லாமலும், அவர்கள் கொடுக்கவேண்டிய நெல்லை அரசுக்கு கொடுக்காமலும் சென்று இருக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும் சொன்னார்கள். அப்படி கண்டுபிடிக்கப்பட்டது எத்தனை பேர்? அப்படி கண்டுபிடித்தவர்களில் சிலரை வேண்டும் என்று விட்டுவிட்டு சிலர்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கிறார்கள். இதனால் விலை குறைவாக இருப்பதால் விவசாயிகளுக்கும் நஷ்டம், அரசாங்கத்திற்கு சேமிக்க நெல் கிடைக்காமல் இருப்பது அதுவும் ஒரு நஷ்டம்; இதற்கு மேலாக இப்படிப்பட்டவர்களை நாம் ஊக்குவிக்கின்ற ஒரு காரியமாக இது போய்விடாமல் இருப்பதற்கு வருங்காலத்திலாவது அவர்கள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க, இதற்கு ஆதரவாக லைசன்ஸ் வைத்து இருந்தவர்கள், இதை அனுமதித்த அதிகாரிகள், இதை எடுத்துச் சென்றவர்கள் மீது கடுமையான தண்டனை அளிப்பதற்கு அரசு உத்தரவு இடுமா என அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பாண்டிச்சேரியைப் பற்றி இருப்பதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற முழு விவரங்களும் சொல்ல இயலவில்லை. தடுக்கப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட, வழக்கு தொடரப் பட்டவர்களைப் பற்றி, தனிக் கேள்வி போட்டால், விவரங்களை அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இந்த முறைகேடான நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகப் பல்வேறு வகைகளிலே நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அண்மையிலே கூட தஞ்சை மாவட்டத்திலே ரூ. 20 இலட்சம் பெறுமான மதிப்புள்ள நெல், அரிசி கொண்டு சென்ற லாரிகள், மாட்டு வண்டிகள், மற்றவைகள் எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டன. சிலர் ஏமாற்றிச் செல்வது என்கின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அதிகாரிகளோ, அலுவலர்களோ உடந்தையாக இருந்து, அவை நடைபெறுமானால், அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுத்து, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற அளவுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆங்காங்கே இருக்கிற தனி அதிகாரிகளுக்கும் கூறப்பட்டிருக்கிறது.

[1984 நவம்பர் 10

''ஆ'' உடுக்குறியிடாத வினாக்கள்

நிலக்கோட்டை தொகுதியில் காவல் நிலையங்கள் நிறுவும் திட்டம்.

வினா எண். 2137—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதியில் விருவீடு விளாம்பட்டி ஆகிய பகுதிகளில் காவல் நிலையங்கள் நிறுவுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

நிலக்கோட்டை தொகுதியில் விளாம்பட்டியில் காவல் நிலையம் ஒன்று அமைப்பதற்கு அரசாணை 2378 உள்துறை நாள் 5—10—81-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் நிலக்கோட்டை தொகுதியில் விருவீடுவில் ஒரு காவல் நிலையம் புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2—

வாணியம்பாடி நகர் ஆற்று ஓரங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மாற்று வீடுகள் கட்டிக் கொடுத்தல்

வினா 3622—திரு. எல். பலராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு வாணியம்பாடி நகரில் ஆற்று ஓரங்களில் கட்டப்பட்டிருந்த விடுகளும், போடப்பட்டிருந்த குடிசைகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று விடுகள் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

(அ) ஆம். 26—9—78 அன்று பாலாற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டு வாணியம்பாடி நகரில் 1,365 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு விடுகளை இழந்தனர்.

(இ) பாதிக்கப்பட்டவர்களில் 1243 நபர்களுக்குப் புதிதாக வீடுகளைக் கட்டிக் கொள்ள மாற்று வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 122 குடும்பங்களுக்கும் போதுமான வீட்டு மனைகள் வழங்குவதற்குத் தேவையான நிலம் உள்ளது. ஆனால் இவர்கள் வீட்டுமனைப் பட்டா பெற்றுக் கொள்ள முன்வரவில்லை.



1983 நவம்பர் 10]

3—

பல்கலைக் கழகங்களில் அதிகார மன்றங்களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்தல்.

வினா 6063—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மாணவர்களும் பங்கு பெறும் வகையில் அவர்களுக்குப் பல்கலைக் கழக சிண்டிகேட்டுகளில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமா?

விடை—

தீவிர பரிசீலனைக்குப் பின் பல்கலைக் கழகங்களின் அதிகார மன்றங்களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கத் தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

4—

சென்னை குறளகத்தில் நடைபெற்ற களவு

வினா 6449—திரு. து. புருஷோத்தமன், மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்த அலுவலகமான சென்னை குறளகத்தில் களவு நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், களவு போன பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1973-ல் ரூ. 1,380 மதிப்புள்ள பட்டுச் சேலைகளும் 1974–ல் ரூ, 15 மதிப்புள்ள சட்டையும், 1975-ல் ரூ. 3,551 பெறுமானமுள்ள குழல் விளக்கு, காகிதம், மூன்று பட்டுப் புடவைகள், கால்குலேட்டர் மற்றும் குளிர் பதனக் கருவி ஆகியவை களவாடப்பட்டன. 1980-ல் ரூ. 8,0 0 ரொக்கமும் 1981-ல் ரூ. 50 மதிப்புள்ள வேட்டியும், ரூ. 2,023 ரொக்கமும் களவாடப்பட்டன. குற்றவாளிகள் சிலர் பிடிபட்டு, டும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்கள். சில குற்றவாளிகள் நன்னடத்தை சட்டத்தின் பிரிவு 4 (1)–ன் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

5—

### முதுனை பஞ்சாயத்து ஓமியோபதி மருந்தகத்தை ஆயுர்வேத மருந்தகமாக செயல்படுத்த நடவடிக்கை.

வினா 6546—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்மாவரம் ஊராட்சி ஒன்றியம், முதுனை பஞ்சாயத்தில் உள்ள ஓமியோ மருத்துவமனையை ஆயுர்வேத மருத்துவமனையாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தென் ஆற்காடு மாவட்டம், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முதுனையிலுள்ள மருந்தகம் ஓமியோபதி மருந்தகம் அல்ல. அது ஓர் ஆயுர்வேத மருந்தகமாகும். ஆயுர்வேத முறையில் தேர்ச்சிபெற்ற மருத்துவர் மற்றும் மருந்தாளுநர் கிடைக்காததால், அம்மருந்தகம் 1—4—977 முதல் செயல்படாமல் இருக்கின்றது. இது ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படும் மருந்தகம் என்பதால் இம் மருந்தகத்தை அலோபதி ஓமியோபதி, ஆயுர்வேதா மற்றும் சித்தா முறைகளில் ஏதாவது ஒருவகை மருந்தகமாக நடத்துவதற்கு முடிவு செய்யவேண்டியது ஊராட்சி ஒன்றியம் தான். கம்மாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அதை சித்தா மருந்தகமாக மாற்றக் கோரியுள்ளார் அம்மருந்தகத்தை எவ்வகை மருந்தகமாக மாற்ற வேண்டும் என்பதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத் தீர்மானம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருடைய பரிந்துரையுடன் செயற்குறிப்பு அனுப்புமாறு இந்திய மருத்துவ இயக்குநரால் அவர் கோரப்பட்டுள்ளார். மேற்கூறிய செயற்குறிப்பு இயக்குநரிடமிருந்து கிடைக்கப்பெற்றவுடன் இது குறித்து முடிவு எடுக்கப்படும்

6—

### கண்ணங்குடியில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம்

வினா 7151—திரு. ச. அங்குசாமி; மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டைக்கு அருகில் உள்ள கண்ணங்குடியில் போலீஸ் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

விடை—

(அ) மற்றும் (ஆ) குற்றங்களின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளதால் கண்ணங்குடியில்காவல்நிலையம் அமைக்க தேவையில்லை என்று கருதப்படுகின்றது.



7—

### நீதிமன்ற தீர்ப்புகளை தட்டச்சு நகல்கள் எடுத்துக் கொள்ள விதிமுறைகளை திருத்தும் நடவடிக்கை

வினா 7209—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நீதிமன்ற தீர்ப்புகளின் நகல்கள், அச்சிடப்பட வேண்டுமென்னும் விதியை மாற்றி தீர்ப்புகளை, "ஸ்டென்சில்" காகிதத்தில் தட்டச்சு செய்து நகல் எடுத்துக் கொள்ளும் வகையில் விதிகளை திருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நீதிமன்ற தீர்ப்புகளின் நகல்கள் அவசியம் அச்சிடப்பட வேண்டும் என்ற உரிமையியல் நடைமுறைக்கோவை 'தொகுப்பு' அத்தியாயம் VIII கண்டுள்ள விதிகள் 135 மற்றும் 136 ஆகியவற்றை நீக்கவும், அதற்கு பதிலாக நீதிமன்ற தீர்ப்புகளை சுத்த நகல்அல்லது நகல்கள் எடுத்து கொடுப்பது குறித்த விதிகள் XLI, XLI A, XLII, மற்றும் LVII ஆகியவைகளுக்கு திருத்தம் மற்றும் சட்ட திருத்தங்கள் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு ஒன்றை சென்னை உயர்நீதிமன்றம் அரசுக்கு அனுப்பிவைத்தது. இச்செயற்குறிப்பின் மீது அரசுக்கு எழுப்பிய சில ஐயப்பாடுகளுக்கு விடை தருவதற்காக உயர்நீதிமன்றம் இதனை விதிக்குழுவின் பரிந்துரைக்கு அனுப்பியுள்ளது. இது தற்போது உயர்நீதிமன்றத்தின் விதிக்குழுவின் பரிசீலனையில் உள்ளது.

8—

### ஆசிரியைகளுக்கு மகப்பேறு விடுப்பு காலத்திற்கு விடுப்பு ஊதியம் வழங்கல்.

வினா 7833—திரு இரா. தாமரைக்கனி, மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மகப்பேறு விடுப்பு காலத்திலே விடுப்பு ஊதியம் வழங்கும் உத்தேசம் உள்ளதா—

விடை—

தகுந்த மருத்துவச் சான்றுடன் உரிய முறையில் விடுப்பு விண்ணப்பம் கொடுத்தால் அவர்கள் கோரும் மகப்பேறு விடுப்புக்கு விதிகளின்படி தகுதியுடையவர்களாக இருந்தால் மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டு, மகப்பேறு விடுப்பு காலந்திலேயே அதற்கான விடுப்பு ஊதியம் வழங்கப்படுகின்றது.

9—

### விளையாட்டுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

வினா 8229—திரு. மு. அப்பாதுரை, மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுப் பயிற்சித் துறையால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் பள்ளிகளிலும், விளையாட்டு விடுதிகளிலும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசு மானியம் எவ்வளவு வழங்கப்படுகிறது.

விடை—

விளையாட்டுப் பள்ளிகளில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் உணவு மற்றும் உறையுளுக்காக மாதம் ரூ 250-ம் விளையாட்டுக்கான சீருடை போன்றவை வாங்குவதற்கு ஆண்டுக்கு ரூ. 400-ம் மானியமாக வழங்கப்படுகிறது. விளையாட்டு விடுதிகளில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் உணவு மற்றும் உறையுளுக்காக மாதம் ரூ 250—ம் விளையாட்டுக்கான சீருடை போன்றவை வாங்குவதற்கு ஆண்டுக்கு ரூ. 500—ம் மானியமாக வழங்கப்படுகிறது.

10—

### குழித்துறை கால்நடை கேந்திரத்திற்கு கால்நடை இன விருத்திக்காக காளைகள் வழங்குதல்.

வினா 8272—திரு டி. மணி; மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழித்துறை கால்நடை கேந்திரத்திற்கு இன விருத்திக்காக இரண்டு பிறீஷியன் காளையும், ஒரு நெட்டையின் காளை வேண்டுமென்று மனுக்கள் ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) பொது மக்களிடமிருந்து மனுக்கள் ஏதும் வரவில்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

---



11—

### தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி முன்னேற்றக் கழகத்தின் கணக்குகளை முடிக்கும் நடவடிக்கை.

வினா 8544—திரு மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி முன்னேற்றக் கழகம் 1975 முதல் கணக்குகளை முடிக்காமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது

விடை—

(அ) ஆம்.

(ஆ) கழகம் தன்னுடைய கணக்குகளை உரிய காலத்தில் முடிப்பதைக் கவனித்துக் கொள்வதில் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்கிறது: 1977 பிப்ரவரியில் மத்திய அரசு கம்பெனிகள் சட்டத்தின்படி கம்பெனித் தணிக்கையாளரை 1976–77 ஆம் ஆண்டுக்கு நியமித்தது. தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் 30-12-1978 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டன. இயக்குநர்களில் ஒருவர் எழுப்பிய கருத்தின் பேரில் கணக்குகளில் திருத்தம் செய்ய வேண்டுமா என்பது பற்றி முடிவுசெய்வதற்காக இதனை அரசுக்குத்தெரிவிக்க கழகம் முடிவு செய்தது. அரசிடமிருந்து விளக்கம் கிடைத்த பின்னர், 1975-76 ஆம் ஆண்டுக்குரிய கணக்கு திருத்தப்பட்டு 30–11–1981-ல் நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் வைக்கப்பட்டன. இக்குழு கணக்குகளுக்கு ஒப்புதல் அளித்தது. சட்டப்படிக்கான தணிக்கையாளர்களின் சான்றிதழ்களும் பெறப்பட்டன. 1976-77, 1977–78-ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்குகளும் முடிவு செய்யப்பட்டு, 8–4–1982 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் ஒப்புதல் பெறுவதற்காக வைக்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டுக்குரிய கணக்கு தொகுக்கப்பட்டுள்ளது. 1979–80, 1980-81 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்குகள் தொகுக்கப்பட்டு வருகின்றன.

12—

**பணப்பாக்கம் பேரூராட்சியிலுள்ள மயூரநாதசாமி கோயில் சொத்துக்கள்**

வினா 8758—திரு மே. அ. இராஜ்குமார் ; மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம் அரக்கோணம் தாலுக்கா பணப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு மயூரநாதசாமி கோவில் சொத்துக்களை தனியார் ஒருவர் அனுபவித்து வருவது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) வடஆற்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டம் பணப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு மயூர நாத சுவாமி ஆலயத்திற்கு சொந்தமாக நஞ்செய் 6.48 ஏக்கர் நிலமும், 7.51 ஏக்கர் புஞ்செய் நிலமும் ஆக மொத்தம் 13.99 ஏக்கர் நிலம்சொந்தமாக உள்ளது. இந்த நிலத்தில் 3.06½ ஏக்கர் புஞ்செய் நிலமும், 3.06 ஏக்கர் நஞ்செய் நிலமும் திரு. கோவிந்த ராஜ முதலியார் என்பவரின் ஆக்கிரமிப்பில் உள்ளது.

அவ்வாலயத்திற்கு சென்னை உயர்நீதி மன்றத்தினால் அப்பீல் எண். 441/1924 நாள் 25-2-1930-ல் மாற்றி அமைக்கப் பட்டுள்ள ஆட்சித் திட்டம் உள்ளது. இந்த ஆட்சித் திட்டத்தின் படி இவ்வாலயத்திற்கு மூன்று அறங்காவலர்கள் இருக்கவேண்டும் வேளாளர் சமூகத்திலிருந்து ஒருவரும், கைக்கோளார் சமூகத் திலிருந்து ஒருவரும், முறையே பணப்பாக்கம் கிராமத்தில் குடி யிருக்கும் வெள்ளாளர் மற்றும் கைக்கோளர்களால் தேர்ந்தெடுக் கப்பட வேண்டும். மூன்றாவது அறங்காவலர் அறநிலையத் துறையினரால் நியமனம் செய்யப்படவேண்டும்.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டம் 24/1970-ன்படி' 'வாலஜா வட்டம், வன்னிவேடு, அருள்மிகு ஆகத்தீஸ்வரர் ஆலயத்தின் செயல் அலுவலர் திரு. வி.கே. மறைமணி என்பவர் இவ்வாலயத் திற்குத் தக்கராக (fit persons) நியமிக்கப்பட்டார். இதனை எதிர்த்து இவ்வாலயம் ஒருD manination Tcmpl ) எனத் தீர்ப் பளிக்கக் கோரி வேலூர் சப்கோர்ட்டில் ஓ.எஸ். எண். 111/76-ல் தாமோதர முதலியார் என்பவர் வழக்குத் தொடர் ந்தார். அவர் இறந்தபின், அவருக்குப் பதிலாக திரு எம்.எஸ். குப்புசாமி என்பவர் வாதியாகக் கோர்ட்டு ஆவணங்களில் கொண்டு வரப்பட்டு, வழக்கு தற்போது சோளிங்கர் டி.மு. கோர்ட்டிற்கு மாற்றப்பட்டு மேற்படி சோர்ட்டில் ஓ எஸ். 17581 மனு எண்ணிட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. இந்துசமய அறநிலையத் துறையின் எழுத்து வாக்கு மூலத்தில் 1930 ஆம்



ஆண்டு உயர்நீதி மன்றத்தீர்ப்பின்படி நிர்வாகம் உள்ளதென்றும்
ஜாதிக் கோயில் என்பதை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை என்றும்
அறங்காவலர்கள் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்கள்
என்றும் சட்டரீதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு நிலு
வையில் உள்ளது. வழக்கு முடியும் வரையில் இந்து சமய அற
நிலைய ஆட்சித்துறை மேற்படி ஆலய நிர்வாகத்தில் தலையிடக்
கூடாது என கோர்ட்டு தடையுத்திரவு பிறப்பித்துள்ளது.
எனவே ஆக்கிரமிப்பிலுள்ள நிலங்களை ஆலயத்திற்கு உடனடி
யாக மீட்க நடவடிக்கை எடுக்க இயலாத நிலையில் உள்ளது.
நீதிமன்றத்தின் முடிவைப் பொறுத்து, தக்க மேல் நடவடிக்கை
எடுக்கப்படும்.

13—

**குன்னத்தூரில் பாலம் கட்டும் பணி**

வினா—8922 தி.பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதியில் குன்னத்தூருக்கும் திருப்பத் தூருக்கும் இடையில் குன்னத்தூரில் பாலம் கட்ட உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இப்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

14

**தமிழ்நாடகம் அரங்குநாடகம் பற்றிய திறனாய்வு நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடல்.**

வினா9 193—திரு எம். சின்னச்சாமி ; மாண்புமிகு கல்வி அமைச் சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடகம், அரங்கு நாடகம் பற்றிய திறனாய்வு நூல் களை ஆங்கிலத்தில் வெளியிட அரசு முயற்சிகளை மேற்கொள் ளுமா?

விடை—

தமிழ் நாடகம், அரங்கு நாடகம் பற்றிய திறனாய்வு நூல் களை ஆங்கிலத்தில் வெளியிட அரசிடம் திட்டம் இல்லை.

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தீயணைப்பு நிலையத்திற்கு மட்டும் தண்ணீர் தொட்டி கட்டுவது சம்பந்தமாக செயற்குறிப்பு ஏதுமில்லை. ஆனால் பொதுவாக தண்ணீர் பற்றாக் குறை உள்ள திருப்பத்தூர் உட்பட எல்லா தீயணைப்பு நிலையங்கட்கும் நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுவது பற்றி செயற்குறிப்பு உள்ளது. இதற்கு தேவையான நிலங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு தீயணைப்புத் துறைக்கு மாற்றுவது குறித்து கடித போக்கு வரத்து உள்ளது.

18—

பாம்பாற்றின் இருகரையிலும் தடுப்புச்சுவர் கட்டும் செயற்குறிப்பு

வினா 10123— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி பாம் பாற்றின் இரு கரையிலும் தடுப்புச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

19—

*Constrction of a new bridge in Pudur Thiruvarur*

வினா 10142 திரு ரா. உமாநாத்: Will the Hon. the Minister for Loca Administration be pleased to state.—

(a) Whether this Government has any proposal to construct a new br dg: in Pudur, Thiruvarur since the existing bridge is in a dilapidated condition: and

(b) If so, the details th reof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



20—

அரிசன மற்றும் மலைவாழ் மக்களுக்கு 18 சதவிகிதம் வேலை வாய்ப்புக்கள் ஒதுக்குதல்

வினா 10580—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கூட்டுத்துறை, அரசு உதவி பெறும் தனியார் நிறுவ னங்களிலும் அரிசன மற்றும் மலைவாழ் மக்களுக்கு 18 சத வீதம் வேலை வாய்ப்புக்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு தாக்கீது ஏதும் வந் துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசிடமிருந்து இப்பொருளில் தாக்கீது ஏதும் வரவில்லை.

21—

பெரியார் மாவட்டத்தில் வழங்கப்பட்ட குடும்பக் கார்டுகள்.

வினா 10625— திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் பழைய குடும்பக் கார்டு களை புதுப்பித்து எவ்வளவு குடும்பக் கார்டுகள் தரப்பட்டு இருக்கின்றது?

(ஆ) புதிதாக தகுதி உள்ள குடும்பங்களுக்கு குடும்பக் கார்டுகள் கேட்டு எத்தனை மனுக்கள் வரப்பெற்று உள்ளன?

(இ) அவைகளுக்கு எப்போதும் குடும்பக் கார்டுகள் வழங்கப்படும்

விடை—

(அ) 1-07—1972-க்கு முன் பெரியார் மாவட்டத்தில் 6,295 பழைய குடும்ப அட்டைகளை புதுப்பித்து புதிய அட்டைகள் தரப்பட்டுள்ளன.

15—

### கல்வித்துறையில் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு 1981-82ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை

வினா 9271 திரு டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1981–82 வரவு-செலவு திட்டத்தில் கல்வித்துறையில் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விடை—

1981–82 வரவு செலவு மதிப்பீட்டில் கல்வி மானியத்தின் கீழ் (மானியக் கோரிக்கை 17) ஒதுக்கிய தொகை ரூ.249 கோடியாகும். இதில் ஆராய்ச்சி அபிவிருத்திக்காக தனியாக ஒரே இடத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லையெனினும், பின் வரும் பல்வேறு நிதி ஒதுக்கங்களும் பெருமளவுக்கு கல்வி சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு வகை செய்வனவேயாகும்.

பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கத்தில்—ஆங்கில மொழி பயிற்றுவிப்பு மையங்களுக்கு ரூ. 16 லட்சம்; தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துக்கு ரூ. 20 லட்சம்;

கல்லூரிக் கல்விக்கான நிதி ஒதுக்கத்தில்—பல்கலைக் கழகங்களுக்கு மானியம் தர மொத்தம் ரூ.145 லட்சம்; புதிய பட்ட மேற்படிப்புகளை அரசுக் கல்லூரிகளில் தொடங்க குறிப்பாகச் செய்த நிதி ஒதுக்கம் ரூ.10 லட்சம்; கல்லூரிப் பேராசிரியர்கள் உதவிப் பேராசிரியர்களை டாக்டர் பட்டம் பெற முகமையில் அனுப்ப ரூ. 3 லட்சம்; கணித அறிவியல் நிறுவனம் சென்னை வளர்ச்சிப் பணிகளுக்கான சென்னை நிறுவனம் ஆகியவற்றுக்கு மானியம் தர ரூ.5 லட்சம்.

தொழில் நுட்பக் கல்விக்கான நிதி ஒதுக்கத்தில்—அண்ணா பல்கலைக் கழகத்துக்கு Ethanal car Project—என்ற திட்டத்திற்கு ரூபாய் 5 லட்சம் ஆரம்ப திட்டப்பணமாக கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் (Remote Sensing Centre) தொலை நுண்ணுணர் மையம் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் ஆரம்பிப்பதற்கு ஆன ரூ. 76 லட்சம் திட்டத்தில் முதல் கட்டமாக ரூ. 4.84 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கத்தில் — தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கான பல்வேறு மானியங்கள், செந்தமிழ்ச் சொற்



பிறப்பியல் அகர முதலித் திட்டம்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; உலகத் தமிழ்ச் சங்கம் போன்றவற்றுக்காக ரூ. 15 லட்சம்;

கலைப் பணிகளின் கீழ்—தொல்பொருளாய்வுத் துறையின் கல்வெட்டாராய்ச்சி அமைப்பு போன்றவற்றுக்கு ரூ. 2 லட்சம்; ஆவணக் காப்பகத்துறையில் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழுவின் ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களுக்கு ரூ. 1 லட்சம்

16—

### வேலம்பட்டியில் காவல் நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா 9572—திரு டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தொகுதியிலுள்ள வேலம்பட்டியில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த செயல் திட்டம் உள்ளதா?

விடை—

காவேரிப்பட்டணம் தொகுதியிலுள்ள வேலம்பட்டியில் 1978 1979 மற்றும் 1980 ஆண்டுகளில் குற்றங்கள் நடந்ததாக தகவல் ஏதும் வராததால், அங்கு காவல் நிலையம் ஒன்று அமைக்க அவசியம் இல்லை என்று கருதப்படுகின்றது.

17—

### வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தீயணைப்பு நிலையத்தில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு.

வினா 9496—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தீயணைப்பு நிலையத்தில் தண்ணீர் ஸ்டாக் வைப்பதற்கு நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடன் கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) புதிதாக அட்டைகள் கோரி 3,300 மனுக்கள் வரப் பட்டுள்ளன.

(இ) மனுக்களை பரிசீலனை செய்து புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் 2,516, நிராகரிக்கப்பட்ட மனுக்கள் 13.

அரசு ஆணைப்படி பெரியார் மாவட்டத்தில் வீடுதோறும் புதிதாக கணக்கெடுப்பு செய்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு 1-7-72 முதல் 31-8-1982-ந் தேதி முடிய குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டன:—

| | | |
|---|---|---|
| கிராமப்பகுதி | .. | .. 4,98,681 |
| நகரப்பகுதி | .. | .. 73,280 |
| | மொத்தம் | .. 5,71,961 |

22—

மதுரை மாவட்டத்திலுள்ள உறைவிந்து உபயோகப்படுத்தும் கால்நடை பராமரிப்பு நிலையங்கள்

வினா 10809—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாவட்டத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்கள் எவை எவைகளில் (FrozenSemen) உபயோகப் படுத்தப்படுகிறது?

விடை—

மதுரை மாவட்டத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்களில் (Frozen Semen) உறை விந்து இதுவரை உப யோகப்படுத்தப்படவில்லை)

23—

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதி

வினா 10820—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதி அந்த ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு செலவிடப்படாமல் ரோடு ரோலர் வாங்க பயன்படுத்தப்பட்டுள்ளதா



விடை—

செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உபரிப் பொது நிதி இருந்தால் திட்ட வேலைகளுக்கு பிப்ரவரி 1981-ல் சாலை உருளை வாங்கப்பட்டது. இதனால் இவ்வொன்றியத்தில் வளர்ச்சித் திட்டங்கள் எவ்வகையிலும் பாதிக்கவில்லை. மேலும் இந்த உருளையின் மூலம் இவ்வொன்றியத்திற்கு ரூபாய் 53,121 இதுவரை வருவாய் கிடைக்கப்பட்டுள்ளது.

24—

முத்தலாபுரத்தில் புறக்காவல் நிலையம் அமைத்தல்

வினா 11050—திரு. ரா. கு. பெருமாள் மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தாலுக்கா, முத்தலாபுரம் கிராமத்தில் அவுட்போலீஸ் ஸ்டேஷன் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) குற்றங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விளாத்திகுளம் தாலுக்கா முத்தாலபுரம் கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை

25—

எடுத்தவாய் நத்தம் அருகில் கடுக்காய் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு

வினா 11210 — திரு. சோ. கலிதீர்த்தான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுக்கா கல்வராயன் மலைப்பகுதியைச் சார்ந்த எடுத்தவாய் நத்தம் அருகில் கடுக்காய் தொழிற்சாலையை ஏதபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1977–80 ஆம் ஆண்டுகளைப் பொறுத்தவரையுள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண். தொகுதி. | | சலவைத் தொழிலாளர்கள். விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | சலவைத் தொழிலாளர்கள். கொடுக்கப்பட்டவை. | முடிதிருத்தும் தொழிலாளர்கள் விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | முடிதிருத்தும் தொழிலாளர்கள் கொடுக்கப்பட்டவை. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1. சேலம் 1 | .. | 191 | 43 | 131 | 39 |
| 2. சேலம் 2 | .. | 149 | 39 | 119 | 33 |
| 3. பனமரத்துப்பட்டி | | 137 | 24 | 68 | 23 |
| 4. வீரபாண்டி | .. | 81 | 19 | 57 | 18 |
| 5. ஆத்தூர் | .. | 129 | 36 | 182 | 51 |
| 6. தலைவாசல் | | 85 | 27 | 85 | 28 |
| 7. நாமக்கல் | .. | 207 | 46 | 44 | 42 |
| 8. சேந்தமங்கலம் | .. | 97 | 25 | 73 | 29 |
| 9. கபிலர் மலை | .. | 66 | 17 | 46 | 24 |
| 10. ராசிபுரம் | .. | 191 | 54 | 226 | 76 |
| 11. சங்கரி | .. | 74 | 20 | 56 | 20 |
| 12. இடப்பாடி | .. | 74 | 27 | 51 | 18 |
| 13. திருச்செங்கோடு | .. | 179 | 52 | 133 | 46 |
| 14. மேட்டூர் | .. | 63 | 11 | 64 | 15 |
| 15. தாரமங்கலம் | | 71 | 17 | 88 | 25 |
| 16. ஓமலூர் | .. | 68 | 16 | 78 | 21 |
| 17. ஏற்காடு (பழங்குடியினர் பகுதி). | | .. | .. | .. | .. |



பாஞ்சாலங் குறிச்சியில் வசிக்கும் கட்டபொம்மன் சந்ததியார்களுக்கு வாழ்வளித்தல்.

30—

வினா 11434—திரு. ரா கு. பெருமாள் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

"பாஞ்சாலங்குறிச்சியில் வசிக்கும் கட்டபொம்மன் சந்ததியார்கள் சுமார் 200 குடும்பங்களுக்கு வாழ்வளிக்க அரசு என்ன முயற்சி எடுத்துள்ளது."

விடை—

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் சந்ததியார்களான 202 பேருக்கு தலா 5 சென்ட் வீதம் வீடு கட்ட மனை கொடுக்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி வாரியம் அவர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுத்துள்ளது. இரண்டு நபருக்கு விவசாயம் செய்வதற்கு 5 ஏக்கர் நிலம் இனாமாக கொடுக்கப்பட்டது. மேலும் 209 நபருக்கு தலா 3 ஏக்கர் வீதம் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. திரு சோமசுந்தர கட்டபொம்முதுரை மற்றும் திரு. வீரால் மல்லுசாமி ஆகிய இருவருக்கும் நில அடமான வங்கி மூலம் கிணறு வெட்ட கடன் கொடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குடியிருப்புக்கு குடிதண்ணீர் வசதிக்காக நான்கு கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடி மற்றும் மூத்த சந்ததியினர்களுக்கு உதவித் தொகை தலா ரூபாய் 100-லிருந்து ரூபாய் 150 ஆக 1-8-1981 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

31—

*Conducting of a model Parliament in Madras City Schools.*

வினா 11509 —Thiru S. RAJARAMAN ; Will the Hon. Minister for Education be pleased to state:—

(a) Whether the Minister of Parlimentary Affairs in collaboration with the Directorate of High School Education is to conduct a Model Parliament in Madras City Schools during the year 1981–82; and

(b) If so, the details thereof ?

[1983 நவம்பர் 10

26—

### கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் புற நோயாளிகளுக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

வினா 11338—திரு எஸ். சிவராமன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் தொகுதி கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் வரும் புற நோயாளிகள் தங்குவதற்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண். 714 சுகாதாரம் 1—4—1982-ல் அரசு மருத்துவமனை கள்ளக்குறிச்சியில் ரூபாய் 3.95 இலட்சம் செலவில் புற நோயாளிகள் பகுதி கட்டுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

27—

### கள்ளக்குறிச்சி காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்

வினா 11346 திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சின்ன சேலம் தொகுதி கள்ளக்குறிச்சியில் இயங்கும் காவல் நிலைய சொந்தக் கட்டிடம் இல்லாமல் தனியார் கட்டிடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) எப்பொழுது கட்டிடம் கட்டப்படும்?

விடை—

(அ) தெரியும்

(ஆ) கள்ளக்குறிச்சி காவல் நிலையம் உட்பட 150 காவல் நிலையங்கள் கட்டுவதற்கு அரசு ஆணை எண் 1988 (உள்துறை) நாள் 19—8—1981-ல் ஒப்புதல் அளித்து, அதற்கான மானியத்தையும் ஒதுக்கியுள்ளது.

(இ) கட்டிடத்திற்கான வரைபடமும் மதிப்பீடும், சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற பின் அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு. கட்டிட வேலை துவங்கப்படும்.



1983 நவம்பர் 10]

### பழனி திருக்கோயிலில் அனுமதி பெற்று முடிசவரத் தொழில் செய்வோர் எண்ணிக்கை

வினா 11388—திரு. ரா. உமாநாத் மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி திருக்கோவிலில் அனுமதி பெற்று முடி சவரத் தொழில் செய்து வரும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களை நிரந்தர ஊழியர்கள் ஆக்க ஏதேனும் மனுவந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 330 தொழிலாளர்கள்.

(ஆ) மற்றும் (இ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலய அனுமதி பெற்ற முடிச்சவர தொழிலாளர்களின் கூலி உயர்வு. மற்றும் நிரந்தர நியமனம் பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு முன்பு முடிக்கட்டணமாக ரூபாய் 1.25 வீதம் வசூல் செய்து திருக்கோயிலுக்கு 0.55 பைசாவும் முடிச்சவரத் தொழிலாளர்களுக்கு டிக்கட் ஒன்றுக்கு 0.70 பைசாவும் வழங்கப்பட்டதற்குப் பதிலாக முடிக்கட்டணம் டிக்கட் ஒன்றுச்கு ரூபாய் 2.00 வசூல் செய்து அதில் திருக்கோவிலுக்கு 0.75 பைசாவும். முடிச்சவரத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 1.25-ம் கொடுக்கவும் நிரந்தர நியமனம் தேவையில்லை எனவும் அறங்காவலர் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு 1—7—1981 முதல் இந்த உயர்ந்த விகிதம் நடைமுறையில் உள்ளது.

29—

### 1977-80 வரை சேலம் மாவட்டத்தில் சலவை மற்றும் முடி திருத்தும் தொழிலாளர்களிடமிருந்து தொழில் கருவிகள் கேட்டு வரப் பெற்ற மனுக்கள்

வினா 11417 திரு. இ. கணேசன் மாண்புமிகு பிற்பட்டோர் அமைச்சர் நலத்துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சலவை தொழிலாளர்கள் மற்றும் முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்குத் தொழில் செய்வதற்கு தொழில் கருவிகள் கேட்டு 1977—80 வரை வரப் பெற்ற மனுக்கள் எத்தனை?

(ஆ) பெறப்பட்ட மனுக்களில் தொழிற்கருவிகள் வழங்கப் பெற்றவை எத்தனை

(இ) தொகுதி வாரியாக

விடை—

(அ) ஆம்.

(இ) மைய அரசின் நாடாளுமன்றத் துறை டில்லியிலும் சில வட மாநிலங்களிலும் மாதிரி இளைஞர் நாடாளுமன்றத் திட்டத்தினை நடத்தியது. இத் திட்டம் தமிழ்நாட்டில் 1981-82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பள்ளிகளில் நடத்தப் பட்டது:—

1. சர். எம். சி. டி. எம். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 084.

2. லேடி எம். சி. டி. எம். மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 084.

3. குட் ஷெப்பர்ட் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நுங்கம் பாக்கம், சென்னை-600 006.

4. ஐ. சி. எப். மேல்நிலைப் பள்ளி, சென்னை-38

5. ராணி மெய்யம்மை மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 028.

6. அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, ஊரூர், அடையார், சென்னை-600 090.

7. அரசினர் மேல்நிலைப் பள்ளி கோடம்பாக்கம், சென்னை-600 024.

8. மாநகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி, நுங்கம் பாக்கம், சென்னை-600 034.

9. அரசினர் மதரசா-ஐ-ஆசாம் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 002.

10. செயின்ட் உருசுலாஸ் ஆங்கிலோ-இந்தியன் மேல் நிலைப் பள்ளி, பிரசன்டேஷன் கான்வெண்டு, சர்ச் பார்க், சென்னை-600 006.

11. ஆர். கே. எம். (மெயின்) ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தி. நகர், சென்னை-600 017.

12. டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் மேல்நிலைப் பள்ளி, அயன்புரம், சென்னை-600 023.

13 தி டாராபோர் மற்றும் லோகநாதன் மகளிர் மேல் நிலைப் பள்ளி, வெங்கடேசபுரம், சென்னை-6000 23.

14. மோதிலால் போம்ரா சனாதன தர்ம மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 001.



15. டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம் முத்தியால்பேட் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 001.

16. கே. சி. சங்கரலிங்க நாடார் மேல்நிலைப் பள்ளி, வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

17. சென்னை கிருஸ்துவ கல்லூரி மேல்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை-600 031.

18. டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-600 008.

19. சான்தோம் மேல்நிலைப் பள்ளி, சான்தோம், மயிலாப்பூர், சென்னை-600 004.

20. ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சான்தோம், மயிலாப்பூர், சென்னை-600 004.

பள்ளிகளில் திட்டத்தின் செயல் திறனை மதிப்பிட நியமிக் கப்பட்ட குழு டிசம்பர் 1981 மற்றும் சனவரி 1982 மாதங் களில் இப் பள்ளிகளுக்குச் சென்று மதிப்பீடு செய்து கீழ்க்கண்ட ஆறு பள்ளிகளை தேர்ந்தெடுத்தது:—

1. டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 008.

2. மோதிலால் போம்ரா சனாதன தர்ம மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 001.

3. குட் ஷெபர்ட் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நுங்கம் பாக்கம், சென்னை-600 006.

4. சென்னை கிருஸ்துவ கல்லூரி மேல்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை-600 031.

5. டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம் முத்தியால்பேட் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-600 001.

6. டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் மேல்நிலைப் பள்ளி, அயன்புரம் சென்னை-600 023.

மேற்கண்ட சிறந்த ஆறு பள்ளிகளையும் ஒவ்வொரு பள்ளி யிலும் நான்கு மாணவ மாணவியர் வீதம் மொத்தம் (20X4) 80 மாணாக்கர்களை தேர்ந்தெடுத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கும் மாணாக்கர்கட்கும் 27-2-1982 அன்று சென் னையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கேடயம்/கோப்பை கள்/ பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன இவ் விழாவுக்காக மைய அரசு ரூ. 1,000 வழங்கியுள்ளது.

[1983 நவம்பர் 10

## இந்து கோவில்களில் விழாக்களை அரசு நடத்துதல்.

வினா 11531—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

இந்து கோவில்களில் எடுக்கும் விழாக்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஜாதியினர் நடத்தும் முறையை ஒழித்து பொதுவாகவே அரசு நடத்த ஏற்பாடு செய்யுமா?

விடை—

இந்து சமய அறநிலையத் துறையின் மேற்பார்வையில் இருந்து வரும் திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்கள் பொதுவாகத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து திருக்கோயில்களாலேயே நடத்தப்பெறுகின்றன.

ஒரு சில ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் குறிப்பிட்ட சில திருவிழாவிற்காகும் செலவில் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ ஒரு தனி நபரோ அல்லது சிலர் சேர்ந்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரோ ஏற்று நடத்துவதும் உண்டு. சில திருவிழாக்களை நடத்துவதற்கென சொத்துக்கள் விடப்பட்டு, அவற்றின் வருமானத்திலிருந்து ருவிழாக்கள் நடத்தப்படுவதும் உண்டு. இ வகள் உபயதாரர்களால் நடத்தப்படும் விழாக்கள் என்று கூறப்படுகின்றன.

குறிப்பிட்ட சமூகத்தினர் ஒன்று சேர்ந்து ஒரு சில ஆலயங்களில் திருவிழாக்களுக்காகும் செலவை வழக்கமாக ஏற்று நடத்தி வரலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு வழக்கமாகச் செய்து வருவதால் மட்டும் அந்தத் திருவிழாக்கள் நடைபெறுவதில் அவர்களுக்கு ஏகபோக உரிமை ஏற்பட்டு விடாது.

இந்துசமய அறநிலையச் சட்ட விதிகளுக்கிணங்க அல்லாமல் திருக்கோயில்களில் தொன்றுதொட்டு வழக்கமாக நடைபெறும் விழாக்கள் மற்றும் வழிபாட்டு முறைகளின் நடைமுறையில் அரசு தலையிடுவதற்கில்லை. அவ்வாறான தலையீடு பொது மக்களின் அடிப்படை உரிமைகளில் தலையிடுவதாகும். எனவே கோயில்களில் பொதுமக்கள் சார்பாக எடுக்கப்படும் விழாக்ளை அரசு ஏற்று நடத்துவது சாத்தியமில்லை.



1983 நவம்பர் 10]

33—

## 1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண நிதியிலிருந்து கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீருக்காக செலவிடப்பட்ட தொகை.

வினா 11590—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண நிதியிலிருந்து குடிநீருக்காக கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திதகு தாலூகா வாரியாக எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

விடை—

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் வட்டவாரியாக செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் வட்டத்தின் பெயரும். | | தொகை. |
|---|---|---|
| (1) | | (2) |
| | | ரூ. |
| 1 | சிவகெங்கை வட்டம் | 20,92,856 |
| 2 | திருப்பத்தூர் வட்டம் | 54,93,967 |
| 3 | மானாமதுரை வட்டம் | 9,80,236 |
| 4 | திருவாடானை வட்டம் | 1,12.601 |
| 5 | முதுகுளத்தூர் வட்டம் | 1,32,495 |
| 6 | காரைக்குடி வட்டம் | 5,83,717 |
| 7 | தேவகோட்டை வட்டம் | 6,25,064 |
| 8 | பரமக்குடி வட்டம் | 9,05,774 |
| 9 | இளையான்குடி வட்டம் | 4,03,328 |
| 10 | இராமநாதபுரம் வட்டம் | 3,65,398 |
| 11 | கமுதி வட்டம் | 1,12,841 |
| | மொத்தம் | 1,18,08,277 |

[1983 நவம்பர் 10

34—

மாவட்ட, வட்ட அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'வழங்கப்படும் வேலை வாய்ப்பு.

வினா 11777—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் உள்ள மாவட்ட, வட்ட அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பொதுப் பணிகளில் அரசு அலுவலகங்கள் (மாவட்டங்கள், வட்டங்கள் உட்பட) பொதுத் துறை நிறுவனங்கள் (Public Sector Undertaking) நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு பத்து இடங்களுக்கு குறைவில்லாத ஒவ்வொரு பணிக்கும் நேரடி நியமனங்களில் (Direct Recruitment) 18 விழுக்காடு இட ஒதுக்கீடு அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு பதவி உயர்வில் (Promotion) போதிய பங்கீடு கிடைக்கும் பொருட்டு கீழ்க் கண்ட பத்து பணிகளுக்கு பொது விதி 22 (General Rule 22) ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள (18 விழுக்காடு இடங்கள்) அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

| மாநிலப் பணி. (1) | துறை. (2) |
|---|---|
| 1 துணை ஆட்சியர் | வருவாய்த் துறை |
| 2 இணை வணிக வரி அலுவலர் | வணிக வரித்துறை |
| 3 கோட்ட உதவிப் பொறியாளர் | நெடுஞ்சாலை பொறியியல் துறை. |
| சார்பு நிலைப் பணி: | |
| 4 உதவி வணிக வரி அலுவலர் | வணிக வரித் துறை |
| 5 உதவிப் பதிவாளர் கிரேட் II | பத்திரப் பதிவுத் துறை |
| 6 தனி உதவிப் பதிவாளர் கிரேட் II | |
| 7 துணை வட்டாட்சியர் | வருவாய்த் துறை. |
| 8 பீல்டு சர்வேயர்கள் | நில அளவை மற்றும் பதிவேடுத் துறை. |
| 9 ஜூனியர் கம்ப்யூட்டர்ஸ் | |
| 0 ரீபுரொடக்ஷன் உதவியாளர் | |



1983 நவம்பர் 10]

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக பொதுப் பணிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 18 விழுக்காடு இடங்கள் எல்லா அலுவலகங்களிலும் சரிவர கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றதா என்பதைப் பற்றி கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் உயர் நிலைக் குழு (High level Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவிற்கு ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள் துணைத் தலைவர் ஆவார். மேலும் பல்வேறு துறையைச் சார்ந்த (அரசு தலைமைச் செயலாளர் உட்பட) பத்து அரசு உயர் அலுவலர்கள் மேற்கண்ட குழுவின் அங்கத்தினர்களாவர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேற்கண்ட குழுவின் உறுப்பினர் செயலாளர் ஆவார். மேலும் உயர்நிலைக் குழுவின் துணைக் குழுவாக பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலாளரைத் தலைவராகக் கொண்ட உயர் அதிகார கண்காணிப்புக் குழு (High Power Monitoring Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவானது அவ்வப்போது கூடி ஆதிதிராவிடர் பழங்குடியினருக்காக பொதுப் பணிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விதிகளை பதவி உயர்வு மற்றும் பதவி மாற்றல் (Recruitment by Promotion Tran fer) மூலம் பொருந்தச் செய்வதுபற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்கிறது. மேலும் ஒவ்வொரு துறைத் தலைவரும், பொதுத் துறை நிறுவனங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பில் வழங்கப்படும் 18 விழுக்காடு இடங்களில் எவ்வளவு விழுக்காடு இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்ற விவரப் பட்டியலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி வைக்கின்றனர். மேற்கண்ட ஆண்டறிக்கையில் இருந்து 31–12–1980 ஆம் ஆண்டு முடிய, அரசு அலுவலகங்களில் 13 விழுக்காடு இடங்களும், பொதுத் துறை நிறுவனங்களில் (Public Sector Undertakings) 11 விழுக்காடு இடங்களும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்காக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இது சம்பந்தமாக விவரப் பட்டியல் (Statemen s) *இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. மேலும் ஒவ்வொரு துறையிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 18 விழுக்காடு இடங்கள் சரிவர வழங்கும் பொருட்டு முறைப்படி பதிவேடுகள் (Rost r R gisters) பராமரிக்கப்பட்டு வருகின்றன.

4. ஒவ்வொரு துறையிலும், தலைமைச் செயலக நிர்வாக அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காடு இட ஒதுக்கீடு முறைப்படி வழங்கப்பட்டு . வரு

* * 174—175ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 10

38—

இராமநாதபுரம் மாவட்ட தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு இலவச உழவு மாடுகள், கருவிகள் வழங்கல்.

வினா 12334—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய தாலுக்காக்களில் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு இலவச உழவு மாடுகளும் இலவச உழவுக் கருவிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம். இதுபற்றி இராமநாதபுரம் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981–82 ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிடர்களுக்கு சுழற்சி முறையில் உழவு மாடுகள், விவசாய கருவிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த இராமநாதபுரம், திருவில்லிப்புத்தூர் ஆகிய இரு வட்டங்களை மாவட்ட ஆட்சியர் தேர்வு செய்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வட்டங்களிலிருந்தும் ஆதி திராவிடர்கள், ஆதி திராவிட கிருத்துவர்கள் மற்றும் ஆதிவாசி (பழங்குடி) வருப்பினரிடமிருந்து மனுக்கள் கோரிப் பெற்று அவற்றில் 15 ஆதி திராவிடர்கள், 2 ஆதி திராவிட கிருத்துவர்கள், 2 ஆதி வாசியினர் (பழங்குடியினர்) தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு தலா ரூ. 600 வீதம் மொத்தம் ரூ. 11,400 செலவில் உழவு மாடுகள், விவசாயக் கருவிகள் வாங்க வழங்கப்படும்.

39—

கல்லணையிலிருந்து முக்கொம்பு வரை சாலை போடும் திட்டம்.

வினா 12551—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நடுவே கல்லணையிலிருந்து முக்கொம்பு வரையில் சாலை போடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில் எப்பொழுது செயலுக்கு வரும்?



1983 நவம்பர் 10]

(அ) மற்றும் (ஆ) திருவரங்கம்—முக்கொம்பு சாலை, காந்தி சாலை, சென்னை– திருச்சி—திண்டுக்கல் சாலை மற்றும் காவேரி இடதுகரைச் சாலை ஆகிய நான்கு பிரிவுகள் அடங்கியுள்ள இச்சாலையில், காந்தி சாலை மற்றும் சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் கி.மீ. 314/2-314/6 சாலைப் பகுதிகள் தார்ச் சாலையாக உள்ளது. காவேரி இடதுகரைச் சாலையை மேம்பாடு செய்ய 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 32.00 இலட்சம். மதிப்பீட்டில் ஒப்புதலளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது திருவரங்கம்– முக்கொம்பு சாலைப் பகுதியை மேம்பாடு செய்வது குறித்து இனி வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமை, பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயப்படுத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

40—

அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் திருமணக் கடனை உயர்த்துதல்.

வினா 12639—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் ஆசிரியைகளுக்கு அரசு வழங்கும் திருமணக் கடனை உயர்த்தும் உத்தேசம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

விடை—

இதுவரையில் நடைமுறையில் இருந்த ஆணைகளின்படி அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியைகளுக்கு ரூ. 500 மட்டும் திருமணக் கடன் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 28–10–81 நாளிட்ட, கல்வித்துறை அரசாணை (நிலை) எண். 2359 இல் அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்றே, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கும் திருமணக் கடன் தொகை வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் அவர் தம் மகன் மற்றும் மகள் திருமணத்திற்கும் ஆண்களுக்கு ரூ. 1,500 வீதம் 100 நபர்களுக்கும் பெண்களுக்கு ரூ. 3,000 வீதம் 100 நபர்களுக்கும் ஒரு நிதியாண்டில், மொத்தம் 200 நபர்களுக்குத் திருமணக் கடன் வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[1983 நவம்பர் 10

41—

கலசப்பாக்கம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 12671— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு கலசப்பாக்கம் பெண்கள் அரசினர் உயர்நிலைப்பள்ளியின் கட்டிடம் ஒன்று தற்சமயம் 1981-ல் பெய்த மழையில் இடிந்து விழுந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

இப்பள்ளியின் கட்டடம் ஏதும் மழையினால் இடிந்து விழுந்ததாக அறிக்கை ஏதும் பெறப்படவில்லை. ஆனால் சிறிது பழுதடைந்துள்ள ஒரு ஓட்டுக் கூரைப் பகுதியை பழுது பார்க்க வேலூர் செயற் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் வகுப்புகள் ஏதும் நடைபெறாததால், மாணவிகளுக்கு ஆபத்து ஏதும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

42—

கூவத்தூர் எண்டத்தூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 12715—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் கூவத்தூர், எண்டத்தூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுசடைந்து இடிந்து விழும் நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளியின் இரண்டு வகுப்பறைகள் உள்ள ஓட்டுக்கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளது என்றும், இதனை உடனடியாக பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமாறு தகுந்த அறிவுரைகள் செங்கற்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இருப்பினும் இப்பள்ளிக்குக் கட்டடத் தேவை இருப்பதால், இவை வருமாண்டுகளில் நிதியொதுக்கத் ற்கேற்ப கருத்திற்கொள்ளப்படும்.



1983 நவம்பர் 10]

43—

தச்சம்பட்டுக் கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.

வினா 12784—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் தச்சம்பட்டு கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலை பள்ளிக்கு போதுமான கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

இப்பள்ளிக்கு போதுமான கட்டிட வசதி உள்ளது என்றும், இக்கட்டிடங்களில் கற்காரை தளக்கட்டிடம் மற்றும் ஓலைக் கட்டடம் ஆகியவற்றில் பழுது பட்டுள்ள சில இடங்களை பழுதுபார்த்தால் போதும் என்ற அடிப்படையில் பழுதுபார்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வடாற்காடு முதன்மைக் கல்வி அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார் என்றும், இக்கட்டிடங்களில் வகுப்புகள் செயல்படுவதால் மாணவர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏதும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

44—

தேவக்கோட்டை—காரைக்குடி சாலையை சீர்படுத்தும் நடவடிக்கை.

வினா 12880—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டை—ஆராவயல்—காரைக்குடி ரோடு போக்குவரத்துக்கு லாயக்கற்ற முறையில் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் சீர்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(அ) மற்றும் (ஆ) சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இருக்கிறது. போக்குவரத்து தடையின்றி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

கின்றதா என்பதைப் பற்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் எல்லாத்துறைத் தலைமை அலுவலகங்கள், தலைமைச் செயலக நிர்வாக அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை நேரில் பார்வை செய்து அவைகள் சம்பந்தமான பதிவேடுகள், முறைப்பட்டிப் பதிவேடுகள் ஆகியவைகளை ஆய்வு செய்து வருகின்றார்கள்.

5. அரசுப் பணிகளில் ஆதி திராவிடர்/பழங்குடியினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது எடுத்து வருகிறது.

35—

மாமல்லபுரத்திலுள்ள உள்ளூர் வழிகாட்டிகள்.

* வினா எண் 11817—திரு. வி. பி. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் உள்ள உள்ளூர் வழி காட்டிகள் பயணிகளுக்கு சிற்பங்களை பற்றி விளக்கிக் காட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுற்றுலா வழி காட்டிகள், சுற்றுலா பயணிகளை பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு உண்டான உரிமங்களை, மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிடமிருந்து பெறுவதற்கு, சில வரை முறைகளை மத்திய சுற்றுலாத் துறை வகுத்துள்ளது. எனவே; மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிடமிருந்து உரிமம் பெறாத உள்ளூர் சுற்றுலா வழி காட்டிகள் மாமல்லபுரத்தில் அத்துறையினால் தடை செய்யப்பட்டுள்ளனர்.

36—

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்காக வாங்கப்பட்ட ஜி.இ.சி. இயந்திரம்.

வினா 1.942:—திருமதி டி. யசோதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி 'மருத்துவமனைக்கு வாங்கப்பட்டுள்ள ஜி.இ.சி. இயந்திரம் குளிர் சாதன அறையில் வைக்கப்படாத காரணத்தினால் பழுது அடைந்து கிடப்பது உண்மையா?

(ஆ) இந்த இயந்திரத்தின் மதிப்பென்ன?



விடை—

(அ) மற்றும் (ஆ): 1973 ஆம் ஆண்டு-ஜி.இ.சி. இயந்திரம் வாங்கப்பட்டது. இது குளிர் சாதன அறையில் வைக்கப்படவில்லை, ஆனாலும் இது அக்டோபர் 79-ல் தான் பழுதடைந்தது. ஆனால், இச்சாதனத்தில் ஏற்பட்ட பழுது எந்த அளவுக்கு குளிர் சாதன அறையில் வைக்கப்படாததால் ஏற்பட்டது என்று கூற இயலாது. சில பாகங்கள் மாற்றப்பட வேண்டுமென்று சிமன் இந்தியா நிறுவனத்தின் பொறியாளர் 5-12-1979 அன்று கூறினார். 20-12-1979 அந்நிறுவனத்தின் மதிப்பீடு அனுப்பும்படி கேட்டுக் கொண்டதற்கு அவர்களிடம் உதிரி பாகங்கள் கைவசத்தில் இல்லை எனவும் ஹங்கேரியில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்து இருப்பதாகவும், 4-5-1980 அன்று தெரிவித்து இருந்தனர். இன்னமும் மதிப்பீடு வரப் பெறவில்லை என்பதால் உள்ளூரில் சில உதிரிப் பாகங்கள் வாங்கப்பட்டு இ.இ.ஜி. தொழில் நுட்பணருக்கு பழுது பார்க்கப்படுவதற்காக அனுப்பப்பட்டது. இதன் விலை ரூ. 1,03,270.

ஆனால் 1980 மற்றுமொரு இ.இ.ஜி. கருவி வாங்கப்பட்டு மேற்படி மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் குளிர் சாதன அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது நன்றாக இயங்கி வருகிறது. இதன் விலை ரூ. 1,51,632.

37—

மணிமுத்தாறு நதியில் தரைபாலம் அமைக்கும் செயற்குறிப்பு.

வினா 12044—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் மணிமுத்தாறு நதியில் தரை பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இப்பணி மேற்கொள்ளப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இப்பாலம் அமைப்பதற்கு பெருந்தொகை தேவைப்படுவதால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் செயல் படுத்த இயலாது.

[1983 நவம்பர் 10

48—

மங்கலமேடு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 13032—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் உள்ள மங்கலமேடு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

விடை—

மங்கலமேடு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் ரூ. 2.09 இலட்சம் செலவில் கட்டுவதற்கு, 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசு அனுமதி அளித்திருக்கிறது. கட்டிடம் கட்டும் வேலையும் நடந்துகொண்டிருக்கிறது.

49 —

மதுராந்தகம் வட்டம் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கல்.

வினா 13084—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அத்திமானம் கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு அக்கிராமத்தில் புஞ்சை நிலம் இல்லாததால் வீட்டுமனை வழங்கப்பட முடியாத நிலைமை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) புஞ்சை நிலம் இல்லாத கிராமங்களில் நஞ்சை நிலத்தில் வீட்டு மனைகள் ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அத்திமானம் கிராமத்தில் வீட்டுமனை வழங்கப்படவேண்டிய 100 ஆதிதிராவிட குடும்பங்கள் உள்ளன. அவர்கள் மேற்படி கிராமத்தில் புல. எண் 141/1பி முதலியவைகளிலுள்ள நஞ்சை நிலங்களை கையகப்படுத்திக் கொடுக்கும்படி கேட்கிறார்கள்.



1983 நவம்பர் 10]

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்துவது தொடர்பான கோப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதன்மேல் முடிவெடுத்தபின் அத்திமானம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

50—

மதுராந்தகம் ஒன்றியத்தில் சாலை போக்குவரத்து வசதி செய்யும் நடவடிக்கை.

வினா 13092—திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம் முள்ளி, வளர்பிறை, முருக்கஞ்சேரி கிராமங்களுக்கு இதுவரை சாலை போக்குவரத்து வசதி அளிக்கப்படாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை வசதி அளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) முள்ளி கிராமத்திற்கு செல்லும் மண் சாலை சரளை மண் பரப்பப்பட்டு இப்போது நல்ல நிலையில் உள்ளது. வளர்பிறை, முருக்கஞ்சேரி கிராமங்களுக்கு செல்லும் சாலைகளுக்கு சரளை மண் பரப்பும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. வேலைகள் துரிதமாக முடிக்கப்பட்டுவிடும்.

51—

மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்

வினா 13124—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள் தற்போது எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் பணிமுறைகள் யாவை?

45—

வேளாண்மை அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றும் திட்டம்.

வினா 12129—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மை அலுவலர்கள் கிராமங்கள் தோறும் சென்று பணியாற்றுவதற்கான திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

விடை—

வேளாண்மை ஊழியர்களுக்கு முறையான பயிற்சி அளித்து அவர்கள் வேளாண்மை பண்ணை குடும்பங்களை நேரில் சென்று கண்டு வேளாண்மை நுட்ப முறைகளை அறிவுறுத்துவதற்கு, உலக வங்கியின் உதவியுடன், பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம் தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் 1-9-1981 முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது. மற்ற 7 மாவட்டங்களில் 1-7-82 முதல், இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

2. தமிழகத்திலுள்ள சுமார் 38.22 இலட்சம் பண்ணை குடும்பங்கள் 4,777 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும், ஒரு கிராம விரிவாக்கப் பணியாளர் பொறுப்பிலிருக்கும் ஒரு பணியாளரிடமுள்ள 800 பண்ணைக் குடும்பங்களும், 100–150 குடும்பங்கள் கொண்ட எட்டு தொகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு தொகுதியும் இப்பணியாளர்களால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளன்று சென்று பார்க்கப்படும். பண்ணைக்குச் செல்லுதல், கிராமக் கூட்டங்கள் நடத்துதல், பயிற்சி பெறுதல், மேல் அலுவலர்களிடமிருந்து தரப்படும் வேளாண்மை உத்திகளை விவசாயிகளுக்கு அறிவுறுத்துதல் போன்ற பணிகளை ஒவ்வொரு பணியாளரும் செய்ய வேண்டும். இரண்டு வாரங்களில், எட்டு நாட்கள் இவ்வேலைகளுக்கும், ஒரு நாள் பயிற்சிக்கும், ஒரு நாள் மேல் அலுவலர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும், மற்ற நாட்களில் விவசாயிகளுக்கு வேண்டிய இடுபொருள்கள் இருக்கின்றனவா என்று அறிந்து துறையின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் பயன்படுத்தப்படும், இப்பணியாளர்கள் உதவி வேளாண்மை அலுவலர் தரத்தில் இருப்பார்கள்.



46—

ஆதிதிராவிட, மலைவாழ் மக்களுக்கு 18 சதவித இடம் ஒதுக்கீடு.

வினா 12958—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட, மலைவாழ் மக்களுக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆகியவைகளில் 18 சதவிகிதத்திற்கு மேற்படாமல் இட ஒதுக்கீடு செய்து இருப்பது எந்த ஆண்டு ஜனத்தொகையின் அடிப்படையில்?

(ஆ) ஆம் எனில், ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள் ஜனத்தொகை தற்போது எத்தனை சதவிகிதம்?

விடை—

(அ) 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில்.

(ஆ) 1981-ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பு விபரங்களின்படி 19.4 சதவீதம் ஆகும்.

47—

மதுரையில் பெண் கைதிகளுக்கு தனிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 12970—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் பெண் கைதிகளுக்கு என்று தனி சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மதுரையில் 200 பெண் கைதிகளை வைக்கும் வசதியுடன் கூடிய ஒரு தனி தொகுதி கட்டப்பட்டு வருகிறது.

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட சிறப்பு திட்டங்களை அரசின் ஒரு முகமையாக (Agency) மேற்கொள்கிறது.

1. (i) தருமபுரி மாவட்டத்தில் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.

(ii) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்.

(iii) நகர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

2. இக்கழகம் அரசால் வழங்கப்பட்ட சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் வருவாய் தரத்தக்க பல முன்னேற்ற இனங்களை (Remunerative Enterprises) செயல்படுத்துகிறது.

3. கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இடங்களிலுள்ள அண்ணா காந்தி மணிமண்டபங்கள் இக்கழகத்திடம் ஒப்புவிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

52—

பெருந்துறை ஒன்றியத்திலுள்ள தரைமட்ட, மேல்மட்ட குடிநீர்த் தொட்டிகள்.

வினா 13155—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியத்தில் தற்போது உள்ள தரைமட்ட, மேல்மட்ட குடிநீர்த் தொட்டிகள் எவ்வளவு?

(ஆ) அவைகளில் தற்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் குடிநீர்த்தொட்டிகள் எவ்வளவு?

விடை—

(அ) பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 48 தரைமட்டத் தொட்டிகளும், 46 மேல்நிலைத் தொட்டிகளும் உள்ளன.

(ஆ) அவைகளில் தற்போது 79 குடிநீர்த் தொட்டிகள் செயல்பட்டுவருகின்றன.



53—

போளூர்—வீரனூர் சாலை பராமரிப்பு.

வினா 13220—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, போளூர்—வீரனூர் சாலை சரியாக பராமரிக்கப்படாமல் போக்குவரத்திற்கு சிரமமாக இருந்து வருவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இச்சாலை பழுதுபார்க்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு சிரமமாக இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

54—

ஈரோடு வாரச் சந்தை சுங்கம் வசூல்.

வினா 13253—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வாரச் சந்தை தனியாருக்கு சுங்கம் வசூலிக்க அமைத்திருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) அரசு அனுமதியின்பேரில் நகராட்சி தனியார்க்கு சுங்கம் வசூலிக்க அனுமதித்துள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 262-ம் பிரிவின் கீழ் தனியார் வாரச் சந்தை நடத்த அனுமதி அளிக்க நகராட்சிக்கே அதிகாரம் இருப்பதால் அரசு அனுமதி அளிப்பது என்ற பிரச்னைக்கு இடமில்லை.

55—

**வன்னிக்கோனேந்தல் கிராமம் மேல் நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.**

வினா 13322—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனேந்தல் கிராமத்திலிருக்கும் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்கு 1981-82-ல் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்டு வேலை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி மேலும் வகுப்பறைகள் கட்டுவது, நிதி வசதியைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் கருத்திற்கொள்ளப்படும்.

56—

**வன்னிக்கோனேந்தல் கிராமம் அருகில் துணை மின் சேகரிப்பு நிலையம் ஏற்படுத்துதல்.**

வினா 13326—திரு. பி. துரைராஜ்; மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனேந்தல் கிராமத்தின் அருகில் துணை மின் சேகரிப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனேந்தல் கிராமத்திற்கு அருகில் உள்ள தேவர்குளத்தில் ஒரு 66/11 கி.வோ. துணை மின் நிலையம் ஊரக மின்சக்திக் கழகம் அளிக்கும் கடன் வசதியுடன் அமைப்பதற்கு மின்வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்துணை மின் நிலையத்தின் பெரும்பாலான வேலைகள் முடிக்கப்பட்டு, இயக்கப்படும் தருவாயில் உள்ளது.



57—

**மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் நடப்படும் மரங்களின் எண்ணிக்கை.**

வினா 13338—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டில் எத்தனை மரங்கள் நடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பல்வேறு திட்டங்களில் 1982–83ஆம் ஆண்டில் வனத்துறையால் சுமார் 10 கோடி செடிகள் நடப்படவிருக்கின்றன.

58—

**வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் நீதிமன்றங்களில் பொது மக்கள் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுக்கும் திட்டம்.**

வினா 13421—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள எஸ்டி.எம். கோர்ட்டுக்கும், முன்சீப் கோர்ட்டுக்கும் வரும் பொது மக்களுக்கு தங்குவதற்கு இட வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**இராமநாதபுரம் தேவஸ்தானத்திற்கு வழங்கப்படும் அரசு மானியம்**

59—

வினா 13470—திரு. த. இராமசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் தேவஸ்தானத்திற்குட்பட்ட ஆலயங்கள் எத்தனை?

(ஆ) தேவஸ்தானத்திற்கு அரசு மான்யம் வருடத்திற்கு எவ்வளவு வழங்கப்படுகிறது?

விடை—

(அ) இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு 45 ஆலயங்களும் 9 கட்டளைகளும் உள்ளன. இந்த 45 ஆலயங்களுடன் இணைக்கப்பட்ட 20 துணைக் கோயில்களும் சேர்ந்து மொத்தம் 65 ஆலயங்கள் உள்ளன.

(ஆ) இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட திருக்கோயில்களுக்கு சேதுபதிகளால் இனாமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களை அரசு எடுத்துக்கொண்டு அதற்கு ஈடாக 1352-ம் பசலி முதல் 1357-ம் பசலி முடிய மேற்படி கிராமங்களில் வரவு வந்த சராசரி வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு பசலி 1361 முதல் (1951-ம் ஆண்டு முதல்) தஸ்திக் அலவன்ஸ், கூடுதல் ஈட்டுத் தொகைகள் நிர்ணயம் செய்யப்பட்டு ஆண்டு தோறும் அரசினால் வருவாய்த்துறை மூலம் கொடுக்கப்படுகிறது. இதன்படி ஆண்டு ஒன்றுக்கு தஸ்தி அலவன்ஸ் ரூ. 1,57,247.48 கூடுதல் ஈட்டுத் தொகை ரூ. 2,18,310.91-ம், ஆக கூடுதல் ரூ. 3,75,558.39 அரசினால் கொடுக்கப்பட்டுவருகிறது. இத்தொகை பசலி 1391 முடிய வழங்கப்பட்டுள்ளது. இது தவிர வேறு வகையான அரசு மானியங்கள் பொது நிர்வாகத்திற்கு ஏதும் கிடையாது. இந்த ஆலயங்களில் செய்யப்படும் திருப்பணிக்கு அவ்வப்போது அரசு மானியம் திருப்பணிக்காக கொடுக்கப்படும். உதாரணமாக உத்திரகோசமங்கை திருக்கோயிலின் திருப்பணிக்கு ரூ. 2,00,000 அரசு மானியமாக 1980-81 நிதி ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

60—

கோட்டூர் மலையாண்டிப் பட்டினம் மனோன்மணி செல்லமுத்து அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

வினா 13489—திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிர்ப்பாரா—

வால்பாறை, கோட்டூர் மலையாண்டிப்பட்டினம், மனோன்மணி செல்லமுத்து அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

445 மாணவிகள் கல்வி பயிலும் இப்பள்ளி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கென மூன்று ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன இருந்தாலும், போதிய நிதிவசதியின்மையின் காரணமாக இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட இயலவில்லை. இருப்பினும் வருமாண்டு (1982-83) நிதிபொதுக்கத்திற்குள் இப்பள்ளியின் தேவைகளும் முன்னுரிமை அடிப்படையில் கருத்திற் கொள்ளப்படும்.



61—

வள்ளியூரில் கூடுதல் சப்—மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

வினா 13565—திரு. மு. ஜான்வின்சென்ட்: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வள்ளியூரில் கூடுதல் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு சொந்த கட்டிடம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

62—

வடாற்காடு மாவட்டத்திலுள்ள பட்டு கூட்டுறவு சங்கங்கள்.

வினா 13573—திரு. இல. பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு போளூர், ஆரணி வட்டங்களில் எத்தனை பட்டு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன?

(ஆ) இவைகளில் நிர்வாக அதிகாரிகள் மேற்பார்வையில் இருப்பது எத்தனை? அதிகாரமற்றவர்கள் நிர்வாகிகளாக இருந்த பணி செய்யும் சங்கங்கள் எத்தனை?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்டம் போளூர் மற்றும் ஆரணி பகுதிகளில் மொத்தம் 25 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) மேற்படி 25 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஒரு சங்கத்தில், அதாவது ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அதன் நிர்வாக சபை, தமிழ்நாடு கூட்டுறவு சட்டப் பிரிவு 72 (1)-ன் கீழ் 6—11—1978 தேதியில் கலைக்கப்பட்டு தனி அலுவலரின் கீழ் இயங்கி வருகின்றது. மீதமுள்ள இருபத்தி நான்கு (24) சங்கங்கள் நியமன நிர்வாக குழுக்களின் கீழ் இயங்கி வருகின்றன.

67—

பள்ளிப்பட்டு நகரத்தில் அரசு போக்குவரத்து பணிமனை அமைத்தல்.

வினா 13625—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு நகரத்தில் ஒரு அரசு போக்குவரத்து டிப்போ அமைக்கும் யோசனை அரசுக்குண்டா?

விடை—

இல்லை.

68 —

கீழப்புலியூர் கிராம அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 13669—திரு. என். பெருமாள்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதியைச் சேர்ந்த கீழப்புலியூர் கிராமத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

விடை—

ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து 210 பேர் படிக்கும் இப்பள்ளிக்கு நல்ல கட்டிட வசதி செய்ய வேண்டிய தேவையுள்ளது. இத்தேவைகள் வருமாண்டுகளில் நிதியொதுக்கத்திற்கேற்ப கருத்திற் கொள்ளப்படும்.

69—

பெரம்பலூரிலிருந்து சாத்தனூர் வரை பேருந்து விடல்.

வினா 13674—திரு. என். பெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வரகூர் தொகுதியில் பெரம்பலூரிலிருந்து சாத்தனூர் வரை சென்று கொண்டிருந்த பேருந்து சிறுகன்பூர் என்ற ஊரோடு நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இந்தப் பேருந்து சாத்தனூர் வரை செல்ல நீடிக்கப்படுமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூரிலிருந்து சாத்தனூர் வரை சென்று கொண்டிருந்த பேருந்து, இந்த வழித்தடத்தில் 6 கி.மீ. தூரம் வரை பேருந்து செல்வதற்கு தகுதியற்றதாக இருந்ததால் சிறுகன்பூர் வரை விடப்படுகிறது. மீண்டும் சாத்தனூர் வரை பேருந்து விடுவதற்கான நடவடிக்கைகளை திருச்சிராப்பள்ளி மண்டலப் போக்குவரத்து அலுவலர் மேற்கொண்டுள்ளார்.

70 —

சென்னிமலை முருகன் கோவிலுக்கு பேருந்து விடும் செய்ற் குறிப்பு.

வினா 13694—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் மலைமேல் உள்ள முருகன் ஆலயத்திற்கு விழாக் காலங்களில் பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பெரியார் மாவட்ட சென்னிமலையில் மலைமேல் உள்ள முருகன் ஆலயத்துக்கு விழாக் காலங்களில் சிறு பேருந்துகள் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் விடப்பட்டு வருகின்றன.

71—

கம்பம் தொகுதி 'ஹைவேஸ்' நகரியத்தை பேரூராட்சியாக்கும் திட்டம்.

வினா 13698—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியிலுள்ள ''ஹைவேஸ்'' நகரியத்தை பேரூராட்சி ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு இன்னும் அரசுக்கு வரப்பெறவில்லை.

63—

### இலுப்பையாற்றில் அணை கட்டும் திட்டம்.

வினா 13600—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ள இலுப்பையாற்றில் அணை ஒன்று கட்டுவது பற்றி அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) இத்திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) இல்லை. ஆனால் இத் திட்டத்தினை எடுத்துக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும்படி தல அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள் என்று தலைமை பொறியாளர் (ஆய்வு) தெரி வித்துள்ளார்.

64—

### பள்ளிப்பட்டு நகரத்திலிருந்து நகரப் பேருந்து விடல்.

வினா 13620—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

''பள்ளிப்பட்டு நகரத்திலிருந்து (பேரூராட்சி) நகர கட்டண பஸ்களை பல இடங்களுக்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?''

விடை—

பள்ளிப்பட்டு நகரப் பேருந்துகள் இயக்குவதற்குரிய நகரமாக, மாநிலப் போக்குவரத்து ஆணையர் அவர்களால் அறிவிக்கப்படவில்லை. ஆகவே, பள்ளிப்பட்டிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்) நகரப் பேருந்துகள் இயக்குவது சாத்தியமில்லை.



65—

### கரிம்பேடு ஆலயத்தின் பெரிய திருமண மண்டபம் கட்டும் பணி.

வினா 13623—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் உப கோயிலான கரிம்பேடு ஆலயத்தில் பெரிய திருமண மண்டபம் கட்டவும், திருக்குளத்திற்கு திருப்பணி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் உப கோயிலான, கரிம்பேடு நாததீசுவரர் ஆலயத் திருமண மண்டபம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. ஆலய திருக்குளத்திருப்பணி செய்வது அவசியந்தானா என்றும் அதற்கான செலவு பற்றி விபரங்களையும் ஆராய்ந்து அறிக்கை அனுப்புமாறு செயல் அலுவலர் கேட்கப்பட்டுள்ளார்.

66—

### ஆர்.கே. பேட்டையில் நீதிமன்றம் நிறுவுதல்.

வினா 13624—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் (சிவில், கிரிமினல் கோர்ட்) என்ற அடிப்படையில் செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தின் மையப்பகுதியான ஆர். கே. பேட்டையில் நீதி மன்றம் நிறுவப்படுமா?

விடை—

செங்கை மாவட்டத்தில் உள்ள ஆர். கே. பேட்டையில் சிவில் அல்லது குற்றவியல் நீதிமன்றம் நிறுவுவதற்கான செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

விருத்தாசலம் தொகுதியில் அமைக்கப்பட்ட குழாய் கிணறுகள்.

வினா 13703—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் குடிநீர் வாரியத்தின் மூலம் இதுவரை அமைக்கப்பட்ட குழாய் கிணறுகள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் குடிநீர் கிடைக்கும் இடங்கள் எவை?

(இ) தண்ணீர் கிடைக்காத இடங்களில் அமைக்கப்பட்ட பம்புகள், மோட்டார்கள் எத்தனை?

(ஈ) அவைகள் இயங்கும் நிலையில் உள்ளனவா?

விடை—

(அ) விருத்தாசலம் தொகுதியில் இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் 53 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 53 குழாய் கிணறுகளிலும் போதுமான குடிநீர் கிடைக்கிறது.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

(ஈ) இவ்வினா எழ இடமில்லை.

73—

கோவை சட்டக் கல்லூரி.

வினா 13719—திரு. ர. ரமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் தற்போது செயல்பட்டு வருகிற சட்டக் கல்லூரியில் எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள்?

(ஆ) சொந்தக் கட்டிடம், மற்ற வசதிகள் தேவையான அளவுக்கு செய்யப்பட்டுள்ளதா?



விடை—

(அ) 360 மாணவர்கள் படிக்கின்றனர்.

(ஆ) தற்பொழுது கோவை சட்டக் கல்லூரி தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 5 இலட்சமும் மற்றும் விடுதி கட்டுவதற்கு ரூ. 5 இலட்சமும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்ட கோவையில் நிலம் ஒதுக்கீடு செய்தல் நடவடிக்கையில் உள்ளது. கல்லூரி நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்கும் மற்றும் மரச்சாமான்கள் (மேசை, நாற்காலி போன்றவை) வாங்குவதற்கும் ஏற்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

74—

மானாமதுரையில் புதிய மருத்துவ மனைக்கென கட்டிடம் கட்டும் பணி.

வினா 13742—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் புதிய மருத்துவ மனைக்கென அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடம் கட்டப்படாமல் இருக்க காரணம் என்ன?

(ஆ) எப்பொழுது கட்டிடம் கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) உரிய இடம் பொதுப்பணித்துறையிடம் கொடுக்கப்பட்டு, தற்போது அத்துறையினரால் கட்டிடப் பணி துவங்கப்பட்டுள்ளது.

75—

மெய்யம்பட்டி கிராம மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டுமனை கோரி பெறப்பெற்ற முறையீடுமீது நடவடிக்கை.

வினா 13754—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மெய்யம்பட்டி கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டு மனை கோரி முறையீடு ஏதும் அரசுக்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாரை வட்டம், மெய்யம்பட்டி கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிடர்களிடமிருந்து வீட்டு மனை கோரி முறையீடு ஏதும் வரவில்லை. நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு ஆய்விலும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

76—

அச்சிறுபாக்கம் தொகுதியில் பணி புரிபவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தல்.

வினா 13769—திரு. கி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அச்சிறுபாக்கம் தொகுதி, சூணாம்பேடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடும்பக் கட்டுப்பாடு பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டித் தந்து இருப்பது போல் அங்கேயே (General side) பணியாற்றுபவர்கட்கும் குடியிருப்பு கட்டித்தர அரசு முன் வருமா?

விடை —

சூணாம்பேடு ஆரம்ப சுகாதார நிலையப் பொதுப் பிரிவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்காக 5 ஏக்கர் 42 சென்ட் நிலமும், ரூ. 10,000 நன்கொடையும் அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகள் மொத்தம் 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டப்பட வேண்டும். அரசின் நிதி நிலைக்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் மேற்கூறிய பணி படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

77—

அரசு மருத்துவ மனைகளில் பணி புரியும் கௌரவ மருத்துவ அதிகாரிகளுக்கு வயது வரம்பு நிர்ணயித்தல்.

வினா 13851—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் கௌரவ மருத்துவ அதிகாரிகளுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வயது வரை?



விடை—

(அ) ஆம்.

(ஆ) 58 வயது வரை.

78—

வடாற்காடு திருப்பத்தூர் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் மின் நிலையமாக மாற்றும் திட்டம்.

வினா 13855—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் மின் நிலையமாக மாற்றும் திட்டம் உள்ளதா?

விடை—

ஆம். இப்பணி 1984–85 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

79—

போளூர் நகரப் பஞ்சாயத்தை நகர மன்றமாக்கும் செயற்குறிப்பு.

வினா 13866—திரு. இல. பலராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு போளூர் நகர பஞ்சாயத்தை நகர மன்றமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

80—

காட்பாடி தொகுதி காந்திநகர் பேரூராட்சியில் மயானத்திற்காக இடம் ஒதுக்கீடு செய்தல்.

வினா 13889—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, காந்திநகர் பேரூராட்சிக்கு மயானத்திற்காக சுடுகாடு மூன்று ஏக்கர் நிலம் வாங்கப்பட்டும், அதை மயானமாகப் பயன்படுத்தக் கூடாது என தடை உத்தரவு வாங்கியது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[1983 நவம்பர் 10

விடை -

(அ) மற்றும் (ஆ); காந்தி நகர் பேரூராட்சியால் சுடுகாடு, இடுகாடு அமைக்கப்படவிருந்த இடம் மகளிர் கல்லூரியினர் ஆட்சேபம் தெரிவித்ததினால், வேறு இடம் ஒதுக்கீடு செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

81—

கே. வி. குப்பம் ஒன்றியத்தில் கோ. 17, 22 ரக நெல் சாகுபடியில் பூஞ்சானநோயால் பாதிப்பு.

வினா 13895—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டம் கே. வி. குப்பம் ஒன்றியத்தில் கோ. 17, 22 ரக நெல் சாகுபடியில் பூஞ்சான நோயால் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள கே. வி. குப்பம் ஒன்றியத்தில் கோ 17, 22 ரக நெல் விதைகள் அரசாங்க வேளாண்மை கிடங்குகளிலிருந்து கொடுக்கப்படவில்லை. டி. கே. எம். 8 ஐ. இ. டி. 17,22, ஏ. டி. டீ 31, ஐ. ஆர். 20, பொன்னி, பவானி, வைகை போன்ற சான்றிதழ் பெற்ற ரக நெல் விதைகள் விதைக்கும் பருவங்களுக்கேற்ப சிபாரிசுடன்; கொடுக்கப்படுகின்றன.

(2) நெல் பயிர் பூச்சி பூஞ்சான நோயால் தாக்கப்படுவதைத் தடுக்க முன்கூட்டியே சென்னை வானொலி மூலம் காலை 6·30 மணிக்கு ஒலிபரப்பப்படும், "உழவர்களுக்கு ஒரு வார்த்தை" நிகழ்ச்சியிலும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3) கே. வி. குப்பம் ஒன்றியத்தில் படக்காட்சிகள் காண்பித்து பூச்சி நோய் நெற்பயிரில் தடுக்கும் முறைகளை விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

(4) சுவரொட்டிகள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டது.



1983 நவம்பர் 10]

(5) கூட்டு மொத்தமாக மருந்தடித்தல் விவசாயிகள் அறிவுரைப்படி தனித்தனியாக மருந்தடித்தல் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் பூச்சி பூஞ்சான நோய்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன.

(6) பூச்சி, பூஞ்சான நோய் தடுப்பதற்காக வேண்டி பூச்சி பூஞ்சான நோய் கொல்லி மருந்துகளை அனைத்து வேளாண்மைக் கிடங்குகளிலும் போதுமான இருப்பு வைக்கப் பட்டு, விநியோகிக்கப்பட்டும் வருகின்றது.

(7) ஆதி திராவிட விவசாய பெருமக்களுக்கு மேற்கண்ட மருந்துகளை சலுகை விலையிலும் கொடுக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

(8) 14785 லிட்டர் திரவ மருந்துகளும் 461 மெட்ரிக் டன்கள் தூள் மருந்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

82—

+2ல் தேர்வு பெற்ற தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவ தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர முன்னுரிமை வழங்கல்

வினா 13918—திரு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

+2 தேர்வுபெற்ற தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரியில் சேர முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—மேனிலைக் கல்வி தேறிய மாணவர்களில் மாநில அளவிலும், அனைத்திந்திய அளவிலும் கலந்துகொண்டுள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் மூன்று இடங்களும், மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்களும் 1979-80 முதல் ஒதுக்கப்பட்டு, ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகின்றன.

83—

கொடைக்கானலில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை கட்டும் திட்டம்

வினா 13937—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

88 —

### வால்பாறையிலுள்ள சேரன்போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை இடம் மாற்றுதல்.

**வினா** 14096 : திரு ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது வால்பாறையில் உள்ள சோன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?]

**விடை**—

(அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள பேருந்து நிலையத்தில் போதுமான வசதிகள் இல்லாததால் புதியதாக ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கென ஒரு நல்ல இடம் தேடப்பட்டு வருகிறது.

9 —

### பண்ணியூர் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

*வினா 14118 : திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தாலுகா, பண்ணியூர் கிராமத்தில் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டும் வீடு கட்டிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது

**விடை**—

(அ) திருவண்ணாமலை வட்டம், பண்ணியூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



90—

### தஞ்சை மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா** 14156—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கோட்டூரில் மேல்நிலைப் பள்ளியில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

**விடை**—

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்போது உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுதிகளில் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கப் பட்டு வருகின்றனர்.

91—

வினா எண் 14158 திரு. பொ. உத்தராபதி மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை மேல்நிலைப் பள்ளி அரிசன மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்

**விடை**—

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்போது உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுதிகளில் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

92—

### தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கடத்தப்பட்ட பிடிபட்ட நெல், அரிசி மூட்டைகளின் மதிப்பு.

**வினா** 14224 திரு. மா. சுப்பிரமணியன் ; மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டங்களுக்கு நெல் மற்றும் அரிசி கடத்தப்பட்டதில் நடப்பாண்டில் (1982) பிடிபட்ட மூட்டைகள் எத்தனை?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அங்கு பணிமனை கட்டத் தேவையான நிலத்தை கையகப்படுத்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தக்க மேல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நிலம் கைக்கு வந்தவுடன் பணிமனை கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

**கொடைக்கானல் தாலுக்காவில் பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நிழற் குடைகள்**

84—

வினா 13941—திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுக்காவில் பயணிகளுக்காக நிழற்குடைகள் (Sheds) எத்தனை அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

விடை—

(அ) ஒன்பது.

(ஆ) இல்லை.

85—

**பழனி வட்டம், ஒட்டன் சத்திரம் பகுதியை தனி தாலுக்காவாக மாற்றுதல்**

வினா 1395?—திரு. என். பழனிவேல் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழனி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒட்டன்சத்திரம் பகுதியை தனித் தாலுகாவாக மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மதுரை மாவட்டத்தில் பழனி மற்றும் திண்டுக்கல் வட்டங்களைச் சீரமைத்து புதிய ஒட்டன்சத்திரம் வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



86—

**தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்**

வினா 13960—திரு. என். பழனிவேல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி (sp cial Coching) கொடுக்கும் திட்டம் பழனி நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு காரணம் என்ன?

(இ) இத்திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) பழனி நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென சிறப்புப் பயிற்சி 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

87—

**அம்மை நாயக்கனூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தை சீரமைக்கும் திட்டம்**

வினா 14071—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மை நாயக்கனூர் அரசு உயர்நிலைப்பள்ளியின் கட்டிடத்தை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் எப்போது?

விடை—

(அ) இல்லை.

விடை—

(அ) மற்றும் (ஆ) நடப்பு ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டங்களுக்கு லெவி தராமல் 1,340 மூட்டைகள் நெல்லும், 25 மூட்டைகள் அரிசியும் கடத்தப்பட்டு பிடிபட்டன. அவற்றின் மதிப்பு—

நெல்—ரூ. 85,521, அரிசி—ரூ. 3,750 ஆகும்.

93—

மதுராந்தகம் வட்டம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

வினா 14414 திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் அருங்குணம் ஆதிதிராவிட மக்களுக்கு புஞ்சை நிலம் இல்லாததால் வீட்டுமனை பட்டா வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நஞ்சை நிலத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு நஞ்சை நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பான கோப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன்மேல் முடிவெடுத்தபின் செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அருங்குணம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

ஆதிதிராவிட நல தனித் தாசில்தார்களுக்கு ஜீப் வழங்கல்.

வினா 14431—திரு. ஜி. மூர்த்தி; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நல தனித் தாசில்தார்களுக்கு ஜீப் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



விடை—

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையில் பணியாற்றும் தனி வட்டாட்சியர்களுக்கு ஜீப்பு வழங்க அரசிற்கு உத்தேசமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

95—

மூசரவாக்கம் அரசுப் பண்ணை

வினா 14468 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மூசரவாக்கம் அரசு பண்ணையின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு?

(ஆ) இப்பண்ணையின் 1981-82 ஆம் ஆண்டு வருமானம் என்ன?

விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மூசரவாக்கம் அரசுப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 62.7 ஹெக்டேர்.

(அதில் சாகுபடிப் பரப்பளவு 58.72 ஹெக்டேர் ஆகும்.)

(ஆ) அப்பண்ணையின் விளைபொருட்கள் மூலம் 1981-82 ஆம் ஆண்டின் அதாவது 1—6—1981 முதல் 31—3—1982 வரை மொத்த வருமானம் ரூ. 4,95,727.

96—

திருமங்கலத்திலுள்ள விஸ்வநாததாஸ் வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னமாக்குதல்

வினா 14512; திரு எஸ். என். வி. சித்தன்; மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட காலத்தில் தனது நாடகத்தின் மூலம் மக்களுக்கு சுதந்திர தாகத்தை ஏற்படுத்திய விஸ்வநாததாஸ் வாழ்ந்த திருமங்கலத்திலுள்ள அவரது வீட்டை அரசு வாங்கி அவருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துமா?

விடை— [illegible]

97—

பழனி நகரில் குடிசைமாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்.

வினா 14644 : திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

98—

கூடலூர் வட்டத்தை இரு வட்டங்களாக பிரித்தமைத்தல்.

வினா 14746—திரு. கே உச்சி ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த கூடலூர் வட்டத்தை நிர்வாக வசதிக்காக கூடலூர்-பந்தலூர் என்ற இரு வட்டங்களாக பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை--

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

கேதாண்டப்பட்டி சர்க்கரை ஆலையில் பணியாற்றும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் திட்டம்.

வினா 14759—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், கேதாண்டப்பட்டியிலுள்ள சர்க்கரை ஆலையில் 1977 ஆம் ஆண்டு முதல் வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) 31-12-1977 முடிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்படாது வருகைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொழிலாளர்களின் பணி வரைமுறைப்படுத்தப்பட்டது. 1-1-1978 முதல் பணியாற்றி வரும் தொழிலாளர்களுடைய பணியினை வரைமுறைபடுத்தும் செயற்குறிப்பு தனியே அரசின் ஆய்வில் உள்ளது.

100—

சென்னை, திரு. வி. க. நகரில் குடியிருப்பாளர்களுக்கு மனைப்பட்டா கொடுக்கும் திட்டம்.

வினா 14777—திரு. க. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை புரசைவாக்கம் தொகுதியிலுள்ள திரு. வி. க. நகரில் இருக்கும் குடியிருப்பாளர்களுக்கு மனைப் பட்டா கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. சென்னை புரசைவாக்கம் தொகுதியில் திரு. வி. க. நகர் என்ற பெயர் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதி ஏதுமில்லை.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. நடைமுறை

### (அ) பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி அவையில் குற்றம்சாட்டுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று திரு. சோ. அழகர்சாமி அவர்கள் திரு. பி. சபாநாயகம், சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் சார்பில் எழுதப்பட்டதாக கூறப்படும் கடித போட்டோஸ்டட் நகல் ஒன்றை பேரவை மாற்றுத் தலைவர் அவர்களிடம் சேர்ப்பித்தார். ஆனால் இம்மாதிரியாக பேரவையின் உறுப்பினர் அல்லது அமைச்சர் ஒருவர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் கூறும்போது என்ன முறையை பின்பற்ற வேண்டுமென்று 15-4-1983 அன்று நான் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறேன். அத்தீர்ப்பின் விவரம் பின்வருமாறு:

''இம்மாதிரியான பிரச்னையில் இனிமேல் உறுப்பினர் ஆனாலும் அல்லது அமைச்சர்கள் ஆனாலும் தனிப்பட்ட முறையில் ஒரு உறுப்பினர் மீது குற்றம் கூறுவதாக இருந்தால் அதற்கான ஆதாரங்களை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே பேரவைத் தலைவருக்கு எழுத்து மூலம் கொடுத்து அக்குற்றச் சாட்டிற்கு மேலெழுந்த வாரியாக ஆதாரங்கள் இருப்பதாகப் பேரவைத் தலைவர் ஏற்று அனுமதியளித்தாலன்றி அம்மாதிரியான குற்றச்சாட்டுகள் பேரவையில் கண்டிப்பாக கூறக்கூடாது. மேலும், அது எந்த அமைச்சர் அல்லது தனிப்பட்ட உறுப்பினர் மீது அது கூறப்படுகிறதோ சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது உறுப்பினருக்கு குற்றச்சாட்டின் நகலினை எழுத்து மூலமாக உறுப்பினரால் முன் தகவல் கொடுக்கப்பட வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் உட்படாத குற்றச்சாட்டுக்களை உறுப்பினர்கள் பேரவையில் கொண்டு வரக்கூடாது. அவ்வாறு கொண்டு வந்தால் அவைகள் அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

ஆனால், நேற்றைய சம்பவத்தில் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் முன் அனுமதியின்றி அந்தக் கடிதத்தை அவையில் படித்திருந்தாலும்அமைச்சர் அவர்கள் அக்கடிதத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா என்று உறுப்பினர் கேட்டதற்கு, உறுப்பினரும் அக்கடிதத்திற்கு தாம் முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், அது பொய்க் குற்றச்சாட்டு என்று அமைச்சர் கூறியுள்ளார்.

நான் ஏற்கெனவே அறிவித்த தீர்ப்பின்படி இது அவைக் குறிப்பில் இடம் பெற இயலாது என்றாலும், இப்பிரச்னையில் ஒரு ஐயப்பாடு ஏற்பட்டு விட்டபடியால் இதில் உண்மை நிலையை அறிய உறுப்பினர் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளதால், இது குறித்த நடவடிக்கைகள் அனைத்தும் அவைக் குறிப்புகளில் **இருக்கலாம் என்று தீர்ப்பளிக்கிறேன்.**



ஆனால், இனிமேல் இம்மாதிரியான பிரச்னையில் நான் 15-4-1983 அன்று அளித்த தீர்ப்பின்படி நடைமுறையை எல்லோரும் கடைபிடிக்க வேண்டும். மேலும் நேற்று இந்நிகழ்ச்சியின் தொடர்பாக உறுப்பினர்களால் அவையில் எழுப்பப்பட்ட கோஷங்கள் மற்றும் பாராளுமன்ற முறைக்கு ஒவ்வாத நடவடிக்கைகள் அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3 உரிமைப்பிரச்சினைகள்

### (அ) திரு. சோ. அழகர்சாமி எழுப்பிய குற்றச்சாட்டை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் சோ. அழகர்சாமி அவர்கள் எழுப்பிய பிரச்னை குறித்து ஒன்றைச் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். அதை பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று அவர்கள் கேட்டார்கள். நான் முழு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஏற்கெனவே இருக்கிற வரைமுறைகளை கடைபிடிக்க முடியாவிட்டாலும், எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையினை ஒட்டி அவைகள் எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறலாம் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள். ஆகவே, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் அதைத் தாங்களும் தீர்க்க முடியாது. இந்த அவையும் தீர்க்க முடியாது. ஆகவே, இந்தப் பிரச்னையில் உறுப்பினர் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்களைக் கொண்டு வந்து நிரூபிக்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்லியிருப்பதன் காரணமாக இதை உரிமைக் குழுவிற்கு விடுவது தான் பொருத்தமாக இருக்குமே தவிர வேறு எந்த வகையிலும் தீர்ப்பதற்கு முடியாது. எனவே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''இப்பிரச்னையை விசாரித்து, ஆய்ந்து, அறிக்கை அளிப்பதற்காக இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) எதிரொலி, தினகரன் நாளேடுகளின்மீது உரிமை மீறல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் 247-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு சு. முத்துக்குருசாமி அவர்களிடமிருந்து ஒரு முன் அறிவிப்பு வந்திருக்கிறது. அதை பேரவைக்குப் படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. முத்துக்கிருஷ்ணன் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (கூச்சல்-குழப்பம்)

பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது என்று நான் தீர்ப்பு அளித்த பிறகும் அவர்கள் பத்திரிகைகளில் போட்டிருக்கிறார்கள் (குறுக்கீடு) இதைப்பற்றி உரிமைக் குழுவிலே வந்து பேசலாம். (கூச்சல்—குழப்பம்)

**திரு. அ. ரகுமான்கான்:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்பதைக் கேளுங்கள்: . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எல்லாம் நான் கேட்க வேண்டியதில்லை. உரிமைக் குழுவிற்கு விடுவதற்குத்தானே அவையைக் கேட்கிறேன். எனவே ஏதேனும் சொல்லவேண்டும் என்றால் உரிமைக் குழுவிலே சொல்லலாம் அல்லவா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். . . . . . .

**திரு. என். சங்கரய்யா:** நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**திரு. என். வி. என். சோமு:** தலைவரவர்களே, கட்சி சார்பிலே பணியாற்றக் கூடாது, கறுப்பு சட்டையைக் கழற்றுங்கள், கறுப்பு சட்டையைக் கழற்றுங்கள், சபாநாயகரே கறுப்புச் சட்டையைக் கழற்றுங்கள். (கூச்சல் குழப்பம்)

(சோமுவை வெளியேற்றுங்கள், சோமுவை வெளியேற்றுங்கள் என்ற கோஷம் ஆளும் கட்சி தரப்பிலே இருந்து வந்தது) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சங்கரய்யா அவர்களே, நீங்கள் ஒரு மூத்த தலைவர். நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள். உங்களை யார் மதிக்கிறார்கள்? (கூச்சல் குழப்பம்) என்னால் யாரை உட்காரச் சொல்ல முடியும்? எனவே என்னைப் போய் உட்காரச் சொல், உட்காரச் சொல் என்றால் என்ன செய்வது? சபையிலே மரபு எப்போது கெட்டதோ பிறகு என்ன? எதற்கும் ஒரு வரன்முறை வேண்டும். இப்போதிருக்கின்ற நிலைமையில் யாரை என்ன சொல்ல முடியும்? நீங்கள் பாட்டுக்கு உங்கள் இஷ்டத்திற்கு பேச வேண்டியதுதான். யாரைத்தான் பேச விடுகிறார்கள்? உங்களுக்கு ஒரு சின்ன மரியாதையாவது காட்டப்படுகின்றதா? நான் இப்படிக் கேட்பதால் நீங்கள் வருத்தப்படக்கூடாது( கூச்சல்-குழப்பம்) என்னைப் போய் கறுப்புச் சட்டையைக் கழற்று என்று சொல்வதற்கு யாருக்கு உரிமை இருக்கின்றது? எந்தக் கலரிலே வேண்டுமானாலும் சட்டை போடுவதற்கு எனக்கு உரிமை இருக்கின்றது. (கூச்ச்ல்—குழப்பம்) எனவே என்னைப் பார்த்து கறுப்புச் சட்டையை கழற்று என்று சொல்வதற்கு உனக்கும் வேறு யாருக்கும் உரிமை கிடையாது.





(பேரவைத் தலைவர்)

ஸ்பீக்கர் இந்த சட்டையைத்தான் போட வேண்டும் என்று ஏதாவது விதி இருக்கின்றதா? (கூச்சல் குழப்பம்) என்னுடைய கடமையைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் சொன்னதை வாபஸ் வாங்கியாக வேண்டும். என்னுடைய சட்டையைப் பற்றிச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? பொறுப்பற்ற தன்மையிலே இப்படிப் பேசுவது எப்படி சரி? யார் கிட்டே பேசுவது இதை?

There are limitations, Who is he to dictate to me.

THIRU V. KRISHNAMURTHI: The Hon speaker should not get excitd.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபாநாயகரும் மனிதன்தான். கறுப்புச் சட்டை போடக்கூடாது என்று யார் சொல்வது? அதை யாரய்யா சொல்வது (கூச்சல் குழப்பம்) ஐயா என்று சொல்வது தப்பா? (கூச்சல் குழப்பம்) கறுப்புச் சட்டை போடுவதில் என்ன தப்பு?

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** அவ்வாறு சொல்லக் கூடாது தான். எனவே அதை விட்டுவிடுங்கள். நாங்கள் கறுப்புச் சட்டை போடலாம். எனவே அந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

(முற்பகல் 10-40)

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவர் அவர்களே பேரவையில் நடவடிக்கை சுமூகமாக நடைபெற வேண்டும் என்பதற்காக இன்று காலையில் நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் முறையாகப் பேசி, இங்கே ஒரு தீர்ப்பைத் தாங்கள் வழங்கியிருக்கிறீர்கள்

இப்போது பிரச்னை என்னவென்றால், அந்தப் பத்திரிகைகள் தவறு செய்து இருக்கின்றன என்று தாங்கள் கருதினால், அதிலே பிரைமாபேசி இருக்கிறது என்று நாங்கள் கருதினால், அதைத் தாங்களே சுயோ—மோட்டோ உரிமைக் குழுவிற்கு விடலாம்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அதை ஒரு பிரச்சினையாக இங்கே எழுப்பி, அது சபையில் தீர்மானம் என்று வருகிறபோது அதன் மீது பேசுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி தீர்மானம் என்று வந்தால் அதன் மீது நாங்கள் பேசாமல் அதை நிறைவேற்றுவது என்று சொல்வது சரியாக இருக்காது. அந்தப் ப்ரோசீஜரைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்,

ப்ரைமாபேசி கேஸ் (Prima-facie case) அந்தப் பத்திரிகைகள் மீது இருக்கிறது என்று கருதினால், தாங்களே அதை ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு ரெபர் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இப்பிரச்சினை குறித்து விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 255-கீழ் நானே, இதனை உரிமை குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்

**திரு. சு. முத்துகிருஷ்ணன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.**

[1983 நவம்பர் 10

[பேரவைத் தலைவர்]

"9-11-83 பேரவையில் நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக சில செய்திகளை பத்திரிகையில் வெளியிடக்கூடாது என்ற பேரவையின் தலைவரின் உத்தரவை மீறி மந்திரி இராகவானந்தம் சம்பந்தமாக 9-11-83 தேதியிட்ட எதிரொலி பத்திரிகையும் 10-11-83 தேதியிட்ட தினகரன் பத்திரிகையும் செய்திகளை வெளியிட்டுள்ளன. இது பேரவையை அவமதித்த செயலாகும். எனவே இந்தப் பத்திரிகைகளின் மீது அவையில் விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.''
என்று கொடுத்திருக்கிறார்கள்.

இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மி. வின்சென்ட் அவர்களும் முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.

(முற்பகல் 10—30)

இப்பிரச்சனையில் அவை உரிமை மீறல் இருக்கிறதா, இதற்கு ஏன் அனுமதி அளிக்கவேண்டும் என்பதற்கான விளக்கத்தைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசிக்கொண்டு வருகின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் சம்பந்தமாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவும், அதன் தொடர்பாக விரும்பத்தகாத சம்பவங்கள் எதிர்கட்சிகளால் இந்த அவையிலே நடத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த நிகழ்ச்சிகளைப்பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி முடிவு செய்தபிறகுதான் செய்திகளைப் பத்திரிகைகளிலே வெளியிடலாம் என்று பேரவைத் தலைவரவர்கள் நேற்று ஒரு தீர்ப்பை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கங்களுக்குப் போகாமல் பத்திரிகைகளைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் சொல்லி முடிக்க வேண்டும்.

திரு சு. முத்துகிருஷ்ணன்: இன்றைய தினகரன் பத்திரிகையில் மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களுடைய உத்தரவுக்கு கட்டுப்படாமலும், இந்த அவையை அவமதிக்கின்ற வகையிலேயும் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த செயலைப் பார்க்கிறோம். இன்றைய தினகரன் பத்திரிகையில் முதல் பக்கத்தில், அ.தி.மு.க. மந்திரி ரூ. 9 லட்சம் போனஸ் லஞ்சம் என்று போட்டு இந்த அவையின் உரிமையை மீறுகின்ற வகையில் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.



13607 ... 600 008.

1983 நவம்பர் 10]

(திரு. சு. முத்துக்கிருஷ்ணன்)

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்தச் செய்தியை வெளியிடக் கூடாது என்று தாங்கள் இந்த அவையிலே சொன்னீர்களோ அந்தச் செய்திகளை இந்த தினகரன் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அதைப்போல, நேற்று மாலை வெளிவந்த எதிரொலி பத்திரிகையும் அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. எதிரொலி பத்திரிகை அதன் முதல் பக்கத்திலே அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

எனவே, எதிரொலி பத்திரிகையும், தினகரன் பத்திரிகையும் அவைகளின் முதல் பக்கத்தில் பேரவைத் தலைவரவர்களின் தீர்ப்பை மீறி, அந்தச் செய்திகளை வெளியிட்டிருக்கின்ற காரணத்தினால், அந்தப் பத்திரிகைகள் இந்த அவையின் உரிமையை மீறியிருக்கின்றன. அதன் மூலம் இந்த அவையை அவமதித்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் இந்தப் பத்திரிகைகளின் மேல் சொல்லி, இது சம்பந்தமாக இந்தப் பத்திரிகைகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு விட்டு [illegible] பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சனையில் [illegible] நான் வாரியாகப் பார்க்குமிடத்து உரிமை மீறல் [illegible] கருதுகிறேன். எனவே, இப்பிரச்சனை [illegible] அனுப்பலாமா அல்லது பேரவையே எடுத்து [illegible] என்று பேரவை முடிவு செய்யலாம். இப்பிரச்சனையில் [illegible] வாரியாகப் பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் [illegible] இருக்கிறது என்று தீர்ப்பளிக்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணனை தீர்மானத்தை மொழியும் படியாக கேட்டுக்கொள்கிறேன்.

திரு சு முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"9-11-83 பேரவையில் நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக சில செய்திகளை பத்திரிகையில் வெளியிடக்கூடாது என்ற பேரவைத் தலைவரின் உத்தரவை மீறி மந்திரி இராகவானந்தம் சம்பந்தமாக 9-11-83 தேதியிட்ட எதிரொலி பத்திரிகையும் 10-11-83 தேதியிட்ட தினகரன் பத்திரிகையும் செய்திகளை வெளியிட்டுள்ளது. இது பேரவையை அவமதித்த செயலாகும். எனவே இந்தப் பத்திரிகைகளின் மீது உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.''

## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) காரைக்குடி அரசு அழகப்பா தொழில் நுட்பப்பள்ளியை தனியாரிடம் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு.அப்பாதுரை
எம். ஆறுமுகம். செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன்,
சோ. அழகர்சாமி மற்றும் இரா. கருப்பையா ஆகியோர் ஒரே
பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்
துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ''காரைக்குடியிலுள்ள
அரசு அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பப் பள்ளியை
(பாலிடெக்னிக்) மீண்டும் தனியாருக்குக்குக் கொடுப்பதாக
உள்ளது பற்றிய'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,
காரைக்குடியிலுள்ள அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பப்
பயிலகத்தை (பாலிடெக்னிக்) மீண்டும் தனியாருக்குக் கொடுப்
பதற்கு எந்தவிதமான கோரிக்கையும் யாரிடமிருந்தும் வரப்
பெறவில்லை. இதுகுறித்து எந்தவிதமான கருத்துருவும்
பரிசீலனையில் இல்லை.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த
விதமான பரிந்துரையும் வரவில்லை, எந்தவிதமான கருத்துருவும்
அரசிடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடி
அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு
பல வருஷங்கள் ஆகியிருக்கிறது. அந்த நடைமுறையில் பலவித
மான முறைக்கேடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன.
ஆசிரியர்கள் பழிவாங்கப்படும் நிலை இருக்கிறது. நிறைய
குறைபாடுகள் இருக்கின்றன. அதுபற்றிய புகார்கள் அரசுக்கு
வந்து இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையிலும், அரசு ரூ. 1
லட்சத்து 60 ஆயிரம், கட்டிடங்கள் கட்டுவதற்காக பணம்
கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆசிரியர் ஷேமநல நிதிக்கு
(ஜி.பி.எப்) 13% முதல் தவணை அரசு கொடுத்து இருக்கிறது.
விருந்தினர் விடுதி (கெஸ்ட் ஹவுஸ்) கட்டப்பட்டு இருக்கிறது.
ஆழ் குழாய் கிணறு கட்டப்பட்டு இருக்கிறது. இவ்வளவு செய்த
பிறகும், அந்த நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்பதால்
அந்த நிர்வாகத்தைக் கூப்பிட்டுப்பேசி, அந்த
நிர்வாகத்தை எடுத்துக் கொள்வதற்கு அக்ரிமென்ட் வந்து
இருக்கிறது. அப்படி அக்ரிமென்ட்டான பிற்பாடுகூட, அந்த
'டிரான்ஸ்பர்' டீடில் கையெழுத்துப்போட மறுப்பதாகச் சொல்லப்படுகிறதே, அந்த நிர்வாகம்
உண்மைதானா? அப்படி
யானால், அந்த டிரான்ஸ்பர் டீடில் கையெழுத்துப் பெற
நடவடிக்கை எடுக்கப்படுமா?





மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற விவரங்கள்
காரைக்குடி அழகப்பச் செட்டியார் பயிலகம் பொறுத்தது அல்ல
செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக் தொடர்பாகத்தான்
இப்படி ஒரு பிரச்னை இருக்கிறது. அதிலேதான் டிரான்ஸ்பர்
டீடில் கையெழுத்து வாங்கும் முயற்சியை அரசு எடுத்து வருகிறது.

### (ஆ) இராணிப்பேட்டை சிப்காட்டிலுள்ள ஓர் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. ஆர்.
சுந்தரம், என். வரதராஜன், மற்றும் ஜே. ஹேமச்சந்திரன்
ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்
கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு
தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருவார்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, ''இராணிப்
பேட்டை சிப்காட்டிலுள்ள தமிழ்நாடு குரோமேட் கெமிக்கல்ஸ்
தொழிற்சாலையில் 14-10-1983 அன்று ஏற்பட்ட விபத்தில்
தியாகராஜன் என்ற தொழிலாளி இறந்தது குறித்தும் மற்றும்
20-10-83 அன்று ஏற்பட்ட விபத்தில் தொழிற்சாலையின் பல
பகுதிகள் பாதிக்கப்பெற்றுள்ளதும் குறித்த'' அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர்
நலத் துறையின் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே,
பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

இராணிப்பேட்டை சிப்காட்டிலுள்ள தமிழ்நாடு குரோமேட்ஸ்
கெமிக்கல்ஸ் தொழிற்சாலையில் 14.10 83 அன்று பிற்பகல்
4-20க்கு இரசாயன கலவை மின்கலங்களை சுத்தம் செய்கிறபோது
மேலே டிராலியில் போய்க்கொண்டிருந்த சோடியம் குரோமைட்
கலவை தெறித்து மேலே விழுந்த தீக்காயங்களால் ஏற்பட்ட
விபத்தில் திரு. தியாகராஜன் என்ற தொழிலாளி மருத்துவ
மனையில் அனுமதிக்கப்பட்டு அன்றே பிற்பகல் 6-00 மணிக்கு
உயிர் இழந்துள்ளார். இதன் தொடர்பாக தொழிற்சாலைகள்
தலைமை ஆய்வாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) அவர்கள்
மேற்கொண்டு விசாரணை நடத்தி, தவறுதலாக மின் பொத்
தானை அழுத்தி இருப்பது மூலமாகவோ அல்லது காலியாக
இறங்கிக் கொண்டிருந்த டிராலியில் இருந்து தெறித்து விழுந்ததன்
மூலமாகவோ இந்த விபத்து நடந்து இருக்கக் கூடும் என்று
கூறியுள்ளார். இதோடு கூட நிர்வாகத்திற்குத் தகுந்த பாதுகாப்பு
ஏற்பாடு மேற்கொள்ளவும் மின்கலங்களுக்கிடையே தடுப்புச் சுவர்
எழுப்பவும், வேலூர் தொழிற்சாலைகள் ஆய்வாளர் மூலமாக
அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 10-50)

### 5. அரசினர் தீர்மானங்கள்.

#### (அ) விதி 32 (1) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 (1)ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### 6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் —(தொடர்ச்சி.)

*திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இந்த அரசாங்கத்தினுடைய மக்கள் விரோதக் கொள்கையைச் சொல்லுகிறபோது, அதிலே எந்த அமைச்சர் மீதும் காழ்ப்புணர்ச்சியோ விரோதமோ எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், உழைக்கும் மக்களுக்கு விரோதமாக இந்த அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது என்பதற்கு பல விவரங்களை சொல்லி இருக்கிறேன். குறிப்பாக பல தொழிற்சாலைகள் பல ஆண்டுகளாக—5 ஆண்டுகள், 4 ஆண்டுகளாக—மூடிக் கிடப்பதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மாதா மாதம் வேலை செய்து ஊதியம் பெற்று, இந்த விலைவாசி உயர்ந்திருக்கின்ற இந்த காலத்திலே வாழ்க்கை நடத்துவதற்கே கஷ்டம் அடைகிற நிலையில் அவர்கள் இப்போது வேலையில் இல்லாமல் இருந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார்கள், அந்தக் குடும்பங்கள் எவ்வளவு கஷ்டப்படும், தொல்லைக்கு ஆளாக்கப்படும் என்பதை அரசு உணர்ந்து, சீரான நடவடிக்கை எடுத்துள்ளதா? இந்த தொழிலாளர் விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே ஏன்?

அதே நேரத்தில், நம்முடைய அண்ணா தி.மு.க. சார்பாக இராஜ்யசபைக்கு ஒரு தொழில் முதலாளியை அனுப்பி இருக்கிறீர்கள். அவர் தொழிலாளர்களுக்காக அங்கே போய் சாதகமாகப் பேசுவாரா அல்லது தொழில் முதலாளிகளுக்குச் சாதகமாகப் பேசுவாரா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இன்று பல பஞ்சாலைகள் மூடிக் கிடப்பதன் காரணமாக மிகப் பெரிய பாதிப்புக்குத் தொழிலாளர்கள் உள்ளாகி இருக்கிறார்கள்.





பெரியார் மாவட்டம் கந்தசாமி நூற்பாலையில் 640 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அதிலே 10,12 ஆண்டுகள் பணியாற்றியதற்குப் பின்னாலும் பலர் நிரந்தரமாக்கப்படவில்லை. டெம்பரவரி என்ற நிலையில் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறார்கள். இந்தத் தொழிற்சங்கத்தை சீர்குலைத்து, அந்தத் தொழிற்சங்கங்களை முடமாக்கக் கூடிய இந்த அரசாங்கத்தின் போக்கு மாறவே இல்லை. ஆகவே தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையை இந்த அரசாங்கம் கடைபிடிக்கிறது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். வேண்டும் என்றே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் மூலமாகத்தான் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு, நியாயமான தொழிற்சங்கங்களைப் புறக்கணிக்கக் கூடிய வகையிலே. நியாயமாக செய்யப்படவேண்டிய ஒப்பந்தங்களிலே அவர்களை சேர்த்துக் கொண்டு செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். 450 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரமாக்கப்படும் என்பது சர்க்கார் விதியிலே இருக்கிறது.

நம்முடைய அரசாங்கத்தின் பி.டபிள்யு.டி இலாகாவிலே பணி புரிகின்றவர்கள், நம்முடைய MLA ஆஸ்டலிலே பணி புரிகின்ற எலக்டிரிசியன்கள் ஒரு பேட்ஜ் அணிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 7,8 ஆண்டுகள் பணியாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் டெம்பரரியாக இருக்கிறார்கள். அரசாங்கத்தில் பணியாற்றக் கூடிய இந்த ஊழியர்கள் 480 நாட்கள் பணியாற்றினால் அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்றுள்ள விதிகளை அரசின் இலாக்காக்களில், நிறுவனங்களில் அமல் நடத்த முடியவில்லை என்று சொன்னால் தனியார் முதலாளிகள் யார் இதை அமல் நடத்துவார்கள் அரசாங்கத்தைச் சேர்ந்த இலாக்காக்களிலே கூட இந்த மாதிரி நாம் போடுகிற இத்தகைய சட்டங்களை சரியாக அமல் நடத்தப்படவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

இன்றைக்கு கைத்தறித் தொழிலாளர்கள் மதுரை, கரூர் போன்ற இடங்களில் அரசாங்கம் நிர்ணயித்த கூலியைத் தர வேண்டும் என்பதற்காக நாள் கணக்காக, வாரக் கணக்காக, மாதக் கணக்காக பட்டினி கிடந்து போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறார்கள், அதைத் தீர்த்து அவர்களுக்கு உரிய ஊதியம் பெற்றுத் தருவதற்கு இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கையைக் கையாளவில்லை. ஆகவே இந்த அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமாக செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாதது மட்டுமல்ல அவர்களுக்குப் பாதகமாகவும், முதலாளிகளுக்கு ஆதரவாகவும் இயங்குகின்ற நிலையில் உள்ளது என்பதை நாங்கள் கண்டிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இதன் தொடர்பாக தமிழ்நாடு குரோமேட்ஸ் கெமிக்கல்ஸ் பொது மேலாளர் விசாரிக்கப்பட்டதில் இந்தத் தொழிற்சாலையில் 450 தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும் 14-10-83 அன்று திரு. தியாகராஜன் என்ற தொழிலாளி சோடியம் குரோமைட் தீக்காயங்களால் காயப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு உயிர் இழந்ததாகவும் தெரிவித் துள்ளார். கவன ஈர்ப்பு அறிவிப்பில் தெரிவித்திருப்பதுபோல் 20-10-83 அன்றோ அல்லது 14-10-83 தேதிக்குப் பிறகோ வேறு எந்த விபத்தோ, பதட்ட நிலையோ தொழிற்சாலையில் ஏற்படவில்லை என்பதாகவும் தெரிவித்துள்ளார். ஆலையின் மேலாளரும் இந்த த்தகவலை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். 14-10-83 அன்று இறந்த தியாகராஜன் என்ற தொழிலாளியின் குடும்பத் திற்கு நிர்வாகம் ரு. 10,000 அளித்துள்ளது. இந்த நிறுவனம் இ.எஸ்.ஐ. விதிக்குட்பட்டதால் அதன் சலுகைகள் இறந்தவர் குடும்பத்துக்கு உரியதாகும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து குறிப்பிட்ட விபத்து குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பது புலனாகும்.

திரு கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த விவர அறிக்கையிலே ''தவறுதலாக மின் பொத்தானை அழுத்தி இருப்பது மூலமாகவோ அல்லது காலியாக இறங்கிக் கொண்டிருந்த டிராலியில் இருந்து தெறித்து விழுந்ததன் மூலமாகவோ இந்த விபத்து நடந்திருக்கக்கூடும்'' என்று கூறப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த விவர அறிக்கையிலே போதிய பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ள வேண்டுமென்றும், மின் கலங்களுக்கிடையே தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டும். என்றும் வேலூர் தொழிற்சாலைகள் ஆய்வாளர் தெரிவித்திருப்ப தாக கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கே இல்லாததன் காரணமாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. கொள்ளளவை விட அதிகமாக வைக்கப் பட்டதன் மூலமாகவும் போதிய பராமரிப்பு செய்யப்படாததன் காரணமாகவும், இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டு கூட இராமன் என்ற தொழிலாளி விபத்தில் இறந்து விட்டார். 14-10-83 அன்று தியாகராஜன் என்பவர் இறந்துவிட்டார். மேலும் 23-10.83 அன்று 'கிரேன்' விழுந்திருக்கிறது. வேலை ஆட்கள் யாரும் இல்லாத காரணத்தால் அருகில் இருந்த சுவர்மீது விழுந்து, சுவர் உடைந்திருக்கிறது. அவைபற்றி எல்லாம் விசாரிக்க தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) அவர்கள் போய் பார்த்து, இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் இதுகுறித்து நிர்வாகத்திற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு மேற் கொள்ளவும் மின் கலங்களுக்கிடையே தடுப்புச் சுவர் எழுப்பவும் வேலூர் தொழிற்சாலைகள் ஆய்வாளர் மூலமாக அறிவுறுத்தி யுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட எற்பாடுகளைச் செய்தால் மேலும் இத்தகைய விபத்துக்கள் ஏற்படாது என்று அந்த தலைமை ஆய்வாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த ஏற்பாடுகளைச் செய்ய ஆணை அனுப்பப்படும்.

அதோடு அந்த நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் இறந்து போன அந்தத் தொழிலாளர் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் இ. எஸ். ஐ. விதிக்குட் பட்டதால் இ.எஸ்.ஐ. பெனிஃபிட்களும் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, இந்த விபத்து நடந்த நேரத்திலே அங்கே உள்ள மேலதிகாரிகள் விபத்துக் குள்ளான அந்த தொழிலாளிக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய சிகிச்சைக்கு தக்க ஏற்பாடு செய்யவில்லை என்றும், மருத்துவ மனைக்கு உடனே எடுத்துச் செல்ல வாகன வசதி செய்ய வில்லை என்றும், சிகிச்சை அளிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அங்கே இருந்தத் தொழிலாளர்கள் வெளியே போய் வாகன வசதி செய்து, மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும், அதன் காரணமாகத்தான் அந்தத் தொழிலாளி இறந்துவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில் உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கும், வாகன வசதிக்கும் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா? விபத்துக்களைத் தடுக்க தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விபத்துக்களைத் தடுக்கவும். சுகாதாரத்தை தக் கவனிக்கவும் இதுவரையில் ஓரே ஒரு சீஃப் இன்ஸ்பெக்டர் ஆஃப் பாக்டரீஸ் இருந்தார். இப்போது இருவர் இருக்கிறார்கள். ஒருவர் சீஃப் இன்ஸ்பெக்டர் (ஜெனரல்), இன்னொருவர் சீஃப் இன்ஸ்பெக்டர் (ஹெல்த் அண்ட் சேப்டி); ஆகையால் விபத்துக்கள் குறையும். தலைமை ஆய்வாளர் அடிக்கடி இன்ஸ்பெக்ட் செய்கிறார். இருக்கிற குறைபாடுகளை நிவர்த்திக்க கருத்துக்கள் தெரிவிக்கிறார். இந்த நிர்வாகத்திற்கும் தகுந்த அறிவுரை கொடுத்திருக்கிறார். இதுவரையில் ஒரு சீஃப் இன்ஸ்பெக்டர் இருந்ததற்குப் பதிலாக இப்போது இருவர் இருக்கிற காரணத் தால் விபத்துக்கள் குறையும் என்று நம்புகிறேன். மேலும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. சோ. அழகர்சாமி) [1983 நவம்பர் 10

அடுத்தபடியாக நம்முடைய போக்குவரத்துத் துறை சம்பந்தமாக ஒரு வார்த்தை. நெல்லை மாவட்டத்திலே ஒரு நன்கொடை கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக நெல்லை கழுகுமலைக்கு ஓடிக்கொண்டிருந்த ஒரு தனியார் பஸ்ஸுக்கு முன்னாலே கே.டி.சி. பஸ்ஸை இரவோடு இரவாக ஓட உத்தரவு போட்டார்கள். அந்த பஸ் ஓடுகிறது. உடனே நிறுத்தப்படுகிறது. எப்படி ஓடுகிறது எப்படி நிற்கிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தொகுதியிலே பல கிராமங் களிலே பஸ்கள் விடவேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்கள் டி.டி.சி. கூட்டத்திலே சொல்லுகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லுகிறோம். இதற்குப் பல விதிகள் இருக்கின்றன. அதை எல்லாம் கமிட்டிதான் முடிவு செய்ய வேண்டும். அவர்கள் கேட்கின்ற நிதி தரவில்லை என்ற காரணத்தினால் சர்க்காருடைய கே.டி.சி. பஸ் விடுவதை எப்படி அனுமதிக்கிறீர்கள்? யார் அனுமதிக்கிறார்கள்? இப்படி எல்லாம் அரசாங்கத்தின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய முறையிலே நடக்கக்கூடாது. ஆனால் அப்படி நடந்து கொண்டுவருகிறது.

அடுத்தபடியாக இந்த வனத்துறை சம்பந்தமாக இரண்டொரு விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வன இலாக்கா பல ஆண்டுக்காலமாக, 10, 20 ஆண்டுக்காலமாக, அதற்கு மேலும் 50 வருடங்களாக ஏழை விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டிருக்கக்கூடிய இடங்களில் வன இலாக்காவினர் செடிகளை நட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால், காடுகளை வளர்க்கவேண்டும்; நாட்டிலே மூன்றில் ஒரு பங்கு காடாக இருந்தால்தான் நாடு செழிப்பாக இருக்கும் என்ற காரணத்தைச் சொல்லி இன்றைக்கு அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தேங்கனிக்கோட்டையில், அஞ்செட்டிதுக்கம் என்ற பகுதியிலே சர்வே நெ. 441 புறம் போக்கு, சர்வே எண். 981 தீர்வை ஏற்பட்ட தரிசு ஆகிய இந்த நிலங்களில் 50 வருட காலமாக விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அப்படிச் செய்கிற ஏழைஎளியவர்களான 20 பேர்களை வெளியேற்றிவிட்டு, அங்கே முட்செடிகளை, போலீஸ் உதவியோடு நட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்களம், மேட்டூர் பகுதியில் வால்பாறை யானைமலை, கொடைக்கானல் பகுதியிலே உள்ள சில இடங் களிலே மரங்களை வெட்டி காடுகள் அழிக்கப்படுவதாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. வரிசை காட்டில் வைகைக் கரையில் பெரிய பெரிய மரங்கள் வெட்டப்பட்டு இருக்கின்றன. அதற்கான போட்டோக்களை எல்லாம் சபா நாயகரிடத்திலே கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட பெரிய பெரிய மரங்களை வெட்டிக்கொண்டு போகக்கூடிய மிகப் பெரிய மோசடி நடந்துகொண்டு வருகிறது. எனவே அந்த வட்டாரத் தில் உள்ள மக்கள் எல்லாம் புகார் செய்தும்கூட தொடர்ந்து அந்த முறையில் மரங்களை அழிக்கக்கூடிய மிகப் பெரிய செயல்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த



1983 நவம்பர் 10] [திரு. சோ. அழகர்சாமி]

நடவடிக்கைகளில் அதிகாரிகளும் அங்குள்ள மற்றவர்களும் சேர்ந்துதான் இவ்வளவு பெரிய மோசடிகள் எல்லாம் நடந்துகொண்டு வருகிறது. காடுகளை ஒருபுறம் வளர்க்க வேண்டும் என்று சொல்லி, ஏழைகளை விவசாயிகளை அப்புறப்படுத்தி, முட்செடிகளை நடுகிறார்கள். மிகப்பெரிய காடுகளை எல்லாம் அழிக்கிறார்கள். காடுகளையும் மரங்களையும் அழிப்பது என்பது மாபெரும் பாதகமானச் செயல் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து காவல்துறையைப் பற்றி ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்று ஏழைஎளிய மக்களை லாக்கப்பில் வைத்து அடித்ததின் காரணமாக பல பேர்கள் இறந்தது பற்றி பல நேரங்களில் இந்தச் சட்டசபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாகப் பேசியிருக்கிறோம். உங்கள் ஆட்சியில் தான், வட ஆற்க்காடு மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத் திலும், நக்சலைட்டுகள் என்ற பெயரால் பலர் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளை எல்லாம் எதிர்க் கட்சிகளில் இருக்கிற நாங்கள் எல்லாம் சென்று அங்கே நடந்த கொடுமைகளை எல்லாம்; போலிஸ் கொடுமைகளை எல்லாம் நேரிலேயே பார்த்தோம். நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் போயிருக்கக்கூடிய நேரத்திலேயே, ஊர்வலம் சென்றவர்களை அடித்து நொறுக்கினார்கள்; ஆகவே இவ்வளவு பெரிய கொடுமைகள் இந்த ஆட்சியில் போலிஸ் மூலமாக நடந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் லாக்கப்பிலே இறந்தவர்கள், ஊத்தங் கரையில் சின்னராஜ், அடித்துக்கொல்லப்பட்டிருக்கிறார். சேலத்திலே தவமணி என்ற பெண் லாக்கப்பிலே கற்பழிக்கப் பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கிறாள். சாதாரண ஏழை எளியவர்கள் போலிஸ் லாக்கப்பிற்குப் போனால், திரும்பி வர முடியாத நிலைதான் இந்த ஆட்சியில் இருக்கிறது என்ற குற்றச் சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக இயக் கங்களை ஒடுக்குவது என்பதை ஒரு கொள்கையாக வைத்திருக கிறார்கள்,

அடுத்து 1978 ஆம் ஆண்டு 5 ஆண்டுகளுக்கு முன்னால் வேலை கேட்டு, இளைஞர்கள் ஊர்வலமாக வந்தார்கள். இந்த ஊர்வலத்தில் எங்களுடைய தலைவர், நம்முடைய சக்கரச் செட்டியார் அவர்களின் நண்பர், நம்முடைய சிங்காரவேலரின் நண்பர், முதுபெரும் தேசபக்தர். எங்களுடைய தலைவர் திரு கே. முருகேசன் அவர்கள் அந்த ஊர்வலத்திலே தலைமை வகித்து வருகிறார்கள். அந்த ஊர்வலத்தை அடித்து நொறுக்கி போலிஸ் கமிஷனரைக் கொல்ல செய்ய முயன்றார்கள் என்ற வழக்கைப் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்கு இன்னும் நடந்துகொண்டு இருக்கிறது. எத்தனையோ தடவைகள் முதல் அமைச்சர் இடத்திலே சென்று பார்த்துவிட்டோம். சீப் செக்கரட்டரி அவர்களைப் பார்த்தோம். உள்துறை செயலாளரைப் பார்த்தோம் ஆனால் இன்றைக்கு வரையிலும் வந்த வழக்கு தொடர்ந்து நடந்து வருகிறது. 50,60 பேர்கள்

ஊர்வலமாகப் போனதற்காக, நம்முடைய தலைவர் முருகேசன் அவர்களும், ஜனசக்தி ஆசிரியர் பாண்டியன் அவர்களும் ஊர் வலத்தில் கூடப் போனதற்கு, அவர்கள் மேலே எல்லாம் கொலை வழக்கு போட்டு அது தொடர்ந்து நடந்து வருகிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் போராட்டம் நடத்து கிறார்கள் என்று சொன்னால், அவர்களை அழைத்து பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக, அவர்கள் மேல் வழக்கு போடுகின்ற ஜனநாயக விரோதமான நடவடிக்கையை நீங்கள் இன்றைக்கு கடைபிடிக்கிறீர்கள் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இன்னும் அந்த வழக்கு 6 ஆண்டுக்காலம் ஆகியும் நடந்து வருகிறது.

(முற்பகல் 11-00)

அதேமாதிரியாக முன்னாள் நீதிபதி தார்குண்டே தாக்கப் பட்டிருக்கிறார். நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் நெடுமாறன் அவர்களும், குமரி அனந்தன் அவர்களும், எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் கூட அங்கே போலிசால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாக்கப்படுவதற்கு என்ன காரணம்? ஆனால், உண்மையிலேயே இப்படிப்பட்ட தாக்குதல் களைச் செய்வதற்கு போலீஸ்காரர்கள், நியாயம் உள்ளம் படைத்த அதிகாரிகள் வருத்தப்படுகிறார்கள். அங்கே வருகின்ற ஆளும் கட்சியினர், போலீஸ்காரர்களை அழைத்து தாக்கச் சொல்கிறார்கள். வேறு வழி இல்லாமல் அவர்களும் தாக்கு கிறார்கள். இந்த ஆளும் கட்சியினுடைய ஆட்களுக்கு பயந்து பயந்து செயல்பட வேண்டியிருக்கிறதே என்று அவர்கள் உண்மையிலேயே வருத்தப்பட்டுச் சொல்கிறார்கள். இது நியாயம்தானா? இப்படி நடந்தால் நாட்டில் ஜனநாயகம் நிலைக்குமா?.... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜனநாயகத்திற்கு உள்ளே போனால் ரொம்ப நேரம் ஆகும். சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: அதே மாதிரி அடியார் மீது வழக்கு. இவையெல்லாம் நியாயமான வழி இல்லை என்று சொல்லிக் கொள்வதோடு, நீதிபதிகளை சி.ஐ.டி.க்களை வைத்து கண்காணிப்பது கூடாது, அது மிகவும் தவறான நடவடிக்கை என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய காவல் துறையினர் பல கேஸ்களை பொய்யாகப் போட்டு வருகிறார்கள். நம்முடைய அவையின் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.கா. நல்லப்பன் அவர்கள் மீது கூட ஒரு பொய் வழக்கைப் போட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே பாபநாசம் பகுதியில் உள்ள போலீஸ் அங்கே உள்ள விவசாயிகளை, பல ஆண்டுகளாக குத்தகைக்கு சாகுபடி செய்து வந்தவர்களை, ரங்கராஜன் என்று விவசாயியையும் சேர்த்து, 200 பேர்களுக்கு மேற்பட்டவர்கள்மீது பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள்.



நெல்லை மாவட்டத்திலிருந்து ஒரு தந்தி எனக்கு வந்திருக் கிறது. எலக்ட்ரிசிட்டி போர்டைச் சேர்ந்த சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர், அங்கே இருக்கிற லைனில் போல்களை பூராவையும், பிடுங்கிப் போட்டு மின்சப்ளையை துண்டித்திருக்கிறார்கள். அப்படி இன்றைக்கு எனக்குத் தந்தி வந்திருக்கிறது. இப்படிப் பட்ட மோசமான நடவடிக்கைகளை நீங்கள் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் காள்கிறேன். இவைகளை எல்லாம் மாற்ற நீங்கள் இதுவரையில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இனிமேலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்வதோடு....(மணியடிக்கப் பெற்றது) நான் சீக்கிரமாக முடித்துவிடுகிறேன். ஆகவேதான், இந்த அரசாங்கம் தொழி லாளர்களுக்கு விரோதமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது, விவசாயிகளுக்கு உதவியாக இல்லாததோடு மட்டும் அல்ல, விவசாயிகளுடைய உற்பத்திக்கு தடங்கல் ஏற்படுத்துவ தோடு, அவர்களுக்கு மிகப் பெரிய பாதகம் அளிக்கும் வகையில் இந்த அரசாங்கத்தின் கொள்கை அமைந்துள்ளது. பொது மக்களுக்கு நியாயவிலையிலே பொருள்களை வினியோகிப்பதில் இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது. போலீஸ் துறையினரை ஏழை எளியவர்களுக்கு விரோதமாக செயல்படவைக்கிறது, ஆகவே இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அருமைக்குரியவரும், மாண்புக்குரியவருமான உமர்நாத் அவர்களும், பிறரும் கொண்டு வந்திருக்கிற, இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தின் மீது ஜனதா கட்சியினுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு பேசுகிறபோது, தமிழகம் இப்போது அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அத்தோடு இல்லாமல், ராயபுரத்திலிருந்து பாரிமுனை வரை பெண்ணொ ருத்தி தனியாக நடந்துச் செல்கிற நல்ல நிலையெல்லாம் இங்கே இருக்கிறது என்பதை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஆதரித்து பேசுகிறவர்கள் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறபோது, நீங்கள் அவைகளைப் பற்றி பேசலாமா என்று வினாக்களைக்கூட, அங்கேயிருந்து தொடுத்தார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். புகழ்ந்து பாடுகின்ற வாய்க்கு விருந்து அளிப்பதிலே தவறு நேர்ந்து விடலாம் அல்லது விருந்தே அளிக்காமல் இருந்து விடலாம். ஆனால் நோய்க்கு மருந்து போடவேண்டுமென்று விரும்புகிறவர்கள், புண்ணை சுட்டிக் காட்டித்தான் ஆகவேண்டும். புண்ணை சுட்டிக் காட்டுகிறபோது, நன்றாக இருக்கிறகண்ணை நீ காணவில்லையா என்று சொன்னால்

நன்றாக இருப்பது இருக்கட்டும்; அது என்றுமே நன்றாக இருக்கட்டும் என்று வாழ்த்திவிட்டு, நன்றாக இல்லாதது நன்றாக வேண்டுமே என்ற கவலையோடு, மக்களுடைய வாக்குகளைப் பெற்ற, இந்த மன்றத்திலே பேசுகிற நாங்கள் எங்கள் எண்ணத்தை எடுத்துச் சொல்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்த நாடு அமைதி பூங்காவாகவா, அல்லது அமைதி பூக்கா ஒரு நாடாக இது இருக்கிறதா என்று எண்ணுகிற அளவுக்கு சம்பவங்கள் நடந்துக் கொண்டேயிருக்கின்றன. அன்றாடம் நாளேட்டை எடுத்துப் பார்ப்போமேயானால், முன்பெல்லாம் மூடிய கதவைத் தானே திறந்து உள்ளே போய் திருடுவது உண்டு; பூட்டை திறந்து கதவை உடைத்து உள்ளே நுழைந்து திருடுவது உண்டு; சன்னல் கம்பிகளுக்குள்ளே கையைவிட்டு சங்கிலியை எடுத்துப் போவதுண்டு. இப்போது உள்ளே தாழ்ப்பாள் போட்டு ஆட்கள் இருக்கின்ற வீட்டிலே மூடியிருக்கிற கதவை உடைத்து, முகமூடிக் கொள்ளைக்காரர்கள், உள்ளே போய் துணிகரமாக திருடுகிற அளவுக்கு நாட்டிலே சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தால் இந்த அமைதி பூங்கா நாடு என்று சொல்வதா? அமைதி பூக்காநாடு என்று சொல்வதா?

ஒவ்வொரு சம்பவத்தையும் எடுத்துப் பாருங்கள். பெண் ஒருத்தி தனியாகப் போவதிருக்கட்டும். சைதாப்பேட்டையிலே ரெயில் நிலையத்திலே வந்திறங்கிய பெண்மணி, தன் கழுத்தி லிருந்து சங்கிலியை ஒருவன் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான் என்று பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் ஒருவரிடம் பிலாக்கணம் போட்டு அழுகிறாள். அங்கே நின்று கொண்டிருக்கும் பெரியவர் ஒருவர் சொல்கிறார், தூரத்தில் நிற்கும் ஒரு பெண்ணைக் காட்டி, அங்கே நின்று கொண்டிருக்கும் பெண்ணைப் பார். அவர் பெண் போலீஸ், அவரிடம் போய் சொல். அவரிடம் போய் சொன்னால் உனக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், சங்கிலியைப் பறி கொடுத்த பெண் சொல்கிறாள், நானே ஒரு பெண் போலீஸ்தானே ஐயா, போலீஸ் உடையில் இல்லாமல், மாற்று உடையில் வந்திருக்கிறேன், என்னுடைய சங்கிலிதான் பறிபோய் விட்டது என்று. ஆக காவலர்களுக்கே பாதுகாவல் இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையைச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய வர்களாக இருக்கிறோம். இரயிலிலே நடைபெறுகிற கொள்ளை, நெடுஞ்சாலைகளிலே நடைபெறுகிற கொள்ளை, இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதே சென்னை மாநகரத்திலே தியணைப்புப் படையினர் இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். கன்னிப் பெண் ஒருத்தி அவர்களால் கவர்ந்து செல்லப்பட்டு கற்பழிக்கப் பட்டாள் என்ற ஒரு குற்றச்சாட்டுடன், இவைகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கிறபோது எல்லா இடங்களிலும் நடக்கிற ஜாதிக் கலவரமாக இருக்கட்டும், மற்றச் சண்டைகளாக இருக்



கட்டும், முன்பைவிடப் பன்மடங்கு இந்தச் சமுதாயத்தில் கலவரங்கள் மட்டுமல்லாமல் களவும் கூடிக்கொண்டு போகிறது. கற்பழிப்பு கூடிக்கொண்டு போகிறது, கொலை, கொள்ளைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்ற குற்றச்சாட்டைச் சொல்வதன் நோக்கம் இவற்றைத் தடுத்து நிறுத்துகிற தன்மை நமக்கு வரவேண்டுமென்பது தான்.

அதுமட்டுமல்ல, கள்ளச்சாராயம் காய்ச்சுவதை நாங்கள் தடுக்க முடியாத காரணத்தினால் சாராயக் கடைகளையே திறந்தோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை இந்த அரசாங்கம் கொடுக்கிறது. தவறு செய்கிறவர்களைத் தடுக்கமுடியாத காரணத்தினாலே தவறையே நாங்கள் தர்மம் ஆக மாற்றிவிட்டோம் என்று சொல்கிற அளவுக்கு ஒரு அரசாங்கத்தை பாராட்டி நாங்கள் எப்படிப் பேசுவது என்று வினாத் தொடுக்க நான் விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவே நான் சாராயத்தையே சட்டப் பூர்வமாக்கிவிட்டேன் என்று சொல்வதன் மூலம் என்ன நடந்திருக் கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாராயக் கடைகள் வைக்கவேண்டுமென்று சொன்னால் இன்ன இன்ன விதிமுறை களுக்கு உட்பட்டுத்தான் வைக்கவேண்டுமென்று சொல்கிற விதி முறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்று அல்லது அந்த விதி முறைகள் பின்னுக்குள் தள்ளப்படுகின்றனவா என்று, தயவு செய்து ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு காலத்திலே ஒருவனுடைய வீட்டைத் தேடிப் போனால் புதியவன் ஒருவன் ஒரு ஊருக்குச் சென்றால் அவனுடைய முகவரியைத் தேடவேண்டுமென்று சொன்னால் அவன் வீடு எங்கே இருக்கிறது என்று கேட்கிறவர்களுக்கு சிலர் பதில் சொல்வார்கள் ஊரிலே இருக்கிற பெருமக்கள், அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று சொல்வார்கள். ஏனென்றால் கோயிலிலே மக்கள் கூட்டம் வந்திருந்தது. புதிதாக வந்தவனுக்கு அடையாளம் காட்டுவதற்காக அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று கோயில் அடையாளங் காட்டப்படுவதுபோக, கொஞ்ச நாட்கள் கழித்து, மக்கள் கூட்டம் சினிமா கொட்டகைகளிலே இருந்த காரணத்தினாலே அந்த வீடு எங்கே இருக்கிறது என்று கேட்கிற புதியவனுக்கு சினிமா கொட்டகைக்குப் பக்கத்திலே இருக்கிறது என்று கோயிலிலிருந்து சினிமா கொட்டகைக்கு வந்து, இப்போது அந்த இடம் எங்கே இருக்கிறது என்று கேட்டால் சாராயக் கடைக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு கோயிலிலிருந்து தியேட்டருக்கு வந்து இப்போது சாராயக் கடைவரை போய் இருக்கிறது என்று சொன்னால் நாம் எந்த அளவுக்குத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1983 நவம்பர் 10

கொடுக்கும்போது குடிமக்களிடம் குடக்கூலியாக வந்து இருக்கின்ற நீயா பேசுகிறாய் என்று கேட்க மாட்டார்களா, வீட்டை கட்டி வைத்து இருக்கிற வீட்டு சொந்தக்காரர்கள். ஆக 4 ஆயிரம் ரூபாய் வாடகையும் 40 ஆயிரம் ரூபாய் முன்பணமும் என்பதோடு நிற்கவில்லை, அரசாங்கத்திற்கு இந்த வீட்டை கொடுக்கிறவர், இன்னும் ஒன்றை கேட்கிறார். இந்த வீட்டை உங்களுக்கு நாங்கள் கொடுக்கின்ற காரணத்தினால் தரகு பணமாக 4 ஆயிரம் ரூபாய் எனக்குத் தரவேண்டும் என்று வீட்டுச் சொந்தக்காரர் கேட்கிறார். வீட்டுச்சொந்தக்காரர் அரசாங்கத்திடம் வீட்டைகொடுக்கிறார். அந்த வீட்டில் குடியிருக்க போகின்றவரோ மாண்புமிகு மதிப்பிற் குரிய உயர்நீதிமன்ற நீதிபதி. அந்த நீதிபதிக்கு வீடு கொடுக் கின்றவர் அரசாங்கம் எடுத்து கொடுக்கின்ற அந்த வீட்டுக்கு 4 ஆயிரம் ரூபாய் தரகு பணமாக கொடுக்கிறது. புரோக்கரேஜ். அப்படி தரகுப் பணம் கேட்கின்ற அந்த துணிச்சல்காரருக்கு அரசாங்கம் என்ன செய்கிறது தெரியுமா? அரசு ஆணைபிறப் பித்து 4 ஆயிரம் ரூபாய் தரகு பணம் கொடு என்று சொல்கிறது. இப்படித்தான் நாம் நமது நிர்வாகத்தை நடத்தி வருகிறோம். நீதிபதி ஒருவருக்கு வீடு கொடுப்பதற்கு நமது நிர்வாகம் எப்படி செயல்படுகிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். வேடிக்கை இதில் என்ன என்று சொன்னால் இத்தனையும் உடன்பட்டதற்கு பின்னால் அந்த நீதிபதிக்கு வீடு கிடைக்கவில்லை. ஏன் என்றால் அந்த வீட்டுச் சொந்தக்காரர் வீட்டை கொடுக்கவில்லை. இன்றும் அந்த நீதிபதி அவர்கள் தனியாக விருந்தினர் விடுதியில் தங்கிக் கொண்டு இருக்கும் நிலை தான் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், சட்டம் ஒழுங்கை நாம் எப்படி பராமரிக்கிறோம் என்பதை பார்க்கிறபோது அந்த சட்டத்தை நிலைநாட்டுகின்ற உரிய சக்தி வாய்ந்த அந்த நீதிபதிக்கு ஏற்பட்டு இருக்கின்ற நிலை என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

இராயபுரத்திலிருந்து பாரிமுனை சென்ற பெண்ணைப் பற்றிப் பேசுகிறவர்களுக்கு அன்போடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். பெண் அல்ல, பெதுமை அல்ல, பேதமை அல்ல, அல்லது மங்கை அல்ல, அல்லது மடந்தை அல்ல. ஆண் மகன். கொத்தவால் சாவடிக்கு போகின்ற ஆண் மகன். இந்த பக்கத்தில் மன்றோ சிலைக்குப் பக்கத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு, காசுகள் களவாடப்படுகின்ற செய்திகள் தெரியும். எத்தனை நாட்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்பதும் தெரியும். இவைகள் எல்லாம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் தான், நாம் என்ன சொல்கிறோம் என்று சொன்னால் தமிழ்நாடு ஒரு அமைதிப் பூங்காவாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது சரிதானா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள் தொழிலாளர் நலத்தைப் பற்றி. ஆக தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் கோயம்பத்தூரில் உள்ள ஸ்ரீ இராமலிங்க சூடாமணி நூற்பாலை



1983 நவம்பர் 10] [திரு. குமரி அனந்தன்]

மில் 2 ஆண்டுகளாக மூடப்பட்டு இருக்கிறது. 1300 பேர் வேலை இழந்து இருக்கிறார்கள். மாதவரம் பால் பண்ணையிலே 1,100-க்கு மேற்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் நெடுநாளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போல, கோயம்புத்தூரில் ஸ்ரீ ஹரிவசந்திரா மில் 6 மாத காலமாக மூடுவதும். திறப்பதும், ஆட்களை வேலைக்கு எடுப்பதும், இல்லையென்று சொல்வதுமாக இருந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருக்கிறார்கள். ஜனார்த்தனா மில் கடந்த 6 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது என்பதை பார்க் கிறோம். பத்மா மில்சும் சரி, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர், அதுவும் சரி இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு உட்பட்டு தொழிலாளர்கள் துன்புற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் அவர் களுக்குப் பாதுகாப்பு கொடுங்கள், ஜோதி மில்லை எடுத்ததைப் போலவே, ஜெயலட்சுமி மில்லை இந்தத் தமிழ்நாடு அரசாங்கம் எடுத்து நடத்துவதைப் போலவே, இந்த மில்களையும் எடுத்து நடத்துங்கள் என்று சொல்லி, 3,000 தொழிலாளர்கள் நேற்று முன்தினம் ஊர்வலமாகப் போயிருக்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகத்தை நோக்கி. திரு. செங்காளியப்பன் அவர்கள் தலைமையிலே போன அந்தத் தொழிலாளர்கள் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி 180 பேர்களைக் கைது செய்கிறீர்கள். அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்ப தற்குப் பதிலாக, தொழிற்சங்கத் தலைவர்களைக் கைது செய்வதிலே அக்கறை காட்டுகிறதே தவிர, இத்தனை மில்களிலே பாதிக்கப்பட்டவர்கள் தவித்துக் கிடப்பதைப் பற்றிச் சிந்திக் கிறதா? சிந்திக்க வேண்டாமா என்பதுதான் நான் கேட்கிற கேள்வியாக இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது கோவை மாவட்டத்திற்குச் சென்றார்கள். அவர்களாவது இதனைக் கவனித்திருக்க வேண்டும் அல்லவா? கோவை மாவட்டத்திற்குச் சென்றிருக்கிறவர் அங்கே பெரிய விழாவிலே கலந்து கொள்கிறார். 100 நற்பணித் திட்டங்கள் (வெல்பேர் ஸ்கீம்ஸ்) ஒரே நேரத்திலே திறக்கப்படுகின்றன. ஒரே தட்டிலே, பொத்தானை அமுக்கினால் 100 திட்டங்கள் திறக்கப்படுகின்றன என்றார்கள். முதலமைச்சர் செல்கிறார். மழை பெய்கிறது. பட்டா காடுக்க வேண்டும் 4,000 பேர்களுக்கு, பேசிவிட்டு, பட்டா கொடுங்கள் என்று அதிகாரி சொல்கிறார். முதலமைச்சர் அவர்கள் மிகுந்த திறமையோடு சொல்கிறார்கள். முதலிலே பட்டாவைக் கொடுப்போம். பிறகு நான் திறந்து வைக்கின்றேன். சொற்பொழிவாற்றுகின்றேன் என்று. பாராட்டுவதற்குரியது. ஏனென்றால், 4,000 பேர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டு மென்று சொல்லிக் கொண்டிருந்த அதிகாரிகளிடம் ஆட்களைக் கூப்பிடு என்று சொன்னபொழுது, 1,007 பேர்கள்தான் அங்கே இருந்திருக்கிறார்கள். முதலமைச்சருக்கு தன்னுடைய அதிகாரிகள் மீது இப்பொழுது ஐயப்பாடு ஏற்பட்டிருக் கிறது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1983 நவம்பர் 10

நீங்கள் இன்றைக்கு பெர்மிட்களை வாங்கித்தான் குடிக்க வேண்டுமென்று சொல்கின்ற மேலெழுந்தவாரியான உத்திரவைப் போட்டிருக்கிறீர்கள். தளர்த்தப்பட்டது மதுவிலக்கு. ஆனல் வளர்க்கப்பட்டது சாராயக்கடை என்று சொல்கிற வகையிலே கிளைகளை வைத்து சிலிர்த்து சிலிர்த்து மிதந்து கொண்டு இருக்கின்ற மதுக் கடைகளையெல்லாம் பார்க்கிற நேரத்திலே தளர்த்தப்படுவது என்று சொல்கிற அந்த தமிழ் சொல்லுக்கு இத்தனை அவமரியாதையை ஏற்படுத்த வேண்டுமா என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட் டத்திலே புள்ளி விவரத்தின்படி 256 பேர் மட்டு தான் மது குடிப்பதற்குரிய பெர்மிட் வைத்திருக்கிறார்கள்—256 அல்லது ஏறத்தாழ சற்று மேலோ கீழோ இருக்கலாம்—என்னிடம் சரியான புள்ளி விவரம் இல்லையென்று சொன்னாலும் அந்த அளவுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் கொடுக்கப் பட்டது எவ்வளவு, குடிக்கப்பட்டது எவ்வளவு. குடிப்பதற்கு என்று அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது எவ்வளவு, அங்கிருந்து வரிப்பணம் எக்சைஸ் டியுட்டியாக எடுக்கப்பட்டது எவ்வளவு என்பதை எல்லாம் கணக்குப் பார்க்கிறபோது நாம் கூறுகிற தமிழுக்கும் அகராதியிலே இருக்கிற தமிழ் சொற்களுக்கும் பொருள் பொருத்தம் இருக்கிறதா? அந்த ஒலிக்கும் அந்த ஒலி தருகிற உண்மைக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்பதைச் சிந்தித்து பார்க்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்தினுடைய செம்மை பற்றி எல்லோரும் புகழ்கிற நேரத்திலே ஒன்றிரண்டு தகவல்களை நான் தருகிறேன். குற்றங்களை யார் செய்தாலும் தண்டிக்கப்படவேண்டும். குற்றங்களைச் செய்தது பற்றி ஒருவர் புகார் கொடுக்கிறார் என்று சொன்னால் அந்தப் புகார் பற்றி அரசின் காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தக் கிரிமினல் புகார் ஏறத்தாழ 2 லட்சத்து 99 ஆயிரத்திற்கு மேற் பட்டவை முதல் அறிக்கை கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட எப். ஐ. ஆர். கொடுக்கப்பட்டதற்குப் பின்னால்— பத்திரிக்கை கொடுக்காத காரணத்தினாலே பின்னால் — குற்றப் வழக்குகள் அல்லது புகார்கள்மீது முதல் அறிக்கை வந்த புகார்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாத காரணத்தினாலே — ஒரு போலீஸ் நிலையம், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் 60 நாள்வரை இருக்கலாம், 60 நாட்களுக்கு மேலும் தாக்கல் செய்யவில்லையென்றால் ஒரு நீதிபதியினுடைய அனுமதியைப் பெற்று 6 மாதம் தள்ளிப்போடலாம். 6 மாதத்திற்கு மேலும் முதல் அறிக்கை கொடுக்கப்பட்ட புகார்கள் அல்லது வழக்குகள் ஏறத்தாழ 3 லட்சம் இருந்ததை நம்முடைய உயர்நீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டி எனவே அரசாங்கம், அரசாங் கத்தின் கீழ் இருக்கிற காவல் துறை தனது கடமையிலே தவறி விட்ட காரணத்தினால் அந்த வழக்குகள் அத்தனையையும் தள்ளுபடி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே நீதிபதி, அப்படியென்றால் அதற்கு என்ன பொருள்? தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் போய் இருக்கலாம், தவறு செய்யாமலேயே



1983 நவம்பர் 10] [திரு. குமரி அனந்தன்]

குற்றவாளி என்று ஒரு புகார் கொடுக்கப்பட்டு ஒருவர் குற்றவாளி யில்லை, நிரபராதி என்று கூறுகிறபோது அந்த நல்ல பெயரை வாங்காமலேயே அந்தப் பழியோடு விடுவிக்கப்படுகிறான். இரண்டு வகையிலும் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால் தமிழகத்தின் சரித்திரத்தில் இதற்கு முன்பு நடைபெறாத அளவுக்கு இது நடக்கிறது என்று சொன்னால் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? நம்முடைய நெஞ்சிலே வேதனை எழவேண்டாமா? 3 லட்சம் வழக்குகளா? நாம் இப்படியா நடந்து கொள்வது என்று சிந்திக்க வேண்டாமா? வழக்குகள் மட்டும் அல்ல. இந்த

(முற்பகல் 11-10)

வழக்குகளை எல்லாம் விசாரிக்கின்ற நீதிபதிகளைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அருமைக்குரிய சபாநாயகருடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக நான் சொல்ல விரும்பு கிறேன். அங்கு உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு நீதிபதி அவர்களுக்கு தங்குவதற்கு வீடு கொடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்தைச் சார்ந்தது. இந்த அரசு நீதிபதிக்கு வீடு கொடுக்கிறது. நீதிபதி திரு. கே. எம். நடராஜன் அவர்கள் நீதிபதியாக பதவி ஏற்றதற்கு பின்னால் அவர் குடியிருப்பதற்கு வீடு வேண்டும் என்று கேட்க, கொடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்க, அரசு அவருக்கு வீடு கொடுப்பதற்கு என்ன முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டு காட்டவிரும்புகிறேன். சென்னையில் உள்ள சேத்துப்பட்டில் ஒரு பெரிய பங்களாவை இந்த அரசு அவர் குடியிருப்பதற்கு என்று தேர்ந்தெடுக்கிறது. அதற்கு வாடகை எவ்வளவு நிர்ணயிக்கப் படுகிறது தெரியுமா? 2500 ரூபாய் மாத வாடகை. அங்கே போடப்பட்டு இருக்கின்ற கட்டில், மேஜை, நாற்காலிகள் இவைகளை பயன்படுத்துவதற்கு 1500 ரூபாய். அமினிட்டீஸ். ஆக வாடகை 2500 ரூபாய், அங்கே இருக்கின்ற பொருட்களை பயன்படுத்துவதற்கு வாடகை 1500 ரூபாய். ஆக 4000 ரூபாய் வீடு கொடுப்பதற்கு நீதிபதி அவர்களுக்கு வாடகையாக நிர்ண யிக்கப்படுகிறது அரசு. அந்த வீட்டுக்காரர் என்ன கேட்கிறார், 4 ஆயிரம் ரூபாய் வாடகையாக கேட்டதோடு மட்டும் இல்லை, 10 மாத வாடகையை முன் பணமாக கேட்கிறார். 10 மாத வாடகையை முன் பணமாக இந்த அரசும் கொடுக்கிறது. அரசு அதை கொடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கிறது. ஆக ஆணை பிறப்பிக் கிறது, 40 ஆயிரம் ரூபாய் முன் பணமாக கொடுங்கள் என்று, ஒரு அரசிடம் ஒரு வீட்டுச் சொந்தக்காரர் 10 மாத வாடகை பணத்தை முன் பணமாக கேட்கிறார் துணிச்சலோடு. அவர் துணிந்து கேட்டதற்கு பின்னால் அதை கொடுக்கின்ற முறையில் ஒரு அரசு ஆணையும் தமிழகத்தில் பிறப்பிக்கப்படுமானால் சாதாரண குடிமக்களிடம் எத்தனை மாத வாடகையை முன் பணமாக பெறப்படும். நாம் கொடுக்கின்ற நேரத்தில் இப்படி கேட்பது அநியாயம் என்று கேட்டால் அரசாங்கமே கொடுத்து இருக்கின்ற போது முடிசூடி ஆண்டுக் கொண்டு இருப்பவர்கள்

4000 பேர்கள் இல்லையென்று கண்டு ெ ாண்ட முதலமைச்சர் அவர்கள் அந்த 100 இடங்களுக்குப் போயிருப்பார்களானால் கட்டிடங்களும் 100 இருக்காது, திட்டங்களும் 100 இருக்காது என்பதை ஒருவேளை அவர்கள் கண்டு கொள்ளக்கூடும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானும் அந்த விழாவில் கலந்து கொண்டவன். கட்டிடங்கள் கட்டித் திறக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதுவும் கல்லைத் , றக்கின்றோம் என்று சொன்னாலே கண்டிப்பாக கட்டிடங்கள் இல்லாமல் எந்தக் கல்லும் இந்த ஆட்சிக் காலத்தில் திறக்கப்படவில்லையென்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டுமானால் முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் கட்டிடமே இல்லாமல் அடிக்கல்லும் நடாமல் பல கற்கள் எல்லாம் போடப்பட்டன. அப்பொழுது இருந்திருக்கலாமே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படியில்லையென்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்;** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அடிக்கல் நாட்டாமல் கட்டிடம் திறப்பதில்லை. அல்லது கடைக்கால் அங்கே பதிக்காமல் கட்டிடம் திறப்பதில்லையென்றெல்லாம் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்த ர்கள். அவர்கள் அந்த விழாவிலே இருந்தத்தைப் போல, நான் அந்த விழாவிலே இல்லை. பத்திரிகையிலே இருப்பதைத்தான் நான் சொன்னேன். எப்படி 4,000 பேர்கள் என்று சொல்லி வெரிபிகேஷன் என்று வந்தபொழுது, 1,007 தான் வந்ததோ, அதைப் போலவே கட்டிடங்களும் திட்டங்களும் என்று சொன்னது குறிப்பிலே இருக்கும்.

கு ற ப்பெழுதுகிறவர்கள் வேகமாகவும் எழுதுகிறவர்கள்; விவேகமாகவும் எழுதுகிறவர்கள். எனவே, அவர்கள் சரியாகவே எழுதியிருப்பார்கள். நான் கட்டிடங்களும் திட்டங்களும் என்று சொன்னேன். கல் இல்லாமல் எந்தக் கட்டிடத்தையும் திறக்கின்ற காரியம் இப்பொழுது இல்லையென்று சொன்னார்கள். ஆனால், கல் இல்லாமலே ரோடு போடுவதை எல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். பல இடங்களிலே கல்லும் களி மண்ணும் இல்லாமல் கூட சாலைகள் போடப்படுவதை எல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேசையிலே உட்கார்ந்து சாலை போட்டதாகக் கணக்கெழுதி வ ங்கியதை எல்லாம், இங்கேயே, முன்னாலேயே கூட, நமது சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நோக்கம் என்னவென்றால் — . . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்கள் ஒரு புகாரைக் கூறினார்கள். அதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் பதில் கொடுக்க இருக்கிறார்கள். ஆனால் தயவு செய்து நான் மாண் . . . பி —

உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் புகாரைக் கூறுகின்ற நேரத்திலே ஆதாரத்தோடு கூற வேண்டும். ஏனென்றால், ஆதாரம் கொடுப்பது என்பது எங்களுக்கும் உதவி செய்வதாக இருக்கும். அதே நேரத்தில், நாங்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு நீங்கள் உதவி செய்வதாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட ஆதாரங்கள் இருந்தால் தயவுசெய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் கேட்கின்ற காரணத்தாலே, எல்லா புள்ளி விவரங்களையும் சொன்னால் எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் முழுவதும்கூட, சொல்ல நேரம் இருக்காது. தவறுகளைச் சுட்டிக் காட்டுவதற்காக ஆதாரம் வேண்டுமென்று கேட்கிறார். இப்பொழுது ஒன்று சொல்ல விரும்புகிறேன், பெரியகுளம் சோத்துப்பாறை அணை திறக்கப்பட்டதே, அந்த அணையிலே இப்பொழுது எத்தனை அடி தண்ணீர் இருக்கிறது? (குறுக்கீடுகள்) தண்ணீரை அணைப்பது இருக்கட்டும், அந்த அணையே இருக்கிறதா? (குறுக்கீடுகள்) தண்ணீரை அணை தடுப்பது இருக்கட்டும், அந்த அணையே இருக்கிறதா?.................

(முற்பகல் 11—20)

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியகுளத்திலே சோத்துப்பாறை அணைக்கட்டு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினீர்களே, இப்பொழுது தண்ணீர் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அடிக்கல் நாட்டிய உடன் அதற்குரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, பெரியகுளத்தில் டிவிஷனல் என்ஜினியர் மற்றும் அவருக்குக் கீழே அதிகாரிகளும் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கல் நாட்டிய ஒரே ஆண்டில் தண்ணீர் நிரம்பியது காமராஜர் காலத்திலும்கூட நடந்தது என்று உங்களால் கூற முடியுமா? ஆகவே நடக்க வேண்டிய பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இல்லாத ஒரு தகவலை சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சில் குறுக்கீடுகள் இருக்கிற காரணத்தால்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்கள் முடிந்துவிட்டது. இப்போது அதிக நேரம் கொடுத்திருக்கிறேன். குறுக்கீடுகள் என்பதால் அதிக நேரம் எடுத்துக் கொள்ள முடியாது. சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணை சபாநாயர் அவர்களே, காமராசர் அவர்களை இழுத்த காரணத்தால் சொல்கிறேன்.

திரு காமராசர் காலத்தில், நகர் அமைப்புகள் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சில அதிகாரிகள் வெளி நாட்டிற்கு புறப்பட்டார்கள் அமெரிக்கா செல்வதற்கு திட்டமிட்டார்கள். காமராசர் அந்தக் கோப்பை வாங்கி அதன் ஓரத்தில் எழுதினார்கள். நகர் அமைப்பு எபபடி இருக்கவேண்டுமென்று சொன்னால் மதுரையிலே சென்று பாருங்கள் என்று எழுதினார். எங்கள் தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலே காலணா வீண் செலவாகி இருக்காது. மறந்து விடாதீர்கள். (குறுக்கீடு) மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட வைகை அணை உங்கள் பக்கத்திலே 2.5 கோடி ரூபாயிலே முடிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும். (குறுக்கீடு) எனவே நீங்கள் பலகை திறந்துவிட்டு அதிகாரிகளை நியமிக்கக் கூடாது· எல்லா வேலைகளையும் வேலை துவங்குகிற நேரத்தில் அடிக்கல் நாட்டியிருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய குற்றச்சாட்டு. அடுத்த செய்திக்கு வாருங்கள். இன்னும் பல செய்திகள் இருக்கின்றன. [குறுக்கீடு) அடிக்கல் நாட்டு விழா தான். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைத் தொடர்ந்து பேச அனுமதிக் கிறீர்கள் அல்லவா? சமீபத்தில் மணவாளக்குறிச்சியில், அங்கே இருக்கிற தொழிற் சங்கங்கள், மெஜாரிட்டி தொழிற்சங்கத்தை ஒத்துக்கொள்ளாத காரணத்தால், மைனாரிட்டி தொழிற் சங்கத்தினுடைய துணையோடு நிர்வாகம் நடைபெறுகிற காரணத்தால், எப்படி கோயம்புத்தூரில் செங்காளியப்பன் கைது செய்யப்பட்டாரோ, அதைப்போல எங்களுடைய தலைவர் ஜேம்ஸ் அவர்கள் அங்கே உண்ணாவிரதம் இருக்க வேண்டி யிருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான ரப்பர் தோட்டத்திலே கூட, தோட்டத் தொழிலாளர்களுக்கான நலச் சட்டங்கள் பின்பற்றப்படுவதில்லை என்பதை இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

கிருஷ்ணாநதி நீர் வருவதை பெருமிதமாக பேசுவதை நான் தவறு என்று சொல்லவில்லை. பக்கத்து மாநிலத்தோடு உறவு வைத்துக் கொள்வது நல்லதுதான். பக்கத்து மாநில முதலமைச்சரோடு நல்லறவு வைத்துக் கொள்வதைவிட வேறு சிறப்பான காரியம் எதுவும் இருக்காது. அதனாலே நம்முடைய முதலமைச்சரை நாம் பாராட்டவும் செய்தோம். ஆனால் ஒன்றை கேட்க விரும்புகிறேன். 30 கோடி ரூபாயைத் தூக்கி ஒரு காசோலையைத் தூக்கி—அந்த வேலை தொடர்ந்து செயல் படுவதற்கு முன்பே கொடுத்தோமே, அதை ஒரு வங்கியிலே போட்டிருந்தால் மாதம் ஏறத்தாழ 45 லட்சம் ரூபாய் நமக்கு வட்டியாக வந்திருக்குமே. அந்த பணத்தை அங்கே [illegible]



போய் கொடுத்ததற்கு பதிலாக நாமே வைத்துக்கொண்டு, தேவைப்படுகிற அளவிற்கு கொடுத்திருக்கலாமே, அந்த அளவிற்கு செயல்பட்டது சரிதானா என்பதை தயவுசெய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமக்கு எத்தனையோ துன்பங்களும், துயரங்களும் இருந்தன. இந்த துன்பங்களும் துயரங்களும் இருந்த நேரத்திலே நமக்கு யார் உதவி செய்தார்கள்? வறட்சி நமக்கு ஏற்பட்டு துன்பம் வந்தது என்றால், தண்ணீரிலே துன்பம் வருவது ஒன்றென்றால், தண்ணீர் இன்மையால் துன்பம் வருவதும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பக்கத்திலே இருக்கிற மாநிலத்தோடு அன்போடு, பாசத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கோடி ரூபாய் கொடுத்ததை தவறு என்று சொல்ல மாட்டேன். மனிதாபிமானத்தோடு கொடுத்ததை பாராட்டவும்கூட செய்வேன். ஆனால் நமக்கு வறட்சி நிலை ஏற்பட்ட சென்ற ஆண்டிலேமட்டும் ஏழு லட்சம் தென்னை மரங்கள் காய்ந்து கருகிப்போய் இருக்கின்றன. இதை மறந்துவிட வேண்டாம். ஏழு இலட்சம் தென்னை மரங்கள். ஒரு தென்னை மரத்தை நட்டு அதன் பலனைப்பெற வேண்டுமென்றால்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒதுக்கப்பட்ட நேரப்படிதான் எல்லோரும் பேச வேண்டியிருக்கிறது. நேரம் இன்னும் அதிகமாக வேண்டுமென்றால் காலையிலேயே அது பற்றி முடிவெடுத்திருக்க வேண்டும். திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு 15 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. என். சங்கரய்யா:** குறுக்கீடுகளெல்லாம் வந்துவிட்டன. எனவே, இன்னும் கொஞ்சம் நேரத்தை நீட்டித்துக் கொடுக்க லாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன், நேரம் அதிகமாக வேண்டுமென்றால் காலையிலேயே இதுபற்றி முடிவெடுத்திருக்கலாம். அவருக்கு 15 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, திரு. குமரி அனந்தன் அவர்கள் விரைவில் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏழு இலட்சம் தென்னை மரங்கள் பட்டுப் போய் விட்டன என்று சொன்னால், அப்படிப் பட்டுப்போன காரணத்தால் யாருடைய வளர்ச்சித் தட்டுப்பட்டு போனது அல்லது பட்டுப்போனது. விவசாயிகள் அல்லவ இந்த ஏழு இலட்சம் தென்னை மரங்கள் பட்டுப் போனதினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தென்னை மரமும் கொடுக்கின்ற பயனை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இப்பொழுது

[திரு. குமரி அனந்தன்] [1983 நவம்பர் 10

ஒரு தேங்காயின் விலையோ இரண்டரை ரூபாயிலிருந்து மூன்று ரூபாய் வரை விற்கிறது. ஆகவே, புதிதாக இந்த ஏழு இலட்சம் தென்னை மரங்களையும் நட்டுப் பராமரிக்கின்ற செலவையும், இப்பொழுது பட்டுப்போன தென்னை மரங்கள் இருந்திருந்தால் அவற்றின் மூலம் இந்த ஐந்தாண்டுக் காலத்திற்கும் கிடைக்கின்ற பலன் கிடைக்காமல் இழந்துவிட்ட அந்த மதிப்பையும் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டிலுள்ள அந்தத் தென்னை மரங்களின் சொந்தக்காரர்களுக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற மொத்த இழப்பீடு எவ்வளவு தெரியுமா? 173 கோடி ரூபாய். இந்த 173 கோடி ரூபாய் இழப்பு அந்தத் தென்னை மரங்களின் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது இந்த இழப்பை யார் ஈடுகட்டப் போகிறார்கள்? எப்படி ஈடுகட்ட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திடீரென்று ஏதாவது பிரச்னை வரும்பொழுது தலைநகர் மாற்றம் என்று சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில் தலைநகர் மாற்றம் என்ற அந்தப் பிரச்னையை எடுப்பதற்கு நான் விரும்பவில்லை. ஆனால் இங்கே கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து சட்ட மன்றத்திற்குப் புதிதாகக் கட்டிடம் கட்டப் போவதாக ஒரு திட்டத்தை அறிவிக்கிறார்கள். அமைச்சர்களுக்கு வரிசையாக வீடு கட்டும் திட்டம் என்று அறிவிக்கிறார்கள். ஆனால் இன்னொரு பக்கத்தில் தலைநகர் மாற்றம் என்று அறிவிக்கிறார்கள். தலைநகரத்தை வேறிடத்தில் வைத்துவிட்டு சட்ட மன்றத்தை இங்கே வைக்கப் போகிறார்களா? இவைகளிலெல்லாம் ஒருங்கிணைந்து சிந்திக்கின்ற நிலை இருக்கிறதா? என்று கேட்க விரும்புகிறேன்.

நேற்றோ அதற்கு முன் தினமோ இங்கே அமைச்சர்கள் சாதி அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதற்கு மறுப்புக்கூடத் தெரிவித்தார்கள். தெருக்களில் சாதிப் பெயர்களைப் போடக்கூடாது என்று சொல்லப்படுகிறது; ஆனால் அமைச்சர்களையும் சாதி பார்த்து தேர்ந்தெடுக்கக் கூடாது என்று நான் சொல்வதற்குக் காரணம், ஒரு அமைச்சரின் நியமனத்தைப் பற்றி பத்திரிகையிலே என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், சாதி அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

இன்னும் ஒரு அமைச்சரின் நியமனத்தைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது. அவர் படித்தவர், உழைத்தவர், தொண்டர், அதனால் அமைச்சராக நியமிக்கிறோம் என்று சொல்லியிருந்தால் அதைப் பாராட்டியிருப்போம். ஆனால் என்ன சொல்லப்படுகிறது** இப்படிப்பட்ட தன்மைகளிலே நியமிக்கப்பட்டால் மக்களிடத்திலே அமைச்சர்களுக்கு ஒரு மரியாதை இருக்குமா? நம் அன்பிற்குரிய அமைச்சர்களாக அவர்கள் இருக்க வேண்டாமா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 நவம்பர் 10]

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேவையில்லாத, விவாதத்திற்கு ஒத்துவராத, அவசியமில்லாத ஒரு பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லி ஒரு அமைச்சரின் மீது களங்கம் சொல்லும் அளவிற்கு அவருடைய வார்த்தைகள் அமைந்திருக்கின்றன. ஆகவே, அந்த வார்த்தைகளை உறுப்பினரவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்வது நலமாக இருக்கும். எனவே, இதுகுறித்து தாங்கள் முடிவு சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*** என்ற வகையில் பேசுவது ஒத்துக்கொள்ளக் கூடிய நியாயமா என்பதை அவர் விளக்கியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்ட குற்றச் சாட்டுகளைத் திடீரென்று சொல்வது நல்லது அல்ல. இதே போன்று ஆளுங்கட்சியில் இருப்பவர்களும் பேச ஆரம்பித்தால் தாங்க முடியாது. எவ்வளவு வேகமாகப் பேசுகிறீர்களோ அதைவிடப் வேகமாகப் போகக் கூடியவர்களும் இருப்பார்கள். அப்படி அவர்கள் தாக்கினால் அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி இருக்க வேண்டும். எனவே அமைச்சரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய அந்தப் பகுதிகள் நீக்கப்படுகின்றன. அதாவது.*** என்ற வாசகத்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. இரா. தாமரைக்கனி: பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் அமருங்கள். நான் சொல்கிறேன் (கூச்சல்-குழப்பம், ஒவ்வொரு உறுப்பினரையும் ஏதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் சொல்லிக்கொண்டே இருக்கலாம். பெரிய பெரிய குற்றச்சாட்டுகளைக் கூட போட்டுக்கொண்டே இருக்கலாம். ஆனால் அதெல்லாம் நல்ல வழிக்கு வழிவகுப்பதாக ஆகாது.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கூறியது முறையற்றது என்று ஆளும் கட்சியினுடைய கொறடா அவர்கள் சொன்ன காரணத்தாலே நான் விளக்கம் சொல்கிறேன்.....

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. பீ. முகமது இஸ்மாயில்: பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் மாண்புமிகு உறுப்பினர் அனந்தன் அவர்கள் எவ்வளவு நேரம் பேசவேண்டும் என்று சமயம் குறிப்பிடப்படவில்லை, இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுவது இந்த விவாதம் இரண்டு நாட்கள் தான் நடக்கும் என்று சொல்லப்பட்டது. இப்போது 3-வது நாளாக நடைபெறுகிறது. நாளைக்கும் இந்த விவாதம் நீட்டிக்கப்படுகிற வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும் ஜனதா கட்சியில் முன்பு இருந்ததைப் போல் 2 உறுப்பினர்கள் அல்ல, தற்போது 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டும், திரு. குமரி அனந்தன் அவர்களை பேசவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு கட்சியில் இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தான் அவையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் 15 நிமிடம் கொடுத்து இருந்தும், திரு. குமரி அனந்தன் ஏறத்தாழ 40 நிமிடம் பேசியிருப்பதால், இத்தோடு அவர் முடித்துக்கொள்ள வேண்டும். ஒரு உறுப்பினரே பேசிக்கொண்டு இருந்தால் நேரம் போதாது. மற்றவற்றைப் பின்னொரு நாளில் பேசிக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன்: அரிசி விலை ஏறியிருப்பது மட்டுமல்ல அதிலே நமக்கு எப்படிப்பட்ட இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து அரிசி வாங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. அந்த ஒப்பந்தப் புள்ளி கோரப் பட்டபோது, 1 லட்ச ரூபாய் டெபாசிட் கட்டி ஒருவர் குவிண்டால் ஒன்று 360 ரூபாய் வீதம் சப்ளை செய்வதாகச் சொன்னார். ஆனால் 10,000 ரூபாய் டெபாசிட் கட்டிய ஒருவர் 375 ரூபாய்க்கு சப்ளை செய்வதாகச் சொன்னார். இரண்டாவதாகச் சொன்னவரை நிர்ணயித்து 1 லட்சம் டெபாசிட் கட்டி 360-க்கு சப்ளை செய்கிறேன் என்று சொன்னவருக்குக் கொடுக்காமல், 10 ஆயிரம் ரூபாய் கட்டி 375 ரூபாய்க்கு சப்ளை செய்கிறேன் என்று சொன்னவரிடம் அரிசி வாங்கியதால் நமக்கு ரொம்ப நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த அலுவலகத்தில் இருக்கும் அதிகாரிக்கு அந்த வியாபாரிகள் மாலைசூட்டியிருக்கிறார்கள் மற்றவர்கள் முன்னிலையில். இவைகளையெல்லாம் நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதற்காக நான் இங்கே எடுத்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

இன்றைக்கு அரிசனங்களுக்கு எல்லாம் நல்லது செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். உடனடியாக முடித்துவிடுவது நல்லது.

திரு. குமரி அனந்தன்: இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசுகின்ற நேரத்தில் சட்டம், ஒழுங்கு நீதி நிலைநாட்டப் பெறவில்லை என்று எடுத்துச்சொன்னது ஒரு புறம் இருக்க, விலைவாசி ஏற்றம் என்பது சுட்டிக்காட்டியது ஒரு புறம் இருக்க, நீங்கள் உலகத் தமிழ் மாநாடு நடத்தியதை நாங்கள் பாராட்டியிருக்கிறோம். ஆனால் தேவநேயபாவாணர் அவர்கள் தயாரித்த அகர முதலி, அவர் ஆராய்ச்சி செய்தவை முழுவதும் கூட இன்னும் வெளிவரவில்லை. அந்த அளவிற்கு அந்தத் துறை பின்தங்கி இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை எவரும் கேட்க முடியாத அளவிற்கு சில கிண்டலும் கேலியும் செய்கிறார்கள் அதைப் போக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மதுரை சிறையில் இருக்கிற கிணற்றின் பெரிய மூடி காணாமல் போய்விட்டது. அதை விற்று விட்டார்கள். அங்கேயிருக்கும் மின்விசிறி காணாமல் போய்விட்டது. ஆயிரம் அடி தண்ணீர் குழாய் காணாமல் போய்விட்டது. அங்கே இருக்கும் டைனிங் டேபிள் காணோம். திருடர்களை சிறையில் அடைக்கிறோம். ஆனால் அந்தச் சிறைச்சாலையில் இருக்கும் அதிகாரிகளை நாம் என்ன செய்கிறோம். எங்கே அடைப்பது? இதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதை பாராட்டி, ஜனதா கட்சியின் சார்பாக அதை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11.40)

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் வழிமொழிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் மீது அகில இந்திய பார்வெர்டு பிளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் 1980-ல் நடந்த தேர்தலில் அண்ணா தி.மு.க.வுடன் தோழமை கொண்டு, எங்களுடைய இயக்கமும்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *** அமைச்சரைப் போடுவதிலே உள்நோக்கம் கற்பிப்பது என்று சொன்னால இதைவிட மோசமாகக் கூட மற்றவர்களால் சொல்ல முடியும் (கூச்சல் —குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவையில் யார் யார் பங்கு பெறுவது, யார் யார் பொறுப்பேற்க வேண்டும் என்பதை எல்லாம் முடிவு செய்யவேண்டிய முழு உரிமையும் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்ற முதலமைச்சருக்கு உண்டு. ஆகவே முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது என்ன காரணத்தைச் சொன்னார்கள் என்பதுதான் முக்கியமே தவிர அதற்கு நோக்கம் கற்பிப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர்கள் மீனவப் பெருங்குடி மக்களின் சார்பாக ஒருவர் அமைச்சராக இருக்க வேண்டும் என்று கருதி ஒருவரை நியமித்தேன் என்ற அளவுக்குத்தான் முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் இதுதான் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நோக்கம் கற்பிப்பது என்று ஆரம்பித்தால் அது நல்லதொரு சூழ்நிலையினை ஏற்படுத்தாது. ஆகவே நோக்கம் கற்பிக்க வேண்டாம். இன்ன காரணத்திற்காக அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது என்று சொல்வோமேயானால் அது அவையின் மதிப்பையும, கௌரவத்தையும் மிக மிகக் குறைப்ப தாகும்

அதேமாதிரி கர்நாடக மாநில பிரச்சினையையும் இங்கே இழுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பிரச்சினையை இங்கே கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. எனவே அதையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கலாம். இதையும் அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட்டு அதையும் அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிடலாம். நல்ல கருத்துக்களை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசி அமைச்சரவையின் மீதும் ஆட்சியின் மீதும் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளையும், குறைகளையும் முறையோடு எடுத்துச் சொல்வதுதான் மாண்புமிகு திரு. குமரி அனந்தன் போன்ற முன் வரிசையிலே இருக்கின்ற மிகச் சிறந்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன வாசகங்களும், திரு குமரி அனந்தன் அவர்கள் சொன்ன வாசகங்களும் நீக்கப்படவேண்டும் என்று உத்தரவிடுகிறேன். திரு. மணிமாறன் அவர்கள் பேசிய வாசகங்களையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன். *

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. குமரி அனந்தன்: இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) விலை அப்படியே இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். விலை ஏறவில்லையா? பல வீடுகளிலே வாங்க முடியாத காரணத்தாலே விலை ஏறவில்லையா என்பதைப் பற்றி நம்மிலே பலர் ஏழை எளியவர்களிடம் தொடர்பு உடையவர்கள் என்ற காரணத்தால் நமக்குத் தெரியும். அரிசி இன்றைக்கு படி 8 ரூபாய்க்கு விற்றுக்கொண் டிருக்கின்றது. புளி ஒரு கிலோ 12 ரூபாய்க்கு விற்றுக்கொண்டி ருக்கின்றது.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு ஆளுகின்ற கட்சியினர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், நாங்கள் குடிசைகளுக்கு விளக்கு ஏற்றியிருக்கிறோம் என்ப தாகும். அவர்கள் 2 ரூபாயில் குடிசைகளுக்கு விளக்கு ஏற்றி யதைப் பாராட்டுகிறேன். இன்னும் நிறைய குடிசைகளுக்கு விளக்கு ஏற்றித் தரவேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இந்த 2 ரூபாய் மின் கட்டணத்தைக் கட்டுவதற்கான கட்டிடம் தேடி அலைகிறபோது அந்த மக்களுக்கு 10 ரூபாய் செலவு ஆகிறது. ஆகவே அந்தக் கட்டணத்தை பணவிடைத் தாள் என்கிற மணியார்டர் மூலம் பெறவோ அல்லது அதற்கென தனி நபர் ஒருவரை அனுப்பி அவர் மூலம் வசூலிப்பதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, மீனவ சகோதரர்கள் துன்பப்படுகிற போது, அவர்களுக்கு நல்லவிதத்தில் இந்த அரசு உதவி செய்து வருகிறது. என்னுடைய தொகுதியான திருவொற்றியூர் தொகுதி யில் கடந்த சில ஆண்டுகாலமாக கடல் அரிப்பு ஏற்படுவதும், குடிசைகள் இழுத்துச் செல்லப்படுவதும், அந்த மக்கள் குமுறி எழுவதும், அரசாங்கம் அவர்கள் கண்ணீரைத் துடைப்பதற்காக உதவிவழங்குவதும் என்று மாறி மாறி நடந்துவருகிற ஒரு நிகழ்ச்சி யாகும். குடிசைகள் அடித்துக்கொண்டு போய்விட்டது என்று சொன்னால், ஒரு குடிசைக்கு 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. நேற்றுகூட 150 குடிசைகள் ராஜாசத்திரம் முதல் திருவொற்றியூர் வரையில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 5 அடிக்கு சாலை அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் நான் மீனவத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து அந்த மீனவர்களுக்கு நிரந்தரமான ஒரு வாழ்வு கிடைக்கும் வகையில் வீட்டு வசதிகளைச் செய்துதாருங்கள். ஆண்டுக்காண்டு கொடுத்துவரும் உதவித் தொகை ஏறத்தாழ 10 லட்சம் அளவுக்கு மேல் இருக்கும். ஆகவே, அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நீங்களே நிரந்தர வீடு கட்டிக் கொடுத்துவிடலாம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏறத்தாழ 37 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. மற்றவற்றை இன்னொரு நாளில் பேசிக்கொள்ளலாம் உங்களுக்கு 15 நிமிடம் தான் அலுவல் ஆய்வுக்குழுவில் ஒதுக்கப்பட்டது.

(திரு. எஸ். ஆண்டித்தேவர்) [1983 நவம்பர் 10

அப்படிச் சொல்லிய அந்த இயக்கங்கள் இடதுசாரி இயக்கங்களாக இங்கே இயங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் ஒரிடத்தில்தான் வேறுபட்டார்கள் என்பது அவர்களுக்கும் தெரியும். இங்கே இந்த மன்றத்திலே நுழைவு வரியை கொண்டு வருகின்றபோது, நுழைவு வரி போடுவது சாதாரண மக்களைப் பாதிக்கிறது என்று இந்த மன்றத்திலே வெளிநடப்பு செய்கின்ற போது அகில இந்திய பார்வர்டு பிளாக்கை சேர்ந்த நாங்களும், ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற வரி கூடாது, அதை அனுமதிக்க முடியாது என்று வெளி நடப்பு செய்தோம். வெளி நடப்பு செய்ததற்குப் பின்னாலே அந்த இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த 9 இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் அழைப்பு கொடுத்த உடனேயே அவர்களோடு சேர்ந்து ஒரு போராட்டத்தை அறிவித்தார்கள். வரி கொடுப்பவர்கள் ஏழை எளியவர்கள். இந்த நாட்டிலே வரி கொடுப்பவர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்கிறபோது, வியாபாரிகளுடைய போராட்டத்தைத் தலைமை தாங்கி திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட் இயக்கமும் நடத்தியது. வியாபாரிகளிடம் ஒரு சிக்கல். என்னவென்றால், அந்த வியாபாரிகள் சங்கத் தலைவர் இங்கே இருக்கிற அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இது எங்களைப் பாதிக்காது. கணக்கு வைப்பதிலே சிக்கல் இருக்கிறது, என்று சொல்லி எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரிகளுக்குத் தலைமை தாங்கி கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும் போராடினார்கள். எப்போது வியாபாரிகளுக்கும், முதலாளிகளுக்கும், கம்யூனிஸ்ட் இயக்கம் துணை போனது என்பதுதான் என்னுடைய கேள்வி. இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அழைப்பை ஏற்று, தோளோடு தோள் நின்று போராடுகின்ற நேரத்தில் நான் ஒன்றை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பாராளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரித்தது என்பதற்காக எதிர்த்தவர்கள் அன்றைய தினம் பாண்டிச்சேரியில் இந்திரா காங்கிரசோடு திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டு இருக்கிறபோது கம்யூனிஸ்ட் கட்சிகள், அவர்களோடு உறுதுணையாக நின்றார்கள் என்ற அந்தச் செய்தியினை, உண்மையினை, மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் சேர்ந்து, பாண்டிச்சேரியில் வைத்திருந்த மந்திரி சபையினை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்திரா காங்கிரசிற்கும் உறவு முறிந்ததற்குப் பிறகு தான் மார்க்சிஸ்டு கட்சி இதர கட்சிகளோடு—அதுவும் பொதுப் பிரச்சினையில்-கூட்டு இயக்கம் நடத்திக் கொண்டுவருகிறோம். அதுதான் உண்மை.



1983 நவம்பர் 10]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: நான் சொல்வது, வியாபாரிகள் போராட்டம் நடத்துகின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகம், அழைப்பைக் கொடுத்து, அதிலே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும், இடதுசாரி இயக்கங்களும், பங்குகொண்டு, போராட்டம் நடத்துகின்ற தினத்திலே, பாண்டிச்சேரியிலே திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. அதற்குப் பின்னாலேதான் முறித்துக் கொண்டார்கள். முறித்துக்கொண்ட பின்னர், தொடர்பு வைத்ததை நான் சொல்லவில்லை. ஆதரித்தார்கள் என்று தங்களது கொள்கையை மாற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்த இயக்கங்கள் பாண்டிச்சேரியிலே காங்கிரஸ்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற நேரத்திலேதான் இந்தப் போராட்டம் நடந்தது என்பதனை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று சொன்னேன். பாண்டிச்சேரியிலே ஆட்சிக் கவிழ்ந்ததற்குப் பின்னல் அவர்கள் தொடர்ந்து அவர்களோடு இயங்குவதுபற்றி நான் சொல்லவில்லை. ஆகவே இந்திரா காங்கிரசைப் பற்றி பேசுகின்றவர்களை அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சொல்லுகின்றபோது, இன்னொன்றையும் சொல்லலாம். அது கடந்த காலத்திற்கு முன்னாலே நடந்தது. அஸ்ஸாமிலே காங்கிரஸ் ஆட்சி கவிழ்கின்ற நேரத்தில் அவர்கள் எடுத்த நிலை காங்கிரஸ் கட்சியை பாதுகாத்தது என்பதும் இந்த நாடு அறிந்த உண்மை. ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தோடு அவர்கள் வைத்திருக்கின்ற உறவு இப்போது நீடிப்பதைப் பற்றியல்ல, நான் சொல்வது கொள்கை ரீதியாகச் சொல்கிறேன். இன்றும் அண்ணா தி. மு. க. காங்கிரசோடு உறவு நெருங்கிவிட்டது என்று சொல்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மத்திய அரசுடன் உறவு, தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், ஓரளவு நன்றாக இருக்கிறது, நிதி கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அது அரசியல் கட்சிக் கொள்கை உறவு என்று எடுத்துக் கொள்ளமுடியாது. அமைச்சர் காளிமுத்து பேசியதைப் பற்றிச் சொன்னார்கள். காளிமுத்து பேசுகின்றபோது வாடிய பூ மணக்காது, கருவாடு மீனாகாது என்பதற்கு. எப்போது கருவாடு மீனானது என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கு முதல் அமைச்சர் அவர்களே, ஒரு கூட்டத்திலே, திருமண மண்டபத்திலே சொன்னார்கள். காளிமுத்து அவர்கள் எதைப் பேசினாலும் அதை என் அனுமதியோடு தான் பேசுகிறார்கள் என்று அர்த்தம் என்று சொன்னார்கள். ஆகவே காளிமுத்து தனது பேச்சிலேயிருந்து இன்று மாறி விட்டார் என்று எந்த இடத்திலேயும் அவர்கள் சொல்லவில்லை தமிழகத்திலே முதல்வர் அவர்கள் சொல்லவில்லை. காளிமுத்து அவர்களுடைய பேச்சு முதல்வர் அவர்களுடைய அங்கீகாரத்தோடுதான் பேசுகிறார் என்பதைத் தெளிவாக சொன்னதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது முதலமைச்சர் அவர்கள்

(திரு. எஸ். ஆண்டித்தேவர்) [1983 நவம்பர் 10

சேர்ந்து தோழமையாக நின்று, வெற்றிபெற்று வந்தார்கள்.
அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் வேறுசில எதிர்க்கட்சி
களைச் சேர்ந்தவர்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப்
பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்
களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

அதிலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்
அவர்கள் ஒரு உண்மையைச் சொன்னார்கள். நாங்கள் இந்த
தீர்மானத்தைக் கொண்டுவந்து வெற்றிபெற்றுவிடுவோம்
என்பதற்காக அல்ல. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகிற
போதே எங்களுக்குத் தெரியும் நாங்கள் தோல்வி அடைந்து
விடுவோம் இருந்தாலும் இதைக் கொண்டுவருகிறோம் என்று
சொன்னார்கள்.

அவர்கள் இந்த மன்றத்தில் நேற்றையதினம் நடந்து
கொண்ட விதத்தைப் பார்த்தோம். அதிலிருந்து என்ன
தெரிகிறது என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே
எதிர்க்கட்சியாக இயங்குவதை விட்டுவிட்டு, எதிரிக் கட்சியாக
இயங்கும் தன்மையிலே உள்ளார்கள். அவர்கள் இந்தத்
தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியிருந்தால்கூட நாம்
அதைப் பாராட்டியிருக்கலாம் ஆனால் மாண்புமிகு உறுப்பினர்
உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு
வந்தார்கள்.

சென்ற சட்டமன்ற நடவடிக்கை வரையில் அண்ணா
தி. மு. க. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வந்தது.
நான் அதைப் பாராட்டினேன் என்று பேசினார்கள். ஆனால்
அண்ணா தி. மு. க. கழகமும் அதனுடைய முதலமைச்சரும்
ஒரு இடத்திலே தடம் புரண்டுவிட்டார்கள் என்று ஆரம்பித்து,
இந்த அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசுவதை
விட்டு மத்தியில் இருக்கிற சர்வாதிகார அரசு இந்திரா
காங்கிரஸ் அரசு என்பதைப்பற்றி தெள்ளத்தெளிவாகச்
சொன்னார்கள்

சர்வாதிகாரப் போக்கினைக் கண்டிப்பதில் அகில இந்திய
பார்வேர்டு பிளாக் கட்சி தெள்ளத்தெளிவாக இருக்கிறது.
மத்தியில் ஆளுகிற கட்சியாக இருக்கிற இந்திரா அரசு சர்வாதி
காரப் போக்கு உடையது என்பதையும் மத்திய அரசு மாநில
அரசுகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்
என்பதையும், மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள்
கொடுப்பது மட்டுமல்ல; தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை
கலைக்கக்கூடாது என்பதையும் எடுத்துரைப்பதிலே அகில
இந்திய பார்வேர்டு பிளாக் கட்சி தெள்ளத்தெளிவாக
இருக்கிறது.



1983 நவம்பர் 10] (திரு. எஸ். ஆண்டித்தேவர்)

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக்
மத்திய அரசு தமிழ்நாட்டிலே திராவிட
கலைப்பதைப் பொறுத்தவரையில், மத்தியில் ஆட்சியில்
முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, அதற்குப் பின்னாலும்
இருந்த இந்திரா அரசு கலைத்தது. வருக என்று
திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களை வருக, பல்வேறு
வரவேற்று, தமிழ்நாட்டில் கூட்டு சேர்ந்து இங்கே அண்ணா
தேர்தல்களிலே நின்றார்கள். அதைப்போன்று மத்திய
தி.மு. கழகத்தை சர்வாதிகாரப் போக்கினைக்கொண்ட கட்சி
அரசு கலைத்தபோது அகில இந்திய பார்வேர்டு பிளாக் அண்ணா
இந்திரா சர்க்காரை கண்டிக்க தவறியதில்லை. இருக்கிற
தி.மு. கழக அரசை கலைத்த பின்னாலும் மத்தியில் மாநிலங்களுக்கு
அந்த சர்வாதிகாரப் போக்கு குறைய வேண்டும், மாநிலங்களுக்கு
அதிக அதிகாரம் அளிக்க வேண்டும் என்று சொல்கிறோம்.

அண்ணா
தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற பார்வார்டு
தி.மு. கழகம் பாடுபடுகின்றபோது அகில இந்திய இயக்கங்களும்
பிளாக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும மற்ற வெற்றி
அவர்களோடு தோளோடு தோளாக நின்று தேர்தலிலே
பெற்றோம், மக்கள் வாக்களித்தார்கள்.

அதற்குப் பின்னாலே இந்திரா காங்கிரஸ் உறவு அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நெருங்கி வருகிறது என்ற
குற்றச்சாட்டைச் சொன்னார்கள். எந்த இடத்திலே எப்படி
நெருங்கி இருக்கிறது என்பது எங்களைப் போன்றவர்களுக்கு
இன்னும் தெரியவில்லை.

நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இடதுசாரி
கட்சிகள் என்று பந்துக் கட்சிகளாக இந்த மன்றத்திலே இயங்கிய
போது, பெரியகுளம் தேர்தல் வந்தபோது, அந்த இயக்கத்தைச்
சேர்ந்தவர்கள் சொன்னார்கள். மத்தியிலே அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக்கழகமும் பாராளு
மன்றத்திலே ஆதரிப்பதைப்போல நடந்துகொள்கின்றன.
ஆகவே அவர்களை எதிர்க்க வேண்டும் என்று சொன்னார்கள்.
அப்படி எதிர்க்கவேண்டும் என்று சொல்லி, பெரியகுளம்
தேர்தலில் தனியாகப் போட்டியிடவேண்டும் என்று போட்டி
யிட்டார்கள். திராவிட முன்னேற்றக்கழகமும், அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகமும் பாராளுமன்றத்திலே இந்திரா
காங்கிரசை ஆதரிக்கிறது என்பதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியும், இடதுசாரி இயக்கங்களும் அதை கொள்கையாக
வைத்து பெரியகுளத்தில் தேர்தலிலேபோட்டியிட்டார்கள். நான்
அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் பெரியகுளம் தேர்
தலிலே இந்திரா காங்கிரஸ் தனியாக நின்ற நேரத்தில் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் 1980-க்குப் பின்னாலே தங்கள்
கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக
அகில இந்திய பார்வார்டு பிளாக் பெரியகுளம் தேர்தலிலே
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தது.

குறுக்கிட்டு எங்களுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் எந்தவிதமான
உடன்பாடும், யாரும் பேசவில்லை எப்போதும் பேசவில்லை
என்று சொன்னதற்குப் பின்னாலேயும், நம்பிக்கையில்லாத்
தீர்மானத்திலே அதை விரிவாகப் பேசினார்கள் என்பதற்காக
தான் நான் சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத்
தீர்மானம் என்பது ஒரு அரசு மீது குற்றச்சாட்டுக்களைச்
சொல்லி, இது மக்களுக்கு விரோதமான சர்க்கார், தேர்ந்
தெடுத்த மக்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறது என்று
சொல்வதை விட்டுவிட்டு, ஏதோ அரசியல் கட்சியோடு கூட்டுச்
சேர முயற்சிக்கிறார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் ஒரு
ஆட்சியைப் பற்றிக் குறை சொல்வதை எங்களுடைய இயக்கம்
ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அதேபோல் இவர்கள் இந்தத் தேர்தலுக்குப் பின்னால்
மக்களுடைய நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்பதற்கு
ஆதாரமாக என்ன சொன்னார்கள், என்று பார்த்தால்,
பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தவில்லை, கூட்டுறவுச்
சங்கத்தின் தேர்தல்கள் நடத்தவில்லை என்று சொன்னார்கள்.
இந்தப் பிரச்சினை, மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து
உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோதும், இப்போது
மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு இருக்கின்றபோதும்,
பல்வேறு சர்வகட்சிகள் கூட்டங்களைக் கூட்டியபோது நான்
கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அத்தனை இயக்கங்
களைச் சேர்ந்தவர்களும் வந்து பேசியிருக்கிறார்கள். இந்த
அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் இட
ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு
வந்திருக்கிறார்கள் என்று நான் பல்வேறு சந்தர்ப்பங்களிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெளிவாக எடுத்துச்
சொல்லியிருக்கிறேன். பழைய சட்டத்திலே, 1958 பஞ்சாயத்து
சட்டத்தின்கீழ் நடத்தினால் கோர்ட்டுக்குப் போக முடியாது
ஆகவே அப்படி நடத்துங்கள் என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே
எங்களுடைய இயக்கத்தின் சார்பாக வலியுறுத்தி இருக்கிறோம்.
அதை வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் இட ஒதுக்கீடு
வேண்டும் என்று சொல்லிவிட்டு, கோர்ட்டுக்குச் சென்று,
அதற்கு தடையை வாங்கிவிட்டு, பஞ்சாயத்துத் தேர்தல்
நடத்தவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாக பல்வேறு சந்தர்ப்
பங்களில் இந்த மன்றத்திலே, தனி அதிகாரிகளுக்கு கால
நீட்டிப்புக் கேட்கின்றபோதெல்லாம் பேசியதை வைத்து ஒட்டு
மொத்தமாக இங்கே கொண்டு வருகிறார்கள் என்று
சொன்னால் நான் இப்போது மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர்
துரைமுருகன் அவர்கள் சொன்ன கருத்தை வலியுறுத்த
விரும்புகிறேன். நாங்கள் தோற்றுவிடுவோம் என்று தெரிந்
தாலும், இதைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால்
உங்களது நிலையைத் தேர்தல் வருகிறது, தேர்தல் வருகிறது



என்று பேசுகிறீர்களே, இந்தச் சட்டம் வந்ததோடு முடிந்து
விடுமா என்று அவர்களால், எதையாவது சொல்லி, அது
பத்திரிக்கையின் மூலமாக நாட்டுமக்களுக்கு வரவேண்டும், அதன்
மூலம் நாட்டுமக்களுக்குத் திருப்பிவிடலாம் என்று நினைப்பார்
களேயானால் அது மிகப் பெரிய தவறாகும். காரணம்
இன்றைய தினம் காலையில் பத்திரிக்கையிலே வந்ததைப் பார்த்த
வர்கள் இந்த மன்றத்தின் மீதே நம்பிக்கை வைக்க மாட்டார்கள்
என்று நான் கருதுகிறேன். ஏறக்குறைய 58 நிமிடங்கள் என்ன
நடந்தது? நான் சிறிய வயதிலே இருக்கும்போது, பார்த்
திருக்கிறேன். சினிமாவுக்குப் போகும்போது, அந்தப் படத்தைத்
தள்ளிக்கொண்டு போகிறவர்கள் சொல்வார்கள், கோபாலா
ஏன் சார், எங்கே போறே, சினிமாவுக்குப் போறேன், என்று.
இப்படிப்பட்ட கோஷத்தை ஏறக்குறைய 58 நிமிடங்கள் பேசி
இருக்கிறார்கள். 58 நிமிடங்கள் இந்த மன்றம் இப்படி
நடக்கிறது என்று சொன்னால், என்ன செலவாகிறது. நாட்டு
மக்கள் என்ன நினைப்பார்கள். தமிழகத்தினுடைய ஒட்டு
மொத்தமான பிரச்சினையை அலசி ஆராய்ந்து பேசித்
தீர்ப்பதைவிட, இந்த மன்றத்திலே நிர்ணயிப்பதைவிட இவர்கள்
இப்படிச் செய்கிறார்கள் என்றுதான் வருத்தப்படுவார்கள்,
நான்கூட நினைத்தேன். மாண்புமிகு மன்றத்தின் தலைவர்
இந்த நிகழ்ச்சி நடந்தபோது பார்வையாளர்கள் மாடத்தில்
யாரையும் அனுமதிப்பது இல்லை என்று சொல்வார்கள் என்று
பார்த்தேன். பத்திரிகையில் எழுத வேண்டாம் என்று
சொன்னாலும் பார்வையாளர்களாக வந்தவர்கள் சிரிக்கிறார்கள்.
இந்த நாட்டு மக்களுடைய நம்பிக்கையைப் பெறவேண்டும் என்று
சொல்லி, இந்த அமைச்சரவையின் மேல் நம்பிக்கையில்லாத்
தீர்மானத்தைக்கொண்டு வந்த நீங்கள் இந்த மன்றத்தின் மீதே
மக்கள் நம்பிக்கை இழக்கும் அளவுக்கு 58 நிமிடங்கள் வெறும்
கூச்சல், குழப்பம் என்று சொல்லி இங்கேயும் பத்திரிக்கை
யிலேயும் எழுதினாலும்—உள்ளே அமைதியாக உட்கார்ந்திருந்த
நாங்கள் எழுப்பட்ட கோஷங்களை பார்த்தபோது, அமைதியாக
இருந்த எங்களுக்கெல்லாம் வேதனையாக இருந்தது. இன்னொரு
முறை இந்த மன்றத்திற்கு தேர்தலுக்காக நிற்க வேண்டுமா
என்ற எண்ணம் கூட எழுந்தது. சட்டமன்ற உறுப்பினர்களில்
எழுந்து நின்று ஒருவர் சொல்ல, மற்ற அத்தனைபேரும்
அதற்கு கோஷம் போடுகிறபோது அந்த கோஷத்திற்கு எதிர்
தரப்பிலேயிருந்து வந்ததையும் கவனிக்க வேண்டும். நீங்கள்
ஒன்பது லட்சத்தை சொன்னால், நாங்கள் கோடியைச் சொல்
வோம் என்று போட்டி போட்டுச் சொன்னார்கள். இப்படி
57 நிமிடங்கள் நடந்தது. யார் இந்த கோஷத்தை எழுப்பி
வேண்டும். உங்களைப்போல இந்த மன்றத்திலே உறுப்பினர்
களாக இல்லாதவர்கள் தாம் சொல்லியிருக்கவேண்டும்.
ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு வந்திருக்கும்
நீங்கள் பேசும்போது ஒரு குற்றச்சாட்டை 9 லட்சம் என்று
சொன்னால், இன்னொரு குற்றச்சாட்டை 100 கோடிக்கு

சொல்வோம் என்ற வகையில் கோஷங்களை எழுப்பக் கூடாது? இது தேவைதானா? நாட்டு மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கின்ற பிரச்னையா இது.

தமிழகத்திலே ஒட்டு மொத்தமாக தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மற்ற மாநிலங்களிலேயெல்லாம் இல்லாத ஒரு சிறந்த திட்டமாக அதைக் கொண்டு வந்தார்கள் என்றால் அதை நாடு பாராட்டு கிறது. தன்னிறைவுத் திட்டத்திலே குறைகள் இருக்கிறது என்று நாங்களும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்; பல்வேறு இடங்களிலே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன அந்தக் குற்றச் சாட்டுகளை அமைச்சர் அவர்களிடமும் கூட நான் சொல்லியிருக் கிறேன். ஒரு கேள்வியாகக்கூட நான் எழுதி அனுப்பியிருக் கிறேன். நெல்லை மாவட்டத்திலே ரோடு போடுவது சம்பந்த மாக–முகவை மாவட்டத்திலே இருக்கிற ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே ரோடு போட்டதாக காட்டி எடுத்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையிலே ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறேன். இன்னும் பதில் வரவில்லை.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒரு ஜனநாயக நாட்டிலே அடிக்கடி நடக்க வாய்ப்புண்டு. பெரிய திட்டங்களை நிறை வேற்றுகிற போது சிறு சிறு தவறுகள் இருக்கும். அதற்கு நடவடிக்கை உண்டா என்று தான் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்தில், நான்தெளிவாகச் சொல்கிறேன். 1971 ஆம் ஆண்டு; அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே என்னுடைய தொகுதி யிலேயிருந்த காலத்தில் 17 ஊராட்சி மன்றத் தலைவர்களும் அந்த ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவரும், கிணறு வெட்டாம லேயே பணம் எடுத்தார்கள். ரோடு போடாமலேயே பணம் எடுத்தார்கள் பாலம் கட்டாமலேயே பணம் எடுத்தார்கள் என்று வழக்குகள் இருந்தன. அதிலே நான் சிலருக்கு வழக்கறி ஞராக இருந்தவன் என்ற முறையிலே சொல்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) அதிலே ஒரே ஒருவருக்கே 35 ஆண்டுக்காலம்—கன்கரண்ட்ஸ் இன்பிரசன்ட்மெண்ட்—என்று சொன்னதன் பேரிலே அந்த என்ஜினியர் தூக்குப்போட்டு இறந்துவிட்டார். அந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலை வருக்கு 3 வழக்குகளில் 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை. இன்னும் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவ ராகத்தான் இருக்கிறார். சென்ற முறை என்னோடு தேர்தலிலே போட்டியிட்டார்.

அவர்களுடைய வழக்கு உச்ச நீதிமன்றத்திலே வந்து நீதிபதி அவர்கள் கருணை கூர்ந்து சொன்னார், இந்தக் கட்டை படிப்பதற்கே 5 ஆண்டுக்காலம் ஆகும்போல் இருக்கிறது. அதை விட நீங்கள் ஒத்துக் கொண்டால் மறுபடியும் தேர்தலிலே நிற்பதற்கு உகந்தவாறு 50 ரூபாய் அபராதம் போடுகிறேன் என்று சொல்லி, ஒத்துக்கொண்டு, அபராதம் உச்ச நீதிமன்றத்



திலே கட்டினார்கள். இப்படி ஜனநாயக மரபிலே நடை பெறும் நாட்டிலே, பெரிய திட்டங்களை நிறைவேற்றுகிறபோது இவ்வாறு நடைபெறுவது சாத்தியம் தான் என்பதை இந்திரா காந்தி அம்மையார் அவர்களே ஒத்துக் கொள்ளவில்லையா. கான்டிராக்ட் சிஸ்டத்தை ஒழிக்க முடியாது. அதிலே இருக் கின்ற ஊழல்கள் உலகம் எங்கேயும் இருக்கின்றது. இங்கே கான்டிராக்ட் முறையிலே ஊழல் இருக்கிறது என்று சொல்கிற போது, அது உலக நாடுகள் அத்தனையிலும் இருக்கிறது; அதைத் தவிர்க்க முடியாது என்று இந்திரா அம்மையார் அவர்களே சொன்னார்கள்.

அதேபோல வீட்டுக்கு ஒருவர் வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொன்னாலும் கிண்டல் செய்கிறார்கள். வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கமுடியவில்லை. இன்றுநாட்டிலே அதனுடைய புள்ளி விவரம் ஏறிக்கொண்டே இருக்கிறது என்று சொல்கிற நேரத்தில் தமிழக அரசு நான் அதை ஒழிப்பேன் என்று சொன்னால், அந்த முயற்சியே பெரிது என்று பாராட்டாமல், அந்த முயற்சியே செய்யக்கூடாது என்று சொல்லக்கூடாது. ஒரு கோடி குடும்பம் வேலை இல்லாமல் இருக்கிறதே என்று சொல்கிறார்களே. இப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அரசு அலுவலர்களை எல்லாம் அதிலே கணக்கிலே இல்லை என்று கருதுகிறார்களா? எத்தனை லட்சம் பேர்கள் தமிழகத்திலே வேலையிலே இருக்கிறார்கள். அவர்களு டைய குடும்பமும் அதில் சேர்ந்தது தானே! ஏறக்குறைய மதிய உணவிற்காக ஒரே நாளில் 35 ஆயிரம் பேர்களை பணியாளர் களாகப் போட்டிருக்கிறார்கள்.

(நண்பகல் 12–00)

அந்த 35 ஆயிரம் குடும்பங்களுக்கும் வேலை கிடைத்திருக் கிறது. இப்போது அந்த 35 ஆயிரம் பேர்கள்,இன்னும்மற்றும்உள்ள ஊழியர்கள், அலுவலர்கள் பணியாற்றுகிறார்களோ அவர்கள் போக மற்றக் குடும்பங்களுக்கும் கொடுக்கிற முயற்சியை எனது ஆட்சிக் காலத்திலே எடுப்பேன் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதை மனதாரப் பாராட்ட வேண்டும். அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக் கிறார்கள், அந்த முயற்சியை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்று கின்ற முறையிலே நாம் படித்த பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நான் சில புள்ளி விவரங் களைச் சொல்கிறேன். இந்தப் புள்ளி விவரங்களையும் நீங்கள் எடுத்துக்கொண்டால் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஹையர் செகண்டரி பள்ளிகள் ஆரம் பிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். எனது

தொகுதியிலே 2 ஹையர் செகண்டரி பள்ளிகள்-கள்ளர் ஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளிலே ஒவ்வொன்றிலும் 11 ஆசிரியர்கள் போடப்படாமல் 2 ஆண்டுகாலமாக அந்த இடங்கள் காலியாகவே இருக்கின்றன. படித்த பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக நியமிப்பதற்கு அரசு தயங்குகிறதா? அமைச்சர்கள் தயங்குகிறார்களா? அந்த உண்மையை அதிகாரிகள் அரசுக்குச் சொல்ல தயங்குகிறார்களா? கள்ளர் பள்ளிகளிலே, 247 பள்ளிகளிலே, 120 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவைகள் இரண்டாண்டுக் காலமாக காலியாகவே இருக்கின்றன. அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டால் 6 மாதம் கழித்தால் ஏ.ஜி. சாங்ஷன் வேண்டுமென்று சொன்னார்கள். அரசு ஆணை வேண்டுமென்று சொன்னார்கள். அரசு ஆணைக்காக எழுதினால் 6 மாதத்திற்கு மேலாகிறது அரசுக்கு எழுதினால் ஆண்டு மத்தியாகி விட்டது, ஜூன் மாதம் வரவேண்டும் என்று சொல்கிறார்கள் இப்படி காலியாக இருக்கிற ஸ்தானங்களை பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று பல்வேறு துறைகளிலே பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளையும் துரிதமாக பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி பூர்த்தி செய்யாமல் விடக்கூடாது. அப்படி பூர்த்தி செய்தால் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உகந்ததாக இருக்கும். இங்கே பெண்கள் கற்பழிப்பு, திருட்டு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள், மாவட்ட போலீஸ் அதிகாரி இருக்கிறார் என்றால் டெபுடி எஸ்.பிக்கள் 4 போகள் இருக்கிறார்கள் என்றால் எல்லாம் வேக்கண்ட். ஒருவர் இன்சார்ஜ என்ற நிலை இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் இன்சார்ஜ் வேலை பார்ப்பது மிகவும் கடுமையானது மற்ற வேலைகளில் இன்சார்ஜ் போடலாம். ஆனால் போலீஸ் துறையிலே உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்யாவிட்டால் சரியல்ல. இப்போது இங்கே சொல்லப்பட்டதே திருட்டுகள், கற்பழிப்புகள் நடக்கின்றன என்று. கற்பழிப்பு எப்போதும் நடக்கிறது. திருட்டுக்கள் மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திலே குறைந்திருக்கிறது என்று சொன்னாலும்கூட உண்மையிலே நடப்பதைப் பார்க்கிறபோது சென்னையிலே ஸ்கூட்டரிலே செல்கிறபோது சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடுதல், பேங்க் அதிகாரியை கொன்றுவிட்டு பல லட்சக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்துச் சென்று விடுதல்—இவைகளைப் பார்க்கிறபோது நம்முடைய மாநில போலீஸ், குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிப்பதில் தீவிரமாக இருப்பார்கள். ஆகவே, மற்றவர்கள் குறை சொல்வதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ளாமல் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே காலியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு. சித்தன் அவர்கள் இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். இந்தத் தீர்மானத்தை நீங்கள் ஆதரித்துப் பேசுகிறீர்களா? அல்லது எதிர்த்துப் பேசுகிறீர்களா? என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று சொன்னபோது உடனே அவர்கள் செந்தமிழில் —நான் தமிழில் கேட்ட கேள்விக்கு விடிய விடிய இராமாயாணம் கேட்டு காலையிலே சீதைக்கு இராமன் சித்தப்பன் என்று கேட்கிறாரே என்று சொன்னார். அவர்தான் விடிய விடிய இராமாயணம் பாடினார். காலையிலே சீதைக்கு இராமன் சித்தப்பன் என்று முடித்தார். நான்தான் அதைக் கேட்டேன். ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறது. சட்டப் பேரவையிலே இந்தத் தீர்மானத்தின்மீது சித்தன் பேசியபோது நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை ஆதரித்ததாகவோ, எதிர்த்ததாகவோ இல்லை என்று மக்கள் குரல் பத்திரிகை எழுதியிருக்கிறது. இப்போது அவருக்குத் தெரியும் யார் விடிய விடிய இராமாயணம் படித்துவிட்டு முடிக்கிறபோது சீதைக்கு ராமன் சித்தப்பா என்று முடித்தது என்பதை அவருக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) நாட் யீல்டிங், பத்திரிகையில் வந்ததைப் பற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சித்தன் என்ற பெயரைச் சொன்னாலே எழுந்து கொள்வதா? அவர் பேசியதைப் பற்றித்தான் சொன்னார். அதில் தவறு ஒன்றும் இல்லை. நீங்கள் பேச்சைத் தொடரலாம்.

திரு.இல.பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் வந்ததைப்பற்றி சொல்கிறார். அதைப்பற்றி நாங்கள் விளக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம்கூட சில நேரங்களில் பத்திரிகைகளைக் காட்டித்தான் பேசுகிறோம். அதையும் நாம் நம்பித்தான் ஆக வேண்டும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த மன்றத்தில் இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சியை நாம் எல்லாம் எதேட்ச்சதிகார சக்தி மத்திய அரசு ஆட்சி பொறுப்பில் இருந்துகொண்டு மாநில அரசுகளுக்கு உரிய பங்கினை வழங்காத அரசு என்று நாம் எல்லாம் குற்றம் சாட்டுகின்ற அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தமிழகத்தில் தொழில் வளம் குறைந்துவிட்டது என்று நம மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இன்று காலையில் பதில் அளிக்கின்ற நேரத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்திலே மத்திய அரசு தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு சட்டங்கள் மூலமாக இடையூறாக இருக்கின்ற சட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். 180 மாவட்டங்களை இந்தியா பின்தங்கிய மாவட்டங்கள் என்று

முழுவதும் அறிவித்து இருக்கிறார்கள். நாம் அதைப் பார்க்கின்ற போது அப்படி ஒரு மாவட்டம் கூட நமக்கு இல்லை என்று நான் கருதுகிறேன். அப்படி எல்லாம் தொழில் வளர்ச்சியில் இந்த தமிழகத்தை பின்தங்கிய நிலையில் வைக்கின்ற அளவுக்கு இருக்கின்ற மத்திய அரசைச்சேர்ந்தவர்கள் இன்றைக்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தில் தனது முடிவாக எதிர்க்கிறாரா?ஆதரிக்கிறாரா? என்று சொல்லாத நிலையில் இந்த அரசை கண்டிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர் பிரபாகரன் அவர்கள் தி.மு.கவினுடைய முன்னால் முதலமைச்சருடைய பேச்சை படித்துக் காட்டினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குஇன்னும்நாட்கள் இருக்கிறது, விட்டு வையுங்கள். நாங்கள் அதை செய்கிறோம் என்று அவர்கள் சொன்னதாக திரு. பிரபாகரன் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசுக்கு இன்னும் 19 மாதங்கள் இருக்கின்ற நேரத்தில் இதைச் செய்யவில்லை, இதை செய்யவில்லை, நம்பிக்கை இல்லை என்று அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். அந்த வாதத்தில் சாரம் இருக்கிறதா என்று பார்த்தால் எதுவும் இல்லை.

தொடர்ந்து நாம் இந்த மன்றத்திற்கு வந்த நாளிலிருந்து சொல்கிற குற்றச்சாட்டுகள்,தேர்தல் நடக்கவில்லைஎன்பதுதான். அது அவர்கள் காலத்திலிருந்தே நடக்கவில்லை. கூட்டுறவு தேர்தல்களும் அவர்கள்காலத்தில் கலைந்ததுதான். தொடர்ந்து இதை சொல்லி இதனால் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் இந்த தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. தொடர்ந்து தனது பணியினை தொடருவதற்கு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்சப்பட்டவர்கள், மக்கள் ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எதிர்த்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் வரையில் இயங்குவதற்கு அவர்கள் உதவியாக இருக்கவேண்டுமே தவிர, எதிர்க்கட்சியாக இயங்க வேண்டுமே தவிர, குற்றச்சாட்டுகளை சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர, எதிரி கட்சியாக இயங்க வேண்டாம் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய துணைத்தலைவராக இருக்கக்கூடிய திரு. சித்தன் அவர்கள் ஆதரிக்கிறாரா? இல்லையா? ஆதரிக்க வேண்டும் என்ற கருத்துப்படி பேசினார்கள். ஆதரிப்பதும், ஆதரிக்காததும் எங்களுடைய கட்சியினுடைய நிலை. நாங்கள் எங்களுக்கு என்று உள்ள கட்சியின் கொள்கை



யின்படி நல்லவைகளை பாராட்டியும், தவறுகளைசுட்டிக்காட்டி, தண்டித்தும் செயல்படுவது எங்களுடைய கடமையாக இருக்கிறது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டி பேச ஆரம்பித்தார்கள் என்பதை நான் உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது எல்லாம் பெரிய குற்றச்சாட்டு இல்லை.

திரு. இல. பலராமன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலையில் எங்களுடைய கொள்கையை நான் வலியுறுத்திக் கூறவேண்டும். நாங்கள் ஆதரிப்பதா, இல்லையா என்பதை அவருடைய ஆலோசனையைக் கேட்டு நாங்கள் எங்கள் முடிவினை சொல்லவேண்டும் என்று அவர்கள் கருத வேண்டாம். எங்களுக்கு என்று தனி முடிவும், தனி அந்தஸ்தும் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு கூறிக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் இங்கே இந்த அமைச்சரவை மீது அளித்திருக்கிற தீர்மானத்தின் மீது இந்த 3 நாட்களாக, சூடும், சுவையும் பொருந்திய விவாதம் நடைபெற்றிருக்கிறது. இந்த விவாதத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை வைப்பதற்காக நான் இங்கே நிற்கிறேன். ஒரு அரசு அல்லது ஒரு ஆட்சிக்கு எப்பொழுதும் தன்னுடைய சொல்லுக்கும் செயலுக்கும் ஒருமைப்பாடு இருக்க வேண்டும்; அது ஒன்றுபட்டு இயங்கவேண்டும். அரசாங்கம் சொல்பவைகளைச் செய்கிறதா என்பதை வைத்துதான் இந்த ஆட்சியைப்பற்றி யாரும் மதிப்பீடு செய்வார்கள். அமைச்சர் அவர்களோ, ஆளுங் கட்சியைச் சேர்ந்த தலைவர்களோ இங்கேயும் வெளியேயும் பேசுகிறார்கள், அல்லது அவர்களுடைய பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள் என்பதையெல்லாம்நான்ஆதாரமாக வைத்துக்கொண்டு எதையும் இங்கே பேச விரும்பவில்லை. நம்முடைய ஜனநாயக மரபிலே ஒரு ஆட்சி, தன்னுடைய கொள்கைகளை, திட்டங்களை ஆளுநர் உரை மூலமாக அளிக்கிறது. அப்படி அளிக்கப்பட்ட ஆளுநர் உரைகளிலே இந்த அரசு என்ன, என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தது; அந்த வாக்குறுதிகளை நீங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறீர்கள் அல்லது நிறைவேற்றுவதைப் பற்றி அக்கறைப்பட்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன்.

(பிற்பகல் 12-10)

1980—ஆம் ஆண்டு இந்த ஆட்சி, அரசுக் கட்டிலிலே அமர்ந்த பொழுது ஆளுநர் உரையிலே, அந்த ஆண்டு சில முக்கியமான திட்டங்களை அறிவித்தது. அதிலே ஒன்று சொன்னீர்கள்.

[திரு. ப. நெடுமாறன்] [1983 நவம்பர் 10

அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சீர்திருத்தச் சட்டத்தை இந்த ஆட்சி விரைவிலே கொண்டு வரும் என்று நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்கள். எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய நாங்கள் அத்தனை பேரும், இன்னும் இந்த மன்றத்திற்கு வெளியே இருக்கக்கூடிய ஆசிரியச் சங்கங்களின் பிரதிநிதிகளும் அதை வரவேற்று, பாராட்டு தெரிவித்தோம். ஆனால், அந்தச்சட்டம் இதுவரை என்னவாயிற்று? 1980-ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே கொடுத்த வாக்குறுதி இதுவரையிலே நிறைவேற்றப்பட்டதா? இல்லை. அதுபற்றி பேச்சே இல்லை, முணுமுணுப்பு கூட இல்லை. அதைப்போல் 1980—ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே 'Centre of Appropriate Tecnnology' ஒன்றை இந்த அரசு அமைக்கும் என்று சொன்னீர்கள். அது அமைக்கப் பெற்றதா? அதைப் பற்றிய நினைவாவது இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொருமிக முக்கியமான கொள்கையையும் திட்டத்தையும் 1980—ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் மூலம் இந்த ஆட்சி வெளியிட்டது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த பெருமக்களுக்கு ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த ஆட்சி வகுக்கும். அந்த ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த 5 ஆண்டுகளிலே நாங்கள் செயல் படுத்துவோம் என்ற உறுதியினை, வாக்கினை, ஆளுநர் உரையிலே நீங்கள் தெரிவித்தீர்கள். அரிசன சமுதாயத்தினர் தமிழ்நாட்டி லேயேதான் இருக்கிறார்கள், இந்த ஆட்சி இன்னமும் இருக்கத் தான் செய்கிறது. ஆனால், நீங்கள் சொன்ன சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் என்னவாயிற்று என்பது இதுவரையில் யாருக்கும் தெரியாத சிதம்பர இரகசியமாக இருக்கிறது. இது உங்களுடைய நினைவிலாவது இருக்கிறதா?என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1981—ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என்று மிகப் பிரமாதமாகக் கூறப்பட்டது. உலகத் தமிழ்ச் சங்கம் என்னவாயிற்று? இந்த 3 ஆண்டுக் காலத்திலே அது உருவாகியிருக்க வேண்டும். அது உருவாக வில்லை. ஆனால், மாறாக, மாண்புமிகு முதலமைச்சர் தொகுதி யிலே, மதுரையிலே உலகத்தமிழ்ச் சங்கம் அமைக்கப்படுவதற்காக ஏறத்தாழ 5 000 ஏழை, எளிய மக்களை, அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த குடிசைகளை, ஒரே நாள் இரவிலே இடித்துத்தள்ளி விட்டு, அவர்களை எல்லாம் வெளியேற்றினார்கள். எதற்கு என்று சொன்னால், உலகத் தமிமிழ்ச் சங்கம் அமைப்பதற்காக வேண்டு மென்று சொல்லி, இரவோடு இரவாக வெளியேற்றினார்கள். ஆனால், உலகத் தமிழ்ச் சங்கமும் இன்னமும் வந்தபாடில்லை. இன்னொன்றையும் ஆளுநர் உரையிலே அறிவித்தீர்கள். வெளி நாடுகளிலே உள்ள தமிழ் மக்களுக்கு, அது எந்த நாடாக இருந்தாலும், அவர்களுக்கு நம்முடைய மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கு இந்த அரசு தமிழாசிரியர்களை அனுப்பி வைக்கும் திட்டத்தை றிவீத்தீர்களே, அது என்னவாயிற்று?



1983 நவம்பர் 16] [திரு. ப. நெடுமாறன்]

இதுவரையில் அதைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. எந்தவிதமான நடவடிக்கையுமில்லை. அதைப்போலவே 1982-ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே 80-ஆம் ஆண்டில் நிறைவேற்றப பட்ட நில உச்சவரம்பு திருத்த சட்ட வரைவை மத்திய அரசு ஏற்கவில்லை என்று திரும்ப அனுப்பி வைத்துவிட்ட காரணத் தாலே, நாங்கள் கொள்கை அளவிலே அதை ஏற்றுக் கொண்டி ருக்கிறோம்; எப்படியும் அதை இந்த ஆண்டு நிறைவேற்றியே தீருவோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்து 80-ஆம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தை மீண்டும் 82-லே இந்த சட்டமன்றத் திலே அறிமுகப்படுத்துவோம் என்று சொன்னீர்கள். என்ன ஆயிற்று? எந்தவிதமான பேச்சுமில்லை. அதைப்போலவே நெல்லை மாவட்டத்திலே கூடங்குளத்திலே இரண்டாவது அனல் மின் நிலையம் இந்த ஆண்டு அமைக்கப்படும்; அதற்கான முயற்சியை என்னுடைய அரசு தொடரும் என்று ஆளுநர் தெரி வித்தார். என்னவாயிற்று கூடங்குளம் அனல் மின் நிலையம்? அதைப்பற்றியும் எந்தப் பேச்சுமில்லை.

அதைப்போலவே 83-ஆம் ஆண்டு, இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே சொன்னீர்கள்? உதகையில் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையைப் பற்றி ஒரு அறிவிப்பை செய்தீர்கள். அதிலே கலர் பிலிம் யூனிட்டை உத்தரபிரதேசத்திற்கு கொண்டு போகிறார்கள் என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற என்னைப் போன்றவர்கள் எழுப்பிய காரணத்தாலே, அதற்காக போராடி பிரச்னையைத் தீர்ப்போம் என்று சொன் னீர்கள். மத்திய அரசாங்கத்திலே இருக்கிற தொழில் அமைச்சர் மதிப்பிற்குரிய திவாரி அவர்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு போனார். அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு கூட சக்தியற்ற வர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். இதையெல்லாம் விட முக்கிய மாக 80-ஆம் ஆண்டிலே, 81-லே, 82-லே, 83-லே, இந்தநான்கு ஆளுநர் உரைகளிலும் நீங்கள் தொடர்ந்து ஒரு விஷயத்தை திரும்ப திரும்ப வலியுறுத்தினீர்கள். காவேரி நதி நீர்ப் பிரச்னை யில் எங்களுடைய அரசு இந்த ஆண்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும்; மேற்கில் ஒடும் நதி நீரை நம்முடைய தமிழகத் திற்கு திருப்புவதற்கு பேச்சுவார்த்தை தொடங்கும் என்று 80-லே சொன்னீர்கள்' 81-லே சொன்னீர்கள், 82, 83-லும் சொல்லி விட்டீர்கள். நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து சொன்ன அந்த நிலைமையை பார்க்கிறபோது ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது. உங்களாலே எதுவுமே செய்ய முடியவில்லை, என்பது இந்தப் பிரச்னைகளிலேயிருந்து தெளிவாகி இருக்கிறது. நான் ஆளும் கட்சித் தரப்பிலே இருக்கிற நண்பர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் சொல்வதை செய்ய முடிய வில்லை; அல்லது செய்யக்கூடியதை நீங்கள் சொல்வதில்லை; எதனாலே இந்தநிலை உங்களுக்கு வந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நீங்கள் ஒரே நேரத்தில் இரண்டு படகுகளில் பயணம் செய்ய விரும்புகிறீர்கள். இரட்டைப்

படகு சவாரியும்' இரட்டைக் குதிரை சவாரியும் எப்போதும் சரியாக இருக்காது. ஒன்று இந்த தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்று, அவர்களுக்காக, தமிழ் நாட்டின் நலனுக்காக தமிழ் மொழிக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என்று சொல்லி, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நீங்கள், அதற்கு மாறாக மத்தியில் ஆட்சியில்இருக்கக்கூடிய இந்திராகாங்கிரசோடு ஒத்துப்போக வேண்டுமென்று இன்னொரு புறத்திலே முயற்சி செய்கிறீர்கள். நண்பர் உமாநாத் அவர்கள் அதைத்தான் இங்கே அவர் உரையிலே சுட்டிக்காட்டினார்கள். ஒன்று இந்தத் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியிலே நீங்கள் உறுதியாக இருங்கள்; அதை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கத்தோடு போராடுவதற்காக தயாராக இருங்கள். அதற்கு எதிர்க் கட்சியிலேயிருந்து ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். அதை நீங்கள் இங்கே சொல்கிறீர்கள். ஆனால் மத்தியில் இருக்கும் ஆட்சியை ஆதரிக்கிற முயற்சியிலே நீங்கள் தொடர்ந்து ஈடுபடுகிறீர்கள்.

1980-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னால் இதுவரையில் மத்திய நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தி அவர்களின் ஆட்சி என்னென்ன மக்கள் விரோத சட்டங்களைக் கொண்டு வந்தாலும், இந்தியா பூராவும் இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகளும் அதை எதிர்த்தாலும், நீங்கள் ரொம்பவும் விசுவாசமாக, 'மோர் லாயல் தேன் தி கிங்', ராஜாவைவிட ரொம்பவும் விசுவாசமாக நடந்து கொண்டு தொடர்ந்து ஆதரித்தி வந்தீர்களே, என்னவாயிற்று அது?

(பிற்பகல் 12-20)

இந்திரா காங்கிரஸ்கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்தபிறகு அதை ஆதரிக்கத் தொடங்கினீர்கள்? இந்திரா காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்காக எல்லா எதிர்க்கட்சிகளையும் ஒன்றாகச்சேர்த்துக் கொண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின், எதேச்சதிகாரத்தை எதிர்ப்பதாகச் சொல்லித்தான் நீங்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தீர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் மத்தியிலே இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸ் ஆட்சியை மட்டும் ஆதரிக்கிறீர்கள் என்பது அல்ல என்பது உங்களுடைய வரலாற்றைப் பார்த்தால் தெரியும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினரவர்களிடத்திலே ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். உறவு மாற்றத்தைப் பற்றி இப்பொழுது அவர்கள் பேசுகிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்வது என்ற முடிவை எதிர்த்த



காரணத்தினால்தான் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியே வர நேர்ந்தது. ஆனால் இப்பொழுது அவர்களே திராவிட முன்னேற்றக்கழகத்தோடு உறவு வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள் என்றால் அந்த மாற்றமும் இரட்டைப்படகு சவாரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நான் ரொம்பவும் அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் உறவு சம்பந்தமாக நாங்கள் இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை, நிச்சயமாக, திட்டவட்டமாக தெளிவாகச் சில பொதுவான பிரச்சினைகளிலே உங்களுடைய ஆட்சி செய்யும் தவறுகளை எதிர்த்துப் போராடுவதற்காகத் தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு கட்சிகளும் ஒன்று சேர்ந்து நடத்துகின்ற போராட்டங்களுக்கு எங்கள் கட்சி தொடர்ந்து ஆதரவு கொடுத்திருக்கிறதே தவிர, தேர்தல் நேரத்திலே தான் எங்கள் முடிவு என்ன என்பதை நாங்கள் அறிவிக்க இருக்கிறோம் தேர்தல் உறவுகள் என்பது அந்த நேரத்தில் முடிவு செய்யப்படக் கூடியது. அதைத்தான் நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு, உமாநாத் அவர்கள் அன்றைக்குச் சொன்னது குறித்து நான் ஒன்றை அவருக்கு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் இப்பொழுது இங்கே இல்லை.

மத்தியிலே உள்ள இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு மட்டும் நீங்கள் ஆதரவு கொடுக்கவில்லை, கடந்த ஐந்தாண்டுக் காலமாக நிலைமை எப்படியிருக்கிறது என்றால், மத்தியிலே யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பது என்பது தான் உங்கள் நிலைமையாக இருந்து வருகிறது. மத்தியிலே மொரார்ஜி தேசாய் அவர்களின் தலைமையிலே ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த நேரத்திலே அதற்குத் தொடர்ந்து ஆதரவுக் கொடுத்தீர்கள், பின்னர் சரண்சிங் பிரதமராக ஆனவுடன், அவருக்கு நீங்கள் கொடுத்த ஆதரவு என்பது அதிகமாய்ப் போய் அவருடைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் சென்றீர்கள். அதற்குப்பிறகு இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு அதற்கு ஆதரவை இப்பொழுது கொடுக்கிறீர்கள். ஆனால் இது உங்களுடைய பிரச்னை. குறை சொல்ல வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

மத்தியிலே யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆதரித்துக் கொண்டிருக்கிறீர்களே, அந்த ஆதரவின் காரணமாக இந்தத் தமிழ் நாட்டிற்கு உங்களால் எதைப் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கிறது என்பதைத்தான் நான் உங்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

மொரார்ஜி தேசாய் அவர்களுக்குத் தொடர்ந்து ஆதரவைக் கொடுத்தீர்கள். அட்டி இல்லாத ஆதரவைக் கொடுத்தீர்கள்; எந்த நிபந்தனையும் இல்லாத ஆதரவைக் கொடுத்தீர்கள். அதைப்போலவே சரண்சிங் பிரதமராக இருந்தபொழுதும் அமைச்சரவையிலே உங்களுடைய கட்சியின் சார்பில் இரண்டு பேர் அங்கம் வகித்தார்கள். தொடர்ந்து அவருக்கு நீங்கள் ஆதரவு கொடுத்தீர்கள். அவருடைய ஆட்சியும் வீழ்ந்த பின்னால் மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பதவி ஏற்றதற்குப்பிறகு நீங்கள் அவருக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுக்கிறீர்கள்.

நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், இந்த மூன்று ஆட்சிகளுக்கும் நீங்கள் தொடர்ந்து ஆதரவு கொடுத்துக்கொண்டு வந்தீர்கள், அதனால் இந்தத் தமிழ்நாட்டிற்கு ஏதாவது உங்களால் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கிறதா? இந்தத் தமிழ் நாட்டின் நலன்களுக்காக ஏதாவது பெற்றுக் கொடுக்க இந்த உறவு பயன்படுகிறது என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால், அதிலே ஓரளவுக்கு நியாயம் இருக்கமுடியும். அதையும் உங்களால் நிச்சயமாகச் செய்ய முடியவில்லை என்பதைப் பல நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

மேற்கு நோக்கி ஓடும் நதிகளின் நீரைத் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை இருக்கிறதே இப்படி ஐந்தாண்டுகளாக மத்தியிலே இருப்பவர்களுக்கு நீங்கள் ஆதரவு கொடுப்பதால் மேற்கு நோக்கி ஓடும் நதிகளின் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வர முடிந்திருக்கிறதா?

சேதுசமுத்திரத் திட்டத்தை அமைக்குவதற்காக இந்த உறவு என்று நீங்கள் சொல்லி, அது கிடைத்திருந்தால் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கின்ற ஆதரவு நியாயமானதாக இருந்திருக்கும். ஆனால் சேதுசமுத்திரத்திட்டம் இங்கே வந்தபாடில்லை; உங்களுடைய ஆதரவு நின்றபாடுமில்லை.

அகல இரயில் பாதை வேண்டுமென்ற பிரச்னை இந்த மன்றத்திலே கிளப்பப்பட்டிருக்கிறது. உங்களுடைய நெருக்கமான இந்த உறவைப் பயன்படுத்தி, மத்தியிலே யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு வெண்சாமரம் வீசி அவர்களுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிற நீங்கங் அகல இரயில் பாதையைத் தமிழகத்திற்குக் கொண்டுவர முடிந்ததா என்றால் நிச்சயமாக இல்லை,

காவேரி பிரச்னையை உங்களால் தீர்க்க முடிந்ததா என்றால் இவ்வளவு நெருக்கமாக உறவு வைத்திருந்தும் உங்களால் அதைத் தீர்க்க முடியவில்லை. இதன் காரணமாகத் தமிழ்நாட்டிலே கடந்த சில ஆண்டுக் காலமாகவே குறுவை சாகுபடி இல்லாமல் இருக்கிறது.



தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக ஆண்டுதோறும் 50 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டத்தை அனுபவித்திருக்கிறார்கள். அந்த நஷ்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக மத்திய அரசினை வற்புறுத்தி, அதாவது உங்களுடைய சினேக உறவிலோ அல்லது வேறு வகையிலோ மத்திய அரசினை இன்ஃபுளுயன்ஸ் செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உங்களால் முடிந்ததா என்றால் நிச்சயமாக இல்லை.

ஒகேனக்கல் மின் திட்டத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் மத்திய அரசை உங்களால் இணங்க வைக்க முடிந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. இந்தப் பிரச்சினையிலே திரு. மொரார்ஜி அவர்களையும் உங்களால் இணங்க வைக்க முடியவில்லை, திருமதி இந்திரா காந்தி அவர்களையும் உங்களால் இணங்க வைக்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் என்ன காரணத்திற்காக அப்படிப்பட்ட உறவினை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பது புரியவில்லை.

புதிய தொழில் இண்டஸ்ட்ரீஸை தமிழகத்திற்குக் கொண்டுவர அதாவது இந்த உறவினைப் பயன்படுத்தி கொண்டுவர உங்களால் முடிந்ததா என்றால் இல்லை. புதிய தொழில்கள் என்று இல்லாவிட்டாலும் பழைய தொழில்களையாவது பாதுகாப்பதற்கு உங்களால் முடிந்ததா என்றால் அதுவும் இல்லை. அதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்தியா சிமிண்ட்ஸ் தொழிற்சாலை தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு வேறு ஒருவரின் கைக்குப் போய்விட்டது. யாரோ வட நாட்டார் கையிலே போய்விட்டது என்று குற்றச்சாட்டு சொல்வதற்காக நான் சொல்லவில்லை. வடக்கு, தெற்கு என்று பேதம் காட்டுகின்ற அந்தப் பிரச்சினையிலே நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் இந்தியா சிமிண்ட்ஸ் ஏகபோக முதலாளிகளின் கையிலே சிக்கி இருக்கின்றது. அதற்கு யார் பொறுப்பு? இந்த ஆட்சிதான் பொறுப்பு என்று பகிரங்கமாக நான் குற்றம் சாட்டுகிறேன். இந்தியா சிமிண்ட்ஸ் சம்பந்தமாக ஐ.டீ.பி.ஐ. சேர்மேனாக இருக்கக்கூடிய திரு.என்.என் பாய் இந்த ஆட்சியின் மீது குற்றம் சுமத்துகிறார். இந்தியா சிமிண்ட்ஸ் தொழிற்சாலையை கல்கத்தாவிலே இருக்கக்கூடிய ஐ.டி.சி. லிமிட்டெட் என்ற நிறுவனம் எடுத்துக்கொண்டிருக்கின்றது. எதனாலே இது வந்தது? அது ஒரு ஏகபோக முதலாளித்துவ ஸ்தாபனம் எனவே ஏகபோக முதலாளித்துவத்தின் அடிச்சுவடுகள் தமிழகத்திலே சமீப காலத்திலே அதிகரித்திருக்கின்றது. அது யாருடைய தவறினால் வந்தது? இந்தியா சிமிண்ட்ஸ் தொழிற்சாலையை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று என்னைப் போன்றவர்கள் யோசனை சொன்னோம். திரு. என். என். பாய் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? தமிழ்நாடு அரசாங்கம் [illegible] தொழிற்சாலையை எடுத்துக்கொள்வது

படவில்லை. தொடங்கி வைப்பதற்கு இந்த ஆட்சியிலே உள்ளவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. உங்களுக்கு மத்திய அரசினிடத்திலே இருக்கக்கூடிய நெருக்கமான உறவைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தைக்கூட உங்களால் செய்ய முடியவில்லை.

(பிற்பகல் 12-30)

அதைப்போலவே, உதகமண்டலத்திலே இருக்கக்கூடிய கலர் பிலிம் யூனிட் பற்றி சொன்னார்கள். அதை உங்களாலே சாதிக்க முடியவில்லை. அதை 7-வது ஐந்தாண்டு திட்ட காலத்திலே பார்க்கலாம் என்று மத்திய அமைச்சர் சொல்லிவிட்டார் என்று சொல்லி, நீங்களும் சும்மா விட்டு விட்டீர்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தோடு போராடுகிற திராணி உங்களுக்கு இல்லை. இந்தத் தமிழ் நாட்டின் நலன், இந்தத் தமிழ் சமுதாயத்தின் நலன் என்று நீங்கள் பேசுவது வெறும் வெத்து கோஷமாக அமைந்து விட்டது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். வெத்து கோஷங்கள் எழுப்புவதில் உங்களுக்கு நிகர் வேறு யாரும் இல்லை. தமிழ், தமிழ் சமுதாயம், தமிழன் என்று நீங்கள் சொல்வது எல்லாம், அந்த உணர்வுகள் எல்லாம் நீங்கள் உண்மையாக எண்ணி எழுப்புவது அல்ல. நீங்கள் அவற்றிற்கு உண்மையாக இருந்திருப்பீர்களானால், நான் முன்னாலே சுட்டிக்காட்டிய அந்தப் பிரச்னைகளில் இந்தத் தமிழ் நாட்டிலே உள்ள அனைவரையும் சேர்த்துக்கொண்டு மத்திய அரசோடு போராட முன் வந்து இருக்கவேண்டும். உங்களுடைய உறவு வேறு எதற்கோ மத்திய அரசை எதிர்பார்த்துக் கொண்டு செல்கிறது. இந்த நாட்டினுடைய நலனுக்காக அந்த உறவு என்று சொல்வீர்களானால் அது வேறு. ஆனால் அதை உங்களால் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை.

இன்னொன்றையும் நீங்கள் செய்கிறீர்கள். எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அதை முதலில் வாட்டர் டவுன் செய்து, அதை ஒன்றும் இல்லாமல் செய்வதற்கு முயற்சிக்கிறீர்கள். தமிழன், தமிழ் சமுதாயம் என்று நீங்கள் சொன்னபோதிலும், பல்வேறு சமயங்களில் பிரச்னைகள் பீறிட்டுக்கொண்டு கிளம்பிய நேரத்தில், அதைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறீர்கள். நீங்கள் உண்மைத் தமிழனாக இருந்தால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்காமல், அதிலே ஈடுபட்டு இருக்கவேண்டும். உங்களுடைய அடக்குமுறைகளை மீறி அந்தக் கிளர்ச்சிகள் கிளம்பிவிட்டால், நீங்களும் அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கூச்சல் போடுகிறீர்களே தவிர உண்மையிலேயே நீங்கள் அந்த உணர்வுகளைக் கொண்டவர்கள் அல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பற்றி கடிதம் அனுப்பினோம் என்று சொல்கிறார். யார் சொல்கிறார்? ஐ.டி.பி.ஐ. சேர்மனாக இருக்கக்கூடிய திரு. என். என். பாய் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி கடிதம் அனுப்பியும் 6 மாத காலம் வரை எங்களுக்குப் பதில் வரவில்லை, ஆகவே தான் வேறு வழியில்லாமல்—அந்த ஏகபோக முதலாளித்துவ ஸ்தாபனமான—ஐ.டி.சி. நிறுவனம் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதித்தோம் என்று சொல்கிறார். இப்படி பகிரங்கமாகவே அவர் குற்றம் சாட்டினார். ஆனால் இன்று வரையிலே உங்கள் அரசின் சார்பிலே அதற்கு எந்தப் பதிலும் இல்லை. இது எப்படி நடந்தது?

அடுத்து பெரம்பூரிலே உள்ள இரயில்வே கோச் ஃபேக்டரியை விஸ்தரிக்கவேண்டும் என்பது சம்பந்தமாக திட்டத்தை ஹரியானாவிற்கு மாற்றிவிட்டார்கள் என்று நான் குற்ற சாட்டினேன். அவ்வாறு ஹரியானா மாநிலத்திற்குச் செல்வதைத் தடுக்க உங்களால் முடிந்ததா? திருமதி இந்திரா காந்தி அவர்களுடன் உங்களுக்கு இருக்கக்கூடிய இந்த நெருக்கமான உறவைப் பயன்படுத்தி அதனைத் தடுத்து தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிற்சாலையினை விஸ்தரிப்பதற்கு உங்களால் முடிந்ததா? நிச்சயமாக இல்லை.

அடுத்து நேவல் அக்காடமி. தமிழ்நாட்டிலே கடற்பயிற்சிக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருக்கின்றது. செக்கிழுத்த தமிழன் வ.உ.சி. அவர்களின் பெயரிலே அந்தக் கல்லூரியை அமைக்கவேண்டும் என்று ஆட்சிக் கட்டிலிலே இருப்பவர்கள் கூடக் சொன்னார்கள். எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் கூட சொல்லவில்லை. ஆனால் அந்த நேவல் அக்காடமி இன்றைக்கு கேரளாவிற்குப் போய் விட்டது. எனவே இந்தப் பிரச்சினையிலும் உங்களுடைய சுமுக உறவு டெல்லியிலே எடுபடவில்லை. எதனால் இந்த நிலைமை? மேலும் கேரளா மாநிலத்திலே அந்தக் கல்லூரியினை அமைப்பதிலும் சிக்கல் இருக்கின்றது. பல்வேறு வகுப்புவாத சிக்கல்கள் காரணமாக அங்கேயும் அது அமையவில்லை. ஆகவே அதையாவது டெல்லியிலே இன்ஃபுளுயன்ஸ் செய்து திருமதி இந்திரா காந்தியிடம் உங்களுக்கு இருக்கின்ற உறவைப் பயன்படுத்தி அந்தக் கல்லூரியினைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு உங்களால் முடிந்ததா என்றால் நிச்சயமாக முடியவில்லை.

அடுத்து காவிரி படுகையிலே (பட்ரோல் கிடைக்கின்றதா என்பதற்கான சோதனை அப்ரப்ட்டாக நிறுத்தப்பட்டது. ஆந்திராவிலே தேர்தல் வந்தவுடன் இங்கே நிறுத்தி விடப்பட்டது. அவ்வாறு நிறுத்திவிட்டு விசாகப்பட்டினத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டது என்று இந்த சட்டமன்றத்திலே குற்றம் சாட்டினோம். அவ்வாறு நிறுத்தப் [illegible] நிறுக்கப்பட்டது தான். இன்னமும் [illegible]

கொல்லப்பட்டார்கள், 10 தமிழர்களுக்குமேல் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். அன்றைக்கு இங்கே இருக்கிற அமைச்சர்களில் யாராவது ஒருவர் அந்த வன்முறையைத் தட்டிக்கேட்டீர்களா? ஏன் என்று கேட்டீர்களா? உங்களுக்கு வேண்டியவரான குண்டுராவ் ஆட்சியில் இருந்தாரே. அவரிடம் என்ன என்று டெலிபோனிலாவது கேட்டீர்களா? இல்லை.

அதேநேரத்தில் உதகமண்டலத்திலே இருக்கக்கூடிய கூடலூரில் சில நில பிரபுக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அதிலே அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிந் தவுடன் கேரளத்தில் இருந்து கொண்டுவரப்பட்டவர்களை அங்கே குடியேற்றி, அந்த நிலங்களிலே குடிசைகள் போட்டு குடியேற்றிவிட்டு, ''மலையாளிகள் குடியேறி இருக்கிறார்கள், அவர்களை வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள்'' என்ற போராட்டத்தைத் தொடங்கினா். அதற்கு நீங்கள் பணிந்து விட்டீர்கள். கேரளத்திலிருந்து ஒரு அமைச்சரே வந்து பேசு கிறார். உடனடியாக நீங்கள் ஒத்துக்கொண்டு போகிறீர்கள். இந்த உணர்வு ஏன் உங்களுக்கு இல்லை என்பது என்னுடைய கேள்வி.

அதேநேரத்தில் கேரள மாநிலத்தில் மூனார் பகுதியில் ஏறத்தாழ 125 ஆண்டுகளுக்குமேல் தமிழர்கள் வாழ்கிறார்கள். அந்தத் தமிழர்களை வெளியேற்ற ஒரு திட்டம் அங்கே வகுக்கப் பட்டது. அணை கட்ட என்று சொல்லி, 25,000 தமிழர்களை வெளியேற்ற முயற்சி நடக்கிறது. அங்கே அ.இ.அ.தி.மு.க.உட்பட சகல கட்சிகளும் அதை எதிர்த்துப் போராடுகிறார்கள். அந்தப் பிரச்சனை என்ன என்று தெரிந்துகொள்வதற்கு யாராவது ஒரு அமைச்சர் அந்த மாநிலத்திற்குச் சென்று விசாரித்து, முதலமைச்சரை சந்தித்து பேச முயற்சி எடுத்தீர்களா? அதற்கு ஒரு பரிகாரம் கண்டீர்களா என்றால் இல்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதுமட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டு எல்லைக்குள் இருக்கக்கூடிய நம்முடைய எல்லை, நம்முடைய கோவில் என்று இந்த அரசால் அறிவிக்கப்பட்ட கண்ணகி கோவில் அன்னிய படைகள் ஆக்கிரமிப்புச் செய்வதைப்போல கேரள போலீஸ் ஆக்கிரமிப்புச் செய்து தமிழர்களைத் தடுக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

இந்தச் சட்டமன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானங்களை நாங்கள் கொண்டு வந்த நேரத்திலே கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். இந்தியப் பிரதம மந்திரிக்கு எழுதி யிருக்கிறோம் . என்றெல்லாம் நம்முடைய மாண்புமிகு



வருவாய்த்துறை அமைச்சர் எங்களுக்கு சமாதானம் சொன் னார்கள். என்ன ஆயிற்று? ஆனால். இன்றைக்கு கேரளாவின் தொல்பொருள் துறை அதை எடுத்துக் கொண்டிருக்கிறது, அந்தக் கோவிலில் இருக்கக்கூடிய மிகப் பழைமை வாய்ந்த ராஜராஜசோழன் கல்வெட்டுக்களைக்கூட அப்புறப்படுத்தி விட்டார்கள் எந்த சான்றும்-அது தமிழனுக்குச் சொந்தம் என்று எந்த சான்றும்-இல்லாமல் செய்யவேண்டுமென்ற முயற்சியிலே அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். உங்களாலே தடுக்கமுடியவில்லை. இவ்வளவிற்கும், டெல்லியிலே இருக்கக் கூடிய ஆட்சி உங்களுக்கு ரொம்ப வேண்டிய ஆட்சி. இந்திரா காந்தி அவர்களுக்கு உங்களைப் போல வெண்சாமரம் வீசக்கூடியவர்கள் இந்தியாவிலே வேறு யாரும் இல்லை. அப்படியெல்லாம் செய்தும் கூட தமிழர்களின் உரிமையைக் காப்பதற்கு நாங்கள் வெண்சாமரம் வீசுகிறோம். என்று சொன்னால், நான் அதைப்பாராட்டுகிறேன். உங்களோடு சேர்ந்து வீசுவதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆனால் அதை செய்யவில்லை. கண்ணகி கோவில் போனது போனதுதான். இந்த நிலைமைக்கு நீங்கள் ஆளாகிவிட்டீர்கள்.

அடுத்து, மதுரை ராமநாதபுரம் மாவட்டத்தை இன்றைக்குப் பெரிதும் பாதிக்கின்ற பெரியார் அணைப் பிரச்சினையிலே உங்களுடைய நிலை என்ன? 152 அடி தண்ணீரை அந்த அணை உடையப்போகிறது என்ற பீதியைப் கிளப்பி 136 அடியாகக் குறைக்க வைத்து, கேரள அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் சொல்லி மத்திய அரசாங்கம் தலையிட்டு 136 அடியாக நீங்கள் குறைத்துவிட்டீர்கள்.

இதன் விளைவாக ஆண்டுக்கு 13.5 டி.எம்.சி தண்ணீரை நாம் இழக்கிறோம். மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களிலே 80,000 ஏக்கர் நிலம் தரிசாகி உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று ஆண்டுகளாக மதுரை, ராமநாதபுரம் விவசாயிகள், படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலே இந்தப் பிரச்சினையை நான் பலமுறை எழுப்பியிருக்கிறேன். யாராவது ஒரு அமைச்சர் இந்தப் பிரச்சினைக்காக 80,000 ஏக்கர் இன்று தரிசாகக் கிடக்கிறது என்பதற்காக டில்லிக்குப் போய் அல்லது திருவனந்தபுரம் போய், இதைப்பற்றிப் பேசி னார்களா என்றால், இல்லை. இதைப்பற்றிய அக்கறை உங்களுக்குக் கொஞ்சமும் இல்லை.

அதைப் போலவே, அண்டை மாநிலமான கர்நாடகாவிலே அந்த மாநில அமைச்சர் எப்படிச் செயல்படுகிறார்? மகாராஷ் டிராவிலே, டில்லி, கோவாவிலே, கன்னடியர்களுக்கும். மராட்டியர்களும் அங்கே சண்டை ஏற்பட்ட நேரத்தில், குண்டுராவ் பறந்துபோனார், கோவாவிற்கு. மற்ற அமைச் சர்களும் போனார்கள். இந்தப் பிரச்சினையை டெல்லிக்குத் தெரிவித்தார்கள். டெல்லியை தலையிட வைத்தார்கள்.

[திரு. ப. நெடுமாறன்] [1983 நவம்பர் 10

காவிரிப் பிரச்னையில் சரியான முறையில் நீங்கள் நடந்து கொள்ளவில்லை. கடந்த மூன்றாண்டு காலமாக காவிரி டெல்டா பிரதேசத்தில் தண்ணீர் சரியாகக் கிடைக்காத காரணத்தால் ஏராளமான நஷ்டம் நமக்கு ஏற்பட்டு இருக்கிறது. இந்தக் காவிரிப் பிரச்னையில் கர்நாடக அரசு ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறது. அதை ஏன் என்று கேட்க மத்திய அரசு மறுக்கிறது. இந்தச் சூழ்நிலையைச் சுட்டிக்காட்ட வேண்டிய நாம் சும்மா இருந்தோம். சும்மா இருந்ததோடு மட்டுமல்ல, கர்நாடகத்தின் முதலமைச்சராக இருந்த முன்னால் முதலமைச்சர் மதிப்பிற்குரிய குண்டுராவ் அவர்கள் காவிரிப் பிரச்னையில் அடாவடித்தனமாக நடந்து கொண்டதன் காரணமாக, விவசாயிகள் அவதியுற்ற நேரத்தில், ஒரு சொட்டு தண்ணீர் கூட விடாமல் அவர்கள் கர்நாடக மாநிலத்தில் தேக்கி வைத்திருந்த நேரத்தில், அதை ஏன் என்று தட்டிக்கேட்க தைரியம் இல்லாமல் அங்கே நடைபெற்ற தேர்தலில் திரு. குண்டுராவ் அவர்கள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக பிரச்சாரம் செய்ய வெட்கம் இல்லாமல் சென்றீர்கள். தமிழன், தமிழ் சமுதாயம் என்று நாம் சொல்கிறோமே, அந்தத் தமிழ் சமுதாய மக்களுக்கு எதிராக செயல்பட்டவருக்கு, தமிழ்நாட்டுக்குச் சொந்தமான காவிரி என்று ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நாம் பேசிவருகிறோமே அந்தக் காவிரியில் இருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட விடாமல் தேக்கி வைத்து இருந்த திரு. குண்டுராவ் அவர்கள் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகப் பிரச்சாரம் செய்தீர்கள். ஆனால் கர்நாடக மக்கள் திரு. குண்டுராவை ஆதரிக்கவில்லை. நீங்கள் திரு. குண்டுராவுக்காக இவ்வளவு செய்தீர்களே, அவரிடத்தில் இந்தக் காவிரித் தண்ணீரைத் திறந்து விடுங்கள் என்று கேட்டு இருந்தால் நாங்கள் பாராட்டியிருப்போம். ஆனால் அதை நீங்கள் செய்யவில்லை. திரு. குண்டுராவ் வெற்றிபெற்றால் செய்வோம் என்றீர்கள். உங்களால் திரு. குண்டுராவையும் வெற்றி பெறச் செய்ய முடியவில்லை.

மாநிலங்களின் உரிமைக்காகப் போராடுவதற்காக இன்றைக்கு இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்கள் ஒன்று திரண்டு கிளம்பியிருக்கின்றன. இன்றைக்கு தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் மாநிலங்களுக்கு அதிக உரிமை வேண்டும் என்று குரல் கிளப்புகிறபோது, அதிலே ஆளும் கட்சியும் இணைந்து நிற்க வேண்டாமா?

இந்த மாநிலத்திலே ஆளுகின்ற கட்சிக்கு பிரதான கடமை ஒன்று இருக்கிறது; முக்கியமான பொறுப்பு ஆளும் கட்சிக்கு இருக்கிறது. மாநிலங்களுக்கு உரிய உரிமைகளைப் பெறவேண்டும் என்பதில் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல அந்த உரிமை. இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்; மத்தியில் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதற்காகப் போராட்



1983 நவம்பர் 10] [திரு. ப. நெடுமாறன்]

தமிழ்நாட்டில் ஆளும் பொறுப்பில் இருக்கிறவர்களே இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி இருக்க வேண்டும். இதிலே நீங்கள் தவறிவிட்டீர்கள். ஆந்திர முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்களும் காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அவர்களும் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களும் மாநில உரிமைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதற்கு முன்னணியில் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். ஏன் அதைச் செய்யவில்லை? அப்படி ஏன் மத்திய சர்க்காரைக் கண்டு நடுங்குகிறீர்கள்? ஏன் இந்த உரிமைக்குக் குரல் கொடுப்பதிலே, அவர்களோடு சேர்ந்து ஒலிப்பதிலே தயக்கம். ஆளும்கட்சி நண்பர்கள் சிந்திக்க வேண்டும். உங்களுடைய முக்கியமான பங்கு என்ன? உங்களுடைய முக்கியமான பாத்திரம் என்ன? நீங்கள் அதற்கு ஏற்ப இருக்க வேண்டுமா, வேண்டாமா? அதை நீங்கள் செய்யவில்லை; உங்களால் செய்ய முடியவில்லை.

பல்வேறு பிரச்சனைகளில், காவேரி பிரச்சனையாக இருந்தாலும். மாநில மக்கள் உரிமைப் பிரச்சனையாக இருந்தாலும், வேறு பிரச்சனையாக இருந்தாலும், தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சிகளைப் பார்த்தபின்னால் உங்களுடைய சொந்த கட்சியிலே இருக்கிற மக்கள் உணர்வுகளைப் பற்றி சிந்திக்கத் தெரிந்த தோழர்கள் மத்தியிலே எழுகின்ற நியாயமான உணர்வுகள்தான் உங்களை கொஞ்சம் அசைய வைக்கிறதே தவிர நீங்கள் அசையவில்லை. ஆளும் கட்சியில் உள்ள அத்தனை பேர்களுக்கும் சிந்தனை இல்லை என்று நான் சொல்லவில்லை. சிலருக்கு அந்த சிந்தனை இருப்பதல்தான் இந்த ஆட்சி சில நேரங்களில் அசைந்து கொடுக்கிறது. இல்லாவிட்டால் நீங்கள் அசையமாட்டீர்கள். எதையும் செய்ய மாட்டீர்கள்; செய்வதற்கு உங்களுக்கு மனம் இல்லை.

இந்தியா என்பது பல்வேறு மாநில மக்களைக் கொண்டிருக்கிற ஒரு பெரிய நாடு. பல்வேறு மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து வருகிறபோது அந்தந்த மாநில அமைச்சர்கள் ஓடோடி சென்று விசாரிக்கிறார்கள்; மத்திய அரசுக்கும் தெரியப்படுத்துகிறார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? அண்டை மாநிலமான கர்நாடகத்தில் வாழக்கூடிய தமிழ் மக்கள் அந்த மாநிலத்தில் பயிற்சி மொழியாக, பாடமொழியாக கன்னடத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்த அந்த மாநில மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அங்கே வாழுகின்ற தமிழ் மக்கள் கன்னடத்தை பயிற்சி மொழியாக, பாடமொழியாக ஏற்றுக்கொண்ட பின்னால் இரண்டாவது மொழியாக தமிழை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதன் காரணமாக கோலார் பகுதியிலே தமிழ் மக்கள் சுட்டுக்

தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். உயர்நீதிமன்ற ரெலா ற்றிலே இது ஒரு முக்கியமான தீர்ப்பு. இந்த ஆட்சிக்கு எதிராக அளிக்கப்பட்ட ஒரு பெரிய தீர்ப்பு இது. எத்தனை பேர்கள் அப்படி இருக்கிறார்கள் என்று சொன்னால். 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி வரை 2,99,439 பேர்கள் இன்னும் கோர்ட்டில் குற்றப் பத்திரிகை தாக்சல் செய்யப்படாமல் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலே பலபேர்கள் சிறைச்சாலைகளிலே ரிமாண்ட் கைதிகளாக இருக்கலாம். பல பேர்கள் வெளியே இருக்கலாம். ஆனால் அத்தனை பேர்களில் சிலருக்கு 17 ஆண்டுக்காலமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் இருக்கிறது. 17 ஆண்டுக்காலம், ஒன்றல்ல இரண்டல்ல. இங்கே வீற்றிருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர்களில் பலர் மெச்சுரிட்டி ஏஜ் அடைவதற்கு முன்னாலேகூட உள்ளே சென்ற இந்தக் குற்றவாளிகளுக்கு எல்லாம் இன்னும் வழக்கிற்கான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நிலை : மயிலே அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது உங்களுடைய நிர்வாகத்திலே என்ன நடக்கிற ;ு என்பதைக்........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சி றயிலே இருக்கிறார்கள். அல்லது எப்.ஐ.ஆர் போடப்பட்டு அந்த அளவிலே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் சில பேர்சள் இருக்கிறார்கள் என்பது சரி. ஆனால் ீதற்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மெச்சுரிட்டியாவது, உறுப்பினர்கள் மெச்சுரிட்டி ஆவது, அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அதை எந்த அடிப்படையிலே சம்பந்தப்படுத்தி பேசுகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. ப. நெடுமாறன்: மன்னிக்கவேண்டும். நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் சரியாக கேட்கவில்லை என்று கருதுகிறேன். அமைச்சர்கள் மெச்சுரிட்டி என்று சொல்லவில்லை. அமைச்சர்களிலே சிலர் மெச்சுரிட்டி ஏஜ் அடைவதற்கு முன்னாலே என்றுதான் சொன்னேனே தவிர அமைச ்ர்கள் மெச்சுரிட்டி என்று நான் சொல்லவில்லை. அத்தகைய வார்த்தைகளை நான் என்றைக்கும் உபயோகப்படுத்தமாட்டேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): ''மெச்சுரிட்டி ஏஜ்'' என்பது கிடையாது. மைனர் அல்லது மேஜர் என்று சொல்லலாம்.

திரு. ப. நெடுமாறன்: இது ஒரு முக்கியமான தீர்ப்பு. இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து ருக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள். நடக்காது என்ற உத்தரவாதத்தை இந்த ஆட்சி அளித்திருக்கிறதா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.



(பிற்பல் 12—50)

அதைப்போலவே இன்னொன்று. அதிர்ச்சித் தரத்தக்கது. என்னவென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் உங்களுடைய ஆட்சியில் தமிழ்நாட்டு சிறைகளிலும், லாக்கப்பு களிலும் 10 நாட்களுக்கு ஒருவர் செத்துக்கொண்டேயிருக் கிறார்கள். 10 நாட்களுக்கு ஒருவர், 15 ஆண்டுக் காலத்திலே சுமார் 355 பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். லாக்கப்பு களிலேயும், சிறைகளிலேயும், வேறு எந்த ஆட்சியிலும் இவ்வளவு அதிகமான பேர்கள் செத்தது கிடையாது நம்முடைய மதிப்பிற் குரிய சிறைத்துறையின் ஐ. ஜியாக இருக்கக்கூடியவர் இதற்கு ஒரு சமாதானம் சொன்னார். வேடிக்கையான சமாதானம் சொன்னார். தமிழ்நாட்டு சிறைகளிலேயும், லாக்கப்புகளிலேயும் கைதிகளின் எண்ணிக்கை அதிகம், ஆகவே, செத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகம் என்று சொன்னார். இது நியாயமான சமாதானம்தானா? மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன் இது நியாயம் தானா?

உங்களுடைய கவனத்திற்காக ஒன்று சொல்லவிரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் இருக்கக்கூடிய புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். உத்திரப்பிரதேசத்திலே 27, 206 கைதிகள் அதிலே செத்தவர்கள் தொகை 11 பேர். மகாராஷ்டிரத்திலே 14,320 கைதிகள், அதிலே செத்தவர்கள் தொகை 10 பேர்; இங்கே தமிழகத்திலே அதே காலத்தில், 16,526 பேர்கள் அதிலே செத்தவர்கள் தொகை 52 பேர்கள். உத்திரப் பிரதேசத்தைவிட மிகக் குறைவாகத்தான் இங்கே கைதிகள் இருந்திருக்கிறார்கள், ஆனால் செத்தவர்கள் எண்ணிக்கை, உத்திரப்பிரதேசத்திலே செத்தவர்களைப்போல 5 மடங்கு அதிகம். உங்களுடைய போலீஸ் அதிகாரிகள், சிறை அதிகாரிகள் செய்கிற கொடுமைகளை, அவர்களின் அக்கிரமங்களை உங்களாலே தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஒரு பசுவுக்கு தவறு இழைக்கப்பட்டு விட்டது என்ற காரணத் தாலே, தன்னுடைய மகனையே, தனக்குப் பின்னாலே அரியணை ஏறப்போகிற அரசிளங்குமரனையே தேர்க்காலிலே வைத்து தண்டனை கொடுத்தான் மனுநீதிச் சோழன். அவன் வாழ்ந்த நாட்டில், உங்களுக்கு கீழே இருக்கக்கூடிய சிறை அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் சிறைக்குள்ளே வந்து சிக்கிக் கொண்டார்கள் என்ற காரணத்தாலே, அந்தக் கைதிகளை சித்திரவதை செய்து அடித்துக் கொல்கிறார்களே, அதை தடுத்து நிறுத்த என்ன செய்திருக்கிறீர்கள். உங்களாலே முடியவில்லை. உங்களையும் மீறி அது நடக்கிறது. உங்களுடைய தவறான அணுகுமுறைகளின், தவறான கொள்கைகளின் விளைவாக, இன்னொரு பெரிய விஷயம் தமிழ்நாட்டிலே இதுவரையிலும் இல்லாதது நடந்து இருக்கிறது.

அங்கே வாழ்கின்ற தங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார்கள். இது மராட்டிய மாநிலத்தில் வாழ்கிற தமிழனாக இருந்தாலும் கர்நாடக மாநிலத்தில் வாழ்கிற தமிழனாக இருந்தாலும், கேரள மாநிலத்தில் வாழ்கின்ற தமிழனாக இருந்தாலும், அவர்களுக்கு இன்னல்கள் நேர்கிற நேரத்திலே, கேளாக் காதினராக நீங்கள் இருக்கிறீர்கள். எதையும் காதிலே போட்டுக்கொள்வதில்லை. உங்களுடைய முழுகவனமும், டெல்லியைத் திருப்தி பண்ணுவதிலேதான் இருக்கிறது. இதிலே எல்லாம் தலையிட்டால், என்ன நினைத்துக்கொள்வார்களோ என்ற வேண்டாத அச்சம் உங்களுக்கு இருக்கிறது. மக்களின் உரிமைகளை நீங்கள் பாதுகாக்கத் தவறுகின்றீர்கள்.,

இலங்கை அகதிகளைப் பற்றியும் ஒரு வார்த்தையை நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இந்தப் பிரச்னையில் தெளிவாகப் பேசியாகிவிட்டது. ஆனாலும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த மதிப்பிற்குரிய எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள் சட்டமன்ற மேலவையிலே ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். இலங்கை அகதிகளுக்குச் செலவிடுவதற்காக 25 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் தமிழக அரசிற்குக் கொடுத்தது. ஆனால், நீங்கள் இதுவரையில் 25 இலட்சம்கூட செலவிடவில்லை. எப்படி உங்களுக்கு இன்னும் உதவி செய்வது என்று கேட்டார். உங்கள் பதில் என்ன? எனக்குத் தெரியவில்லை. ஆனால், இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகள் எவ்வளவு கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். மண்டபம் முகாமிலே இருக்கிற அகதிகளை யாராவது அமைச்சர் சென்று பார்த்தால், நிச்சயமாக ரத்தக் கண்ணீர் விடுவார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1 15 காசு கொடுக்கப்படுகிறது. 1.15 காசில் இந்த நாட்டிலே யாராவது ஒரு வேளைசோறு சாப்பிடமுடியுமா, அவர்களுக்கு ஒரு நாளைக்கு 1.15 காசு. இலங்கையிலே சிங்களவர்களின் கொடுமைக்கு ஆளாகி, இருந்ததையெல்லாம் இழந்து, மானம், மரியாதையை மட்டும், உயிரை மட்டும் பாதுகாத்துக்கொண்டு, இந்தியாவிற்குப் போனால், நமக்கு உதவி கிடைக்கும் என்று நம்பி வருகிறார்கள். அவர்கள் இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறார்கள்.

நீங்கள் யாராவது போய்ப் பார்த்தீர்களா மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களோ, இந்திரா காங்கிரஸ் தலைவர்களோ, மத்திய அமைச்சர்களோ, நம்முடைய சென்னை விமான நிலையத்திற்கு வரும்போது, நீங்கள் ஒடிப்போய் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கிற அவசரத்திலே. பத்திலே ஒரு பங்கு, இலங்கையிலே இருந்து வந்திருக்கக்கூடிய அகதிகளின் நலனைக் காப்பதிலே நீங்கள் செலவழிக்கக் கூடாதா



மட்டும் ஏறக்குறைய, நீலகிரி
உதகமண்டலத்திலே ஏறக்குறைய 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட
மாவட்டம் பூராவும் வாழ்கிறார்கள். அரசாங்கத்திற்குச் சொந்த
இலங்கை அகதிகள் பார்க்கக்கூடியவர்கள் 3 ஆயிரம்
மான தோட்டங்களில் வேலை நாளைக்கு 12 ரூபாய் கூலி
பேர்கள். அவர்களுக்கு ஒரு 13 ஆயிரம் இலங்கை
கொடுக்கப்படுகிறது. பாக்கி உள்ள தனியார் தோட்டங்களில் வேலை
அகதிகள் வேறு வழியில்லாமல், தனியார் தோட்டங்களில் குடிசைப் போட்டு
பார்க்கிறார்கள். தனியார் அனுமதி கொடுக்கிறார்கள்.
கொள்வதற்கு அந்த முதலாளிகள் வேலை பார்க்கின்ற பிற தொழி
தனியார் தோட்டங்களிலே அகதிகள் அல்லாமல்-நம்முடைய
லாளர்களுக்கும்—இலங்கை தொழிலாளர்களுக்கு 8 ரூபாய், 9 ரூபாய்
தமிழகத்தைச் சார்ந்த இலங்கை அகதிகள் என்று தெரிந்த
கூலி கொடுக்கப்படுகிறது. இருப்பதால் அங்கே இருக்
வுடன் அவர்களுக்கு வேறுவழியில்லாமல் இருக்கக்கூடிய சகல தனியார்
கக்கூடிய நீலகிரி மாவட்டத்திலே அவர்களுக்கு 5 ரூபாய் கூலிதான்,
தேயிலைத் தோட்டங்களிலே அகதிகளுக்குக் கிடையாது. ஏன் என்று
அதற்குமேல் இலங்கை நாதியில்லாமல் இருக்கிறார்கள்.
கேட்பதற்கு அவர்களுக்கு வேறு வேலையில்லை
அந்த வேலையை விட்டால் அவர்களுக்கு நேரிலே போய்ப் பார்த்துவிட்டு
எத்தனையோ நாட்கள் நானே இலங்கையிலே இருக்கும்போது
வந்து இருக்கிறேன். அவர்கள் அவர்களை சுரண்டி
அந்த வெள்ளைக்கார முதலாளிகள் தமிழ்நாட்டிலே நம்மை நம்பி
எடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ் முதலாளிகள்
வந்திருக்கக்கூடிய இலங்கை அகதிகளை கொண்டிருக்கிறீர்கள்.
சுரண்டுகிற போக்கை நீங்கள் அனுமதித்துக் காரணத்தாலோ
இதை ஏன் என்று கேட்பதற்கு, என்ன நான் வருத்தத்
உங்களுக்கு மனம் வரவில்லை என்பதைத்தான்
தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்குப்
அதைப்போலவே அது எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி
பிரச்சினையைப்பற்றி, விரும்புகிறேன். அண்மையில்
நான் சிலவற்றைச் சுட்டிக்காட்ட இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய
உயர்நீதிமன்ற நீதிபதியாக அவர்கள் ஒரு முக்கியமான
ஜஸ்டிஸ் ரத்தனவேல் பாண்டியன் அந்தத் தீர்ப்பு இந்த
தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அக்கறையில்லாமல் நாட்டின்
ஆட்சியிலே நீங்கள் எவ்வளவு என்பதைப்பற்றிக் கொஞ்சமும்
நிர்வாகத்திலே என்ன நடக்கிறது எண்ணம் இல்லாமல் ஐவரி
தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆட்சி நடத்துகிறீர்கள்.
டவரிலே நீங்கள் உட்கார்ந்துகொண்டு எடுத்துக்காட்டாக
என்பதற்கு அந்தத் தீர்ப்பு ஒரு சரியான கீழும் எந்த
இருக்கிறது. எந்த நபரும் எந்த குற்றத்தின் 6 மாதத்
குற்றச்சாட்டின் கீழும் கைது செய்யப்பட்ட செய்யப்பட
திற்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் இருக்கக்
வேண்டும். அப்படி தாக்கல் செய்யப்படாமல் உடனடி
கூடிய வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை முக்கியமான
யாக விடுவிக்க வேண்டும் என்று அவர் ஒரு

இப்போது தமிழ்நாட்டிலே மதக் கலவரங்கள் ஜாதிக் கலவரங்கள் உங்களுடைய ஆட்சியிலே தான் அதிகமாக இருக்கிறது. கன்னியாகுமரியிலே கலவரங்கள் நடந்திருக்கிறது. புளியங்குடியிலே கலவரங்கள் நடந்திருக்கிறது இராமநாதபுரத்திலே கலவரங்கள் நடந்திருக்கிறது. இப்படி இந்தக் கலவரங்கள் நடைபெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்னாலேயே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது என்று சுட்டிக்காட்டி:எச்சரித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு உங்களுடைய உளவுத்துறை முற்றிலுமாகத் தோற்றுவிட்டது. உளவுத் துறையின் அதிகாரியாக யாரை நீங்கள் நம்பியிருக்கிறீர்களோ, அந்த நபர். இலங்கையிலே இருந்து வந்திருக்கிற தமிழர்களை வேட்டையாடுவதிலே தன்னுடைய முழுக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறாரே தவிர, இங்கே நடக்கின்ற விஷயங்களிலே அவர்களுக்கு அக்கறை இல்லை,

அதன் விளைவாகத்தான், இந்து முஸ்லீம் கலவரங்கள். இந்து கிறிஸ்துவர்கள் கலவரங்கள், அரிசனங்கள் மேல் சாதியினர் கலவரங்கள் என்று இவையெல்லாம் தொடர்ந்து நடக்கின்றன. இத்தனையும் நிர்வாக கோளாறின் விளைவாகத்தான். இங்கே அருமை சகோதரர், நண்பர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, எதிர்க்கட்சியைச் சேர்ந்த, அருமைத் தோழர் நல்லசிவம் என்னைப் போன்றவர்கள், வீரமணி, பாரதீய ஜனதா தலைவர் குமரி அனந்தன், அடியார் போன்றவர்களெல்லாம் ஆளுங்கட்சியினால் தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளை சொன்னார்கள். அதை ஏன் முதலமைச்சர் அவர்கள் கண்டிக்கவில்லை என்ற நியாயமான கேள்வியைக் கேட்டார்கள். சாதாரணமாக முதலமைச்சர் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்தால் கண்டித்து ஒரு வார்த்தை சொல்லி இருக்க வேண்டும். சொல்லவில்லை ஏன் சொல்லவில்லை என்பதற்கு என்னுடைய காரணம் ஒன்றிருக்கிறது. சம்பந்தப்பட்ட கட்சிகள் அத்தனைபேரும், அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தினரின் ஆராஜகத்திற்கு இரையான நாங்கள் அத்தனை பேரும், இந்திராகாந்தியை பகிரங்கமாக தொடர்ந்து எதிர்த்துப் போராடுபவர்கள். இந்திரா காந்தியின் ஆட்சியில் கொண்டு வரப்படுகிற நியாய விரோதக் கொள்கைச் சட்டங்களை எதிர்த்து போராடுகின்ற எதிர்க்கட்சிகளாகப் பார்த்து நீங்கள் தாக்கியிருக்கிறீர்கள். எதனாலே, மத்திய போலீசையோ, மாநிலப் போலீசையா வைத்து அவர்களை அடக்குவதற்குப்பதில் எங்களுடைய கட்சித் தொண்டர்களை வைத்தே அடக்குகிறேன் என்று இந்திரா காந்திக்கு காட்டி, அவர்களிடத்திலே இருந்து சபாஷ் பெறுவதற்குத்தான் நீங்கள் இப்படி நடந்து இருக்கிறீர்கள் இந்த ஜனநாயகப் படுகொலைக்கு நீங்கள் துணை போகிறீர்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உங்களுடைய நிர்வாகக் கோளாறின் விளைவாக எவ்வளவு நட்டம்? மின்வாரியமானாலும், டிரான்ஸ்போர்ட்டானாலும், 'அரிசி விற்பனைத் துறையானாலும், டான்சி



யானாலும், தமிழ்நாடு பிஷரிஸ் ஆனாலும், இதுபோன்ற பல்வேறு துறைகளிலே ஆண்டுக்கு 600 கோடி ரூபாய் நட்டம் வருகிறது. என்ன காரணம்? உங்களுடைய நிர்வாகத் திறமையின்மை, உங்களுடைய ஊழல் காரணம். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்த வழியும் உங்களுக்குத் தெரியவில்லை, உங்களால் முடியவில்லை. மக்கள் வரிப்பணம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

நான் முதலிலே சொன்னதைப்போல் வெற்று கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொன்னீர்கள். இதை நீங்கள் அமல் நடத்தியிருப்பீர் களானால் அது பாராட்டத்தக்கது. ஆனால் உண்மை என்ன? தமிழ்நாட்டில் வேலை பார்ப்பவர்களின் தொகை 41 சதவீதம், வேலைபார்க்கும் தகுதியுள்ளவர்கள், வேலையில்லாமல் இருப்பவர்களின் தொகை 59 சதவீதம் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுகளிலே ரிஜிஸ்டர் செய்து இருக்கிற ஜாப் சீக்கர்ஸ் 14.43 லட்சம், எஜுகேட்டட் அன் எம்ப்ளாய்ட் டிசம்பர் 31,1980 இல் ரிஜிஸ்டர் செய்திருப்பவர்கள் 8.07 லட்சம். இவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுத்துவிடுவீர்களா? வேலை கொடுக்கமுடியுமா? ஏன் வெற்று கோஷத்தை வைத்தீர்கள்? அதற்கு என்ன வழி என்று உங்களால் சொல்லமுடியாது. எந்த நடவடிக்கையும் இல்லை, அதைப் போலவே சத்துணவுத் திட்டத்திற்காக பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களை நிறுத்தியிருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆண்டும் ஸ்கூல்ஸ் அப்கிரேட் பண்ணுவது குறைக்கப்பட்டிருக்கிறது, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் புதிதாக கிடையாது, காரணம், சத்துணவுத் திட்டத்திற்கு அந்தப் பணம் போகிறது. கிராமங்களிலே விளக்குகள் அணைந்துபோனால்கூட புதிய விளக்குகள் போட முடியாது. காரணம் அந்தப் பணம் சத்துணவுத் திட்டத்திற்கு திருப்பி அனுப்பப் பட்டுவிட்டது. இப்படிப் பல்வேறு துறைகளிலே பணவெட்டுக்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இறுதியாக நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். நிர்வாகத் திறமையின்மை, சகல மட்டங்களிலும் ஊழல், லஞ்சம் ஆளுங்கட்சியினரின் அராஜகம், மாநிலம் பூராவும், போலீஸ் தர்பார், அதிகாரிகளின் தனியாட்சி. இந்தக் குற்றச் சாட்டுகளை இந்த அமைச்சரவையின் மீது இந்த ஆட்சியின்மீது நான் வைக்கவிரும்புகிறேன். இன்றைக்கு அதிகாரிகள் ஆட்சிநடத்துகிறார்கள். அமைச்சர்கள் ஆட்சி நடத்துவதைவிட அதிகாரிகள் ஆட்சி நடத்துகிற குறைகள்தான் அதிகமாக உள்ளன. 375 பஞ்சாயத் யூனியன்களிலும் ஏறத்தாழ 120 நகராட்சிகளிலும் இன்றைக்கு அதிகாரிகளின் ஆட்சி நடைபெறுகிறது. எந்த சட்ட மன்ற உறுப்பினரும் — ஆளுங்கட்சி உறுப்பினர் போய்ச் சொன்னாலும் — மக்களின் குறைகளைத் தெரிவித்தாலும்

பரிகாரம் கிடையாது ஆளுங்கட்சி உறுப்பினரைக்கூட அவர்கள் மதிப்பது இல்லை. அதேபோல் கூட்டுறவுத் துறையிலேயும் அதிகாரிகளின் ஆட்சிதான் தொர்டர்ந்து நடக்கிறது இப்படி. அரசாங்கத்தின் பெரும்பகுதியிலே உள்ளாட்சித் துறையிலே, கூட்டுறவுத் துறையிலே மக்களோடு தொடர்பு கொண்ட துறைகளிலே மக்கள் பிரதிநிதிகளின் வார்த்தைக்கு மதிப்பு இல்லாத நிலையில் அதிகாரிகள் ஆட்சி செய்கிறார்கள் ஊழல் புரிகிறார்கள் லஞ்சம் வாங்குகிறார்கள், அது தொடர்கிறது, அந்த அதிகாரிகளை நீங்கள் எதுவும் செய்யாமல் இருக்கிறீர்கள் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே நேர்மையான அதிகாரிகள் இருந்தால் அவர்கள் வேலை பார்க்கமுடியவில்லை. ஒவ்வொருவராகப் பதவி விலகிக்கொண்டு போகிறார்கள். இது எப்படி வந்தது? இல்லாவிட்டால் நீங்கள் அவர்களைப் பழிவாங்குவீர்கள் இப்படிப்பட்ட நிலைமை நடப்பது எந்த ஆட்சிக்கும் நல்லதா? எந்த ஆட்சியாக இருந்தாலும் இந்த நிலைமை தொடர்வது நல்லதல்ல முக்கியமான அதிகாரிகள், திறமை வாய்ந்த அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகள் பதவி வேண்டாம் என்று ராஜிநாமா செய்துவிட்டுப் போகக்கூடியநிலைமை ஏற்பட்டது உங்களிடத்திலே ஏதோ குறை இருக்கிறது என்பதைத் தான் வெளி உலகத்திற்கு காட்டுகிறதே தவிர வேறு அல்ல. நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். பல பதவிகள் மாதக் கணக்கில் சும்மா இருக்கின்றன பலரின் பதவி உயர்வுகள் இதனால் பாதிக்கப்பட்டு அந்த அதிகாரிகள் மத்தியில் விரக்தி ஏற்பட்டு ஆயிரக் கணக்கான பைல்கள் சும்மா கிடக்கின்றன யாரும் எதுவும் செய்வது இல்லை.

(பிற்பகல் 1—00)

பொது விநியோக முறையில் இருக்கக்கூடிய ஊழல் இருக்கிறதே மிக மோசமான ஊழல். அது கிராமப்புறம் வரைக்கும் இருக்கிறது. பொது விநியோக முறை என்பது உங்கள் ட்சியில் படுதோல்வி அடைந்து விட்டது. மக்களுக்கு எதுவும் சரியாக வழங்கப்படுவதில்லை. ஏன் என்று கேட்கிற மக்களை நியாய விலைகடையில் அடி ஆட்களை வைத்துக் கொண்டு அடிக்கிறார்கள் என்று நானே இந்த அவையில் குற்றம் சாட்டினேன். பல உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இறுதியாக உங்களுடைய அலங்கோலமான ஆட்சியின் விளைவாக உங்களுடைய தவறுதலான அணுகுமுறையின் விளைவாக உங்களுடைய நிர்வாக திறமையின்மை காரணமாக இந்த ஆட்சியின் மீது சமுதாயத்தின் எந்த பிரிவினருக்கும் நம்பிக்கை இல்லை. உங்களுடைய தொழிலாளர் விரோத கொள்கையின் காரணமாக இந்த ஆட்சியின் மீது தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் ஆசிரியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை சரியாக நிறைவேற்றாததன் காரணமாக



ஆசிரியர் சமுதாயத்தினருக்கு உங்கள் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை. மெடிக்கல், இன்ஜினியரிங் அட்மிஷனில் நீங்கள் செய்த கோளாறுகளின் விளைவாக இந்த ஆட்சியின் மீது மாணவர்களுக்கு நம்பிக்கை இல்லை. (மணியடிக்கப்பட்டது)

7. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 11-11-1983 (வெள்ளிக்கிழமை) | அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடர்ச்சி, மற்றும் பதிலுரை. |
| 12-11-1983 (சனிக்கிழமை) | தேவை இருப்பின், அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதத்திற்கான பதிலுரை தொடர்ச்சி. |
| 13-11-1983 (ஞாயிற்றுக்கிழமை) | அரசு அலுவல்கள் விடுமுறை |
| 14-11-1983 திங்கட்கிழமை முதல் 16-11-1983 புதன்கிழமை வரை | அரசு அலுவல்கள் |
| 17-11-1983 (வியாழக்கிழமை) | தனியார் அலுவல்கள். |
| 18-11-1983 (வெள்ளிக்கிழமை) | அரசு அலுவல்கள். |

18-11-1983 அன்று பேரவைக் கூட்டம் முடிவுறும்.

6. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் (தொடர்ச்சி)

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 2 உறுப்பினர்கள் பேசவேண்டும். சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் மீது நடந்து வருகின்ற பழி வாங்கும் நடவடிக்கைகளின் விளைவாக என். ஜி. ஓக்களுக்கும் உங்கள் மீது நம்பிக்கை இல்லை. மொத்தத்தில் யாருக்கும் உங்கள்

மீது நம்பிக்கை இல்லை அரிசன சமுதாயத்திற்கு எதிராக நடத்தப்பட்ட கலவரங்களில் அவர்களை பாதுகாக்க போதுமான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்காததால் அரிசன சமுதாயத்தினருக்கும் உங்கள் மீது நம்பிக்கை இல்லை, புளியங்குடி போன்ற நிகழ்ச்சிகளின் விளைவாக முஸ்லீம் சமுதாயத்தினருக்கும் உங்கள் மீது நம்பிக்கை இல்லை, (மணியடிக்கப்பட்டது) குமரி மாவட்ட நிகழ்ச்சியின் விளைவாக கிருஸ்த்துவ சமுதாயத்தினருக்கும் உங்கள் மீது நம்பிக்கை இல்லை, மதுரை ஆதீனம் தாக்கப்பட்டதன் விளைவாகவும் பல்வேறு கோயில்களில் நடைபெற்ற ஊழல்கள் காரணமாகவும் இந்து சமுதாயத்தினரும் உங்கள் மீது நம்பிக்கையை இழந்து விட்டார்கள். ஆகவே மொத்தத்தில் யாருக்கும் உங்கள் மீது நம்பிக்கை இல்லாததால் இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. பி.இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்த மாமன்றத்தின் எதிர்க்கட்சியில் 3-வது நிலை வகிக்கின்ற கட்சியின் துணைத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. உமாநாத் அவர்கள், தமிழ் மக்களுக்காக, தமிழ்ச் சமுதாயத்திற்காக, தமிழ் நாட்டின் வளத்திற்காக, கிராமப்புறங்களில் வரியை மட்டும் கொடுத்து விட்டு இந்தியத் துணைக் கண்டம் சுதந்திரம் அடைந்து 1977-வது வரை 30 ஆண்டுக்காலம் அரசின் எந்தவிதமான நல்ல திட்டங்களையும் பெற முடியாமல் தவித்த ஏழை எளிய மக்களுக்காக உழைக்கின்ற உத்தமர், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதனால், இம்மாமன்றத்திற்கு வெளியிலே இருக்கிற மக்கள் மத்தியில், அவர்கள் நம்பிக்கை இழந்து விடக் கூடாது என்பதற்காகவும், அவர்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லை, புரட்சித் தலைவருடைய அமைச்சரவைமீது நம்பிக்கையில்லையென்று சொல்வதால், மக்கள் மன்றத்திலே அவர்கள் நம்பிக்கையிழந்து மீண்டும் இந்த மாமன்றத்திற்குள் நுழைந்து அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளை ஆற்றுவதற்கு வழியில்லாமல் மக்கள் செய்துவிடுவார்களே என்ற ஒரு அச்ச உணர்வில், அவர்கள் ஏற்கனவே நண்பர்களாக உள்ள காரணத்தால், ஏன் நீங்கள் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை வைக்க வேண்டும், மீண்டும் இந்த மாமன்றத்திற்கு வரவேண்டுமென்பதற்காக நான் சிலவற்றை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் இங்கே பேசுகின்ற நேரத்தில், இக நேரம் பேச வேண்டுமென்ற ஆர்வத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர் [illegible] பார்த்து கௌரவமாக முடித்துக்கொள்கிறேன், அதற்கு அனுமதி தாருங்கள் என்று சொன்னார். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன். தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபடுகிற



மீது நம்பிக்கையில்லாத்
புரட்சித் தலைவர் அமைச்சரவை மத்தியிலே கௌரவத்தை
தீர்மானத்தைக் கொண்டுவந்து மக்கள் கௌரவமாக இந்த்
இழந்து விடாதீர்கள், ஆகவே, கொள்ளுங்கள், என்று
தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.
திரு. உமாநாத் அவர்களுக்கு சொல்லிக்

தலைவர்,
பொதுவுடமைக் கட்சியினுடைய துணைத் நம்பிக்க
நம்முடைய அமைச்சரவைமீது கொண்டுவந்திருக்கும் முதல் வாதமே
யில்லாத் தீர்மானத்திற்கு எடுத்து வைத்திருக்கிற அதிக நெருக்கம்
இந்திரா காங்கிரஸ் கட்சியோடு எங்களுக்கு தேர்தல்
ஏற்பட்டுவிட்டது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு உறவு வந்து
உறவு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம், தேர்தல் சர்வாதிகாரப்
விடும் என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான், என்பது
போக்கிற்குத் துணை போகிறார் புரட்சித் தலைவர் பதில் அளித்து
தான். அதற்கு நேற்றே புரட்சித் தலைவர் சறுக்கி,
விட்ட காரணத்தால், அவருடைய முதல் வாதமே
அதல பாதாளத்திலே விழுந்துவிட்டது.

ஒரு நியதி உண்டு.
கம்யூனிஸ்ட் கட்சிக்கு எப்பொழுதும் வேண்டுமென்றால் முதல்
நாளைக்கு இந்த மன்றத்திலே பேச அவர்கள் ஒன்றா ,
நாளே முடிவெடுத்துக் கொள்வார்கள். பொருளைப் பற்றி
குழுவாகக் கூடி யார். யார் எந்த எந்தப் செயல்படுவார்கள்.
பேச வேண்டுமென்றெல்லாம் திட்டமிட்டு இந்தப்
அப்படி திட்டமிட்டுச் செயல்பட்ட காரணத்தால்தான் வரதராஜன்
தீர்மானத்தை வழிமொழிவதற்கு ஏற்கனவே திரு. தயாரானார்,
அவர்களை முடிவு செய்து அவர்வழிமொழியத் இழந்து
ஆனால், உடனடியாக, இங்கே அந்த வாய்ப்பையும் பயத்தின் அடிப்
விடுவோமோ என்ற அச்சத்தின் அடிப்படையிலே, துணைத்
படையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத்
தலைவர் இரண்டாவது எதிர்க் கட்சியினுடைய கிருஷ்ணமூர்த்தி
தலைவர் நெல்லிக்குப்பம் திரு. வழிமொழிந்
அவர்கள் அவசரம், அவசரமாக எழுந்திருந்து என்றால்,
தார்கள். ஏன் இதை எடுத்துக் காட்டுகிறேன் நுழைந்ததன்
அழையா விருந்தாளியாக அவர் எந்த
நோக்கமே, உங்களையும் கெடுக்கப் பார்க்கிறார். தீர்மானத்தைக்
நோக்கத்தில் பொதுவுடமைக்காரர்கள் இந்தத் அதிலே
கொண்டு வந்தார்களோ? ஆனால், சமயம் பார்த்து வசதி
பசை பற்றிக் கொள்ளலாம்; அதிலே வாய்ப்புகளை, திராவிட
களைத் தேடிக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலே மத்தியிலே
முன்னேற்றக் கழகம் ஆர்வம் காட்டுகிறது. மக்கள் ஆட்சிக்கு வர
மதிப்பிழந்து இருப்பவர்கள். எப்படியாவது வேண்டு
வேண்டும், புரட்சித் தலைவர் மீது களங்கம் கற்பிக்க போல்
மென்ற நோக்கத்துடன் உங்களுக்குத் துணை புரிவது இருந்தவர்கள்,
நாடகம் ஆடுகிறார்கள். 1977-லே 48-ஆக போகிற
1980-லே38 ஆனவர்கள், நாளைக்கு 28, 20—ஆகப்

வர்கள். அவர்கள் அந்த அளவிற்காவது வெல்லம சாப்பிடு
வார்கள். ஆனால், இவர்கள் வெல்லத்தைச் சாப்பிட்டுவிட்டு
உங்களுக்கு வெறும் கையை மட்டும் காட்டுகின்ற சூழ்நிலை
உருவாகிவிடும். சற்று எச்சரிக்கையாக இருந்து விடுங்கள என்று
மட்டும் நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படு
கிறேன், பழைய நண்பர்கள் என்ற அடிப்படையிலே.

திரு. உமாநாத் அவர்கள் புரட்சித் தலைவருடைய அரசு
மீது நம்பிக்கையில்லையென்பதற்கு எடுத்து வைத்த வாதம்
எடுத்த எடுப்பிலேயே அடிபட்டு விட்டதைப் பற்றி ஏற்கனவே
குறிப்பிட்டேன். அன்றைக்கு இந்திரா காங்கிரஸ்; மாநில
சர்க்காரக் கலைத்தது தவறு என்று சொல்லி, தமிழகத்தின்
ஆட்சியை மீண்டும் புரட்சித் தலைவர் பிடித்தார். அதைத்தான்
தேர்தல் அறிக்கையில் அவர் குறிப்பிட்டார். இந்திரா காங்கிரஸ்
சர்க்கார் தமிழ்நாட்டு அரசாங்கத்தை கலைத்தது தவறு
என்று கூறினார். புரட்சித் தலைவர் என்று திரு. உமாநாத்
அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டார்கள். அதில் ஒரே ஒரு
திருத்தத்தை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம்
இல்லாமல் வைத்ததுதான் தவறு என்று சொன்னார். அதற்கு
முன்னால், 1976-ல் திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்காரைக்
கலைத்த நேரத்தில் காரணம் சொல்லி, இந்திரா காந்தி
அம்மையார், மாநில சர்க்காரைக் கலைத்தார்கள். பாண்டிச்
சேரியிலே திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கலைக்கப்பட்ட
பொழுது காரணம் சொல்லி கலைத்தார்கள். இப்பொழுது
பஞ்சாப் மாநிலத்திலே சர்க்கார் கலைக்கப்பட்ட பொழுது
அங்கேயும் காரணம் சொல்லி கலைத்தார்கள். ஆனால்,
தமிழகத்திலே மட்டும் காரணம் சொல்லாமல் கலைத்து
விட்டார்கள். அதற்காகத்தான் நாங்கள் மக்கள் மத்தியிலே
நிற்கிறோம் என்று முதல்வர் அப்பொழுது சொன்னார். அதை
நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். அந்தக் காரணத்தை இன்றைக்கும்
சொல்லிக் கொண்டிருக்கிறார், என்றைக்கும் சொல்வார்.
புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு என்ன நிலை
எடுத்தார்களோ, அதே நிலைதான் இன்றைக்கும் எடுத்திருக்
கிறார்கள்.

மாநில உரிமைகள் பற்றியோ, தமிழ் மொழி பற்றியோ
அல்லது மத்தியிலே இருந்து பெற வேண்டிய சலுகைகள்
பற்றியோ, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்களுக்குச்
செய்து தர வேண்டிய திட்டங்கள் பற்றியோ, அன்றைக்கு
நம்முடைய மாமன்ற உறுப்பினர் திரு. பிரபாகரன்
சொன்னதைப் போல், அத்தனையிலும் ஆணித்தரமான
கொள்கைகளைத்தான் புரட்சித் தலைவர் பின்பற்றி வருகிறார்.



(பிற்பகல் 1-10)

நம்முடைய நிதியமைச்சராக இருக்கிற டாக்டர் நாவலர்
அவர்கள் உணவுக் கொள்கையில் உணவுப் பங்கீட்டு முறையை
முறைப்படுத்த வேண்டுமென மத்திய சர்க்காரிடம் வாதாடிக்
கொண்டிருக்கிறார்கள். தொழில் அமைச்சர் அவர்கள் தொழில்
துறைகளை பின்தங்கிய மாவட்டங்கள் என்பதைவிட தாலூக்கா
மட்டத்திலே அமைக்க வேண்டுமென்று வாதாடிக் கொண்டிருக்
கிறார்கள். ஆகவே அந்தக் கொள்கையிலே நாங்கள் சறுக்க
வில்லை. நான் உங்களுக்கு பின்னால் வருகிறேன். எங்கெங்கு
நீங்கள் சறுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லிக் காட்ட ஆசைப்
படுகிறேன். முதல் வாதமே, இந்திரா காங்கிரசோடு,
சர்வாதிகார கட்சியோடு, எதேச்சதிகார கட்சியோடு
என்றெல்லாம் அவர்களைச் சொல்லி, அவர்களோடு துணை
போகிற காரணத்தினால் இந்த அமைச்சரவையின் மீது
நம்பிக்கையில்லை என்று சொன்னீர்கள். ஆகவே இந்த முதல்
வாதத்தில் உங்கள தரப்பிற்கு உறுதுணையாக பல்வேறு குற்றச்
சாட்டுக்களை, பல்வேறு கற்பனைகளை, பல்வேறு கனவுகளை,
இங்கே இருந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கற்பனை
வளத்தோடு பேசுவாரே, அவர் இல்லாத குறையைப் போக்கு
வதற்காக மாண்புமிகு உமாநாத் அவர்கள் இங்கே பலவற்றை
சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் சொல்ல
வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன்.
மேலும் ஒன்றைச் சொன்னார்கள். அதற்கு கூட எங்களுடைய
வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு காளிமுத்து
அவர்களின் சொற்றொடர்தான் அவர்களுக்கு பயன்பட்டிருக்
கிறது. கருவாடு மீன் ஆகாது, வாடிய மலர் மொட்டாகாது
என்று குறிப்பிட்டு, அது எப்படி மீன் ஆகியது. எப்படி
மொட்டாகியது என்றெல்லாம் இங்கே அவருக்கு உரிய
பாணியிலே சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்கிறேன்.
தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மாண்புமிகு
புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் நினைப்பாரானால்,
அவர்கள் சிந்திப்பார்களானால், அவர்கள் ஆதரவு தருவார்
களானால், கருவாடு மீன் ஆகும். காய்ந்த மலர் மொட்டாகும்.
அது சரித்திரம் கண்ட உண்மை. நான் உங்களுக்கு எடுத்துக்
காட்ட விரும்புகிறேன். 1971 ஆம் ஆண்டு தேர்தல் (குறுக்கீடு)
முடித்து விடுகிறேன். ஐ ஏம் நாட் யீல்டிங். கருவாடு மீன் ஆன
கதையையும், வாடிய மலர் மொட்டான கதையையும் நான்
இங்கே சொல்லியாக வேண்டும். புரட்சித் தலைவருக்கு சற்று
விசேஷமான சக்தி உண்டு.

டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத் தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர். காங்கிரஸ் கட்சியை அமைச்சர்
காளிமுத்து அவர்கள் ஏற்கனவே கருவாடு மீன் ஆகாது. வாடிய
பூ மொட்டாகாது என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே
அருமை நண்பர் இராமலிங்கம் பேசுகிறபோது புரட்சித்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] 1983 நவம்பர் 10

நீங்களே பாராட்டினீர்கள். இந்த தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகத்திலே வல்லரசுகளின் ஆதிக்கம் அதிகரித்து விடக் கூடாது என்பதற்காக, அமெரிக்க ஐக்கிய நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்களைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக, தன்னுடைய இயக்கத்தையே கொண்டு மாபெரும் ஊர்வலத்தை நடத்திக் காட்டி, அமெரிக்கத் தூதுவரகத்திற்குச் சென்று, மனுக் கொடுத்து, அமெரிக்க வல்லரசுகளுக்கே சவால் விட்ட அந்தப் புனிதத் தலைவரைப் பார்த்து அன்றைக்கு உங்களுடைய செயற்குழு பாராட்டியது, போற்றியது, வரவேற்றது. இது ஜனநாயக விரோதப் போக்கா அல்லது ஜனநாயகத்தை ஆதரிக்கும் போக்கா என்பதை நீங்கள் முடிவெடுங்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். எங்களுடைய புரட்சித் தலைவர்களுடைய அரசு ஒரு ஹெல்ப்மேன் ஆஃப் டெமாக்கரசி, இட் இஸ் நாட் எ ஹேங்மேன் ஆஃப் டெமாக்கரசி என்று.

புரட்சித் தலைவர் அரசு மீது இன்னொரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, ஜாதிக்கு ஒரு அமைச்சர் என்று அமைச்சர்களை நியமிக்கிறார் என்று சொல்லியிருக் கிறீர்கள். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். மேற்கு வங்கத்தில் அமைச்சரவை அமைக்கப்பட்டிருக்கிறதே, அந்த அமைச்சரவையிலே உள்ள அத்தனை பேர்களும் ஒட்டுமொத்த மாக ஒரேயொரு வகுப்பைச் சேர்ந்தவர்கள்தானா? அங்கே மற்ற வகுப்பைச் சார்ந்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப் படவில்லையா? அங்கேயுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவிக்குத் தேர்தலிலே நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள், அந்தப் பகுதியிலே பெரும்பாலானவர்கள் இருக்கின்ற வகுப்பைச் சார்ந்தவர்களாக நிறுத்தப்படவில்லையா? அவர்கள் அடிக்கடி சொல்வார்களே, ஐ கோட் என்று, அப்படிச் சொல்லிக் குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இட் இஸ் எ ஷார்ட் கட் மெத்தேட் டு கெட் வோட்ஸ் என்று சொல்லியிருக்கிறார். நான் நினைக்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் புரட்சித் தலைவரைப் பார்த்து இதைச் சொல்லியிருக்க மாட்டார்கள். பழைய காலத்தை, 1972-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரையில் உள்ள கடந்த காலத்தைப் பற்றிய நினைவு திடீரென்று அவருக்கு வந்திருக்கும்.

(பிற்பகல் 1-20)

தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் சிந்திய ரத்தம் அவர் கண்முன்னே தெரிந்திருக்கும். ஆகவே, அதைச் சொல்லி இருப்பார். இந்த மன்றத்தை விட்டு வெளியே சென்றாரே ஒருவர், ராஜினாமா செய்திருக்கிறாரே ஒருவர், அதாவது ஷார்ட் கட் மெத்தட் டு கெட் ஓட்ஸ் என்ற வகையிலே சென்றிருக்கிறாரே ஒருவர், அவரைப் பார்த்து அந்த வார்த்தை களை உபயோகித்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறே



(டாக்டர் கே. பி. இராமலிங்கம்) [1984 நவம்பர் 10

அடுத்து, தன்னிறைவுத் திட்டம். இது தன்னிறைவுத் திட்டமல்ல, தன் நிறைவுத் திட்டம் என்று சொன்னார்கள். அவர் பாயின்ட் பை பாயின்ட் என்ற வகையிலே வருவார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால், என்னவோ தெரியவில்லை. கற்பனை வளத்தைச் சேர்த்து அதிலே வார்த்தை ஜாலங்களை சேர்த்து பேசியிருக்கிறார்கள். அவரைப் பார்த்து ஒன்றை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே 1977-லே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எத்தனை கிராமங்களிலே பஞ்சாயத்து போர்டு கட்டிடமே இல்லாமல் இருந்தது தெரியுமா? கட்டிடம் இல்லாத நிலைமையில் பஞ்சாயத்து போர்டு தலைவர்களின் வீட்டுத் திண்ணைகளிலும், சத்திரங்களிலும் பஞ்சாயத்தைக் கூட்டுகின்ற நிலைமை இருந்தது. ஆனால், இன்றைக்கு கிராமத்திற்கு ஒரு கட்டிடம் என்ற அளவுக்காவது கட்டப்பட்டிருக்கின்றது. பள்ளிக்கூடக் கட்டிடம், தாய் சேய் நல விடுதி, சுகாதார வசதி என்று பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனக்குக் கிடைத்த ஒரு பெரிய வாய்ப்பினைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக என்னை நியமித்த காரணத்தால் நான் மேற்கு வங்காளத்திலே சுற்றுப் பயணம் செய்தேன். உங்களுடைய அன்புக்குரிய உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் எங்களோடு வந்திருந்தார்கள். மேற்கு வங்காள முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் இந்தத் திட்டத்தைப் பாராட்டினார்கள். இதைப் பற்றி திரு. ஏ. ஜே. தாஸ், எம். எல். சி. அவர்களிடமோ அல்லது திரு. குமரி அனந்தனோடு நட்புறவு கொண்ட திரு. அனந்தன், எம். எல். சி. அவர்களிடமோ கேட்கச் சொல்லவில்லை. அவர்கள் வேண்டுமானால் எங்களுக்கு வேண்டியவர்கள் என்று சொல்வார்கள். ஆனால், திரு. பூங்காவனம் அவர்கள் எங்களோடு வந்திருந்தார்கள். எங்களிடம் மேற்கு வங்காள முதல்வர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் இந்தத் திட்டத்தை பாராட்டினார்களா என்பது அப்போது தெரியும். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? இதுபோன்ற திட்டம் தமிழகத்திற்கு மட்டுமல்லாது இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் செயல்படுத்தப்படவேண்டும் என்று அன்றைக்குச் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டம், ஒழுங்கு தமிழகத்திலே கெட்டுவிட்டது என்று குறிப்பிட்டார். நான் அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேற்கு வங்காளத்தின் கேப்பிட்டலாக இருக்கின்ற, தலைநகராக இருக்கின்ற கல்கத்தாவிற்குள் நுழையும் போதே அங்கே எப்படிப்பட்ட இன்னல்களையும், சிக்கல்களையும் அனுபவித்தோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தக் குழுவிலே செக்ஷன் ஆஃபீஸராக இருப்பவருடைய பெட்டி

தலைவர் நினைத்தால் கருவாடு மீன் ஆகும். வாடிய பூ மொட்டாகும் என்று சொல்கிறார். என்னைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சி எப்போதுமே..................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. பின்னால் பேசுகிறவர்கள் பதில் சொல்லட்டும். உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்.)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** நான் அவர்களைக் குறிப்பிட வில்லை. அந்த உதாரணத்தை எடுத்துதான் பேசுகிறேன். அவர்களை நான் நிச்சயமாக குறிப்பிடவில்லை. சௌரிராஜன் அவர்கள் என்னைத் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** உங்களுடைய தயவு இல்லாமலேயே காங்கிரஸ் கட்சி நிற்க முடியும்.

**திரு. ஆர். மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, பிரச்னை அதுவல்ல. காங்கிரஸ் கட்சியை குறிப்பிட்டுச் சொல்லாமல் உறுப்பினர் அவர்கள் பொதுவான முறையில்தான் பேசினார்கள் யாரையும் அவர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** கருவாடு மீன் ஆகாது என்று மினிஸ்டர் யாரைப் பற்றி பேசினார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி அர்த்தம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** நான் காங்கிரஸ் கட்சியைக் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள், மீன் மீனாகவே இருக்கும் என்று குறிப்பிட்டார். அவரைப் பொறுத்தவரையில் மீன் மீனாகவே இருப்பதில் ஆட்சேபணை இல்லை. உலர வைத்தால் தான் கருவாடு ஆகுமே தவிர, உலர வைக்காவிட்டால் மீன் மீன்ாகத்தான் இருக்கும்.

**டாக்டர் கே பி. இராமலிங்கம் :** புரட்சித் தலைவருக்கு இருக்கின்ற விசேஷ சக்தியின் காரணமாகக் கருவாடு மீன் ஆனதையும், வாடிய மலர் மொட்டு ஆனதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1971-ஆம் ஆண்டு சட்ட மன்றத்திற்குப் பொதுத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலின் பொழுது நாங்களெல்லாம் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றாக இருந்த நேரம். அன்றைக்குக் கலைஞர் கருணாநிதி தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. அன்றைக்கு சி. பி. ஐ. கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி அமைத்தது. திரு. உமாநாத் அவர்கள் சார்ந்திருக்கின்ற சி. பி. எம். கட்சிக்கு எங்களோடு உறவு இல்லை. ஆனால் அன்றைக்கு அவர்கள் பெற்ற இடம் ஸீரோ, எனவே, அன்றைக்கு அது கருவாடாக இருந்தது. 1977-ஆம் ஆண்டு தேர்தலின் பொழுது அவர்கள் எங்களோடு உறவு வைத்தார்கள். நாங்கள் அவர்களுக்கு ஆதரவு அளித்தோம். எங்கள் கட்சித் தொண்டர்கள் உழைத்தார்கள். புரட்சித் தலைவரவர்கள் ஆதரவு கொடுத்தார்கள். அதனால் 12 இடங்களைப் பெற்று இந்த மன்றத்திற்கு வந்தார்கள். எனவே, கருவாடு மீன் ஆகி யிருக்கிறது. இதுதான் புரட்சித் தலைவரின் விசேஷ சக்தி. கருவாட்டை மீன் ஆக்குவார். ஆகவே, உங்களை ஆக்கி இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். (குறுக்கீடு) ஐ ஆம் நாட் ஈல்டிங்.

அதைப் போலவே சி. பி. ஐ. கட்சியைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். 1977-ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியோடு சி. பி. ஐ. கட்சி கூட்டணி அமைத்தது. அந்த நேரத்தில் அவர்கள் ஐந்து இடங்களைத் தான் பெற்று, இந்த மன்றத்தில் நுழைந்தார்கள்.

1980-ஆம் ஆண்டு நடந்த தேர்தலின்போது எங்களோடு சேர்ந்து கூட்டணி அமைத்தார்கள். பத்து இடங்களைப் பெற்று இன்றைக்கு ஒரு சிலரின் ஆதரவோடு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்ற அளவிற்கு தைரியத்தோடு இந்த மன்றத்தில் அமர்வதற்கு வாய்ப்பைப் பெற்றிருக் கிறார்கள். ஆகவே, அந்த வாடிய மலர் மொட்டாகி இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். புரட்சித் தலைவரவர்கள் நினைத்தால் கருவாட்டை மீனாக்கிக் காட்டுவார். வாடிய மலரை மொட்டாக்கி காட்டுவார். ஆனால், அவர்கள் திருப்பிப் போய் விட வேண்டாம். மீன் கருவாடாகி விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

புரட்சித் தலைவரவர்களின் அரசு ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக அவருக்கே உரிய பாணியில், ஐ ஹோப், இட் இஸ் எ ஹேங்மேன் ஆஃப் டெமாக்கரசி என்று சொன்னார். நான் ஒன்றைப் புரிய வைக்க ஆசைப்படுகிறேன். எங்களது அரசு, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இட் இஸ் நாட் எ ஹேங்மேன் ஆஃப் டெமாக்கரசி, இட் இஸ் எ ஹெல்ப் மேன் ஆஃப் டெமாக்கரசி என்பதை உங்களுக்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காணாமல் போய்விட்டது; அதற்குப் பிறகு 10, 15 உறுப்பினர் களால் அந்த ஜங்ஷனிலே நிற்கக் கூட முடியவில்லை. அந்த அளவுக்கு அங்கே சட்டம்—ஒழுங்கு பாதுகாக்கப்படுகின்றது. ஒரு மாமன்றத்தின் குழு இன்னொரு மாநிலத்திற்கு செல்கின் றார்கள் என்றால் அவர்களுக்குக் கூட பாதுகாப்பற்ற சூழ்நிலை அங்கே இருக்கின்றது. ஒரு மாநிலத்தினுடைய விருந்தாளியாக செல்பவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது. மனைவி மக்களோடு நாங்கள் போய் இருந்தோம். மனைவி மக்களைக் கூட காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகின்ற அளவுக்கு காலித்தனமும், ரெளடித்தனமும் மிஞ்சி இருக்கின்ற சூழ்நிலைதான் அங்கே இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு ஆட்சியினைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து எங்களைப் பார்த்து சட்டம், ஒழுங்கு இல்லை என்று சொல்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே ரிட்டையர் ஆன நீதிபதிகள் போன்ற பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் தமிழகத்திலே அமைதியான சூழ்நிலை இருக்கின்றது எனவே, இங்கே வந்து வசிக்கலாம் என்று பெரிய பெரிய நீதிபதிகள் எல்லாம் இன்றைக்குச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நீங்கள் வேறு விதமாகச் சொல்கிறீர்கள்.

அடுத்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு. இந்தத் திட்டத்தினைப் பற்றி திரு. துரை முருகன் அவர்களும், திரு. உமாநாத் அவர்களும் மிகக் கேலியாகப் பேசினார்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலையை எப்படி கொடுக்க முடியும்? இது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டமா, அல்லது வேலையைக் கெடுக்கும் திட்டமா என்றெல்லாம் திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். சத்துணவுத் திட்டத்தின் மூலம் 35 ஆயிரம் தாய்மார் களுக்கு, அமைப்பாளர்கள் வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றது, ஆயாக்களாக 70 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் பட்டிருக்கின்றது. தமிழ்நாடு பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் என்ற புதிய கழகத்தை உருவாக்கி, அதன்மூலம் 10 கோடி ரூபாய் செலவில், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. கதர் கிராமத் துறையின் வாயிலாக 1977–78லிருந்து இதுவரை ஐந்து இலட்சம் பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பை உருவாக்கித் தரவில்லையா? வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் மக்களுக்கு கதர் கிராமத் துறை மூலம் 1,101 இலட்சம் ரூபாய் செலவில் பல திட்டங்களின் மூலமாக 43,112 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பைத் தேடித் தரவில்லையா?

காட்டை, கொள்ளைகாரர்கள் அழித்துக்கொண்டு போகி றார்கள் என்று காட்டை அழித்து கொள்ளை அடித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு வெகு விமரிசையாக பேசிக்கொண்டு திரிகிறார்களே என்பதற்காக, அதைத் தடுத்தாகவேண்டும்



என்பதற்காக அங்கே காட்டிலாகாவிற்கு வாகன வசதி செய்து கொடுத்து, இன்னும்சில காலத்தில் அவர்களுக்கு வாக்கி–டாக்கி, ஒயர்லஸ் போன்ற வசதிகள் எல்லாம் செய்து தர இருக்கிறோம். இது சாதனை இல்லையா? அதேபோல், இங்கே விளையும் சந்தன மரங்களை வைத்து சந்தன ஆயில் தயாரிக்கும் ஆலையை நிறுவி, வேலைவாய்ப்பை அதிகரிக்கவில்லையா இந்தஅரசு. தமிழகம் முழுவதும் வருவாய்த் துறையில் புதிய மாற்றங்களை உருவாக்கி பல்வேறு நல்ல திட்டங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரித்துத் தரவில்லையா?

இங்கே இன்றைக்கு திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே பண்டங் களின் விலை ஏறவில்லையா? விலைபொருள்களின் விலை ஏறவில்லையா? என்று கேட்டு அவருக்கே. இருக்கும் தமிழ் பாணியில்—இலக்கியச் செல்வர் அல்லவா கேட்டார்கள்- விலை ஏறவில்லையா, தமிழ் மக்களின் வீட்டிலே உலை ஏறவில்லையா என்று கேட்டார்கள். உங்களுடைய இயக்கமான ஜனதா கட்சி, கருநாடக மாநிலத்தில் ஆட்சி பீடத்தில் இருக்கிறது. அந்த மாநிலத்தில் உள்ள விலைவாசிப் பட்டியலைக் கொண்டு வாருங்கள். தமிழகத்தில் உள்ள விலை வாசிப்பட்டியலோடு ஒப்பிட்டுப் பாருங்கள். எந்தெந்த பண்டங் களின் விலை ஏறியிருக்கிறது என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? ஒரு கட்சியின் தலைவராக இந்த மாமன்றத்தில் பல்லாண்டு காலம் பணியாற்றி மிகப்பெரிய பொறுப்பில் இருந்த தாங்கள் இப்படி அள்ளித் தெளித்துவிட்டுப் போகக் கூடாது. பக்கத்தில் என்ன நடக்கிறது, நாம் என்ன சொல் கிறோம் என்பதையும் புரிந்துதான் சொல்ல வேண்டும். நம்முடைய முதுகில் என்ன இருக்கிறது என்பதை மறந்து விட்டு, மற்றவர்களைப் பற்றி குற்றம் சாட்டக் கூடாது. அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். அவருக்குத் தெரிந்த தமிழிலே அவர் கேட்டார், எனக்கு தெரிந்த தமிழிலே நான் கேட்கிறேன். எங்களுடைய தொண்டர்களின் உழைப் பாலும், எங்களுடைய தலைவரின் ஆதரவாலும், இந்த மாமன்றத்திற்கு வந்தவர்கள் மடியில் கனம் ஏறிவிட்டதா அல்லது தலையில் கனம் ஏறிவிட்டதா என்று நான் கேட் கிறேன்.

புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகுதான் சேலம் மாவட்டத்தில் 2,500 ஆழ்குழாய் கிணறுகள் போட்டு, ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. ஏழு கோடி ரூபாய் செலவில் பால் குளிரூட்டு நிலையம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இங்கே ஆடுகள் செத்ததைப் பற்றிச் சொன்னார்கள். ஆடுகள் செத்ததைப் பற்றி கணக்குக் காட்டியவர்களுக்கு நான் பதில் சொல்கிறேன். பொதி சுமப்பதற்கு கழுதைகளைத் தருவோம் என்று அறிவித்த உடனே, அந்தத் திட்டத்திற்கு மாசு கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பேசியவர்கள் எங்களுடைய சாதனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

ரூ. 7 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்பட்ட பால் குளிரூட்டு நிலையம், பால் பவுடர் தயாரிக்கும் நிலையம், அதே போன்று பல்வேறு திட்டங்கள்; 495 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர்; சேகோ என்ற ஒரு கூட்டுறவுத் துறையின் மூலமாக, 190 ரூபாய்க்கு விற்ற கிழங்கு மாவு, இன்றைக்கு 390 ரூபாய்க்கு விற்கிற அளவிற்கு, அங்கேயிருக்கிற இடைத் தரகர்கள் ஒதுக்கப்பட்டு, விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்தே நேரடியாக கொள்முதல் செய்வதன் காரணமாக, விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

இதையெல்லாம் பார்த்த பின்னாலுமா நம்பிக்கையில்லை என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் இலங்கை பிரச்னையில் தமிழ் மக்களுக்காக, தமிழ் சமுதாயத்திற்காக, நான் போகிறேன் என்று சொல்லி, படையெடுக்கிறேன் என்று சொல்லி சென்றவர், அன்று இந்திரா காங்கிரஸில் இருந்த நேரத்தில், கச்சத் தீவை இலங்கைக்கு கொடுத்த நேரத்தில், இந்திரா காங்கிரஸில் இருந்து கொண்டு மௌனமாக இருந்தவர், இன்றைக்கு தமிழ் உணர்வு என்று பேசியிருக்கிறார் என்றால் அது தமிழ் உணர்வு காரணமாக அல்ல, அரசியல் காரணமாக, அரசியல் அப்பழுக்கின் காரணமாக திடீரென்று இந்த உணர்வு பெற்று இருக்கிறார் என்று தான் சொல்லவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து இந்த நாட்டு மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்று இருக்கிற இந்த அரசுக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, உலகத்திலே இருக்கும் அத்தனை தமிழ் மக்களின் இதயத்திலும் குடிகொண்டு இருக்கும் ஒரே தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்று தெரிவித்து, இந்த நேரத்தில் அவர் மீது நம்பிக்கையில்லை என்று சொல்வதன் மூலம் இந்த மன்றத்திற்கு மீண்டும் வருகின்ற வாய்ப்பை இழந்து விடாதீர்கள் என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

(பிற்பகல் 1.30)

### 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) விதி 31. ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டிய நிலையில் எதிர்கட்சிகளைச் சேர்ந்த பலர் இருக்கிறார்கள். அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை தந்து, அதற்குப் பின்னால் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு உமாநாத் அவர்களும், இங்கே பதிலுரை தரவேண்டியிருப்பதால் இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுவிலே, எடுத்த முடிவிற்கு இணங்க, நாளை கேள்வி நேரம் வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையிலே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.



"ஒவ்வொரு நாளும் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கு என்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ நாளை, 11-11-1983 ஆம் தேதியன்று தளர்த்தி, மற்ற அலுவல்கள் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 11-11-1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

207. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்) [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் (மத்தியச் சட்டம் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

46. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (1 முதல் 100 வரை) (நான்காவது பட்டியல்).

### இணைப்பு I.

(6..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 149-க்கான விடையைக் காண்க.)

| பணப்பயிரின் பெயர். | சாகுபடி விஸ்தீரணத்தை அதிகரிக்க இருக்கும் மாவட்டங்கள். | 1982–83-ல் விஸ்தீரணம். | 1983–84-ல் இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 நிலக்கடலை | எல்லா மாவட்டங்களிலும். | 11.31 லட்சம் ஹெக்டேர். | 11.57 லட்சம் ஹெக்டேர். |
| 2 எள் | எல்லா மாவட்டங்களிலும். | 1.45 லட்சம் ஹெக்டேர். | 1.55 ஹெக்டேர். |

136074
சென்னை-600 009
Y211.31'N83
N83-56.1

31-12-1980 ஆம் ஆண்டு முடிய பொதுப்பணிகள் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 விழுக்காடு இடங்களில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பயனடைந்த விவர அறிக்கை.

பொதுத்துறை நிறுவனங்கள்.

| வரிசை எண் | மொத்த துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள்.) | பணியின் பெயர். | அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை. | 18 விழுக்காடு இடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய மொத்த இடங்களின் எண்ணிக்கை. | பணியில் அமர்த்தப்பட்ட மொத்த ஆதிதிராவிடர்/பழங்குடியினரின் எண்ணிக்கை. | குறைவு. | ஆதிதிராவிடர்/பழங்குடியினரின் எண்ணிக்கையின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | | | | சதவீதம் |
| 1 | 54 | மாநிலப் பணி .. .. | 3,018 | 543 | 90 | 453 | 3 |
| 2 | 54 | சார்புநிலைப் பணி .. | 4,381 | 788 | 268 | 520 | 6 |
| 3 | 54 | அமைச்சுப் பணி .. | 18,294 | 3,292 | 1,616 | 1,676 | 9 |
| 4 | 54 | பொது சார்புநிலைப்பணி | 59,420 | 10,696 | 7,097 | 3,599 | 12 |
| | | மொத்தம் | 85,113 | 15,319 | 9,071 | 6,248 | 30 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimba[illegible]-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagbalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, [illegible]cutta-11.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

| | | | |
|---|---|---|---|
| 3 சூரியகாந்தி | எல்லா மாவட்டங்களிலும். | 0.99 லட்சம் ஹெக்டேர் | 1.25 லட்சம் ஹெக்டேர் |
| 4 ஆமணக்கு | எல்லா மாவட்டங்களிலும். | 0.19 லட்சம் ஹெக்டேர் | 0.17 ஹெக்டேர். |
| 5 கரும்பு .. | நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர எல்லா மாவட்டங்களிலும். | 1.75 லட்சம் ஹெக்டேர் | 1.78 லட்சம் ஹெக்டேர் |
| 6 பருத்தி .. | ,, | 1.70 லட்சம் ஹெக்டேர் | 3.60 லட்சம் ஹெக்டேர் |
| 7 புகையிலை | மதுரை திருச்சி, தஞ்சை, கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில். | 19.200 ஹெக்டேர் | 19,430 ஹெக்டேர் |



## இணைப்பு II.

62-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 11777-க்கான விடையைக்காண்க.)

31—12—1980 ஆம் ஆண்டு முடிய பொதுப்பணிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 விழுக்காடு இடங்களில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பயனடைந்த விவர அறிக்கை.

அரசு அலுவலகங்கள்.

| வரிசை எண். (1) | மொத்த துறைகள். (2) | பணியின் பெயர். (3) | அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை. (4) | 18 விழுக்காடு இடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய மொத்த இடங்களின் எண்ணிக்கை (5) | பணியில் அமர்த்தப்பட்ட மொத்த ஆதிதிராவிடர்/பழங்குடியினரின் எண்ணிக்கை. (6) | குறைவு. (7) | ஆதிதிராவிடர் பழங்குடியினரின் எண்ணிக்கையில் விழுக்காடு. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | சதவீதம் |
| 1 | 114 | மாநிலப்பணி .. .. | 13,762 | 2,477 | 1,433 | 1,044 | 10 |
| 2 | 114 | சார்புநிலைப்பணி .. | 1,19,237 | 21,462 | 15,941 | 5,521 | 13 |
| 3 | 114 | அமைச்சுப்பணி .. | 31,141 | 5,605 | 3,281 | 2,324 | 11 |
| | 114 | பொதுசார்பு நிலைப்பணி | 18,531 | 3,335 | 2,778 | 557 | 15 |
| | | மொத்தம் .. | 1,82,671 | 32,879 | 23,433 | 9,446 | 13 |